

இதழ் 45
ஏப்ரல்
2026
எழுநா

### இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
நிர்வாக இயக்குநர்

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

### வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிறேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

**மதுராங்கி குணசீதன்**
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு / ஆய்வு ஒருங்கிணைப்பு

**பியூலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

### தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

### வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

**தங்கராஜா பிரபாகரன்**
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

### ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

### கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

### கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
ஐக்கிய இராச்சியம்

**கணேசானந்தன் சசீவன்**
ஐக்கிய இராச்சியம்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**சதீசன் தனபாலசுந்தரம்**
ஐக்கிய இராச்சியம்

**மாதவி சிவலீலன்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**இளங்கோ**
கனடா

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**
நோர்வே

**தில்லைநாதன் கோபிநாத்**
அவுஸ்திரேலியா

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**கந்தையா ரமணிதரன்**
ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ராஜ்குமார் ரஜீவ்காந்த்**
கொழும்பு

### விநியோக ஒருங்கிணைப்பாளர்கள்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

### நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**'கா' கலை இலக்கிய வட்டம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்பு வட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**முத்தமிழ்ச்சங்கம்**
திருகோணமலை

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

### விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**குயின்சி புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

# எழுநா

ISSN 3093-5210

இதழ் 45

**அட்டைப்படம் :**
மயிலத்தமடு மாதவணை பிரதேசங்களில் நிகழும் மேய்ச்சல் தரை முரண்பாடு தொடர்பான ஆக்கம்.

மூல ஓவியம்: செபமாலை டேவிட் சலமோன்
வடிவமைப்பு: SisilDave

**வெண்பா புத்தகசாலை** – யாழ்ப்பாணம்

**எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்

**பாத்திமா புத்தக நிலையம்** – மட்டக்களப்பு

**மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை

### அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு** – கனடா

### கலை பண்பாட்டு நடுவம் துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

### ஆய்வு நிறுவனம் துறைசார் மதியுரைஞர் குழு

**ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

### வழிப்படுத்தும் குழு

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

# உள்ளே...


மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல் தரை: நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம் — பகுதி 1,2
-வை. ஜெயமுருகன் 03

யாழ்ப்பாண பௌத்தம்: கி.மு. 100 கி.பி. 1200 — பகுதி 1,2
- சிவ தியாகராஜா 23

இலங்கையில் 1956 ஆம் ஆண்டின் தேர்தல் புரட்சி
ஆங்கில மூலம்: சி. அரசரத்தினம்
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம் 43

நவீன இலங்கை வரலாற்றின் போக்கினை நிர்ணயித்த 1920கள்
- கார்த்திகேசு இந்திரபாலா 51

இலங்கையில் சித்திரவதைகளைத் தடுப்பதற்கான சர்வதேச விதிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்
- ஆங்கில மூலம்: அருட்தந்தை நோயல் டயஸ்
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன் 56

இலங்கை மலையக மக்களின் வாழ்வியலில் சடங்குகள் — பகுதி 4
- மெய்யநாதன் கேதீஸ்வரன் 66

அதிகாரம்: ஓர் அரசியல் மெய்யியல் விளக்கம்
- ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம் 73

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி — நாவற்குழி
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 81

ஈழத்தின் வடமேற்கில் அன்றிருந்த தமிழ்க் கூத்து மரபு — பகுதி 1
- சின்னையா மௌனகுரு 86

மார்க்சிய சமூகவியலாளர் கலாநிதி நியூட்டன் குணசிங்க: 1946 — 1988
- ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம் 93

இலங்கையில் கண்ணகி வழிபாட்டுத் தலங்களும் சடங்குகளும்
- ஜெகநாதன் அரங்கராஜ் 102

போருக்குப் பிந்தைய சீரற்ற மீட்பு: சமத்துவமின்மையும் சமூகப் பழுதும் — பகுதி 1,2
- மீநிலங்கோ தெய்வேந்திரன் 112

சைவசித்தாந்தம்: ஆறுமுக நாவலரும் வ.உ. சிதம்பரனாரும்
- நடேசன் இரவீந்திரன் 136

1983 — 1991: உச்சமடைந்த இனப்படுகொலைகளும் ஈழப்போரின் பிராந்தியப் பரிமாணமும் — பகுதி 2
- சி. அ. யோதிலிங்கம் 142

இலங்கையில் கண்ணகி வழிபாடு புகுந்த முறை
- கிருபாகரன் கவிதாஞ்சன் 151

'ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் செயற்பாட்டாளர்' ஏ.எம். இராமையாவும், 'தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயற்பாட்டாளர்' எம்.ஏ. இராகவனும்
- அருணாசலம் லெட்சுமணன் 155

மலையக வாய்மொழிப் பாடல்களில் வெளிப்படும் துரைமார்களின் அதிகாரம்
- வேலாயுதம் இராமர் 162

வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு — கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை
- சுப்ரமணியம் சிவகுமார் 168

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் ஓரளவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும், மயிலத்தமடு மற்றும் மாதவணைப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தொடர்ந்து பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய மோதல்களின் மூல காரணியாக நிலப் பற்றாக்குறை காணப்படுகிறது. நிலத்தின் மீதான அழுத்தம் அதிகரிக்கும் போது, கால்நடை விவசாயிகளுக்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் இடையே பதற்றம் ஏற்படுகிறது. குறிப்பாக, வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் இன்மை காரணமாக, உள்ளூர்க் கால்நடைப் பண்ணையாளர்கள் போராட்டங்களில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்பகுதியின் சமூகபொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் உள்ளூர்ச் சூழல், தற்போதுள்ள வரம்புகள் மற்றும் அரசியல் காரணிகள் போன்றவற்றைப் புரிந்துகொள்வது தற்போது மிக அவசியமாகின்றது. குறிப்பாக, மாவட்டத்தில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை எட்டுவதற்கு, நிலவி வரும் அரசியல் அழுத்தங்களை மாவட்டத்தின் அரசியல்பொருளாதார நலன்களின் அடிப்படையில் ஆராய்ந்து, உரிய பரிந்துரைகளைச் செய்வது கட்டாயமானது. அதற்கமைய, இவற்றை ஆராயும் வகையில் 'மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு – மாதவணை மேய்ச்சல் தரை: நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்' எனும் இக்குறுந்தொடர் வெளியாகின்றது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு – மாதவணை மேய்ச்சல் தரை: நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்


**பகுதி - I**

**வை. ஜெயமுருகன்**



சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

**2009** ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் ஓரளவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும், மயிலத்தமடு மற்றும் மாதவணைப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தொடர்ந்து பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய மோதல்களின் மூல காரணியாக நிலப் பற்றாக்குறை காணப்படுகிறது. நிலத்தின் மீதான அழுத்தம் அதிகரிக்கும் போது, கால்நடை விவசாயிகளுக்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் இடையே பதற்றம் ஏற்படுகிறது. குறிப்பாக, வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் இன்மை காரணமாக, உள்ளூர்க் கால்நடைப் பண்ணையாளர்கள் போராட்டங்களில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்பகுதியின் சமூகபொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் உள்ளூர்ச் சூழல், தற்போதுள்ள வரம்புகள் மற்றும் அரசியல் காரணிகள் போன்றவற்றைப் புரிந்துகொள்வது தற்போது மிக அவசியமாகின்றது. குறிப்பாக, மாவட்டத்தில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை எட்டுவதற்கு, நிலவி வரும் அரசியல் அழுத்தங்களை மாவட்டத்தின் அரசியல்பொருளாதார நலன்களின் அடிப்படையில் ஆராய்ந்து, உரிய பரிந்துரைகளைச் செய்வது கட்டாயமானது. அதற்கமைய, இவற்றை ஆராயும் வகையில் 'மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு - மாதவணை மேய்ச்சல் தரை: நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்' எனும் இக்குறுந்தொடர் வெளியாகின்றது.




## வாசற்படி

கிழக்கு இலங்கையில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டம், வளமான கலாசார பாரம்பரியம், ஏராளமான இயற்கை வளங்கள் மற்றும் துடிப்பான சமூகத்தைக் கொண்ட ஒரு முக்கியமான மாவட்டமாகும். இருப்பினும், உட்கட்டமைப்பு இடைவெளிகள், அதிக வேலையின்மை விகிதம் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு உள்ளிட்ட பல சமூக பொருளாதாரச் சவால்களை இம்மாவட்டம் எதிர்கொள்கிறது. இப்பிரச்சினைகளைத் திறம்படக் கையாளுவதற்கு, ஒரு மூலோபாய மற்றும் விரிவான அணுகுமுறையுடன் கூடிய முழுமையான திட்டத்தை உருவாக்குவது அவசியமாகும். மட்டக்களப்பின் சமூகபொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் உள்ளூர்ச் சூழல், தற்போதுள்ள வரம்புகள் மற்றும் அரசியல் காரணிகளைப் புரிந்துகொள்வது மிக முக்கியமாகிறது. குறிப்பாக, மாவட்டத்தில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை எட்டுவதற்கு, நிலவி வரும் அரசியல் அழுத்தங்களை மாவட்டத்தின் அரசியல்பொருளாதார நலன்களின் அடிப்படையில் ஆராய்ந்து, உரிய பரிந்துரைகளை உள்வாங்குவது அவசியமாகிறது. மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் ஆற்றினாலும், கிழக்கே வங்காள விரிகுடாவினாலும், தெற்கே அம்பாறை மாவட்டத்தாலும், மேற்கே அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டம் 186.43 சதுர கிலோமீட்டர் நீர்நிலைகள் உட்பட மொத்தம் 2,854 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

மாவட்டத்தின் பொருளாதாரம் முதன்மையாக விவசாயத்தைச் சார்ந்துள்ளது. இது சுமார் 30% வேலைவாய்ப்புகளை வழங்குவதோடு, நிலப்பரப்பில் 45.5%க்கும் அதிகமான பகுதியை உள்ளடக்கியுள்ளது.

- நெல் உற்பத்தி: ஆண்டுதோறும் 457,600 டன்களுக்கு மேல் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது (சராசரி விளைச்சல்: ஹெக்டேருக்கு 4.3 மெட்ரிக் டன்).
- இதர பயிர்கள்: எண்ணெய் வித்துகள் மற்றும் பழப்பயிர்கள் 7,170 ஹெக்டேர்களிலும், ஏனைய முக்கிய பயிர்கள் 2,210 ஹெக்டேர்களிலும் பயிரிடப்படுகின்றன.
- உள்ளூர் நுகர்வு: உற்பத்தி செய்யப்படும் நெல்லில் 21% மட்டுமே உள்ளூரில் நுகரப்படுகிறது. எஞ்சிய 79% (சுமார் 357,000 மெட்ரிக் டன்) குறைந்த விலையில் ஏனைய மாவட்டங்களுக்கு மூல நெல்லாக ஏற்றுமதி செய்யப்படுகிறது

(ஆதாரம்: விவசாய அமைச்சு, EPC 2021).

கால்நடை வளர்ப்புச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், உள்ளூர்ப் பால் பண்ணைத் தொழிலில் தங்களின் பங்களிப்பையும், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப நிலையான நடைமுறைகளின் அவசியத்தையும் வலியுறுத்தி வருகின்றனர். அவர்களின் முக்கிய கோரிக்கைகளாக பின்வருவன அமைகின்றன:

1. கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் மற்றும் நீர் ஆதாரங்களை உறுதிப்படுத்துதல்.
2. அண்டை விவசாயிகளால் முன்னெடுக்கப்படும் துன்புறுத்தல் மற்றும் வன்முறையிலிருந்து பாதுகாப்பு.
3. நிலத் தகராறுகளில் சந்தேகிக்கப்படும் அரசியல் தலையீடுகள் குறித்து முறையான விசாரணை நடத்தல்.
4. நிலையான விவசாய நடைமுறைகளுக்கான ஆதரவு மற்றும் காலநிலை மாற்றத் தகவமைப்பு உத்திகள்.

கால்நடை விவசாயிகள் தற்போது கடுமையான காலநிலை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். நீடித்த வறட்சி மற்றும் ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி காரணமாக மேய்ச்சல் நிலங்களும் நீர் ஆதாரங்களும் குறைந்துள்ளன. இதனால் கால்நடைகளின் ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்வதில் சிரமம் ஏற்பட்டு, பால் உற்பத்தி குறைந்து, நிதி நெருக்கடி உருவாகியுள்ளது. அதிகரித்து வரும் வெப்பநிலையால் விலங்குகள் வெப்ப அழுத்தத்திற்கும் (Heat Stress) நோய்களுக்கும் உள்ளாகின்றன. இது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மட்டுமன்றி, உள்ளூர்ப் பால் உற்பத்தியையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

இலங்கையில் உள்ள சுமார் 750,000 கால்நடைகளில், 90%க்கும் அதிகமானவை 10க்கும் குறைவான விலங்குகளைக் கொண்ட சிறு விவசாயிகளிடமே உள்ளன. வறண்ட மண்டலத்தில் அமைந்துள்ள இத்துறை, காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படுகிறது. அதிகரித்த வெப்பம் மற்றும் ஈரப்பதம் காரணமாக ஒட்டுண்ணிகளின் பரவல் அதிகரித்து, நோய் அபாயமும் உயர்ந்துள்ளது.

தற்போதைய மோதல்களின் மூல காரணியாக நிலப் பற்றாக்குறை காணப்படுகிறது. நிலத்தின் மீதான அழுத்தம் அதிகரிக்கும் போது, கால்நடை விவசாயிகளுக்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் இடையே பதற்றம் ஏற்படுகிறது. குறிப்பாக, வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் இன்மை காரணமாக, உள்ளூர்க் கால்நடைப் பண்ணையாளர்கள் போராட்டங்களில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கால்நடை விவசாயிகளின் போராட்டங்கள் அவசர நடவடிக்கைகளுக்கான அழைப்பாகும். அவர்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். கால்நடை வளர்ப்பு என்பது ஒரு பாரம்பரிய வாழ்வாதாரம் மட்டுமல்ல, அது தேசிய பொருளாதாரத்திற்கும் (GDPயில் 1% பங்களிப்பு) மிக அவசியமானது.

அரசாங்கம் இந்த விவசாயிகளின் கவலைகளைச் செவிமடுத்து, அவர்களுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்கள் மற்றும் வளங்களை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், விவசாயிகள் தங்கள் உரிமைகளுக்காகவும் வாழ்க்கை முறையைப் பாதுகாப்பதற்காகவும் முன்னெடுக்கும் போராட்டங்கள் மேலும் தீவிரமடையும். மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் விவசாயப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இம்மாற்றங்கள் இன்றியமையாதவை.

## நிலமும் அடையாளமும்

இலங்கையின் உள்நாட்டுப்போர் மௌனித்து 17 வருடங்களை (2009 - 2026) நெருங்கிக்கொண்டிருக்கும் சூழலிலும், போரின் கொதிநிலை இன்னும் தணியவில்லை என்றே கூறலாம். இன்றும் பல்வேறு வடிவங்களில் சிறிய அளவிலான மோதல்கள் அரங்கேறி வருகின்றன. இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையும், அத்தகைய சூழலை உருவாக்குவதற்கான தொடர் முயற்சிகளும் இன்றும் நீடிக்கின்றன.

ஈழத்தமிழர்களின் போராட்டத்தின் 'உயிர்நிலை' என்பது, தமது நிலத்தின் மீதான விட்டுக்கொடுக்க முடியாத உரிமையை நிலைநாட்டுவதே ஆகும். நிலம் என்பது வெறும் மண் அல்ல; அது ஒரு சமூகத்தின் வாழ்வியல் அடித்தளம், அடையாளம் மற்றும் வாழ்வாதாரம். நிலத்தின் மீதான கூட்டு உரிமையைக் கைவிடும் ஒரு சமூகத்திற்கு, காலப்போக்கில் தனது சுய அடையாளத்தைத் தானே கரைத்துக்கொள்ளும் அபாயம் உள்ளது. ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் மூலவேர், நில அடையாளத்தைப் பாதுகாப்பதிலேயே தங்கியுள்ளது. நிலமே ஒரு சமூகத்தின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் முதற்பொருளாகும்.

கிழக்கு இலங்கையில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரை மோதல்களும் வாழ்வாதாரப் போராட்டங்களும் இன்று பிரதான களங்களாக மாறியுள்ளன. போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் தணியாத கொதிநிலையுடன்

தொடரும் இந்தப் போராட்டங்களின் மையக்கருப்பொருள் நிலமும் அடையாளமும் ஆகும்.

தற்போது மயிலத்தமடு மற்றும் மாதவணை ஆகிய மேய்ச்சல் தரைகள் இந்த மோதல்களின் குறியீடாக மாறியுள்ளன. இப்பிரச்சினையின் மையத்தில் சிக்கித் தவிப்பது என்னவோ அன்றாட வாழ்வாதாரத்திற்காகப் போராடும் கால்நடைப் பண்ணையாளர்களும் அவர்களின் சொத்தான கால்நடைகளுமே ஆகும். ஆழமான அரசியல் நலன்கள், நிர்வாகத்துறையின் இறுக்கமான பிடி மற்றும் நீதித்துறையின் நீண்டகால மௌனம் ஆகியவற்றுக்கு இடையே இந்தப் பிரச்சினை ஒரு தீர்க்க முடியாத முரண்பாடாக உருவெடுத்துள்ளது.

போருக்குப் பிந்தைய சூழலில், மேய்ச்சல் நிலப் பிரச்சினை என்பது வெறும் மனித மோதலாக மட்டுமன்றி, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் பொருளாதாரத்தைச் சிதைக்கும் காரணியாகவும் மாறியுள்ளது.

- உணவுப் பற்றாக்குறை: மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால், கால்நடைகளுக்குப் போதுமான உணவு கிடைக்காமல் அவை பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.
- கால்நடைகள் கொல்லப்படுதல்: மனிதர்களுக்கு இடையிலான மோதல்களில் அப்பாவிக் கால்நடைகள் கொல்லப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் தொடர்கின்றன.
- பொருளாதாரச் சரிவு: மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகமுக்கிய பொருளாதார வளமான கால்நடைத் துறை படிப்படியாக அழிந்து வரும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

தற்போதைய மேய்ச்சல் நிலப் பிரச்சினை என்பது நீண்டகாலத் திட்டமிடலின் ஒரு பகுதியாகும். யுத்த காலத்தில் இப்பகுதிகள் (மகாவலி 'பி' வலயம்) விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, வெளி மாவட்ட ஊடுருவல்கள் தடுக்கப்பட்டிருந்தன. ஆனால், கிழக்கு மாகாணம் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் இம்மோதல்கள் மீண்டும் உயிர் பெற்றன.

இதன் பின்னணியில் உள்ள பிரதான காரணங்கள்:

1. மேலாதிக்கம்: தமிழ் மக்களின் பூர்விக நில இருப்பின் மீதான மேலாதிக்கத்தைச் செலுத்துதல்.
2. புவிசார் அரசியல் மூலோபாயம்: தமிழ் மக்கள் கோரும் வடக்கு - கிழக்கு தாயக நில இணைப்பின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பது.
3. மகாவலித் திட்டம்: இந்த மூலோபாயத் திட்டத்தின் முதன்மை அச்சாணியாக இலங்கையின் மிகப்பெரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமான 'மகாவலி அபிவிருத்தித் திட்டம்' பயன்படுத்தப்படுகிறது. மேய்ச்சல் நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவது என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட குடியேற்றங்கள், இப்பகுதியின் இனப்பரம்பலையும் நில உரிமையையும் மாற்றியமைக்கும் நோக்கம் கொண்டவை என அஞ்சப்படுகிறது.

## மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் வருகை

இலங்கையின் நீளமான நதியாகிய மகாவலி கங்கையையும் அதன் கிளை ஆறுகளை அண்டிய நிலப்பரப்புகளையும் மையப்படுத்தி, 1964ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தினால் 'UNDP' மற்றும் 'FAO' நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் மகாவலி அபிவிருத்தித் திட்டம். ஆரம்பத்தில் இத்திட்டம் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அபிவிருத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்கள் 'System A' முதல் 'M' வரை 13 தொகுதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தன. இதில் A, B (வலது கரை), I, J, K, L மற்றும் M ஆகிய ஏழு தொகுதிகள் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்கத்தில் இத்திட்டம் ஒரு சாதகமான வளர்ச்சியாகவே பொதுவெளியில் பார்க்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அந்த நிலைப்பாடு மாறி, தமிழ் பேசும் மக்களின் சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் கருவியாக அது உருவெடுத்தது. கடந்த ஆறு தசாப்தங்களாகத் தமிழ் மக்கள் எதிர்கொண்ட கசப்பான அனுபவங்களிலும், இன முரண்பாடு ஒரு முழு அளவிலான போராக மாறியதிலும் மகாவலித் திட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள் மிக முக்கியமானவை.

இலங்கையின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டமான இது, மகாவலி மற்றும் அதனைச் சுற்றியுள்ள நதிப் படுகைகளிலிருந்து நீர்வளத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. விவசாய உற்பத்தியை அதிகரித்தல், நீர்மின்சாரம், வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலமற்ற விவசாயிகளைக் குடியமர்த்துதல் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவை இதன் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 39 சதவீதத்தையும், வறண்ட

மண்டலத்தின் 55 சதவீதத்தையும் உள்ளடக்கிய இந்தப் பகுதிகளில் நிலமற்ற ஏழை விவசாயிகள் மீள்குடியேற்றப்பட்டனர். 1979ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது, நிலம் மற்றும் நீர் மேலாண்மைக்கான அரச அமைப்பாகச் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 365,000 ஹெக்டேர் நிலப்பரப்பு உள்ளடக்கப்பட்டதுடன், புதிய குடியிருப்புகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டது. தற்போது 101,000 ஹெக்டேர்களுக்கும் அதிகமான நீர்ப்பாசன நிலங்களை இந்த அதிகார சபை நிர்வகித்து வருகிறது.

ஆரம்பத்தில் 900,000 ஏக்கர் நிலத்தைப் பாசன வசதி மூலம் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் 650,000 ஏக்கர் புதிய நிலமும், நீர்ப் பற்றாக்குறையுள்ள 250,000 ஏக்கர் நிலமும் அடங்கும். நீர்த்தேக்க நீர் மூலம் 507 மெகாவாட் திறனுடன் 2,600 மில்லியன் 'GWh' இனை உற்பத்தி செய்யும் திட்டமும் உள்ளடக்கப்பட்டது. 1968ஆம் ஆண்டு ரூ. 6,700 மில்லியன் செலவில் 30 ஆண்டுகாலத் திட்டமாக இது வகுக்கப்பட்டிருந்தது. 1970இல் பிரதமர் டட்லி சேனநாயக்க இதற்கான அடிக்கல்லை நாட்டினார். பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, யூகோஸ்லாவிய நிறுவனமான இங்க்ரா மற்றும் சில உள்ளூர் நிறுவனங்களின் உதவியுடன், 30,000 ஏக்கர்களைச் சேர்த்து, இத்திட்டத்தினை முன்னெடுத்தார். விவசாயம் மற்றும் மின்சாரத் துறையில் முன்னேற்றத்தைக் கொண்டுவந்தார். இதன் மூலம் ஐந்து ஆண்டுகளில் ரூ. 350 மில்லியன் செலவில் குறிப்பிடத்தக்க பொருளாதார வருமானம் ஈட்டப்பட்டது.

1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தன்னிறைவு, நீர்மின்சாரம் மற்றும் 1.2 மில்லியன் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை முன்னிறுத்தி மகாவலித் திட்டத்தை விரைவுபடுத்துவதை அரசியல் நோக்கமாகக் கொண்டது. நீர்ப் பயன்பாட்டை பற்றிய மதிப்பீடுகளின் அடிப்படையில், முதலில் திட்டமிடப்பட்ட 900,000 ஏக்கரில் பாதியை மட்டுமே அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. மகாவலிப் படுகைக்கு வெளியே உள்ள ஆற்றுப்பள்ளத்தாக்கு உரிமைகளை மதிக்கும் வகையில் மத்திய மாகாண கால்வாய் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டதால் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திட்டம் (AMP) உருவாக்கப்பட்டது.

இந்தத் திட்டம் 71,000 ஏக்கர் புதிய நிலத்தை அபிவிருத்தி செய்வதையும், சிஸ்டம்கள் A-D இல் உள்ள பாசன நிலங்களை மேம்படுத்துவதையும், நீர் ஒழுங்குமுறை மற்றும் மின்சார உற்பத்திக்காக கொத்மலே மற்றும் விக்டோரியா போன்ற அணைகளைக் கட்டுவதையும் இலக்காகக் கொண்டது. ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தத் திட்டம் சுமார் 500,000 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கி, 140,000 புதிய குடும்பங்களைக் குடியேற்றுவதற்கும், கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்களுக்குப் பயனளிக்கும் உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், மக்கள் தொகை நெரிசலைக் குறைப்பதற்கும், உணவுத் தன்னிறைவை அடைவதற்கும் உருவாக்கப்பட்டது.

1931 ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா வேளாண்மை மற்றும் நில அமைச்சராக நியமிக்கப்பட்டது வறண்ட மண்டலத்தில் பல நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்க வழிவகுத்தது. அவர் விவசாயப் பின்னணி கொண்டவராக இருந்ததும், பண்டைய சிங்கள மன்னர்களின் நீர்ப்பாசன முறைகளை மீட்டெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்ததும் இதற்குத் தூண்டுதலாக இருந்ததாக கருதப்படுகிறது. 1935 இல் வெளியான அவரது 'விவசாயம் மற்றும் தேசபக்தி' என்ற நூல் போன்ற முயற்சிகள் அரசு அதிகாரிகளுக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கின. காலப்போக்கில், சுதந்திர இலங்கையில் அரசியல் செல்வாக்கும் அதிகாரமும் இணைந்த நிலையில், பண்டைய நீர்ப்பாசன அமைப்புகளை மீட்டெடுப்பதோடு சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் கொள்கைகளும் முன்னெடுக்கப்பட்டன; இது பின்னாளில் நாட்டின் இனப்பிளவையும் நீண்டகால மோதல்களையும் தீவிரப்படுத்திய காரணிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

சேனநாயக்காவின் கல் ஓயா விவசாயக் குடியேற்றத் திட்டம் அரசியல் நோக்கங்களுடனும் சிங்களப் பெரும்பான்மைச் சூழலுடனும் முன்னெடுக்கப்பட்டதாக விமர்சிக்கப்படுகிறது. கல் ஓயா திட்டத்தின் செயற்பாடுகள் இன முரண்பாடுகளையும் பதற்றங்களையும் உருவாக்கிய சூழலில், தமிழர் எதிர்ப்பு உணர்வுகளையும் தூண்டியதாகவும் கூறப்படுகிறது. அதன் விளைவாக அரசியல் ஆதரவு பெற்ற குழப்பங்களும் வன்முறைச் சம்பவங்களும் ஏற்பட்டன; அவை அப்பாவித் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடைபெற வழிவகுத்த, வரலாற்றின் முக்கியத் திருப்புமுனையாகக் கருதப்படுகின்றன.

இலங்கை வரலாற்றில் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மகாவலி மேம்பாட்டுத் திட்டம், நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகான மிகப்பெரிய முயற்சியாகக் கருதப்படுகிறது. இது தீவின் சமூக - இன நிலப்பரப்பை மாற்றியமைத்த ஒரு முக்கிய

அபிவிருத்திக் கருவியாக அமைந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு உருவான இந்தத் திட்டம், உக்னோ விக்ரமசிங்க, சர் ஆர்தர் ரணசிங்க மற்றும் எச்.எம். ஹுலுகல்லே போன்ற மூத்த அதிகாரிகளின் சிந்தனைகளால் பாதிக்கப்பட்டதாகவும், பாலஸ்தீனில் உருவாக்கப்பட்ட யூதக் குடியேற்ற அனுபவங்களிலிருந்து ஊக்கமடைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. 1977க்குப் பின்னர் துரிதப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், குடியேற்றங்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது. மாதுரு ஓயா பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பத்தில் சவால்களைச் சந்தித்தாலும், 1980களிலிருந்து இராணுவ - நிர்வாக ஒத்துழைப்புடன் அவை விரிவடைந்தன. இந்தக் காலகட்டத்தில் உருவான குடியேற்ற மற்றும் நிலப் பயன்பாட்டுக் கொள்கைகளே பின்னர் மேய்ச்சல் நிலங்களைச் சுற்றியுள்ள இன முரண்பாடுகளின் வரலாற்றுப் பின்னணியாகக் கருதப்படுகின்றன.

கிழக்கில் மேய்ச்சல் நிலங்கள் குறைந்து போனதற்கான காரணங்களில் ஒன்று 1950களிலிருந்து முன்னெடுக்கப்பட்ட குடியேற்ற விரிவாக்கத்தை நோக்கிய அரசியல் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகும். இதனால் கிழக்கில் பால் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மேய்ச்சல் நிலங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைத் தாண்டி, சமூக மற்றும் இன உறவுகளையும் பாதிக்கும் பரந்த விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## மாதுரு ஓயா நீர்த்தேக்கம் மற்றும் 'System B' இன் வலது கரை (Right Bank) அபிவிருத்தி

மகாவலி அபிவிருத்தித் திட்டம் முழுமையாக நிறைவுறுவதற்கு இன்னும் 30 வருடங்கள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதனைத் தனது ஆறு வருட ஆட்சிக்காலத்திற்குள் நிறைவு செய்வதாகக் கூறி, ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களினால் இத்திட்டம் 'துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம்' (Accelerated Mahaweli Programme) எனப் பெயர் மாற்றப்பட்டது. இத்திட்டத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட 12 முக்கிய வேலைத்திட்டங்களுள் ஒன்றான மாதுரு ஓயா நீர்த்தேக்கம் மற்றும் 'System B' வலயத்தின் வலதுகரை (Right Bank) அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையதாகவே இன்றைய மயிலத்தமடு மற்றும் மாதவணை மேய்ச்சல் தரைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மாதுரு ஓயாவினுடைய இடது மற்றும் வலது கரைகள் மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளன. இதில் இடதுகரையானது முற்றுமுழுதாக பொலன்னறுவை மாவட்டத்திற்குள்ளும், வலது கரையானது மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளும் அமைந்துள்ளன. குறிப்பாக, பொலன்னறுவை மாவட்டத்தின் வெலிகந்த மற்றும் திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவுகளையும், மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வடக்குப் (வாகரை) பிரிவையும் உள்ளடக்கியதாகவே 'System B' வலயம் வரையறுக்கப்பட்டது.

ஆயினும், முந்தனை ஆற்றினை அண்டி அமைந்துள்ள கோரளைப்பற்று (வாழைச்சேனை) மற்றும் ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளும் பின்னரான காலப்பகுதியில் மகாவலித் திட்டத்திற்குள் 'விசேட பிரதேசங்களாக' (Special Areas) உள்வாங்கப்பட்டன. இத்தகைய நிர்வாக மாற்றங்களே காலப்போக்கில் நிலப்பயன்பாட்டு முரண்பாடுகளுக்கும், உள்ளூர்ப் பண்ணையாளர்களின் மேய்ச்சல் நிலங்கள் பறிபோவதற்கும் அடிப்படையாக அமைந்தன.

நீர்மின்சார உற்பத்தி, வெள்ளக் கட்டுப்பாடு, உலர் வலய விவசாயத்திற்கான நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், நிலமற்ற மற்றும் வேலையற்ற குடும்பங்களைக் குடியேற்றுதல் மற்றும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான பௌதீக, சமூக உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியன இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாக அறிவிக்கப்பட்டன. இருப்பினும், அபிவிருத்தி என்ற போர்வையின் கீழ், குறிப்பிட்ட பிரதேசங்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நுட்பமான அரசியல் நிகழ்ச்சி நிரலும் துரித மகாவலித் திட்டத்தில் மறைமுகமாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினால் மட்டக்களப்பு வாழ் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் இன்று நேற்று தொடங்கியவை அல்ல. துரித மகாவலித் திட்டம் 1977 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதற்கான எதிர்ப்புணர்வுகளும் பிரச்சினைகளும் 1983 ஆம் ஆண்டளவிலேயே முளைவிடத் தொடங்கின. மாதுறு ஓயாவை அண்டிய மட்டக்களப்பு நிலப்பரப்பில் தமிழர்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பதாகக் குற்றம் சுமத்திய அன்றைய அரசாங்கம், அதற்குப் போட்டியாகச் சிங்கள மக்களை முறையற்ற விதத்தில் அங்கு குடியேற்றத் தொடங்கியது.

அக்காலகட்டத்தில் ஏற்பட்ட இந்தச் சிக்கலான நிலையைத் தணிக்க இந்தியா தலையிட்ட போதிலும், அந்த முயற்சி பெரிய அளவில் வெற்றியளிக்கவில்லை.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த சூழலில், இந்தப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் படிப்படியாகக் குறைந்தன. இதனால் 2009 ஆம் ஆண்டு வரை மேய்ச்சல் தரை தொடர்பான பிரச்சினைகள் பாரிய அளவில் எழவில்லை. ஆனால், 2009 இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தவுடன், மீண்டும் மேய்ச்சல் தரைகளை அண்டிய பகுதிகளில் அத்துமீறிய குடியேற்றங்களை அரசாங்கம் இராணுவப் பாதுகாப்போடு ஊக்குவிக்கத் தொடங்கியது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டிலிருந்து மயிலத்தமடு மற்றும் மாதவணை ஆகிய இரு மேய்ச்சல் தரைகளும் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டன. சுமார் 3,150 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட இந்த மேய்ச்சல் தரையில், அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேற்றப்படுவதற்கு அரச இயந்திரம் நேரடியாக உதவியதுடன், இராணுவம் அதற்கான பாதுகாப்பு அரணாகச் செயற்பட்டது. இதுவே இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடைப் பொருளாதாரத்தைச் சிதைக்கும் பாரிய நிலப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.


50 ஆண்டுகளிற்கு மேலாக தமிழ் கால்நடைப் பண்ணையாளர்களால் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த 25,000 ஏக்கர் காணி, செங்கலடி - வாழைச்சேனை - வாகரை மற்றும் கிரான் பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து பெறப்பட்டு, 2013 இல் காட்டுக்குரிய ஒதுக்கமாக அறிவிக்கப்பட்டது. அந்த எல்லையினுள் வேறு எவரும் உள்நுழைய வேண்டாம் என மட்டக்களப்பு மாவட்ட வன அதிகாரிகள் மூலம் பதாகைகள் நட்டு, இராணுவத்தின் பாதுகாப்பும் போடப்பட்டது. இந்நிலை பல பதற்ற நிலைகளை உருவாக்கியது.

2020 ஆம் ஆண்டளவில் அப்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் மகாவலி அதிகார சபையுடன் இணைந்து குறித்த மேய்ச்சல் தரைகளில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஊக்கமளித்திருந்தமை பிரச்சினையை இன்னும் சிக்கலாக்கியது. பல சட்டரீதியான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் சார்பாக எடுக்கப்பட்டு, நீதிமன்றம் மூலம் முறையற்ற குடியேற்றங்களை அகற்றுமாறு உத்தரவிடப்பட்டிருந்தும், இன்றுவரை அக்குடியேற்றங்கள் அகற்றப்படவில்லை.


## வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குள் உள்ளடக்கப்படும் மகாவலி அபிவிருத்தி மண்டலங்களும் அதன் தாக்கங்களும்

மகாவலி நீர் எமது காலத்தில் மட்டுமல்ல; எமக்கு அடுத்தடுத்த சந்ததியினரின் காலத்திலும் இந்தப் பகுதிக்கு வரக்கூடிய எந்தச் சாத்தியக் கூறுகளும் இல்லை. தமிழ் மக்களிடமிருந்து காணிகளைப் பறித்து அவர்களை வெளியேற்றுவதுதான் அவர்களுடைய நோக்கம்; அதற்கு அப்பால் வேறு எதுவும் இல்லை. மகாவலி அதிகாரசபை என்ற போர்வைக்குள் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, எங்களுடைய காணிகளைப் பறித்து சிங்களவர்களுக்கு வழங்கிக்கொண்டிருப்பதே அவர்களுடைய செயற்பாடாக உள்ளது.

மகாவலித் திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படும் போது, குறைந்தபட்சம் விகிதாசார அடிப்படையிலாவது தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட்டிருந்தால், அதில் பாகுபாடு வெளிப்படாத ஒரு நிலைமை இருந்திருக்கும். ஆனால், ஏற்கனவே தமிழ் மக்களுக்கு உரித்தாயிருந்த காணிகளையும், அவர்களால் பயன்படுத்தப்பட்ட குளங்களையும் அபகரித்து தமது திட்டங்களை முன்னெடுப்பதே இத்திட்டத்தின் உண்மையான இலக்காக உள்ளது.




Source: Land Use Planning Division, Mahaweli Authority of Sri Lanka




*வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குள் உள்ளடக்கப்படும் மகாவலி அபிவிருத்தி மண்டலங்களும் அது குறித்த விவரங்களும்:*

| | | |
|---|---|---|
| A | மகாவலி A மண்டலம் என்பது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு முன்மொழியப்பட்ட புதிய மேம்பாட்டுப் பகுதியாகும் (திருகோணமலை மாவட்டம்). | A மண்டலத்திற்குள் உள்ள குறிப்பிட்ட நிர்வாக மாவட்டங்கள் மற்றும் பிரிவுகள் முழுமையாக வெளியிடப்படவில்லை; செயற்படவில்லை. 2026 இல் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மொத்தம் 70,000 ஹெக்டேர் நிலப்பரப்பை உள்ளடக்கியது. இந்தத் திட்டத்தில் விவசாயத் துறையின் மேம்பாட்டிற்காக உள்ளூர்க் குடியேறிகள் மற்றும் விவசாய நிறுவனங்களுக்கு நிலத்தை விநியோகிப்பதும் அடங்கும். |
| B | பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் அண்மையில் இணைக்கப்பட்ட அம்பாறையின் எல்லைப்பகுதி (5%). 'B' வலயத்தின் அம்பாறையின் கிராமம் ஒன்றை வில் பொத்தனா என்னும் பெயராக மாற்றும் வகையிலான திட்டங்களும் தற்போது உருவாகி வருகின்றன. | மகாவலி 'B' வலயம் முதன்மையாக பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களுக்குள் அமைந்துள்ள ஒரு முக்கிய அபிவிருத்தி வலயமாகும். குறிப்பாக, வெலிகந்த மற்றும் திம்புலாகலை பிரதேச செயலகப் பிரிவுகளிலும், கோறளைப் பற்று வடக்குப் (வாகரை) பிரதேசத்திலும் இது பரவியுள்ளது. இப்பகுதி மகாவலி கங்கை மற்றும் மாதுரு ஓயா ஆகிய ஆறுகளால் சூழப்பட்டுள்ளது. |
| I | மதவாச்சியும் இதற்குள் அடங்குகிறது. இது வட மத்திய மாகாணத்தின் ஆற்றுப்படுகைப் பகுதிகளில் ஒன்றாகவும், வவுனியாவின் தெற்குப் பகுதிகளுக்கு அருகிலுமுள்ள ஒரு வலயமாகவும் உள்ளது. மேலும், I மற்றும் H வலயங்கள் ஒன்றிணைக்கப்பட்டதாகக் கூறப்படும் தகவல்களும் உள்ளன. அதேபோல், I & H பகுதி வலயம், 'L' வலயத்துடன் இணைக்கப்படும் ஒரு முக்கியப் புள்ளியாகவும் விளங்குகிறது. | I & H பகுதி வலயம், L வலயத்துடன் இணைக்கப்படும் ஒரு புள்ளியாகும். L வலயம் இணையும் போது, தமிழ் மாவட்டங்களின் பல பகுதிகள் ஏனைய மாவட்டங்களுடன் உள்வாங்கப்படும் நிலை உருவாகும். |
| J | மகாவலி 'J' வலயத்திற்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுகளும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச சபைப் பிரிவும், வவுனியா வடக்குப் பிரதேச சபைப் பிரிவும் உள்வாங்கப்படுகின்றன. துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் மாந்தை மேற்கு பகுதிகளில் ஒவ்வொரு பிரதேசத்திலும் தலா 15 கிராம சேவகர் பிரிவுகள் அடங்குமாறு 'J' வலயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. | இந்தத் திட்டங்களின் மூலம் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளில் இனப் பரம்பல் மாற்றம் ஏற்படுத்தப்படும் நிலை உருவாகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 1,40,000 மக்கள் வசித்து வருகின்றனர். இதில் புதுக்குடியிருப்பைப் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான பகுதிகளில் வாழும் மக்கள் இத்திட்டங்களால் பாதிக்கப்படக்கூடிய நிலை உள்ளது. வவுனியா வடக்குடன் தொடர்புடைய கரைத்துறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் பகுதிகளுக்குள் உள்ளடங்கிய காணிகளில் உள்ள பெரும்பாலான குளங்கள் அபகரிக்கப்பட்டு, 'கெவில் ஓயா' என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணியை மணலாற்றில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| L | முல்லைதீவு, அனுராதபுரம், வவுனியா (வெலிஓயா) ஒன்றிணைந்த அபிவிருத்தி திட்டம். 1. வெலிஓயா 2. பதவியா 3. கெபிதிகொல்லேவ 4. வவுனியா தென்பகுதி 5. வவுனியா வடக்கு | இப்பகுதி மக்கள் அங்கு குடியிருந்து 50 வருடங்களுக்கு மேலாகிவிட்ட போதிலும், அவர்களின் நில உரிமைகள் முற்றாகப் பறிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அங்கு முன்பு 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்பட்டு, நில உரிமைகள் மீண்டும் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். மேலும், வயல் நிலங்கள் முன்பு 99 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அவையும் தற்போது பறிக்கப்பட்டுள்ளன. 1980களிலிருந்து 'மகாவலி எல் வலயம்' என்ற பெயரில் எமது பூர்விக நிலங்கள் தொடர்ந்து அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 2500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, ஊர்மனைப் பகுதிகளுக்கு அண்மையாகவே சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மகாவலி 'எல்' வலயத்தின் பெயரில் தமிழ் மக்களுக்கு பயனளித்துவரும் காணிகள் பறிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தின் மூலம் தன்னிறைவை அடைந்து வந்தனர். ஆனால் அவர்களுடைய காணிகள் பறிக்கப்பட்டதன் விளைவாக இன்று தமிழ் மக்கள் விவசாயம் செய்ய காணிகளின்றிக் காணப்படுகின்றனர். மகாவலி கோட்டக்கேணி விநாயகர் ஆலயத்திற்கு அருகிலுள்ள காடுகள் பாரிய இயந்திரங்கள் மூலம் ஏக்கர் கணக்கில் அழிக்கப்பட்டு, அந்த நிலங்களை சிங்கள மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உந்திராயன் குளம் என அழைக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசத்தில் 264 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டு, 'நெலும்வெவ' எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. 360 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆமையன்குளம் 103 மில்லியன் ரூபாய்க்கும் மேற்பட்ட நிதியில் புனரமைக்கப்பட்டு, அந்த இடத்திற்கு 'கிரிவன்வெவ' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்கள மக்களிடம் கையளிக்கப்பட்டது அனைவரும் அறிந்த விஷயமாகும். இக்குளத்தைச் சுற்றியுள்ள 360 ஏக்கர் நிலங்களில் தமிழ் மக்கள் முன்பு விவசாயம் செய்து வந்தனர். இதனுடன் சுமார் 900 ஏக்கர் நிலப்பரப்பளவில் காடுகள் அழிக்கப்பட்டும், பிற வளங்கள் பயன்படுத்தப்பட்டும், அந்த நிலங்கள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 3,744 ஏக்கர் காணி இணைக்கப்பட்டு மொத்தம் 11,232 ஏக்கர் காணிகள் 'மகாவலி எல்' என்ற பெயரில் அபகரிக்கப்பட்டுள்ளன. 'எல்' வலயத்திற்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச சபைப் பிரிவுகளைச் சேர்ந்த 34 கிராம சேவகர் பிரிவுகள் அடங்குகின்றன. இதயபூமி எனக் குறிப்பிடப்படும் மணலாறு பகுதியும், முல்லைத்தீவு கச்சேரி என அழைக்கப்படும் பகுதியும் கூட இந்த 'எல்' வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மகாவலி 'எல்' திட்டத்தின் கீழ் மட்டும் முல்லைத்தீவில் 4,367 ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதற்குப் பின்னரும் சூரியனாறு பகுதியில் 1,700 ஏக்கர் காணி உட்பட மேலும் சில காணிகளை உள்வாங்கும் யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. மணலாறுப் பகுதி எவ்வாறு அபகரிக்கப்பட்டு சிங்களமயமாக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. தற்போது அங்கு 12,187 பேர் வசித்து வருகின்றனர். அந்தப் பகுதி தனியான பிரதேச செயலகப் பிரிவாகவும் மாற்றப்பட்டுள்ளது. இதேபோன்று இக்குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு, இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் இப்பகுதிகளில் பெரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி, ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ள இடங்களில் மேலும் புதிய குடியேற்றங்களை உருவாக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| M | முல்லைதீவு, அனுராதபுரம், வவுனியா (வெலிஓயா) ஒன்றிணைந்த அபிவிருத்தி திட்டம்.<br>1. வெலிஓயா 2. பதவியா 3. கெபிதிகொல்லேவ 4. வவுனியா தென்பகுதி 5. வவுனியா வடக்கு | வறண்ட மண்டலத்தில் விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மகாவலி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக சிஸ்டம் 'M' உள்ளது. ஆரம்ப முயற்சிகள் H மற்றும் C அமைப்புகளில் கவனம் செலுத்தியிருந்தாலும், பின்னர் நீர்ப்பாசனம் மற்றும் குடியேற்றத்திற்கான மாஸ்டர் திட்டத்தின் கீழ் கூடுதல் பகுதிகளைச் சேர்க்க விரிவுபடுத்தப்பட்டது. மகாவலி அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் சிஸ்டம் M, விவசாய மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மையை வலியுறுத்துகிறது. இது முதன்மையாக மகாவலி மாஸ்டர் திட்டத்தின் இறுதி மற்றும் மிகப்பெரிய முயற்சியான மொரகஹகந்த-களுகங்கை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மொரகஹகந்த-களுகங்கை நீர்த்தேக்கங்கள் 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிறைவடைந்தன. |

**ACCELERATED MAHAWELI DEVELOPMENT PROJECT AREA**




Source: Department of Geography, 2010. Accelerated Mahaweli Development project Area. GIS Lab, University of Peradeniya, Sri Lanka

## மயிலத்தமடு மற்றும் மாதவணை மேய்ச்சல் தரைகள்: ஒரு வரைபடம்

பகுதி -2

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் ஓரளவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும், மயிலத்தமடு மற்றும் மாதவணைப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தொடர்ந்து பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வரலாற்று ரீதியாக மயிலத்தமடு மற்றும் மாதவணைப் பிரதேசங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து தலைமுறைகளுக்கும் மேலாக கால்நடை மேய்ச்சல் பிராந்தியங்களாகச் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக 1970களின் தொடக்க காலத்திலிருந்து, இப்பகுதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கியமான கால்நடைத் தீவனப் பகுதிகளாக விளங்கி வந்துள்ளன. ஆனால் 2019க்குப் பின்னர், போருக்குப் பிந்தைய காலத்தில் ஏற்பட்ட மேய்ச்சல் நில மோதல்கள் பல கால்நடைப் பண்ணையாளர்கள் இடம்பெயர வேண்டிய சூழலை உருவாக்கின.

சமீப காலங்களில் அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த குடியேறிகள் கால்நடை மேய்ச்சல் புல்வெளிகளை ஆக்கிரமிக்கும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக 1,400க்கும் மேற்பட்ட கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன என்பது நிலைமையின் தீவிரத்தைக் காட்டுகிறது. இந்தச் சூழ்நிலை மாவட்டத்தின் தினசரி பால் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் மேய்ச்சல் நிலங்களை இழப்பதற்கு முன்பு, உள்ளூர் பால் பண்ணை விவசாயிகள் மாவட்டத்தின் பால் உற்பத்தித் துறைக்கு முக்கியமான பங்களிப்பை வழங்கி வந்தனர். கட்டாயக் குடியேற்றங்களால் உருவான பிரச்சினைகளைத் தீர்க்க பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

மயிலத்தமடு மற்றும் மாதவணை ஆகிய மேய்ச்சல் நிலங்கள் ஏறாவூர்ப்பற்று (செங்கல்லடி) பிரிவுக்குள் அமைந்துள்ளன. குறிப்பாக சித்தாண்டி, இலுப்படிச்சேனை மற்றும் முறக்கொட்டாஞ்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்கள் இந்தப் பகுதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். 2023ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி, 1,072 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றன.

பிரச்சினை நிலவும் பகுதிகள் மாவட்டத்தின் வலது கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன; அவை அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்ட எல்லைகளுக்கு மிக அருகில் உள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் குடியிருப்பு பகுதிகளிலிருந்து இவை தொலைவில் இருப்பதால், பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்பகுதிகளில் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதில் அதிக ஆர்வம் உள்ளது.

பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் நிர்க்கதிக்குள்ளாகி, 2023 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் தேதி முதல் சித்தாண்டி பிரதான வீதியின் ஓரமாகத் தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டம் 400 நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்தது. பின்னர் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அது கைவிடப்படும் நிலை உருவானது. ஆரம்பத்தில் அதிக உற்சாகத்துடன் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் தற்போது மந்தமான நிலையிலுள்ள ஒரு குறியீட்டுப் போராட்டமாகத் தொடர்கிறது.

பண்ணையாளர்களின் பிரச்சினை பொதுமக்களின் கவனத்தையும் கரிசனையையும் பெற்றிருந்தாலும், அதற்கு உறுதியான தீர்வை ஏற்படுத்தும் அளவிற்கு அது இன்னும் பரவலாக முன்னெடுக்கப்படவில்லை. மேய்ச்சல் நிலப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் நீடித்து வருகின்றது. இதனை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பரந்த அளவிலான, ஒருங்கிணைந்த மற்றும் வினைத்திறனான நடவடிக்கைகள் அவசியமானவை என்பதே பலரின் கருத்தாகும்.

அரசியல் மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் இவ்வாறு நீடித்து வரும் நிலையில், கால்நடை விவசாயத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு மாவட்டம் இன்றுவரை ஆரம்பித்த இடத்திலேயே நிற்கின்றது என்பது ஒரு பாரிய குறைபாடாகக் கருதப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக எத்தனை கால்நடைகள் உள்ளன என்பதற்கான துல்லியமான புள்ளிவிவரங்கள் இன்றுவரை கிடைக்கவில்லை. பண்ணையாளர்கள் தங்களிடம் உள்ள கால்நடைகளை தமக்குரிய மிருக வைத்தியசாலை எல்லைக்குள் பதிவு செய்வதில் காட்டும் தயக்கமும் இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறது.

2020 ஆம் ஆண்டு வரை ஏறாவூர்ப்பற்று (செங்கல்லடி) பிரதேசத்தில் சுமார் 130,000 கால்நடைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன. சரியான முறையில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டால்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை நாட்டின் மொத்த கால்நடை எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது என்பதும் வெளிப்படும். அதனுடன், கால்நடை உற்பத்தியில் மட்டக்களப்பு மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதும் தெளிவாகும்.

2011 ஆம் ஆண்டு நில அளவை மேற்கொள்ளப்பட்டு மேய்ச்சல் தரைக்கு நிலம் ஒதுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வர்த்தமானியை இதுவரை வெளியிடாதிருப்பதும், மேய்ச்சல் நிலம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாததற்கான முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 20% ஆக இருந்த காட்டுப் பரப்பளவு தற்போது 12%க்கும் குறைவாகத் தாழ்ந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இதனைக் காரணமாகக் காட்டி மேலும் மேய்ச்சல் தரைக்காக நிலம் ஒதுக்குவதற்கான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன. மாவட்டத்தின் காட்டுப் பரப்பளவு இன்னும் குறையக்கூடும் என்ற வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிலைப்பாடே, மேய்ச்சல் நில ஒதுக்கீடு தொடர்பான அந்த வர்த்தமானி இதுவரை வெளியிடப்படாமல் இருப்பதற்கான முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை ஒதுக்கப்படும் வாய்ப்பு உருவானால், பதிவு செய்யப்பட்டிருக்கும் கால்நடை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்படும் சாத்தியம் அதிகம் உள்ளது. ஆகையால், பண்ணையாளர்கள் தங்களுடைய கால்நடைகளை முறையாகப் பதிவு செய்ய வேண்டிய அவசியத்தை உணர்த்துவது மிக முக்கியமானதாகும்.

அதுமட்டுமல்லாமல், கால்நடைகளின் சரியான பதிவுகள் இல்லாத காரணத்தால், கால்நடை விவசாயத்தின் மூலம் இலங்கையின் மொத்தக் கால்நடை உற்பத்தியில் மட்டக்களப்பு மாவட்டம் எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்பதும் தெளிவாக வெளிப்படாமல் உள்ளது.

நாட்டின் மொத்தப் பாலுற்பத்தி தேவையில் சுமார் 17% மட்டுமே உள்நாட்டு உற்பத்தியின் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது. மேய்ச்சல் தரைப் பிரச்சினை தொடர்ந்து நீடித்தால், மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலுற்பத்தி மேலும் வீழ்ச்சியடையும் வாய்ப்பு உள்ளது. அது நாட்டின் மொத்தப் பால் உற்பத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

பால்மா உள்ளிட்ட பாலுற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஏற்கனவே பல மில்லியன் டொலர் வெளிநாட்டு நாணயம் செலவிடப்படுகின்றது. இந்த நிலையில் மேய்ச்சல் தரைப் பிரச்சினையால் கால்நடைகளுக்குப் போதிய தீவனம் கிடைக்காமல் உற்பத்தி குறையுமாயின், அதன் பொருளாதார விளைவுகள் மேலும் தீவிரமாகும்.

2022 ஆம் ஆண்டிலிருந்து மயிலத்தமடு மற்றும் மாதவணைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையின் காரணமாக, 10,000க்கும் மேற்பட்ட கால்நடைகள் சேனைப் பயிர்ச் செய்கையாளர்களால் பல்வேறு வழிகளில் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இனமுறுகல் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அதேவேளை, இது நாட்டின் மொத்தப் பால் உற்பத்தியிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும், மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தால் கால்நடைகளை கிராமங்களுக்குள் வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலை உருவாகி, அது வயல் செய்கையையும் பாதிக்கும் சூழல் ஏற்படுகின்றது.


இதற்கான ஒரு தீர்வாக மாவட்ட எல்லைகளை தெளிவாக வரையறுத்து, மேய்ச்சல் தரைகளையும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் வரையறுக்க முடியும். இதன் மூலம் தேவையற்ற இனமுறுகல் நிலைகளைத் தவிர்க்க முடியும். அதேவேளை, சேனைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கும் அவர்களுடைய மாவட்டங்களுக்குள் உரிய இடங்களை ஒதுக்குவதன் மூலம், கால்நடை வளர்ப்பு, நெற்செய்கை மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை ஆகியவை ஒருங்கிணைந்த முறையில் முன்னெடுக்கப்படலாம். இவ்வாறு ஒருங்கிணைந்த விவசாய நடைமுறைகள் நாட்டின் மொத்த உற்பத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கும் முக்கிய பங்களிப்பை வழங்கும்.

மொத்தத்தில், நாட்டின் மொத்தக் கால்நடை உற்பத்தியிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடை விவசாயம் வழங்கும் பங்களிப்பு தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தை முன்வைக்கும் புதிய அரசாங்கம், மேய்ச்சல் தரை தொடர்பாக கால்நடைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவான தெளிவான கொள்கையை உருவாக்குவது அவசியமாகும். மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட

வேண்டும். அதேவேளை, கால்நடை உற்பத்தி அதிகரிக்கப்படுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்காக கால்நடைகள் முறையாகப் பதிவு செய்யப்படுதல், உற்பத்தியை மேம்படுத்தத் தேவையான நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுதல், பெரிய அளவிலான பாலுற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள் நிறுவப்படுதல் ஆகியவை அவசியமாகின்றன.

விவசாயத் துறையையும் கொண்டுள்ள கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலுற்பத்தியை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகளை ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறிந்து, அதனைச் சம்பந்தப்பட்ட பிராந்திய மற்றும் தேசிய நிறுவனங்களுக்கு பரிந்துரைகளாக வழங்க வேண்டும். இதன் மூலம் மாவட்டத்தின் கால்நடை விவசாயத் துறையை மேலும் வலுப்படுத்தும் வாய்ப்புகள் உருவாகும்.




*மகாவலி 'System B' இன் வரைபடம்*
*(Map courtesy: SL Mahaweli Authority)*

## தொடர் போராட்டமும் அத்துமீறிய குடியேற்றங்களும்

மகாவலி 'B' வலய அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய குடியேற்ற முன்னெடுப்புகளைத் தடுக்கும் நோக்கில் ஒரு மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஒட்டுமொத்த எதிர்ப்பின் வெளிப்பாடாக இந்த ஆர்ப்பாட்டம் அமைந்துள்ளது. சிவில் சமூக அமைப்புகளின் ஆதரவுடனும் கால்நடைப் பண்ணையாளர்களின் பங்களிப்புடனும் இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. போருக்குப் பிந்தைய காலத்தில், இந்தப் போராட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் 'அபிவிருத்தி' நடவடிக்கைகளின் சமூக விளைவுகளை வெளிக்கொணரும் முயற்சியாகவும் காணப்படுகிறது.

மேய்ச்சல் நிலங்களைச் சுற்றிய கடந்தகால மோதல்களையும் அதனால் ஏற்பட்ட இழப்புகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது, தொடர்ந்துவரும் இந்தப் பிரச்சினையின் பின்னணியில் இன ஒதுக்கல் சார்ந்த பரிமாணம் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது. இன்றைய தொடர் போராட்ட நிலையைக் கவனமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்தால், அதன் பின்னணியில் குறிப்பிட்ட அரசியல் நோக்கத்தைக் கொண்ட ஒரு போக்கைத் தெளிவாகக் காண முடிகிறது.

தற்போது வெளிப்படையாகத் தோன்றும் பிரச்சினை மயிலத்தமடு மற்றும் மாதவணை பகுதிகளை மட்டும் சார்ந்ததல்ல; அதைவிட பரந்த அரசியல் நோக்கத்தைக் கொண்டதாக அது பார்க்கப்படுகிறது. வெளிப்படையாகக் காணப்படும் பிரச்சினைகள், நீண்டகாலமாகச் சேர்ந்து வந்த சமூக மற்றும் பொருளாதார அழுத்தங்களின் ஆரம்ப வெளிப்பாடாகவும் கருதப்படலாம்.

இலங்கையின் கடந்த பதினைந்து ஆண்டுகளைக் கொண்ட போருக்குப் பிந்தைய காலத்தை, தமிழர்களின் அரசியல் - பொருளாதார நோக்கத்தையும், அவர்களின் உணர்வியலையும், சமூக முரண்பாடுகளுக்கான அடிப்படைக் காரணிகளையும் முழுமையாகப் புரிந்துகொள்ளாத அல்லது கற்றறியாத ஒரு காலமாக விவரிக்கலாம். அதேவேளை, தமிழர்களின் சமூக - பொருளாதார மற்றும் இன அடையாள அரசியலின்

அடிப்படைகளைப் புரிந்துகொள்ளத் தவறிய காலமாகவும் போருக்குப் பிந்தைய காலம் வெளிப்படுகிறது.

போரின் பேரழிவிற்குப் பின்னர், நாடு தழுவிய பொருளாதார நெருக்கடி இருந்தபோதிலும், இலங்கையில் பேரினவாத அரசியல் திடமானதாகவே தொடர்கின்றது. அது மீண்டும் ஒரு வன்முறைமிக்க முரண்பாட்டுச் சூழலை உருவாக்கக்கூடிய சாத்தியத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயிலத்தமடு மற்றும் மாதவணை மேய்ச்சல் தரையைச் சுற்றி இடம்பெறும் மோதலும், வாழ்வாதார இழப்புகளுக்கு எதிரான தொடர் போராட்டமும், போருக்குப் பிந்தைய காலத்தில் தொடர்ந்துவரும் பேரினவாத அரசியல் சிந்தனையின் வெளிப்பாடாகவும், புதிய முரண்பாட்டு நிலைகளை உருவாக்கக்கூடிய செயல்முறையாகவும் காணப்படுகின்றன.

மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் ஒரு கருவியாக மகாவலி ‘B’ வலயத்தின் துரிதமான முன்னெடுப்புகள் பயன்படுத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெற அனுமதிக்கப்படுமானால், மட்டக்களப்பின் தமிழ் பேசும் மக்களின் சனத்தொகை அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுவதோடு, அவர்களின் இன மற்றும் மத அடையாளங்களுடன் தொடர்புடைய நிலப்பரப்பின் மீது புதிய அழுத்தங்களும் உருவாக்கக்கூடும்.

குறிப்பாக ‘வில்வ பொத்தாண’ என்ற பெயரில் ஒரு புதிய நிலப்பகுதி நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படலாம் என்ற அச்சம் சமூகத்தில் நிலவுகிறது. அதன் மூலம் எதிர்காலத்தில் ஒரு சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை உருவாக்கும் அரசியல் நோக்கமும் இருக்கலாம் என கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

1979.06.15 அன்று வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் எண் 41 இன் படி, ஆரம்பத்தில் பத்து மகாவலித் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் மகாவலி அதிகாரசபை அவற்றிற்கான முழுமையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறவில்லை என்ற தகவல்களும் முன்வைக்கப்படுகின்றன. மேலும், அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தச்சட்ட (Schedule 9, Rule 1, Appendix 2, Item 18) உறுப்புரிமை 2.5 இன் படி, மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத் திட்டங்கள்—மகாவலித் திட்டம் உட்பட— அமைக்கப்படும் இடங்களில் குடியேற்றம் மேற்கொள்ளப்படும் போது அந்தந்தப் பகுதிகளின் சனத்தொகை விகிதாசாரத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற விதிமுறையும் உள்ளது. ஆனால் இந்த விதிமுறைகள் திட்டமிட்ட வகையில் மீறப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன.

| சனத்தொகை | விகிதாசாரம் | மகாவலித் திட்டம் மூலம் காணி பெற்றவர்கள் % | குடும்பங்கள் |
|---|---|---|---|
| சிங்களவர் | 76% | 96.16% | 123,630 |
| வடக்கு – கிழக்குத் தமிழர்கள் | 12% | 1.42% | 1,835 |
| முஸ்லிம்கள் | 8% | 2. 39 % | 3,068 |

(ஆதாரம்: கால்நடைப் பண்ணையாளர்கள் வெளியிட்ட அறிக்கை, கிரான் - 2022)

தகவல்களின் படி, யுத்தக் காலத்தில் வலிந்து இடம்பெயர்க்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்று 2001 ஆம் ஆண்டு அமைச்சரவை எடுத்துக்கொண்ட கொள்கைகளுக்கு மாறாக, மகாவலி அதிகாரசபையும் வனத் திணைக்களமும் இணைந்து மக்களின் மீள்குடியேற்றத்தைத் தடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதேவேளை, வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் புதிய குடியேற்றங்களை ஊக்குவிக்கும் போக்கும் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். பக்கச்சார்பற்ற சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற நேர்முக உரையாடல்களிலும் இத்தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும், 2003 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பு (1 SLR 74 - தேவனிதன் எதிர் தயானந்த திசாநாயக்க) மீள்குடியேறும் உரிமையைத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளது. பாதுகாப்புக் காரணங்களை முன்னிறுத்தி சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்புவதைத் தடுக்க முடியாது என்றும், அது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை

உரிமைகளுடன் தொடர்புடையதாகும் என்றும் அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக அரசியலமைப்பின் 15 (7) ஆம் பிரிவின் அடிப்படை உரிமைச் சட்டத்தின் படி இந்த உரிமையைத் தடுக்க முடியாது என விளக்கப்பட்டுள்ளது. எனினும், அரசுத் திணைக்களங்களும் அதிகாரசபைகளும் இவ்விதிமுறைகளை மீறிச் செயற்படுகின்றன என்பதே மக்களின் போராட்ட நிலைக்குப் பிரதான காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

மகாவலி 'B' வலயத்திற்குள் தமிழ் பேசும் மக்களுக்கு சொந்தமான பல காணிகள் உள்ளன. இவை காலங்காலமாக அவர்கள் வாழ்ந்து வந்ததும் தாங்களே வளப்படுத்தியதுமான நிலங்களாகும். ஆனால் அந்த நிலங்களை வளப்படுத்திய மக்களை அங்கு மீண்டும் குடியேற அனுமதிக்காமல், பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஏற்கனவே காணிகள் வைத்திருக்கும் சிலருக்கு அரசியல் செல்வாக்கின் மூலம் மகாவலி 'B' வலயப் பகுதிகளில் காணிகள் வழங்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இதனை உறுதிப்படுத்தும் பல தகவல்கள் மற்றும் ஆதாரங்களும் வெளிவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், காணி அமைச்சின் 15.06.1995 அன்று வெளியிடப்பட்ட இலக்கம் 10 எனும் சுற்றுநிருபத்தின் படி, 15.06.1995க்குப் பின்னர் அரசுக்குச் சொந்தமான காணிகளை யாரும் அடாத்தாகப் பிடிக்க முடியாது என்ற சட்ட விதிமுறை இருந்தபோதிலும், நடைமுறையில் அதற்கு முரணான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று கூறப்படுகிறது. மகாவலி அதிகாரசபையும் சில அரச அதிகாரிகளும் இதற்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய நிலைமைகள் இன முரண்பாடுகளையும் எதிர்கால மோதல்களையும் உருவாக்கக்கூடிய சூழலை உருவாக்குகின்றன என்பது பலரின் கருத்தாகும்.

## மகாவலி 'B' வலய அபிவிருத்தி முன்னெடுப்பும் அதன் தீர்வு முன்மொழிவும்

மகாவலி 'B' வலய அபிவிருத்தி முன்னெடுப்பு, மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடைப் பொருளாதாரத்தையும் பாரம்பரிய மேய்ச்சல் நிலப் பயன்பாட்டையும் பாதிக்கும் ஒரு ஆபத்தான முயற்சியாகப் பலரால் பார்க்கப்படுகிறது. மாவட்டத்தில் சுமார் 300,000 முதல் 500,000 வரையான கால்நடைகள் இருப்பதாக மதிப்பிடப்படுகின்ற நிலையில், அவற்றுக்கு 11,000 முதல் 140,000 ஹெக்டேயர் வரை மேய்ச்சல் நிலம் தேவைப்படுகிறது. ஆனால் தற்போது பரிந்துரைக்கப்படும் நில அளவு 3,025 ஹெக்டேயர் மட்டுமே என்பதால், இது கால்நடைப் பண்ணையாளர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் முன்மொழிவாகக் கருதப்படுகிறது.

மகாவலி 'B' வலயத் திட்டம் மக்களின் கருத்துகளைப் பொருட்படுத்தாமல் அமுலாக்கப்பட்டால், அது கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். பாரம்பரிய திறந்த கால்நடை வளர்ப்பு முறைமைகள் குறுக்கீடு செய்யப்படுவதால், தற்போதைய கால்நடைப் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்படும். ஒரு மாட்டுக்கு 20 பேர்ச் காணி வழங்கி, அதிகபட்சமாக 50 மாடுகள் மட்டுமே வளர்க்கலாம் என்ற முன்மொழிவு, கால்நடைத்துறைக்குப் பாதகமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் சில பண்ணையாளர்கள் 2000 முதல் 3000 வரை மாடுகளை வைத்திருப்பதுண்டு; அவர்களின் எதிர்கால நிலைமை பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

இதனால் கால்நடைப் பண்ணையாளர்கள் அச்ச நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பல தலைமுறைகளாக நடைமுறையில் இருந்து வந்த திறந்த மேய்ச்சல் அடிப்படையிலான கால்நடை வளர்ப்பு முறை தற்போது சவால்களை எதிர்கொள்ளும் நிலையிலுள்ளது. நிலம் மற்றும் வாழ்வாதாரத்தின் மீது அதிகமான அழுத்தம் நிலவுவதாக மக்கள் உணருகின்றனர். இந்தச் சூழ்நிலையில் மாற்று வழிமுறைகளை திட்டமிட்ட முறையில், கூட்டுப்பங்காளித்துவ அடிப்படையில் உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. கால்நடை மற்றும் பால் உற்பத்திப் பொருளாதாரத்தை புதிதாகக் கட்டமைக்கும் தேவை ஏற்பட்டுள்ளது.

சில பண்ணையாளர்கள் அரசியல் விவகாரங்களில் அக்கறையின்றி, நிலைமையை ஏற்றுக்கொண்டு காலத்தைக் கழிக்கலாம் என நினைக்கின்றனர். ஆனால் மற்றொரு தரப்பினர் பால் தொழில்துறையில் உள்ள பொருளாதார வாய்ப்புகளை உணர்ந்து, அதில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட முனைகின்றனர்.

குறிப்பாக இந்தியாவின் 'அமுல்' போன்ற நிறுவனங்களின் உதவியுடன் பால் பண்ணைகளை நவீனமயமாக்க வேண்டும் என்ற கருத்துகளும் காணப்படுகின்றன. திறந்த கால்நடை வளர்ப்பு முறை பல சிக்கல்களை உருவாக்குவதோடு, அதிக இலாபம் தரும் பால் உற்பத்திக்குத் தேவையான முறை அல்ல என்பதையும் சிலர் அனுபவத்தின் மூலம் உணரத் தொடங்கியுள்ளனர்.

## சில குறிப்புகள்

1. மகாவலி 'B' வலய அலுவலகம் வலது கரையில் உள்ள வெலிக்கந்தையில் இருந்து செயற்படுகிறது. இந்த 'B' திட்டத்தின் நிலப்பரப்பில் சுமார் 90-95% மட்டக்களப்பு மாவட்டத்திலும், 5-10% அம்பாறை மாவட்டத்திலும் அமைந்துள்ளது. எனினும், இத்திட்டத்துடன் தொடர்புடைய பல நடவடிக்கைகள் வெலிக்கந்தையிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உள்ளூர்ச் சமூகங்களுடன் போதிய ஆலோசனை இல்லாமல் கரும்புத் தோட்டம் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க சீன நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

2. மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றின் அடிப்படையில் (CA (writ) 36/ 2021), இலங்கை மகாவலி அபிவிருத்தி சபை 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நில ஆக்கிரமிப்பு விவசாயிகளை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தது. விவசாயிகள் தற்காலிகமாக அந்த நிலங்களை விட்டு வெளியேறினாலும், பின்னர் பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து மீண்டும் வந்து மட்டக்களப்பிலுள்ள நிலங்களை ஆக்கிரமித்துள்ளனர். இந்த நிலைமை சுமார் 1,500 குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், சுமார் 8,000 ஹெக்டேர் பரப்பளவில் மேய்ச்சலுக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்களையும், 500,000 கால்நடைகளின் உயிர்வாழ்தலையும் அச்சுறுத்துகிறது. காவல்துறை, மகாவலி அபிவிருத்தி சபை, வனத்துறை, வனவிலங்குத் துறை, மாவட்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரசு இயந்திரத்தில் உள்ளோர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கச் சிறப்பான நடவடிக்கை எடுக்காத நிலை காணப்படுகிறது.

3. அதிகாரிகள் செயலற்றிருந்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு (HCB/writ/628/2020) 2022 நவம்பர் மாதத்தில் முடிவுக்கு வந்தது. அந்தத் தீர்ப்பில், மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு ஏற்கனவே நடைமுறையில் உள்ளதால், புதிய உத்தரவு தேவையில்லை என நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

4. அம்பாறை மாவட்டத்தில் மகாவலி 'B' வலயத்தின் நிலப்பரப்பு 5-10% மட்டுமே இருந்த போதிலும், மதுரு ஓயா வலது கரைத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கையில் (பக். 144) குறிப்பிடப்பட்டுள்ளபடி, திவுலபத்தான பிரதேச செயலாளர் 4,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்ய அனுமதி வழங்கியுள்ளார். ஆனால் மட்டக்களப்பில் எந்தவிதமான சாகுபடி அனுமதியும் வழங்கப்படவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது மட்டக்களப்பின் பெரும்பாலான பகுதிகள் காடு அல்லது வனவிலங்குக் காப்பகமாக அறிவிக்கப்பட்டதால், பாரம்பரியக் கால்நடை வளர்ப்பு மேலும் சிக்கலானதாக மாறியுள்ளது. மேய்ச்சல் நிலங்களுக்கான அணுகலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கால்நடை இழப்புகள் அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. மேலும், தெஹியத்தேகண்டிய பகுதியில் விவசாயிகளின் அத்துமீறிய நுழைவு, கால்நடைத் திருட்டு மற்றும் பயிர்ச்சேதம் தொடர்பான சட்டப் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன.

5. எல்லை தாண்டிய நடவடிக்கைகள் மற்றும் நிலங்களை நிர்வகிப்பது தொடர்பான அரசியலமைப்பின் குறிப்பிடத்தக்க மீறலும் உள்ளது. இது தற்போதுள்ள மாவட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது (13 ஆவது திருத்தத்தின் இணைப்பு II இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது).

6. தற்போது பல கால்நடை விவசாயிகள் தங்கள் கால்நடைகளைக் கொண்டு நெல் சாகுபடிப் பகுதிகளுக்கு அருகிலுள்ள நிலங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால், கால்நடைகள் நெல் வயல்களில் நுழைந்து சேதம் விளைவிக்கும் அபாயம் ஏற்படும். இது கால்நடை வளர்ப்பை மட்டுமல்லாமல், பரந்த விவசாயத் துறையையும் பாதிக்கும் சூழ்நிலையை உருவாக்கக்கூடும்.

## கால்நடை வளர்ப்பாளர்களின் கோரிக்கைகள்

மயிலத்தமடு - மாதவணை கால்நடைப் பண்ணையாளர்களின் தொடரும் அறவழிப் போராட்டத்தின் 730 ஆவது நாள் நிறைவு 15.09.2025 அன்று சித்தாண்டி போராட்டப் பந்தலடியில் நடைபெற்றது. எந்தவொரு தீர்வும் கிடைக்காத நிலையிலும், அவர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கில் மூன்றாவது ஆண்டிலும் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

1. 2022 ஜூலை 21 அன்று வழங்கப்பட்ட மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பின் (CA (writ) 36/2021) படி, மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதிகளில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் இருந்து அனைத்து அத்துமீறிக் குடியேறியவர்களையும் வெளியேற்ற வேண்டும். மகாவலி அதிகாரசபை நீதிமன்றத்தில் வழங்கிய உறுதிமொழியை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

2. 2011 ஆம் ஆண்டு அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டபடி மேய்ச்சல் நிலங்களை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும். 2011 ஜூன் 8 அன்று நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தின் போது மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு மொத்தமாக 28,034 ஹெக்டேர் நிலம் தேவைப்படுவதாக முன்வைக்கப்பட்டது. அதில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 15,035 ஹெக்டேர் நிலத்தை ஒதுக்குமாறு நிலம் மற்றும் நில அபிவிருத்தி அமைச்சகத்திற்கு பாராளுமன்றம் அறிவுறுத்தியது.

3. 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குமுறைகளின்படி காடுகள் இல்லாத நிலங்களை அபிவிருத்திக்காக பிரதேச செயலகங்களுக்கு விடுவிக்க வேண்டும். இதற்காக வனத்துறை மற்றும் வனவிலங்குத் துறை இணைந்து அந்த நிலங்களை அடையாளம் கண்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட அரசாங்க முகவர்களுக்கு ஒப்படைக்க வேண்டும். 2013 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பல வன இருப்புகளில் உள்ள சில நிலங்கள் உண்மையில் காடுகளாக இல்லாத பகுதிகளாக உள்ளதால், அவற்றை இந்த ஒழுங்குமுறையின் கீழ் விடுவிக்க முடியும்.

4. அம்பாறை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் போன்று மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கும் நிலத்தில் பயிரிட அனுமதி வழங்கப்பட வேண்டும். மொத்தமாக 50,000 ஹெக்டேர் நிலம் கோரப்பட்ட நிலையில் தற்போது சுமார் 8,000 ஹெக்டேர் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 15,000 ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்பட வேண்டும். தீவனப் பயிர்களை வளர்ப்பது கால்நடை வளர்ப்பிற்கு முக்கிய ஆதாரமாக இருக்கும். மேலும், கால்நடை விவசாயிகளுக்கு பால் உற்பத்திக் குடியேற்றங்களை உருவாக்க உதவியும் வழங்கப்பட வேண்டும்.

5. மகாவலி 'B' திட்டத்திற்கான நிர்வாக அலுவலகம் தற்போது வெலிக்கந்தையில் செயற்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில், குறிப்பாக வலது கரை திட்டப் பகுதிக்குள் அமைத்தால், உள்ளூர் மக்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் சேவைகளை எளிதாகப் பெற முடியும்.

6. இந்தச் சமவெளிப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் தொழிலை மேம்படுத்தும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். உதாரணமாக நீர்த் துளைகள் அமைத்தல், தீவன சாகுபடி மேம்படுத்தல், பால் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்தல் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பால் தயாரிப்புகளை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்.

7. இந்தப் பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டம் நிறுவப்பட வேண்டும். தற்போதைக்கு கால்நடை இழப்புகளுக்கான பாதுகாப்பு இல்லை. 1979 ஆம் ஆண்டில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இலங்கை அரசால் அதிகாரபூர்வமாக மேய்ச்சல் நிலங்களாக அறிவிக்கப்பட்டு, கால்நடை வளர்ப்பிற்கு அரச அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதேபோன்று இன்றும் கால்நடை வளர்ப்பைப் பாதுகாக்கும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## முடிவு

1979 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 14,000 முதல் 16,000 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு உள்ளூர் விவசாயிகளின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமாக ஒதுக்கப்பட்டது. நீண்ட காலமாக இந்த நிலங்கள் தமிழ்க் கால்நடை விவசாயிகளின் பாரம்பரிய வாழ்வாதாரத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தன. உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலத்திலும் கூட, 2007 ஆம் ஆண்டு வரை தமிழ் விவசாயிகள் இந்த மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் 2007க்குப் பின்னர் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்களக் குடியேறிகள் இந்தப் பகுதிகளுக்குள் நுழைந்து, தமிழ் விவசாயிகளின் கால்நடைகளைக் கைப்பற்றுதல், வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் விவசாயிகள் துப்பாக்கி முனையில்

அச்சுறுத்தப்பட்டனர். தாக்குதல்களும் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து வெறும் நான்கு மாத காலப்பகுதிக்குள் சுமார் 100 பசுக்கள் கொல்லப்பட்டதாகப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. அவற்றில் சில துப்பாக்கியால் சுடப்பட்டன; சிலவற்றின் கழுத்து நெரித்து கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் உள்ளன. தொடர்ந்து மூன்று ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட கால்நடைகள் கொல்லப்பட்டதாகவும், 100க்கும் மேற்பட்டவை காயமடைந்ததாகவும், சுமார் 40 கால்நடைகள் காணாமல் போனதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும், மாதவணை மற்றும் வடமுனை - தரவை போன்ற பகுதிகளில் தமிழர்களுக்கு நிலம் வழங்கப்படுவதை மகாவலி அமைச்சகம் தடுக்கும் நிலை காணப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதேவேளை தெற்கிலுள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களக் குடியேறிகள் மகாவலி 'B' திட்டப் பகுதிகளுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும், குறிப்பாக பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பகுதிகளில் குடியேற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியில் இருந்த காலத்தில் மகாவலி அபிவிருத்தி அமைச்சகமும் சுற்றுச்சூழல் அமைச்சகமும் ஒன்றிணைக்கப்பட்டன. அதன் மூலம் மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் அம்பாறை ஆகிய எல்லைப் பகுதிகளில் மக்கள்தொகை அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக சில தரப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

இலங்கையின் வறண்ட மண்டலப் பகுதிகளில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல மகாவலி வலயங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் மகாவலி 'B' வலயம் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முக்கியமானதாகும். இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் விவசாயத்தை மேம்படுத்துதல், நீர்மின்சார உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி புதிய குடியேற்றங்களை உருவாக்குதல் என்பவையாகும்.

முக்கியமாக பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த மகாவலி B வலயம் சுமார் 453 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்டுள்ளது. இது விவசாயத்திற்கு தேவையான நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கான அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய் வலையமைப்புகளை கொண்டுள்ளது. மண் வளம் குறைவு போன்ற சவால்கள் இருந்தபோதிலும், இந்தத் திட்டம் தற்போது சுமார் 42,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் நீர்ப்பாசன வசதிகளை வழங்குகிறது.

சமீபத்திய அபிவிருத்தி முயற்சிகள் மகாவலி B திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதிகளில் உள்ள கிராமங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் சுமார் 75,000 ஹெக்டேர் பரப்பளவை உள்ளடக்கியதாகவும், அதில் 27,179 ஹெக்டேர் பாசன நிலம் அடங்குவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 316 தமிழ்க் கால்நடை விவசாயிகள் இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் சுமார் 85,000 கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இந்த கால்நடைப் பண்ணையாளர்களுக்கு மாதவணை, பெரிய மாதவணை மற்றும் மயிலத்தமடு ஆகிய பகுதிகளில் மொத்தமாக சுமார் 45,000 ஏக்கர் மேய்ச்சல் நிலம் அதிகாரபூர்வமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த மேய்ச்சல் நிலங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கால்நடைத் தொழில், மில்கோ மற்றும் நெஸ்லே நிறுவனங்களின் பால் சேகரிப்பு மையங்களுக்கு தினமும் சுமார் 15,000 லிட்டர் பால் வழங்கும் முக்கிய பொருளாதார நடவடிக்கையாக உள்ளது. இதன் மூலம் 5,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்வாதாரம் பெற்றுள்ளனர்.

எனினும், இந்த மேய்ச்சல் நிலங்களில் சுமார் 12,000 ஏக்கர் நிலம் சிங்கள குடியேற்றவாசிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், இலங்கை வனவிலங்கு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் சில இடங்களில் தமிழ் கால்நடை விவசாயிகளை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, அந்தப் பகுதிகளில் சிங்கள விவசாயிகள் 'சேனா' சாகுபடி (Chena Cultivation) மேற்கொள்வதால் இந்த மோதல்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தமிழ்க் கால்நடை விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தையும் பாரம்பரியத் தொழிலையும் பாதுகாக்கும் ஒரு கடினமான நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அதிக எண்ணிக்கையிலான கால்நடைகள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாகவோ அல்லது விற்கப்பட்டதாகவோ குற்றச்சாட்டுகள்

முன்வைக்கப்பட்டுள்ளன. ஓர் இராணுவ முகாம் தளபதி நிலத்தில் விவசாயம் செய்கின்றார். குடியேறிகள் சட்டவிரோதமாக மரங்களை வெட்டி நிலத்தடி மதுபான உற்பத்தியையும் நடத்தி வந்தனர்.

போருக்கு முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 225,000 கால்நடைகள் இருந்ததாகக் கூறப்படுகின்ற நிலையில், பின்னர் அந்த எண்ணிக்கை 175,000 ஆகக் குறைந்துள்ளது. குறிப்பாக மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள பரந்த மேய்ச்சல் நிலங்கள் கால்நடை விவசாயிகளால் ஒரே தொடர்ச்சியான மேய்ச்சல் பிரதேசமாகக் கருதப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் கூறுவதன்படி, சிங்களக் குடியேற்றவாசிகளும் இராணுவத்தினரும் மேய்ச்சல் நிலங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துவது, திருடப்பட்ட கால்நடைகளை மீட்கத் தடைகள் ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மேலும் விவசாயிகளை ஆதரிக்க வேண்டிய அரசு அதிகாரிகளும் இந்த ஆக்கிரமிப்புகளைத் தடுக்கத் தவறுவதோடு, இலவசமாக வழங்கப்பட வேண்டிய கால்நடை மருத்துவச் சேவைகளுக்கும் சில சமயங்களில் பணம் கோரப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும், முந்தைய அரசுகளின் காலத்தில் நிலங்களை இராணுவப் பயன்பாட்டிற்காக கையகப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட சட்டத்தின் 38 (A) பிரிவு தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன. அதன்பேரில் கைப்பற்றப்பட்ட நிலங்களில் மீள்குடியேற்றத்தை அனுமதித்ததும் சட்ட ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால், புதிய அரசாங்கம் திருப்பித் தரப்படும் நிலங்களின் சட்டபூர்வ உரிமையை உறுதிப்படுத்த புதிய வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிட வேண்டும் என்பதும் முக்கிய கோரிக்கையாக முன்வைக்கப்படுகிறது.

அதேபோல், அரசியல்வாதிகள் — குறிப்பாக தமிழ் அரசியல் தலைவர்கள் — இந்தப் பிரச்சினையை உண்மைத் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாகாண சபைகள், சட்ட நிபுணர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நில உரிமை மீறல்களை ஆராய்ந்து, அரசியல் மற்றும் சட்ட ரீதியான அழுத்தங்களை ஏற்படுத்தும் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியமாகின்றன. பரந்த அளவிலான, நிபுணத்துவம் கொண்ட ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலே தற்போதைய நிலைமையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் நிலங்களில் நடைபெறும் ஆக்கிரமிப்புகள் உடனடியாகக் கட்டுப்படுத்தப்படாவிட்டால், எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றவாசிகள் பெரும் அளவிலான நிலங்களை நிரந்தரமாகக் கோரக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று தமிழ்க் கால்நடை விவசாயிகள் எச்சரிக்கின்றனர். தற்போது பெரியமாதவணைப் பகுதியில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் மட்டும் 1,000க்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தனியான சிங்கள நிர்வாகப் பிரிவை உருவாக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன என்றும் சில அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் சுமார் 30,000 ஏக்கர் நிலம் கால்நடை மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டாலும், அரசாங்கத்தின் பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் காரணமாக அந்த நிலப்பரப்பு காலப்போக்கில் கணிசமாகக் குறைந்துள்ளது.

மேலும், விவசாயிகள் அளிக்கும் புகார்கள் பல சந்தர்ப்பங்களில் நிர்வாக அமைப்புகளால் போதிய கவனத்துடன் பரிசீலிக்கப்படவில்லை என்பதும் குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுகிறது. இது நிர்வாக அமைப்புகளில் தமிழர் உரிமைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன என்ற உணர்வை தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கியுள்ளது. சில தகவல்களின் படி, மட்டக்களப்பில் செயற்படும் சில பௌத்த துறவிகள் குடியேற்றவாசிகளை ஊக்குவித்து தமிழரின் கால்நடைகளைக் கொல்லும் செயல்களில் ஈடுபடத் தூண்டுவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மயிலத்தமடு மற்றும் மாதவணை மேய்ச்சல் தரைகள் தொடர்பான பிரச்சினை, வெறும் மேய்ச்சல் நிலப் பிரச்சினை அல்லது கால்நடைப் பண்ணையாளர்களின் தனிப்பட்ட சிக்கல் என்ற அளவிற்குள் மட்டும் சுருங்கிப் போகாதது. இது தமிழ் பேசும் மக்களின் நில உரிமை, அரசியல் பொருளாதாரம், இன அடையாளம் மற்றும் சக வாழ்வு அரசியல் ஆகியவற்றுடன் நெருக்கமாக இணைந்திருக்கும் ஒரு முக்கிய சமூக-பொருளாதாரப் பிரச்சினையாகும். எனவே, தற்போதைய மகாவலி B வலய முன்னெடுப்புகள் முழுமையாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். அதனுடன், உள்ளூர்க் கால்நடைப் பண்ணையாளர்களின் பாரம்பரிய மேய்ச்சல் நில உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதும் அவசியமாகும். மேலும், கால்நடைப் பண்ணையாளர்கள், மாவட்ட

மட்ட அமைப்புகள் மற்றும் அரசின் அதிகார அமைப்புகள் ஆகியவை இணைந்த ஒரு வலுவான பொது அணியாகச் செயற்பட்டு, நீண்டகாலமாக நீடித்து வரும் இந்நிலைக்குத் தீர்வு காண வேண்டும். இதன் மூலம் வளமான கால்நடைப் பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளம் உருவாக்கப்பட முடியும்.

## உசாத்துணை மூலங்கள்


Adoption and Impact of Natural Farming Practices in Batticaloa District. (2020). First Annual Research Session (FARS) - 2020, University of Vavuniya, Sri Lanka.https://www.researchgate.net/publication/379666056_Adoption_and_Impact_of_Natural_Farming_Practices_in_Batticaloa_District

Adoption of Improved Technologies by the Cattle Farmers of Batticaloa District. (2016). AGRIEAST Journal of Agricultural Sciences. https://doi.org/10.4038/agrieast.v9i0.18

Suresh, K., Khanal, U., Wilson, C., Managi, S., Quayle, A., & Santhirakumar, S. (2021). An economic analysis of agricultur al adaptation to climate change impacts in Sri Lanka: An endogenous switching regression analysis. Land Use Policy, 109, 105601. https://doi.org/10.1016/j.landuse pol.2021.105601

Department of Animal Production and Health. (2023). Annual Report 2023. https://daph.gov.lk/files/uploads/pdf_document/01729245237.pdf

Batticaloa Dairy Farmers Face Violence and Threats over Grazing Land. (2023). Groundviews. https://groundviews.org/2023/10/09/batticaloadairyfarmersfaceviolenceand threatsovergrazingland/ ; Interview with Mr. Siyanthar: https://www.youtube.com/watch?v=cNCLz78sceE

Pagthinathan, M., & Sathiyasegar, K. Cattle and Buffalo Farming in Dry Zone of Sri Lanka: A Preliminary Survey. Department of Animal Science. https://www.cabidigitallibrary.org/doi/pdf/10.5555/20153400019

Economics of Climate Change Adaptation and Understand ing the Impact of Climate Change on the Agriculture Sector and Optimal Policy Response in Sri Lanka. UNDP. https://www.adaptationundp.org/sites/default/files/resources/eccacountryreportsrilanka.pdf

Hitihamu, S., Jayasinghe, U., & Aiome, G. V. Norica. (2025). Factors Affecting Technical Efficiency of Dairy Production in the Dry Zone of Sri Lanka. Colombo: Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute. (Research Report No. 265). https://www.harti.gov.lk/images/download/reasearch_report/new/R_265.pdf

Migrants, Communal Tensions Leave Batti's Original Cattle Farmers Ruffled. Daily Mirror. https://www.dailymirror.lk/print/newsfeatures/Migrantscommunaltensionsleave Battisorigi nalcattlefarmersruffled/131271457

Munas, M., & Lokuge, G. (2013). A Livelihood and Market Study of Resettled Communities in the Eastern Province: Assessing Conditions in Selected Grama Niladhari Divisions of the Batticaloa and Trincomalee Districts. Colombo: Centre for Poverty Analysis (CEPA). https://www.cepa.lk/wpcontent/uploads/2020/08/MarketStudyEnglishFinal.pdf

Srinivasan, M. Our Lands are Under Threat, Say Tamils in Sri Lanka's Eastern Province. The Hindu. https://www.thehindu.com/news/international/ourlandsareunderthreatsaytamilsinsri lankaseasternprovince/article34346590.ece

Gunasekara, S. (2023). Sri Lanka: Cattle Farmers' Agitation Continues in Batti. The Morning. https://www.themorning.lk/articles/uJvwQ66Q8pfRzxbVQUcc

Status of Feed Resources for Cattle Rearing in Batticaloa District Representing Urban, Village and Remote Areas. https://dspace.lib.seu.ac.lk/items/4c1bf837e9314942a5da ed980b494e5a/full

Tamil Dairy Farmers Marginalized by Encroachment Continue Protests. Lanka Leader. https://lankaleader.lk/news/7851tam ildairyfarmersmarginalizedbyencroachmentcontinueprotests

The AntiDevelopment Machine: Tamil Dairy Farmers' Protest in Mayilaththamadu-Madhavanai, Batticaloa. (2026). PEARL (People for Equality and Relief in Lanka). https://pearlaction.org/wpcontent/uploads/2026/01/PEARL_Sinhal izationasanantidevelopmentmachine_CASESTUDY1.pdf

Encoded Interview Reports. (2023-2025). Batticaloa District; and reports from the Farmers' Organizations.

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் ‘பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்’ என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.

# யாழ்ப்பாண பௌத்தம்: கி.மு. 100 – கி.பி. 1200

**பகுதி –I**

**சிவ தியாகராஜா**



கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

முன்னுரை

**பௌ**த்த மரபுக் கதைகளின்படி புத்த பிரான் தனது வாழ்நாட்களில் வருகை தந்த இடங்களில் நாகதீபமும் (நாகதீவு - நாகநாடு) ஒன்றாகக் கூறப்படுகிறது. புத்த பிரானின் காலத்தில் இலங்கையில் நாகர்கள் ஆதிக்கம் செலுத்தி வாழ்ந்த இடங்களில் வட இலங்கையின் நாகதீபமும், மேற்குக் கரையிலிருந்த கல்யாணியும் முக்கியமான இடங்கள் என இலங்கையின் பௌத்த நூலான மகாவம்சம் கூறுகிறது. இந்த நூலில் கூறப்படும் ஒரு நிகழ்வில் நாகதீபத்தில் மகோதரன் என்ற நாக அரசன் ஆட்சிபுரிந்த காலத்தில், அங்கிருந்த கந்தவதமன்ன என்ற மலையகத்தில் அவனது மருமகன் சுலோதரன் ஆட்சி புரிந்ததாகவும், கல்யாணியில் அவனது மாமன் மணி அக்கிகன் ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது (Mahavamsa, Ch. 1: 46).

அக்காலத்தில் நாகதீபத்திலிருந்த விலையுயர்ந்த மணிகளால் இழைக்கப்பட்ட ஒரு சிம்மாசனத்தின் உரிமைக்காக மகோதரனுக்கும் சுலோதரனுக்கும் கடும் போர் ஏற்பட்டது. தமது பெரிய படைகளுடன் இந்த இருவரும் போரிட்டுக்கொண்டிருந்த சமயத்தில் புத்த பகவான் அங்கே தோன்றி, ‘இந்த மணியாசனம் எனக்கும், எனது சங்கத்தாருக்கும் உரியது. இதற்காக நீங்கள் போரிட வேண்டியதில்லை’ எனக் கூறி அந்த ஆசனத்தில் அமர்ந்து சமாதானமும் நல்லிணக்கமும் பற்றிய புத்தமதக் கொள்கைகளை எடுத்துரைத்தார். அவரது பிரசங்கத்தைக் கேட்ட எண்பது கோடி நாகர்கள் பௌத்த மதத்தை மேற்கொண்டார்கள் (Mahavamsa, Ch. 1: 46-62). அந்நாளிலிருந்து அந்த மணியாசனம் பௌத்தர்களின் வழிபாட்டுப் பொருளானது.

மேலே கூறப்பட்ட நாகநாட்டு மன்னர்களுக்கிடையே மணியாசனத்திற்காக ஏற்பட்ட போரும், அதைப் புத்தபகவான் வந்து தீர்த்து வைத்த சம்பவமும் மணிமேகலைக் காப்பியத்திலும் கூறப்படுகிறது. மணிமேகலையில் புத்தபிரான் வந்து மணியாசனத்தில் அமர்ந்து சமரசம் செய்த இடம் மணிபல்லவம் எனக் கூறப்படுகிறது (மணிமேகலை, அத். 8: 12).

மேற்குறிப்பிட்டுள்ள கதையிலுள்ள வரலாற்றுப் பெறுமதிகளைக் காட்டிலும் அது அமைக்கப்பட்ட பின்புலமும், அது நடைபெறும் நாகநாடு, மணிபல்லவம் ஆகிய இடப்பெயர்களும் முக்கியமானவை. இக்கதையைக் கூறும் மணிமேகலை



கந்தரோடை ஸ்தூபிகள். Source: Sri Lanka Guardian.

கி.பி. நான்காம் நூற்றாண்டிலும், மகாவம்சம் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டவை. இவை கூறும் சம்பவங்கள் அவை எழுதப்பட ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் புத்தபிரான் மணிபல்லவத்திற்கு (நாகதீபத்திற்கு) வந்தார் என்பது கற்பனையே. ஆனால் அது கூறப்பட்ட பின்புலம் பரிசீலனை செய்யப்பட வேண்டியதாகும்.

1. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நாகநாட்டில் இருந்த குலோதரன், சுலோதரன் என்ற அரசர்களின் பெயர்கள் கற்பனையாக இருக்கலாம். ஆனால் அக்காலத்தில் நாகநாட்டில் ஓர் இராசதானி ஆரம்பமாகி இருக்குமா? என எண்ணச் செய்கிறது.

2. சுலோதரன் என்ற அரசன் ‘கந்தவதமன்ன’ என்ற மலையகத்தில் வாழ்ந்தவன் என மகாவம்சம் கூறுகிறது. இது ‘கதிரமலை’ என்ற கந்தரோடையைக் குறிப்பிடும் பெயராக இருக்குமோ?

3. நாகதீபத்தில் 80 கோடி நாகர்களை புத்தபிரான் தனது பிரசங்கச் செய்திகளை ஏற்கச் செய்தார் என்கிறது மகாவம்சம். இது அதீத மிகைப்படுத்துதலாக இருக்கலாம். ஆனால் நாகதீபத்தில் பௌத்த மதத்தைக் கடைப்பிடித்த நாகர்கள் இருந்தார்கள் என்பதை அறிந்து கூறப்பட்ட மிகையாக இருக்கலாம். நாகநாட்டில் வளைவாணன் என்ற பெயர் கொண்ட பௌத்த மதத்தைப் பேணிய ஒரு நாக அரசன் ஆட்சி புரிந்தது பற்றி மணிமேகலை கூறுகிறது.

4. மணிமேகலையில் புத்தபிரான் தோன்றி அந்த இரு நாக அரசர்களுக்குமிடையே இருந்த பிணக்கைத் தீர்த்த

இடம் 'மணிபல்லவம்' எனக் கூறப்படுகிறது. மகாவம்சத்தில் இப்பிரச்சினை நடந்த இடம் 'நாகதீப' எனப்படுகிறது.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக பல அறிஞர்கள் 'மணிபல்லவம்' என்ற தீவகம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கேயுள்ள தீவுகளில் ஒன்றான 'நயினாதீவை'க் குறிப்பதாகப் பேசியும், எழுதியும் வருவதை அறிவேன். இது மீளாய்வு செய்யப்பட வேண்டிய ஒரு கருத்து.


அன்றைய தமிழகத்திற்குத் தென்கிழக்கிலிருந்த இலங்கையை இரண்டு தீவகங்களின் பெயரைக் கூறி மணிமேகலை விவரிக்கிறது. ஒன்று 'மணிபல்லவம்' என்னும் தீவகம், மற்றது அதற்குத் தேற்கேயுள்ள சமனொளி மலையைக் கொண்ட 'இரத்தின துவீபம்'.

நாகநாட்டை மணிபல்லவத் தீவின் ஒரு பகுதி என்றே மணிமேகலை கூறுகிறது. மணிபல்லவத்தின் "கீழ்நில மருங்கின் நாகநாடாளும்" (மணிமேகலை, அத். 8: 54) என்ற அடிகள் கவனிக்கப்பட வேண்டியவை.

மணிபல்லவத்தின் கிழக்கே கடலுக்கு அப்பாலுள்ள நாகநாடு எனக்கூறாமல், மணிபல்லவத்தின் கிழக்கேயுள்ள நிலப்பகுதியிலுள்ள நாகநாடு எனக் கூறப்படுவதால் நாகநாடு அரசு மணிபல்லவத் தீவிலுள்ள ஓர் அரசு என்று பொருள் கொள்ள வேண்டியுள்ளது. மணிபல்லவத்திற்கும் நாகநாட்டிற்கும் உள்ள தொடர்பு இந்த ஓர் இடத்தைத் தவிர வேறு எங்கும் மணிமேகலையில் கூறப்படவில்லை.

மணிமேகலை குறிப்பிடும் மணிபல்லவம், மகாவம்சம் கூறும் நாகதீபமான இன்றைய யாழ்ப்பாணம் என்றே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. மேலும், பண்டைய வல்லிபுரத்திலிருந்த துறைமுகத்தை மகாவம்சம் 'பல்லவத்துறை' (Bhallathitta) எனக் குறிப்பிடுவது கவனிக்க வேண்டியது (Mahavamsa, Ch. XXXVI: 42-44). இன்றைக்கும் இந்த வட யாழ்ப்பாணக் கடற்கரை 'பல்லப்பை' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

பண்டைய யாழ்ப்பாணத்தின் வடகரையிலிருந்த 'யம்புகோளம்' நாகதீபத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க ஒரு துறைமுகமாக இருந்தமை ஏற்கனவே இங்கு கூறப்பட்டுள்ளது. வட இந்தியாவில் மகதநாட்டை ஆண்ட அசோகச் சக்கரவர்த்தியின் (கி.மு. 304-232) மகளான சங்கமித்தை தாம்ரலிப்தியிலிருந்து (மேற்கு வங்காளக் கரையிலிருந்த துறைமுகம்) புத்தபிரான் ஞானம் பெற்ற வெள்ளரச மரத்தின் கிளையோடு இக்காலத்தில் சம்புத்துறை என அழைக்கப்படும் சம்புகோவளத் துறையில் வந்து இறங்கினாள்.




வட இந்தியாவில் தாம்ரலிப்தி துறையினூடாகச் சென்ற கப்பல், தரைவழிப் பாதைகள்.

சம்புகோவளத்தில் அவளை வரவேற்க அநுராதபுர அரசன் தேவநம்பிய தீசன் தனது பரிவாரங்களோடு வந்து 'சமுத்திரபன்னசாலை' என்னும் மண்டபம் அமைத்துக் காத்திருந்தான்.

அவர்கள் வந்திறங்கியபின், வெள்ளரச மரக்கிளையைப் பெற்றுக்கொண்ட அரசன், விழாக் கொண்டாடி, சில நாட்கள் அங்கே தங்கியிருந்தான். பின்னர் அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு தேரில் கோலாகலமாக சம்புகோவளத்திலிருந்து புறப்பட்டு பதினான்காம் நாள் அநுராதபுரத்தை அடைந்தார்கள் (Mahavamsa, Ch. XIX: 130-131).

அரசன் தேவநம்பிய தீசனால் அநுராதபுரத்தில் நாட்டப்பட்ட வெள்ளரசின் வித்துகளிலிருந்து எட்டு மரக்கன்றுகள் தோன்றியதாகவும், அவற்றுள் ஒரு கன்று சங்கமித்தை வந்திறங்கிய யம்புகோவளத் துறையில் நடப்பட்டதாகவும் மகாவம்சம் குறிப்பிடுகிறது (Maha vamsa, Ch. XIX: 133).

தேவநம்பிய தீசன் யாழ்ப்பாணத்தில் யம்புகோவளத் துறையில் தங்கியிருந்த காலத்தில் கடற்கரையில் ஒரு தாதுகற்பத்தையும், திஸ்ஸ மழுவை என்ற இடத்தில் 'திஸ்ஸமகாவிகாரை' என்னும் புத்த பள்ளியையும், கந்தரோடையில் 'பாசீனவிகாரை' என்னும் கோயிலையுங் கட்டுவித்தான் என 1933 இல் அவர் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் (பக். 14) முதலியார் இராசநாயகம் குறிப்பிடுகிறார்.

இச்செய்தி மகாவம்சத்தில் குறிப்பிடப்படவில்லை. இவ்விடங்களில், கட்டடங்கள் இருந்ததற்கான அடித்தளங்கள் தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்படவில்லை. அதுபோல கந்தரோடையில் 'பாசீனவிகாரை' என்ற விகாரை இருந்ததற்கான அடித்தளம் அகழ்வுகளில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

## தொல்லியல் பின்னணி

யாழ்ப்பாண இராச்சியம் எனப்பட்ட சிங்கை ஆரிய மன்னர்களின் ஆட்சிக்காலத்திற்கு முன்னர், யாழ்ப்பாணம் பற்றி எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் எதுவும் கிடையாது. தொலமியின் தப்ரபேன், மணிமேகலை கூறும் நாகநாடு, மகாவம்சம் கூறும் நாகதீப என்பன அங்கே இடம்பெற்ற சில இடங்களின் பெயர்களையோ அல்லது சில சம்பவங்களையோ மட்டுமே கூறுகின்றன. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தின் தொல்கால நிலமையை அறிவதற்கு அங்கு இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகளே நமக்கு உதவுகின்றன. இந்த வகையில் முக்கியமாக கலாநிதி இரகுபதியின் *'Archaeological Survey of Early Settlements in Jaffna'* என்ற அகழ்வாய்வு நூலும், கந்தரோடையில் கலாநிதி விமலா பேக்லி போன்ற பல தொல்லியல் ஆய்வாளர்கள் மேற்கொண்ட அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகளைப் பற்றிக் கூறும் இந்த ஆசிரியரின் *'Kantarodai Civilization of Ancient Jaffna'* என்ற நூலும், யாழ்ப்பாணம் கோட்டையில் கலாநிதி பரமு புஷ்பரட்ணம், பேராசிரியர் ரொபின் கொனிங்ஹாம் ஆகியோர் மேற்கொண்ட அகழ்வாய்வுகளின் பெறுபேறுகளைப் பற்றி உரைக்கும் *'Archaeological Excavations at the Jaffna Fort'* என்ற நூலும் நமக்குக் கைகொடுக்கின்றன.

கந்தரோடையில் அமெரிக்க பென்சில்வேனிய பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பெற்றுக்கொண்ட கருவூலப் பொருட்களில் இரு கறுப்பு - சிவப்பு மட்பாண்டப் பொருட்களின் ஆரம்பகாலம் கி.மு. 1350 ஆண்டையும், பெரும்பாலான பொருட்கள் கி.மு. 600 ஆம் ஆண்டையும் காட்டி நின்றன (Deraniyagala, S.U. in Ragupathy, P. 1987: 205). யாழ்பாணக் கோட்டையில் கண்டெடுத்த கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் ஆரம்பகாலத்தை கி.மு. 1000 ஆம் ஆண்டாக பேராசிரியர் ரொபின் கனிங்ஹாம் கணித்திருக்கிறார் (Thiagarajah, S. 2022: 26). இவற்றைக் கொண்டு யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் குடியேற்ற ஆரம்பகாலத்தை பொதுவாக கி.மு. 1200 ஆம் ஆண்டுக் காலமாகக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தின் ஆரம்பகாலப் பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்ற இடங்களாக கந்தரோடை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக் கோட்டை, காரைநகர், வேலணை, மண்ணித்தலை ஆகிய மையங்கள் இனம் காணப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கறுப்பு - சிவப்புநிற மட்பாண்டங்கள் இங்கே கி.மு. 1200 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 200 ஆம் ஆண்டு வரை பாவனையில் இருந்திருக்கின்றன. ஆனைக்கோட்டையிலும், காரைநகரிலும் இம்மட்பாண்டங்கள் பெருங்கற்பண்பாட்டு ஈமப்புதையல்களில் கிடைத்திருக்கின்றன. கந்தரோடையிலும், யாழ்ப்பாணக் கோட்டையிலும் அதிகமான அளவிலும், வேலணை, மண்ணித்தலை ஆகிய மையங்களில் குறைந்த அளவிலும் இம்மட்பாண்டங்கள் கிடைத்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் இரண்டாவது அலை மக்கள் குடியேற்றம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை நீடித்திருக்கிறது. இக்காலத்தில் இந்த மையங்களில் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களோடு உரோமானிய ரௌலெற்றெட் மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. உரோமானிய மட்பாண்டங்கள் கந்தரோடைக்கு வெளியே உள்ள மையங்களில் கி.மு முதலாம் நூற்றாண்டு முதல் கிறிஸ்தாப்தம் ஈறாக, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை காணப்படுகின்றன. இம்மட்பாண்டங்களும், அங்கே கண்ட உரோம நாணயங்களும் இந்த இரண்டாம் அலைக் குடியேற்றங்களை இனம்காண உதவுகின்றன.

## பௌத்த மதத்தின் பரவல்

பௌத்த மதம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை அடைந்துவிட்டதாக இலங்கையின் பாளி நூல்கள் கூறிய போதிலும், யாழ்ப்பாணத்தில் அம்மதத்தின் பரவல் கி.மு. முதலாம் நூற்றாண்டிலேயே, ஏற்கனவே வலுவாக நிறுவப்பட்ட உரோம வர்த்தக வலைப்பின்னல் வழியாக நிகழ்ந்திருக்கிறது. யாழ்ப்பாணத் தொல்லியல் மையங்களில் காணப்பட்ட பௌத்த சின்னங்கள் இதை எடுத்துக் காட்டுகின்றன. கந்தரோடையிலும், யாழ்ப்பாணத் துறையின் சூழலிலும் கி.மு. ஆயிரமாம் ஆண்டுக் காலத்திலிருந்தே பெருங்கற்பண்பாட்டுக் குடியேற்றங்கள் இடம்பெற்று அதற்கு வெளியே இருந்த மற்றைய முதலாம் கட்ட 16 மையங்களிலும் அப்பண்பாடு விரைவாகப் பரவியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 41 தொல்லியல் மையங்களை ஆய்வு செய்த தொல்லியலாளர் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 - 16 ஆம் திகதிகளில் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'யாழ்ப்பாண வரலாற்றில் மதங்கள்' என்ற பட்டறையில் 'யாழ்ப்பாணத்தில் வணிகம்சார் பௌத்தம்' (Mercantile Buddhism in Jaffna) என்ற தலைப்பில் ஓர் ஆய்வுரையை நிகழ்த்தியிருந்தார். அதில் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் இவை:

யாழ்ப்பாணத்தில் புத்த மதத்தின் பரவல் இரண்டு கட்டங்களாக நிகழ்ந்திருக்கிறது.

1. கி.மு. முதலாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி ஐந்தாம் நூற்றாண்டில் முடிவிற்கு வந்த ஆரம்ப கட்டம்.

2. .பி. ஆறாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி கி.பி. பன்னிரண்டாம் ஆண்டுவரை நீடித்த இரண்டாம் கட்டம்.

## யாழ்ப்பாண பௌத்தப் பரவலின் ஆரம்ப கட்டம் (கி.மு. 100 - கி.பி. 500)

யாழ்ப்பாணத்தில் கண்ட ஆதிகாலப் பெருங்கற்பண்பாட்டு மையங்களில் 'ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு சிவப்பு - சிவப்பு மட்பாண்டங்கள்' (*Early Carinated Black and Red Ware*) காணப்படுகின்றன. இந்தக் கீழ் மட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பௌத்தமதச் சின்னங்கள் ஏதும் காணப்படவில்லை. இதற்குப் பின்னர் காணப்படும் மேல் மட்டத்தில்தான் வரலாற்றுக்கால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், ரோம ரௌலெற்றெட் மட்பாண்டங்கள் அல்லது அதைத் தழுவிப் பிரதி செய்த மட்பாண்டங்களுடன் பௌத்த சின்னங்கள் முதன்முறையாக இடம்பெறுகின்றன. இப்பௌத்த சின்னங்களின் ஆரம்பகாலம் கி.மு. முதலாம் நூற்றாண்டாகும். ரௌலெற்றெட் மட்பாண்டங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை கந்தரோடையிலும், கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து மற்றைய யாழ்ப்பாண மையங்களிலும் காணப்படுகின்றன. பௌத்த மத ஆரம்பகாலத்தில் பௌத்த சின்னங்கள் பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்களோடு மேற்கவிந்து காணப்படுகின்றன (Schalk, P. 1990: 205). கந்தரோடையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட விமலா பேக்கிலியும் ரௌலெற்றெட் மட்பாண்டங்கள் இடம்பெற முன்னரே பெருங்கற் பண்பாட்டு கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் நீண்ட காலமாக இடம்பெறுவதாகக் கூறியுள்ளார் (Begley, V. 1973).

ஆரம்பகட்ட யாழ்ப்பாண பௌத்தத்தின் எச்சங்கள் யாழ்ப்பாணத்தில் பின்வரும் எட்டு மையங்களில் காணப்படுகின்றன: 1. கந்தரோடை, 2. திசைமழுவை திருவடிநிலை, 3. நெடுந்தீவு, 4. காரைநகர் - வேரப்பிட்டி, 5. வேலணை - கும்புருப்பிட்டி, 6. புங்குடுதீவு - திகழி, 7. அரியாலை கிழக்கு, 8. வல்லிபுரம். கந்தரோடையைச் சூழ இருக்கும் சுன்னாகம், மல்லாகம், மகியப்பிட்டி, உடுவில் ஆகிய கிராமங்களில் கண்ட பௌத்த மதச் சின்னங்களை கந்தரோடை மையத்திலிருந்து பரவிய சின்னங்களாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் பௌத்தமதம் பரவிய இடங்கள் - கந்தரோடை ஒன்றைத் தவிர - கடற்கரையிலிருந்த துறைமுக மையங்களும் வர்த்தக வழிக் குடியேற்ற இடங்களுமாகும் (*Coastal Entrepots and Trade Route Settlements*). சில ஆய்வாளர்கள் கருதுவது போல அக்காலத்தில் கந்தரோடை வழியாகச் சென்ற வழுக்கையாறு வழியாக கடலுடன் படகுத் தொடர்பு கொண்டிருந்தமையால், கந்தரோடையையும் ஒரு கடல் வர்த்தகவழி மையமாகக் கொள்ளலாம். பெருமளவிலான பௌத்த மத உருவங்களும், சின்னங்களும், கருவூலப் பொருட்களும் கந்தரோடையிலேயே கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பகட்ட பௌத்த மதத்தின் பரவலை பகுப்பாய்வு செய்யுமிடத்து அது வர்த்தக வழிகளில் காணப்படுவதும், வர்த்தக உயரடுக்கின் ஆதரவைப் பெற்றதும் புலனாகிறது (*Patronised by the Trading Elite*). யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்றங்கள் இடம் பெற்ற இடங்களாக 18 மையங்கள் இனம் காணப்பட்டிருக்கின்றன. அவற்றில் எட்டு மையங்களில் பௌத்தமதச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கந்தரோடையும், வல்லிபுரமும் முக்கியமான பௌத்தமத தலங்களாகும்.

## யாழ்ப்பாண பௌத்தப் பரவலின் இரண்டாம் கட்டம் (கி.பி 600 - கி.பி. 1200)

ஆரம்பகட்ட யாழ்ப்பாண மையங்களில் காணப்பட்ட வளமான பௌத்த தொல்லியல் கண்டுபிடிப்புகளுக்கும், பிற்கால மையங்களில் காணப்பட்ட குறைவான கண்டுபிடிப்புகளுக்கும் கணிசமான வேறுபாடு காணப்படுகிறது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்த பௌத்த மையங்களில் மட்டுமல்ல, மக்களின் குடியேற்றங்களிலும், வாழ்வாதார முறைகளிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகிறது. இப்பொருளாதாரச் சரிவிற்கான முக்கிய காரணம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் சடுதியாக நின்றுவிட்ட உரோம வர்த்தகமே ஆகும்.

யாழ்ப்பாணத்தில், பிந்திய கட்ட பௌத்தமதச் சின்னங்கள் காணப்பட்ட இடங்களாக: (கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிந்திய காலத்தைய மேல்மட்டத் தொல்பொருட்களைக் கொண்ட) முதலில் கூறப்பட்ட எட்டு மையங்களுடன், 9. இளவாலை - ஆனைவிழுந்தான், 10. கரவெட்டி - துளுக்கன் கோட்டை, 11. மந்துவில்லுக்குச் சமீபத்திலுள்ள வேரத்திடல், 12. பச்சிலைப்பள்ளி மையங்கள் ஆகியவையும் காணப்படுகின்றன. பச்சிலைப்பள்ளியில் மட்டும் ஆறு பௌத்த மையங்கள் இனம் காணப்பட்டன. பச்சிலைப்பள்ளி என்ற பதம் சமஸ்கிருத பர்ணசாலா என்பதற்கு நிகரானது. பாளி மொழியில் இது பன்னசாலா எனப்படும். இலைகளால் செய்யப்பட்ட ஒரு மண்டபம் என்பது இதன் பொருள்.

யாழ்ப்பாணத்தின் பிற்காலப் பௌத்த மையங்களில் கருவூலப் பொருட்கள் குறைவாகவே உள்ளன; வேறுபட்ட வகைமைகளைக் கொண்ட மட்பாண்டங்களும் காணப்படவில்லை. உள்ளூரில்

செய்யப்பட்ட ஒரே வகையான 'தடித்த விளிம்பு கொண்ட செந்நிற மட்பாண்டங்கள்' மட்டுமே எல்லாப் பிற்காலப் பௌத்த மையங்களிலும் காணப்படும் முக்கியமான மட்கலன்களாகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கந்தரோடையிலும், மற்றும் சில மையங்களிலும், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சில குடியிருப்புகளிலும் தென் இலங்கையின் தேரவாத பௌத்தத்தின் செல்வாக்கைக் காண முடிகிறது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இலங்கையில் சோழர் ஆட்சியின் போது யாழ்ப்பாணத்தில் சைவமதம் பிரபலமடைய ஆரம்பித்தது. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர், யாழ்ப்பாண இராச்சியம் ஆரம்பித்த காலத்திலிருந்து யாழ்ப்பாண மக்களிடையே சைவமதம் மட்டுமே நடைமுறையிலிருந்தது. அக்காலத்தில் பௌத்தமத நடவடிக்கைகள் முற்றாக மறைந்து போயின.

## யாழ்ப்பாணப் பௌத்தம்

யாழ்ப்பாணத்தில் கி.மு. 100 முதல் கி.பி. 800 வரையில் நடைமுறையில் இருந்த பௌத்த மதத்தின் பண்புகள் இலங்கையின் பெருநிலப்பரப்பில் பரவியிருந்த தேரவாத பௌத்தத்தின் பண்புகளிலிருந்து வேறுபட்டு நின்றமையால், அது யாழ்ப்பாணப் பௌத்தம் என்ற தனிப்பெயரைக் கொண்டிருக்கிறது.

இந்தக் கருத்துருவை 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 - 16 ஆம் திகதிகளில் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'யாழ்ப்பாண வரலாற்றில் மதங்கள்' என்ற பட்டறையில் பேசிய கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி முதன்முதலாக முன்வைத்திருந்தார். இந்த யாழ்ப்பாணப் பௌத்தம் கீழ்காணும் முக்கியமான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருந்தது.

1. வணிகம்சார் பௌத்தம்.
2. மகாயான பௌத்தம்.
3. பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த சமரசப் பண்பு.
4. முருகைக்கல் - சுண்ணாம்புக்கல் கட்டடத் தொழில்நுட்பம்.
5. ஆந்திர எழுத்து வடிவங்களைக் கொண்ட வல்லிபுரப் பொற்சாசனம்.
6. பலவள இயல்புடைய யாழ்ப்பாணப் பௌத்தம் - உலகப் பொது நோக்கு.

### (1) வணிகம்சார் பௌத்தம் (Mercantile Buddhism)

யாழ்ப்பாண மையங்களில் பரவிய பௌத்தத்தை, அவ்விடங்களில் தக்கவைத்துக் கொண்டிருந்தது கடல்வழி வர்த்தக நடவடிக்கைகளாகும். யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால பௌத்தமதம் பரவிய இடங்களான திருவடிநிலை, அரியாலை கிழக்கு, வல்லிபுரம், காரைநகர், வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு என்பன ஏற்கனவே குறிப்பிட்டது போல கடற்கரை மையங்களாகும். அங்கிருந்த முக்கியமான ஒரேயொரு உள்ளூர் மையம் கந்தரோடை. கந்தரோடை யாழ்ப்பாண வர்த்தக வலைப்பின்னலின் நடுவமாக விளங்கிய மையம் என்பது குறிப்பிடத்தக்கது.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பௌத்தமதக் கருவூலப் பொருட்களின் அமைப்பு, கலைப்பொருள் வரிசை, கலாசாரப் பரிணாம வளர்ச்சி (*The Setting, Sequence of Artefacts Unearthed and their Cultural Evolution*) என்பன ஆந்திராவின் நாகர்ஜுனாகொண்ட, அமராவதி ஆகிய மையங்களில் காணப்பட்ட கலாசார பரிமாண வளர்ச்சியை நிகர்த்துக் காணப்படுகின்றன. மற்றும், கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட புத்தபகவானின் உருவச்சிலைகள் அவற்றின் அமைப்பிலும், சிற்பச் செதுக்குக் கலையிலும் அமராவதி கலைக்கல்லூரிப் பாணியைக் கொண்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட பௌத்த மையங்கள் அனைத்தும் ஒன்றில் துறைமுக அங்காடிகளாகவோ அல்லது வணிகப்பாதை மையங்களாகவோ இருந்தன. இவ்விடங்களின் குடியிருப்பு அமைப்புகள் யாழ்ப்பாண பௌத்தம் வர்த்தக உயரடுக்கின் ஆதரைவைப் பெற்று வளர்ச்சியடைந்ததை எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையின் பெருநிலப்பரப்பில் பௌத்த மதத்தின் பரவல் குளங்களிலிருந்து நீர்ப்பாசனம் செய்த விவசாயச் சமூகத்தினரோடு இணைந்து பரவிய பொழுதில், யாழ்ப்பாணப் பௌத்தத்தின் வருகையும் பரவலும் வணிகப்பாதைகள் வழியாக வணிகத்துடன் இடம்பெற்றன. இந்த வித்தியாசமான பண்பே யாழ்ப்பாணப் பௌத்தத்தை இலங்கையின் பெருநிலத்தில் நடைமுறையிலிருந்த சிங்கள மக்களின் பௌத்தத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டிய ஒரு முக்கிய அம்சமாகும்.

கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து பௌத்த மதத்தின் பரவல் சிறப்பாக நிறுவனப்படுத்தப்பட்ட உரோம வர்த்தகவழிகளால் நடைபெற்றபடியினால், யாழ்ப்பாணத்தில் உருவான புதிய குடியிருப்புகளின் எழுச்சியோடு பௌத்த மதமும் பரவலாயிற்று. இளவாலை, கரவெட்டி, வேரத்திடல், பச்சிலைப்பள்ளி ஆகிய இரண்டாம் கட்ட பெருங்கற் பண்பாட்டுக்

குடியிருப்புகளில் பௌத்த மதச் சின்னங்களே அவ்விடங்களின் ஆரம்பகால மதச் சின்னங்களாகக் காணப்படுகின்றன.

பௌத்த மதத்தின் உள்ளார்ந்த அம்சம் நாடாண்கலையுடனான அதன் இணைப்பு ஆகும் (*Link with Statecraft*). அந்த மதம் தென்னாசியாவிலும், தென்கிழக்காசியாவிலும் மாநிலங்களையும், அரசுகளையும் உருவாக்கிய ஊக்கியாகவும் அல்லது காரணமாகவும் இருந்திருக்கிறது. மாமன்னன் அசோகன் பௌத்தமதம் சார்ந்து தன்னைத் தேவநம்பிரிய பியதாஸி ஆக்கியதும், இலங்கை அரசன் தீசன் தன்னைத் தேவநம்பிய தீசன் என அழைத்ததும் உதாரணங்கள். யாழ்ப்பாணத்திலும் ஆரம்பகால நூற்றாண்டுகளில் பௌத்தமும், அதன் வர்த்தகப் பின்னணியும் அங்கே உருவான நகரக் குடியரசின் அடித்தளமாக இருந்திருக்கின்றன.

தமிழ்க் காப்பியமான மணிமேகலை நாகநாட்டின் (யாழ்ப்பாணம்) அரச மையம் பௌத்த மதம் சார்ந்தது எனவும், அதை ஆட்சி செய்த வளைவாணன் என்ற நாக மன்னன் பௌத்த மதத்தினன் எனவும், நாகநாடு சோழ நாட்டுடன் கொண்டிருந்த கடல்வழித் தொடர்புகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது. மற்றொரு தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் நாகநாட்டையும், அது சோழ நாட்டின் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினத்துடன் கொண்டிருந்த இணைப்பையும் பற்றிக் கூறுகிறது. வல்லிபுரப் பொற்சாசனம் நாகதீவின் வடகரையில் ஒரு பிராந்திய ஆட்சியாளன் ஒரு பௌத்த விகாரையைக் கட்டியதை எடுத்துரைக்கிறது.

தொல்லியல் சான்றுகள் இலங்கையில் பாரம்பரியமாகப் பேசப்படும் பௌத்த மதத்தின் தோற்றத்தை மறுபரிசீலனை செய்ய வைக்கின்றன. இலங்கையின் பௌத்தமதப் பாளிமொழி இலக்கியங்கள் இரு முக்கியமான சம்பவங்களை எடுத்துரைக்கின்றன.

1. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவிலிருந்து இலங்கை வந்த ஆரியர்களின் இடப்பெயர்வு.
2. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வழியாக வந்த பௌத்த மதம்.

இச்சம்பவங்கள் உண்மையான நிகழ்வுகளாக இருந்திருப்பின் அவற்றை நிரூபிக்கக்கூடிய கருவூலப் பொருட்களோ, மற்றும் சான்றுகளோ அகழ்வாய்வுகளில் காணப்பட வேண்டும். அப்படியான சான்றுகள் இதுவரை காணப்படவில்லை. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் மிகப் பரவலாகப் புழக்கத்திலிருந்த மட்பாண்டம் வடக்கத்திய மெருகூட்டப்பெற்ற கறுப்புநிறப் பாண்டம் (*Northern Black Polished Ware: NBPW*) ஆகும். பாளி இலக்கியங்கள் கூறும் வட இந்திய மக்களின் ஒரு பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டிருக்குமானால் இலங்கையின் பல பகுதிகளில் பரவலாக இந்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் நிலமை அப்படி அமையவில்லை. யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் வட இந்திய மெருகூட்டப்பெற்ற கறுப்புநிற மட்பாண்டங்கள் (கி.மு. 500 - 100) சில கிடைத்திருக்கின்றன. இவை வட இந்திய வர்த்தகம் வழியாக வந்த மட்பாண்டங்கள். யாழ்ப்பாணத்தில் வேறு எந்த மையங்களிலும் இந்த மட்பாண்டம் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் பௌத்த மதம் சம்பந்தமான கலைப் பொருட்கள் எதுவுமே காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (*Thiagarajah, S. 2022: 26*). இலங்கையின் பெருநிலப் பகுதிகளின் அகழ்வுகளில் வட இந்திய மெருகூட்டப்பெற்ற கறுப்புநிற மட்பாண்டங்கள் அநுராதபுரத்தில் சில ஓடுகளும் (*Deraniyagala, S. 1992*); திஸ்ஸமகாராமவில் சிலவும் (*Weisshaar et al. 2001*); மாந்தையில் ஒரே ஒரு கலவோடும் (*Carswell, J. 2013: 216*) காணப்பட்டமை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவற்றைத் தவிர இலங்கையின் வேறு பாகங்களில் இந்த வட இந்திய மட்பாண்டம் காணப்பட்டதாக அறிவிப்புகள் ஏதும் வரவில்லை.

இதனோடு ஒப்பிடும் போது தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டுடன் இணைந்த கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் இலங்கைத் தீவு முழுவதும் செறிவாகப் பரவியிருப்பது ஏற்கனவே இங்கு (இயல் 10) எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

தொல்லியல் ரீதியாக யாழ்ப்பாணப் பௌத்தம் தென்னிந்தியப் பௌத்தத்தின் ஒரு பிரிவாகவே காணப்படுகிறது. முக்கியமாக ஆந்திர நாட்டிலிருந்தே இவ்வகையான பௌத்தம் யாழ்ப்பாணத்தைக் கடல்வர்த்தக வழியாக வந்தடைந்திருப்பதை இனிக் கூறப்படும் பல்வேறு வகையான சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

### (2) மகாயான பௌத்தம் (Mahayana Buddhism)

தென் இந்தியாவில் அமராவதி, நாகர்ஜுனாகொண்ட, காஞ்சி ஆகிய மையங்களில் கடைப்பிடிக்கப்பட்டது போன்ற ஒரு பௌத்த வழிபாட்டு முறை, யாழ்ப்பாண மக்களின் தெய்வ வழிபாட்டிற்கும், உணர்ச்சிகரமான பக்தி ஈடுபாட்டுக்கும் உகந்ததாக அமைந்தது. மகாயான பௌத்தம் என அழைக்கப்பட்ட இந்த வழிபாட்டு முறை பெரும்பாலான மக்களின் தேவைகளை நிறைவேற்றி, அக்காலத்திற்கு ஏற்றதாக இருந்தமையால் அது பௌத்த மதத்தின் பெரிய வாகனம் (*Greater vehicle of Buddhism*) என அழைக்கப்பட்டது.

மகாயான பௌத்தத்தின் கருத்துகள் புத்தபகவானின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், இந்த இயக்கம் முதலில் ஆரம்பமானது தென்னிந்தியாவில்தான். முதலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆந்திர தேசத்தில் வாழ்ந்த நாகர்ஜுனா பௌத்த மதத்தின் புனித போல் (*St. Paul of Buddhism*) என அழைக்கப்படுகிறார். அவரே மகாயான பௌத்தத்தின் ஆரம்ப கர்த்தா ஆவார் (*Hirakawa Akira, 1993: 252; Ray, R.A. 1994: 404*).

நாகர்ஜுனா சூனியவாதம் (*Doctrine of the Void*) என்னும் மெய்யியல் தத்துவக் கோட்பாட்டைப் போதித்தார். 'எங்களைச் சுற்றிவர உள்ள அனைத்தும் வெறுமைதான். நாங்கள் காண்பது எல்லாம் வெறும் பிரமை, மாயை' என்னும் கோட்பாடு இது. மனிதர்களின் மறுபிறவிகளின் முடிவில் ஒவ்வொரு பௌத்தனும் தேடும் 'நிர்வாணம்' இந்த வெறுமைதான். இந்தத் தத்துவத்தை பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஆதி சங்கராச்சாரியார் புதிய உறையிலிட்டு 'மாயாவாதம்' என்ற பெயரில்திரும்பவும் முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

மகாயான பௌத்தத்தின் மற்றொரு அம்சம் மைத்திரேய புத்தர் என்னும் 'போதிசத்துவர்', இந்த உலகத்தைச் சேவிக்க இன்னொரு தடவை வந்து பிறப்பார் என்ற நம்பிக்கை. இவர் தனது சொந்தத் துன்பங்களைச் சகித்து உலக மக்களை உய்யவைப்பார் எனக் கூறப்படுகிறது. இதன் எதிரொலிகளைக் கிறிஸ்தவ மதத்திலும் காணலாம்.

கி.மு. முதலாம் நூற்றாண்டு காலத்திலே ஆந்திராவிலிருந்து மகாயான பௌத்தம் தெற்கே தமிழகத்திற்கும், யாழ்ப்பாண மையங்களுக்கும் பரவிவிட்டிருந்தது. ஆந்திராவிலிருந்து வடக்கே இந்தியா எங்கும் பரவியது. இந்தியாவில் குப்தர்கால ஆட்சியின் போது (கி.பி. 320 - கி.பி. 550) மகாயான பௌத்தம் இந்தியா முழுவதிலும் பரவியிருந்தது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீன யாத்திரிகரான ஹுவான் திஸாங் இந்தியாவில் தேரவாத பௌத்தம் அழிவின் விளிம்பில் இருப்பதாகப் பதிவு செய்திருக்கிறார் (*Basham, A.L. 1982: 267*). தென்னிந்தியாவிலிருந்து போதிதர்மர் (தாமோ) இந்த மத்தை சீனாவிற்கும், அங்கிருந்து யப்பானுக்கும் எடுத்துச் சென்றார். இந்தியாவைப் போல அல்லாது இலங்கையின் பெருநிலத்தில் அநுராத புரத்தை மையமாகக் கொண்டு தேரவாத பௌத்தம் பெருவளர்ச்சி கண்டது.

## தனிமனித மதமான மகாயான பௌத்தம்

தென்னிந்தியாவில் (யாழ்ப்பாணத்திலும்) பௌத்தம் முதன்முதலாக ஒரு சமூகக் கருத்தியலாகவும் (*Social Ideology*), தனி மனித சமயமாகவும் உருவெடுத்தது. இலங்கையில் உள்ள எழுத்துப் பதிவுகள், அக்காலத்தில் பௌத்த குருமார்கள் காடுகளிலுள்ள அயவெட்டுக் குகைகளில் (*Dripledge Caves*) வாழ்ந்திருந்தார்கள் எனக் கூறும் காலத்தில், தென்னிந்தியப் பௌத்த மடாலயங்களும், புத்தரின் உருவச் சிலைகளும் ஒரு தனிமனித மதத்தின் உருவாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது (*Seneviratne, S. 2003: 19*).


தென்னிந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்திலிருந்த அமராவதியில்தான் கி.பி. முதலாம் நூற்றாண்டில் புத்தபிரானின் உருவச்சிலைகள் முதன் முதலாக மனித உருவில் உருவாக்கப்பட்டன (காந்தார, மதுரா புத்த சிலைகள் மூன்றாம் - ஐந்தாம் நூற்றாண்டுகளிலும், சரநாத் சிலைகள் குப்த மன்னர் காலத்திலும் உருவானவை). அதுவரை காலமும் புத்தரின் பாதபீடங்களை மட்டுமே வணங்கி வந்த மக்கள் அவரை ஒரு மனித உருவத்தில் வணங்க ஆரம்பித்தது மகாயான பௌத்தத்தைத் தனிமனித சமயமயமாக்கும் முயற்சியின் முக்கிய அம்சமாகும்.

தென்னிந்தியர்கள் புத்தரை இறைவனின் அவதாரமாக நம்பினார்கள். அந்த அவதாரங்களை அவர்கள் தெய்வ உருவங்களாகச் சமைத்தார்கள். தென்னிந்தியத் தெய்வ உருவங்களின் நெற்றியில் ஒரு பொட்டு அமைந்திருப்பதைக் காணலாம்.


ஆரம்பகால அமராவதி புத்தர் சிலைகள் அவரது நெற்றியில் பாரம்பரியமான பொட்டைக் (திலகம்) கொண்டிருந்தன. அமராவதிக் கலைவடிவைக் கொண்ட புத்தர் சிலைகள் காணப்படும் கந்தரோடை, காஞ்சி ஆகிய மையங்களில் கண்ட புத்தரின் சிலைகளிலும் இப்பொட்டைக் காணலாம்.



பொட்டணிந்த புத்தபிரான் - கந்தரோடை



பொட்டணிந்த புத்தபிரான் - அமராவதி



பொட்டணிந்த புத்தபிரான் - காஞ்சி.

இந்தியாவிலும், இலங்கையிலும் நீண்ட காலத்திற்கு புத்தபிரான் வழிபாடு அவரது பாதச் சுவடுகளைப் பதித்த கற்களை வணங்குதலைக் கொண்டிருந்தது. வட இந்தியாவில் கி.மு. 185 ஆம் ஆண்டிலிருந்து பாரூத்திலும் (*Bharhut*), கி.மு. 100 ஆம் ஆண்டிலிருந்து சாஞ்சியிலும் இப் புத்தப் பாதக் கற்கள் தயாரிக்கப்பட்டன.

ஆந்திராவில் ஆரம்பிக்கப்பட்ட மகாயான பௌத்தம் புத்த பகவானின் மனித வடிவிலான உருவச்சிலைகளை உருவாக்குவதற்கு முன்னர், வட இந்தியாவில் இம்மாதிரியான உருவச்சிலைகளை வடிப்பதற்கு எவருமே முன்வரவில்லை.


புத்த பகவானின் மனித உருவிலான உருவச்சிலைகளைத் (*Buddharpa*) தயாரிப்பதற்கு தேரவாத பௌத்தர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். தென்னிந்திய அமராவதி மனித வடிவிலான புத்தச்சிலைகளை அவர்கள் தடை செய்தது நன்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது (*Their ban on South Indian anthropomorphic Buddharpas - 'Aniconism' by the early Theravada Buddhists is well documented*).

வட இந்தியாவில் மகாயான பௌளத்தம் பரவி, மக்களின் ஆதரவைப் பெற்ற பின்னரே கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் பார்க்காமில் (*Parkham*) புத்தரின் உருவச் சிலைகள் தயாரிக்கப்பட்டன. தொடர்ந்து மதுராவிலிருந்தும் புத்தச் சிற்பங்கள் வெளிவந்தன. அமராவதிப் பாணியைப் பின்பற்றி இந்த ஆரம்பகால புத்தரின் சிலைகளும் நெற்றியில் பொட்டைக் கொண்டிருந்தன.




புத்தரின் பாதபீடிகை, கந்தரோடை.
*Image Source: C.E. Godakumbura.*

ஆரம்ப நாட்களில் புத்தரின் பாதபீடிகைகளை மட்டுமே வணங்கிவந்த மக்கள், கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து புத்த பகவானின் உருவச் சிலைகளை வணங்க ஆரம்பித்தது புத்தமத வழிபாட்டில் மகாயான பௌத்தம் கொண்டு வந்த மதப் புரட்சி என்றே கூறவேண்டும்.




போல் பீரிஸ், சுன்னாகத்தில் தலை வேறாகக் கண்ட புத்த சிற்பமும் கந்தரோடையில் கண்ட சிற்பப் பகுதியும். தலை பொருத்தப்பட்டு உடைவு ஒட்டப்பட்ட சுன்னாகம் சிற்பம் (நடுவில் உள்ள படம்) அநுராதபுர அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்பம் சுன்னாகத்தில் கண்டெடுக்கப்பட்டது என்பதற்கான எதுவிதமான தகவலுமில்லை.

இலங்கையின் பெருநிலப்பரப்பில் ஆரம்பகால புத்தபிரானின் உருவ வணக்கத்தை அறிமுகப்படுத்தியவர்கள் அபயகிரியில் நிலைகொண்ட மகாயான பௌத்தர்கள் என நம்பப்படுகிறது. புத்தபகவானின் உருவச்சிலைகளை வணங்குவது தேரவாத பௌத்த தத்துவமான 'புலனுணர்வகளால் பெறும் அனுபவங்களைத்

துறத்தல்' (Renunciation of all Sensual Experiences) என்ற கொள்கைக்கு எதிரானது ஆகையால் தேரவாத பௌத்தர்கள் அவ்வணக்கத்தை அனுமதிக்கவில்லை. ஆனால் புத்தரின் உருவ வணக்கம் மக்களிடையே பிரபலமாவதைக் கண்ட தேரவாதிகள் இறுதியில் அவ்வணக்கத்தைத் தாங்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

அமராவதி, மதுரா, காந்தாரச் சிற்பக் கலைகளில் புத்த பகவானின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களும், ஜாதகக் கதைகளில் கூறப்படும் அவரது முற்பிறப்பு நிகழ்ச்சிகளும் விவரணக் காட்சிச் சிலைகளாகவும், பாறைக் குடைவரை உருவங்களாகவும் செதுக்கப்பட்டு பௌத்தக் கோயில்களிலும், மற்றைய பௌத்த நிறுவனங்களிலும் காணப்படுகின்றன. இத்தகைய சிற்ப வேலைகள் எதுவும் இலங்கையின் புத்த கோயில்களில் கிடையாது. இலங்கையில் காணப்படும் பௌத்தக் கருப்பொருட்களைக் காட்டும் சில பளிங்குச் சிற்பங்கள் அமராவதியிலிருந்தும், நாகர்ஜுனாகொண்டாவிலிருந்தும் பக்தியுள்ள வர்த்தகர்களால் காணிக்கைகளாக அளிக்கப்பட்டவையாகும் (Bopearachchi, O. 2012: 64).

## கந்தரோடைப் புத்த சிலைகளின் உருவ அமைப்பு

கந்தரோடையில் போல் பீரிஸ் மேற்கொண்ட மேலாய்வுகளினதும், அகழாய்வுகளினதும் பயனாக பல புத்த சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றில் சில யாழ்ப்பாண அரும்பொருளகத்திற்கும், சில அநுராதபுர அரும்பொருளகத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டன.

இச்சிற்பங்கள் யாவும் தென்னிந்தியச் சிற்பக்கலை மரபின் செல்வாக்கினைப் பிரதிபலித்து நிற்பதனை நன்கு அவதானிக்க முடிகிறது. கந்தரோடை அகழ்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்ட வெண் வைரக்கல்லினாலான புத்தர் சிலைகள் அமராவதிக் கலை மரபின் கலைச் செழிப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. கந்தரோடைப் பௌத்த மதமானது தென்னிந்தியாவிலிருந்தே இங்கே வருகை தந்தது என்பதை உறுதிப்படுத்தும் சின்னங்களாகவே இச்சிற்பங்களைக் காண முடிகிறது.

ஆசன நிலையில் அமைக்கப்பட்ட வெண் வைரக்கல்லினாலான புத்தர் சிற்பத்தின் சிறப்பியல்புகள் இங்கு நோக்கத்தக்கவை. சுமார் 15 அந்தர் நிறையுடைய இச்சிற்பமானது ஐந்தரை அடி அகலமான மார்புப் பகுதிகளைக் கொண்டுள்ளது. சிற்ப அமைப்பு முறையை நோக்கும் போது இங்கு அமராவதிக் கலை மரபில் பின்பற்றப்பட்ட 'ஒட்டும் முறை' பின்பற்றப்பட்டிருந்தமையைக் காண முடிகிறது. அதாவது கைகள், கால்கள் என்பன வெவ்வேறாகச் செய்யப்பட்டு அவற்றை உடலோடு பொருத்துகின்ற முறை ஒன்று இருந்தமையினை கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொண்ட புத்தர் சிற்பங்கள் காட்டி நிற்கின்றன (கிருஷ்ணராசா, செ. 1998: 35). அநுராதபுரத்தில் காணப்படும் ஆரம்பகால பௌத்தச் சிற்பங்களும் அமராவதிக் கலைமரபின் ஒட்டும் முறையில் தயாரிக்கப்பட்டிருப்பதாக ஆனந்தா குமாரசாமி குறிப்பிட்டிருக்கிறார் (Coomaraswamy, A. K. 1935, 1980).

நிற்கும் வகையைச் சேர்ந்த புத்தர் சிற்பமொன்று 1917 இல் போல் பீரிஸ்ஸினால் சுன்னாகத்திற்கு அண்மையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டது (மேலுள்ள படம் பார்க்கவும்). சுன்னாகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இச்சிற்பமே ஓரளவுக்குப் பூரணத்துவமான நிலையில் பாதுகாக்கப்பட்டிருந்தது. சிற்பத்தின் தலைப்பகுதி வேறாக அருகே காணப்பட்டது (Pieris, P.E. 1917: 2021). இச்சிற்பமானது 12 அடி உயரம் கொண்டதாகும். அதன் மார்பகம் 20 அங்குலங்களாகும். தனி வெண்வைரக் கல்லினால் அமைக்கப்பட்ட இச்சிற்பத்தின் அமைதி அமராவதிக் கலைப்பாணியை மாதிரியாகக் கொண்டுள்ளது (கிருஷ்ணராசா, செ. 1998: 35).

இச்சிற்பத்தின் அமைப்பு முறைமையைப் பொறுத்தமட்டில் வலது மார்பு, தோள் ஆகிய பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் போர்வையினால் மறைக்கப்பட்ட நிலையில் தோற்றமளிப்பதனைக் காணலாம். போர்வையின் அமைப்பு பாதத்தினை மறைத்த நிலையில் பாதத்திலிருந்து மடிக்கப்பட்டு மீண்டும் இடது கரத்தினூடாக கீழ் நோக்கித் தொங்குவதாகச் செதுக்கப்பட்டுள்ளது. மடிப்புகள் யாவும் மிகத் தெளிவாகவும், ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் தலையமைப்பு காந்தாரக்கலை மரபின் சுருள்கேச முறையில் வடிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் மதுராக்கலை மரபில் காணப்படும் உச்சிக்கொண்டை முறையும் இச்சிற்பத்தில் பின்பற்றப்பட்டுள்ளது (கிருஷ்ணராசா, செ. 1998: 35-36).

நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிற்பங்களில் பல தலையற்றவையாகவே அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவும் வெண் வைரக்கல்லினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஒன்று மைத்திரேயர் வகையைச் சேர்ந்தது. இதன் உயரம் 3 அடி 6 அங்குலங்களாகும். மைத்திரேய புத்தரின் ஆடையலங்காரமும், உடைந்த

நிலையில் வேறாகக் கிடைத்த அதன் தலையின் அமைப்பும், கலை வனப்பு வாய்ந்தவையாக உள்ளன. இங்கு மைத்திரேய புத்தரின் மேலாடையானது வலது கரத்தினூடாகக் கீழே தொங்குவது குறிப்பிடத்தக்கது. இச்சிற்பத்தில் புத்தரின் சுருள் சுருளான கேச அமைப்பு காந்தாரக் கலைப்பாணியை வெளிப்படுத்துவதாக உள்ளது (கிருஷ்ணராசா, செ. 1998: 36).

கந்தரோடையில் அகழ்வு மேற்கொண்ட பொழுது வெளிப்படுத்தப்பட்ட மற்றொரு சிற்ப வடிவம் சந்திரவட்டக்கல் ஆகும். பௌத்த மரபில் சந்திரவட்டக்கல் கலையானது தத்துவ அடிப்படையிலும், கலை ரீதியாகவும் முக்கியமான ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையில் வளர்ச்சி பெற்றிருந்த தனித்துவமான பௌத்தக் கலை மரபுக்கு ஒரு சிறந்த உதாரணமாக சந்திரவட்டக் கல்லையே கலைவல்லுநர் எடுத்துக்காட்டுவர். அந்த வகையில் கந்தரோடையில் வெளிப்படுத்தப்பட்ட சந்திரவட்டக்கல்லின் தனிப் பண்புகளையும் நோக்கவேண்டும்.

இங்கு வெளிப்படுத்தப்பட்ட சந்திரவட்டக் கல்லானது மூன்று கற்துண்டுகளால் ஆனது. எதுவிதமான அலங்கார வேலைப்பாடுகளும் அற்ற நிலையில், அரைவட்ட வடிவத்தில் வெறுங்கோடுகளால் மாத்திரம் செதுக்கப்பட்டதாக இச்சந்திரவட்டக்கல் காட்சியளிக்கிறது. இத்தன்மையானது ஆந்திரக் கலைமரபில் நாகர்ஜுனாவில் காணப்பட்ட சந்திரவட்டக்கல்லின் கருப்பொருளை நினைவூட்டுவதாக உள்ளது. எனவே கந்தரோடைக்கும் நாகர்ஜுனாகொண்டாவுக்குமான தொடர்பு காலத்தால் முற்பட்டது என்பதனையும், கலைப் பாரம்பரியங்கள் இவ்விரண்டு மையங்களுக்குமிடையே நெருக்கமானவை என்பதனையும் உணர்ந்துகொள்ள முடிகிறது (கிருஷ்ணராசா, செ. 1998: 3637).

## மற்றைய மையங்களின் புத்த சிலைகள்

கிறிஸ்தாப்தத்தை அடுத்த நூற்றாண்டுகளில் கந்தரோடை, வல்லிபுரம், யாழ்ப்பாணப் பண்ணை என்பன முக்கிய நகரங்களாகவும், வர்த்தக மையங்களாகவும் விளங்கின.

இதனால் இவ்விடங்களில் பலநாட்டு வர்த்தகர்களின் நடமாட்டம் ஏற்பட்டதுடன் அவர்களது பண்பாட்டுச் செல்வாக்கும் இவ்விடங்களில் காணப்பட்டது. குறிப்பாக கிரேக்க, ரோம, அரேபிய, சீன, இந்தியத் தொடர்புகளின் முக்கியத்துவத்தை இவ்விடங்களில் கண்ட தொல்பொருட் சின்னங்களில் காணலாம். கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களில் பௌத்த சின்னங்கள் பெருமளவில் காணப்பட்டமைக்கு சமகாலத்தில் தென்னிந்தியாவில், சிறப்பாக ஆந்திராவில், பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்ததுடன், இம்மையங்கள் ஆந்திராவுடன் நெருங்கிய கலாசாரத் தொடர்பினைக் கொண்டிருந்ததும் காரணமாகும்.

வல்லிபுரத்திலமைந்த விஷ்ணு கோயிலுக்கு அருகாமையில் மிகப் பழைய கட்டட அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் மேற்கொண்ட மேலாய்வின் போது விஷ்ணு கோயிலுக்கு வடக்கே 50 யார் தொலைவில் புத்தரது சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஒருவகையான பளிங்குக் கல்லினால் ஆக்கப்பட்ட நிற்கும் நிலையிலான இப்புத்தர் சிலையின் வலதுகரம் உடைந்த நிலையில் உள்ளது.

வலது மார்பும் தோளும் அங்கவஸ்திரத்தினால் மறைக்கப்பட்டிருந்தது. ஆடையின் அமைப்பு பாதத்தைத் தொட்டு மடிக்கப்பட்டு இடது கரத்திலிருந்து கீழ் நோக்கித் தொங்குவதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பொதுவான அமைப்பும், ஆடை மடிப்புகளில் காணப்படும் தெளிவான தன்மையும் ஆந்திரக் கலைமரபின் செல்வாக்கினைப் பிரதிபலிக்கின்றன (Lewis, J.P. 1916). மேற்படி புத்தரின் சிலை பற்றி ஏற்கனவே இங்கு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சிலகாலம் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் வைக்கப்பட்டிருந்த இச்சிலை 1906 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆளுநராகவிருந்த (Governor) ஸேர் ஹென்றி பிளேக்கினால் சியாம் நாட்டு (இன்றைய தாய்லாந்து) அரசருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது (The Ceylon Antiquary and Literary Register 1916-17, Vol. 2, Part 2, p.96-97).

1954 ஆம் ஆண்டில் புத்தூர் என்ற கிராமத்தில் ஒரு புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டது. புத்தூரையும் சுன்னாகத்தையும் இணைக்கும் பிரதான வீதியின் மேற்குப் பகுதியில் நிலாவரை என்ற இடத்திற்கு அண்மையில் இச்சிலை கண்டெடுக்கப்பட்டது. ஒருவகைச் சுண்ணாம்புக் கல்லால் ஆக்கப்பட்ட இச்சிற்பத்தின் பாகங்கள் உடைந்த நிலையில் இருந்தன.

இது 3 அடி 3 அங்குல உயரமுடையது. தலை மாத்திரம் 1 அடி 2 அங்குல உயரத்தைக் கொண்டது (Ceylon Today, 1955; 4: p.17). இச்சிலையின் சிற்பக்கலை வடிவும், அங்க அமைப்பும், உடையின் பாணியும் வல்லிபுரப் புத்தர் சிலையை ஒத்திருந்தன (புஷ்பரட்ணம், ப. 2024).

### (3) பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த சமரசப் பண்பு (The Syncretism of Buddhism with Megalithism)

பகுதி - 2

கந்தரோடைக் கிராமத்தின் தெற்குப் பக்கத்தில் பனந்தோப்புப் பகுதியிலிருந்த மண்மேடுகளை 1917ஆம் ஆண்டில் கவனித்த போல் பீரிஸ் அவை பௌத்த தாதுகோபங்களிருந்த மேடுகளாக இருக்கலாம் என எண்ணினார். ஆனால் அந்த இடமெல்லாம் பற்றையும் பறகும் மூடப்பட்டுக் காடாக இருந்தபடியினால் அங்கே அகழாய்வு எதையும் அவர் மேற்கொள்ளவில்லை (Pieris, P.E. 1917: 24).

1966-1967 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த சாள்ஸ் எட்மண்ட் கொடகும்புர கந்தரோடையின் தெற்குப்பக்கத்தில் பனந்தோப்புகளிடையே காணப்பட்ட மேட்டை முதல் தடவையாக அகழாய்வு செய்யும் படி பணித்தார். 24 ஏப்ரல் 1966 ஆம் ஆண்டு அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்விடத்தில் பற்றையும் பறகுமாகக் காடு பற்றியிருந்தமையால் அவற்றை நீக்கி நிலத்தைச் சுத்தம் செய்வதற்கே சில மாதங்கள் பிடித்தது. மேலும், இடையில் வளர்ந்திருந்த இளம் பனை வடலிகளையும் தறிக்க வேண்டியிருந்தது.

1967 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் வாரம் வரை 20 ஸ்தூபங்களின் அடித்தளங்கள் காணப்பட்டன. இவற்றில் பெரியது 23 அடி அகலமும் சிறியது 6 அடி அகலமும் கொண்டிருந்தது. இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அகழாய்வில் இந்த ஸ்தூபங்களின் மேல் கட்டுமானம் எதுவும் காணப்படவில்லை.

அவை காலப்போக்கில் அழிவுற்றிருக்கலாம், அல்லது மக்களால் செங்கட்டிகள் தங்கள் தேவைக்காக அகற்றப்பட்டிருக்கலாம். அடுத்துக் கவனிக்க வேண்டியது சில அடித்தளங்களின் பகுதிகள் வெவ்வேறு உயர மட்டங்களில் ஒன்றிற்கு மேல் ஒன்றாக - சில சமயங்களில் ஒன்றோடு ஒன்று செருகிய வண்ணம் காணப்பட்டன.

1967 ஆம் ஆண்டு பெப்ரவரிமார்ச் மாதங்களில் கந்தரோடைக்கு மேலாய்வு செய்வதற்காக வந்த விமலா பெக்லி இந்த இடத்தில் இலங்கை தொல்லியல் இலாகா அகழாய்வு செய்வதாகவும், இந்த அகழ்வுகளில் ஸ்தூபங்களின் அடித்தளங்கள் காணப்படுவதாகவும், மற்றும் குழிகளிலிருந்து முத்திரை நாணயங்கள், உரோம நாணயங்கள், லக்ஷ்மி பட்டயங்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார் (Begley, V.S. 1967). இந்த ஸ்தூபங்களின் அடித்தளங்களைப் பரிசோதித்த கொடகும்புர, அவை ஏற்கனவே வார்ப்படமாக (Moulded) வெட்டப்பட்ட கோறல் கற்களால் சுற்றி அமைக்கப்பட்டு நான்கு அடுக்கு வரை காணப்படுவதாகக் குறிப்பிடுகிறார். அவற்றின நடுவே கோறல் கற்களின் குப்பைத் துண்டுகள் காணப்பட்டன. “இவற்றின் மேல் கட்டுமானம் கோறல் கற்களினால் அமைக்கப்பட்டிருக்கலாம். அதன் உச்சியில் சதுரமாக பெட்டி வடிவில் சுண்ணாம்புக்கல்லில் வெட்டப்பட்ட (Harmika) ஹாமிக்கா தளத்தின் மேல் ஸ்தூபத்தின் முடிகள் (Finials) பொருத்தப்பட்டிருக்கும்” எனக் குறிப்பிட்டிருக்கிறார் (Godakumbura, C. E. 1968: 72).

### கந்தரோடை ஈமக் கல்லறைகள்

கந்தரோடையில் இன்று ஸ்தூபிகளாகக் காணப்படும் பௌத்த சின்னங்கள் இறந்த பௌத்தர்களைப் புதைத்த பின்னர் மேலே எழுப்பப்பட்ட பெருங்கற் பண்பாட்டுக் கட்டுமானங்களாகும். கந்தரோடையை வந்தடைந்த இப்புதையல் பண்பாடு ஆந்திரப் பெருங்கற்கால-பௌத்தப் பண்பாடாகும். கந்தரோடையில் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களிடையே பௌத்த மதம் பரவியபோது அவர்களும் இப்பண்பாட்டை மேற்கொண்டார்கள்.

கந்தரோடையில் காணப்படும் பெருங்கற் பண்பாடும் பௌத்த சின்னங்களும் மேலணைவதை அந்த அடித்தளங்களின் தளவமைப்பிலிருந்து தெளிவாகக் காணமுடிகிறது. அந்த ஸ்தூபங்களின் அடித்தளங்கள் நெருக்கமான கொத்தாகவும் (Cluster) சில சமயங்களில் வெவ்வேறு மட்டங்களில் ஒன்றுக்கு மேல் ஒன்றாகவும் காணப்படுவது இவை திட்டமிட்டுக் கட்டப்பட்ட வழிபாட்டுத் ஸ்தூபங்கள் அல்ல என்பதையும், கல்லறைக்குரிய ஈமச் சின்ன ஸ்தூபங்கள் என்பதையும் காட்டி நிற்கின்றன. இவ்வகையான ஈமச் சின்ன ஸ்தூபங்கள் ஆந்திர தேச மையங்களான அமராவதி, நாகர்ஜுனாகொண்டா ஆகிய இடங்களில் இறந்த பௌத்த துறவிகளுக்காக நிறுவப்பட்ட சின்னங்களை ஒத்திருக்கின்றன (Schalk, P., quoting Ragupathy, P. 1990: 205).

இதற்குச் சான்றுகளை வழங்கும் வகையில் கந்தரோடையில் ஒரு ஸ்தூபத்தின் அடித்தளத்தின் கீழே அகழ்ந்தபோது ஒரு ஈமப் பேழையில் அழுகிய நிலையிலிருந்த எலும்பு காணப்பட்டது. அதற்கும் கீழே அழுகிய நிலையிலிருந்த மற்றொரு எலும்பும் காணப்பட்டதை கலாநிதி கொடகும்புர தனது அகழ்வாய்வு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார் (Godakumbura, C. E. 1968: p. 72).

கந்தரோடை ஈமப்புதையல் பற்றி இலங்கையின் இரு மூத்த பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் கூற்று இவை:

“கந்தரோடையில் கிடைத்த பௌத்த சின்னங்களின் தோற்றம் என்ன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது.

இச்சின்னங்கள் ஒருவகையான ஈமச் சின்னங்களே ஆகும். பல்வேறு பரிமாணங்களில் அமைந்துள்ள, பல்வேறு காலப்பிரிவுகளுக்குரிய இத்தூபிகளில் இறந்த பௌத்த பிக்குமாரின் சாம்பல், எலும்புகள் என்பன முருகைக் கற்களிலமைந்த பேழைகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. ஒரு வகையில் இப்பகுதியில் நிலவிய பெருங்கற்கால ஈமச் சடங்கு முறை பௌத்தத்தின் வருகையோடு அதில் சங்கமமாகியதையே (*Syncretism of Megalithism with Buddhism*) இவை எடுத்துக்காட்டி நிற்கின்றன. இத்தூபிகள் காணப்படும் இடங்கூட முன்பொரு காலத்தில் பெருங்கற் பண்பாட்டிற்குரிய ஈமக்காடாகவும் விளங்கியிருக்கலாம்" (சிற்றம்பலம், சி.க. 1993: 15).

"கந்தரோடையிலுள்ள பௌத்த சின்னங்கள் தனியான பண்புகளைக் கொண்டவை. அவை அநுராதபுரம், மிகுந்தலை, மாகமை முதலான இடங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. கந்தரோடையில் சிறிய அளவிலான தூபிகள் பல நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கே வழிபாட்டுத் தலங்களான சேதியங்களுக்குரிய அமைப்பு காணப்படவில்லை. அவற்றின் மேற்பாகம் அண்டவடிவமானது. அவை உயிர் நீத்த சங்கத்தாரின் பள்ளிப்படைகளாக அமைக்கப்பட்டவை. பௌத்த சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, பெருங்கற் பண்பாட்டுக்குரிய ஈமக் கிடங்குகளுக்கு மேலாக அமைந்த கட்டுமான முறையினை பின்னர் மாற்றிவிட்டனர் போலத் தெரிகின்றது. இவற்றைப் போன்ற அண்டவடிவமான கட்டுமானங்கள் ஆந்திர தேசத்து அமராவதி, நாகர்ஜுனாகொண்டா போன்ற இடங்களில் காணப்படுகின்றன. அங்குள்ளவை உயிர் துறந்த சங்கத்தாரின் சடலங்களைப் புதைத்த குழிகள் மேல் அமைந்தவை" (பத்மநாதன், சி. 2011: 55).

ஆந்திராவில் அமராவதி, நாகர்ஜுனாகொண்டா, குந்துப்பள்ளி ஆகிய மையங்களில் இவ்வகையான பெருங்கற் பண்பாட்டுடன் இணைந்த பௌத்த ஈமப்புதையல்கள் இருந்ததை பிரித்தானிய தொல்லியலாளரான அல்பேர்ட் ஹென்றி லோங்ஹர்ஸ்ட் (*Albert Henry Longhurst*) எடுத்துக்காட்டியுள்ளார். இவர் சிந்துவெளி மொகஞ்சதாரோவில் அகழாய்வுகளை நிகழ்த்திய ஜோன் மார்ஷலின் மைத்துனராவார் (*Longhurst, A. H.* 1917; 1938).

1913ஆம் ஆண்டு முதல் இந்தியத் தொல்லியல் மேலாய்வின் தென் வட்ட மேலதிகாரியாகப் பணிபுரிந்த லோங்ஹர்ஸ்ட், 1917இல் ஆந்திராவில் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள குந்துப்பள்ளியில் தொல்லியல் மேலாய்வுகளையும் அகழாய்வுகளையும் மேற்கொண்டார். 1927ஆம் ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டுவரை நாகர்ஜுனாகொண்டா அகழ்வாய்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

குந்துப்பள்ளியின் பௌத்ததலங்கள் வெட்டுப்பாறைக் குகைகள், பௌத்த சைத்தியங்கள், விகாரைகள், பௌத்தப் பள்ளியின் அடித்தளங்கள், ஸ்தூபிகள், கல்வெட்டுப் பொறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. வட்டவடிவான ஈமப் புதையல்களுக்கு மேல் சுட்ட செங்கற்களாலான இரண்டு அடுக்குச் சுவர்களும், மேலே தட்டையான சுடுமண் கும்பலும் ஸ்தூபம் போல அமைக்கப்பட்டிருந்தன. இதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும் (*Longhurst, A. H.* 1917).

அமராவதி, நாகர்ஜுனாகொண்டா மையங்களில் ஈமப்புதையல்களின் மேல் கட்டுமானங்கள் அழிந்துபோய்விட்டிருந்தன. அகழாய்வுகளின் மூலமே இவை பௌத்தமத ஈமப் புதையல்கள் என்பது அறியப்பட்டது (*Longhurst, A. H.* 1938).



*குந்துப்பள்ளியில் காணப்படும் தட்டையான இந்த ஸ்தூபங்கள் பௌத்தமத ஈமக்கல்லறைகளாகும். ImageSource: A.H. Longhurst.*



*கந்தரோடையில் 1967 ஆம் ஆண்டின் அகழாய்வின் முடிவில் கண்ட பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த ஈமப்புதையல் தளத்தில் வட்ட வடிவான மற்றும் சதுர வடிவான அடித்தளங்கள் மட்டுமே காணப்பட்டன. மேல் கட்டுமானங்கள் அனைத்தும் அழிந்திருந்தன. Image Source: Bennet Bronson.*



*மாலைதீவு காஷிடூ பௌத்தப்பள்ளியிலுள்ள ஸ்தூபங்களின் அடித்தளங்கள் கந்தரோடை போன்று வட்ட வடிவிலும், சதுர வடிவிலும் காணப்படுகின்றன. Image Source: Egil Mikkelsen*

பெருங்கற் பண்பாடும் பௌத்தமத ஈம அடக்கமும் இணைந்த புதையல் பண்பு மாலைதீவுக் கூட்டத்தில் உள்ள காஷிடூ தீவின் பௌத்தப் பள்ளியிலுள்ள ஈமப்புதையல் தளத்திலும் காணப்படுகிறது. 1996-1998 ஆம் ஆண்டுகளில் இந்த மையத்தை நோர்வே, ஒஸ்லோ பல்கலைக்கழகத் தொல்லியல் பேராசிரியர் எகில் மைக்கேல்சென் அகழ்வாய்வு செய்தார்.

கந்தரோடை தெற்குப் பகுதியிலிருந்த பனந்தோப்பை 1967ஆம் ஆண்டில் கலாநிதி கொடகும்புர அகழ்ந்த போது ஈமப்புதையல்களின் வட்ட வடிவமான மற்றும் சதுரவடிவமான அடித்தளங்களே காணப்பட்டன. மாலைதீவு காஷிடூ அகழ்வுகளிலும் இதே மாதிரி வட்ட வடிவமான, சதுரவடிவமான அடித்தளங்களே காணப்பட்டன. ஆனால் கந்தரோடையைப் போல அல்லாது பழுதடையாத முழுமையான ஈமத்தூபிகளும் காணப்பட்டன. வட்ட வடிவான தூபிகள் கூம்பு வடிவில் படியடுக்குகளாகச் சென்று உச்சியில் ஒரு முடியைக் கொண்டிருந்தன. சதுரவடிவான தூபிகள் படிப் பிரமிட்டுகளைப் போல (Steppyramids) படியடுக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டு அவைகளும் உச்சியில் ஒரு முடியைக் கொண்டிருந்தன.



*கூம்பு வடிவில் படியடுக்குகளைக் கொண்ட காஷிடூ பௌத்த ஈமப்புதையல் ஸ்தூபி. ஆரம்பகால கந்தரோடைப் பெருங்கற் பண்பாட்டுக் கட்டடங்களும் இதுபோல படியடுக்கு வடிவில் இருந்திருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. Picture Source: Dr. Egil Mikkelsen.*

மாலைதீவு காஷிடுவில் மேற்கூறப்பட்ட ஸ்தூபிகளுக்கு அருகாமையில் 6.5 மீட்டர் விட்டமும் 0.6 மீட்டர் உயரமுமான வட்டவடிவான ஒரு கல்மேடை காணப்பட்டது. அதன் தெற்குப் பக்கத்தில் காணப்பட்ட கல்மேடை நீடிப்பு ஸ்தூபி வடிவில் வட்டவடிவான மூன்று அடுக்குகளைக் கொண்டிருந்தது. இந்த அழிபாடு இல. 42 (Ruin XLII) எனப் பதிவு செய்யப்பட்டது. இந்த அழிபாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் நிலத்திலிருந்து 60-70 செ.மீ. ஆழத்தில் நான்கு கல்லறைகள் அகழ்ந்து ஆய்வு செய்யப்பட்டன. இக்குழிகளில் சடலங்கள் வடக்கு-தெற்கு திசை நோக்கி நீளக் கிடத்தி வைக்கப்பட்டிருந்தன.

சடலங்கள் வலது பக்கத்தில் சரிந்து, கரங்கள் இரண்டும் கால்களின் இடையே வைக்கப்பட்டிருந்தன. இங்கே அடக்கம் செய்யப்பட்ட சடலங்கள் ஆண்களும் பெண்களுமாவர். இச்சடலங்களின் காலம் கதிரியக்கக் கரிமத் தேதிக் கணிப்பின்படி கி.பி. 885ஆம் ஆண்டிற்கும் கி.பி. 1170ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும் (Mikkelsen, E. 2000: 19).

இக் கல்லறைகளில் சடலங்களோடு பல வகையான மட்பாண்டத் துண்டுகள் காணப்பட்டன. ஒரு சடலத்தின் கைவிரலில் ஒரு வெள்ளி மோதிரம் காணப்பட்டது. அகழ்வுகளில் பெருந்தொகையான மட்பாண்டத் துண்டுகள் காணப்பட்டன. இவை மட்பாண்ட, கற்பாண்ட, சீனப் பாத்திரக் கலவோடுகளாகும். மாலைதீவில் களிமண் இல்லாத படியினால் இவை அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்ட பாண்டங்களாகும். பெரும்பாலும் தென் சீனாவிலிருந்தே இவை வந்திருக்கின்றன (Mik kelsen, E. 2000: 19).

இறந்தவர்களின் உடல்களை எரிப்பதே பௌத்தமதப் பண்பு. புதைகுழிகளில் நிவேதனப் பொருட்கள் வைப்பது பௌத்த சம்பிரதாயத்திற்குப் புறம்பானது.

புத்த தத்துவம் பற்றற்ற தன்மையைப் போதிப்பதால் இப்புதையல்களில் ஈமப் படையல்களை எதிர்பார்க்க முடியாது. பேராசிரியர் மைக்கேல்சன், பௌத்த மரபுகளில் ஈமப்பொருட்களைக் காண முடியாது என்றும், இவ்வழக்கம் ஒரு தனித்துவமான உள்ளூர் மாறுபாடாக இருக்கலாம் (It may have been a unique local variation) எனவும் அபிப்பிராயப்படுகிறார் (Mikkelsen, E. 2025: 97).

மாலைதீவு காஷிடு பௌத்தப்பள்ளி அகழ்வுகளையும் அதில் கண்ட தொல்பொருட்களையும் பற்றி பேராசிரியர் மைக்கேல்சன் இலங்கையில் பேராசிரியர் செனாகா பண்டாரநாயக்கவுடனும், கலாநிதி

பொன்னம்பலம் இரகுபதியுடனும் உரையாடியிருக்கிறார். இலங்கைக்கும் மாலைதீவுக்கும் பௌத்தமதம் சமகாலப் பகுதியில் இந்தியாவிலிருந்து பரவியிருக்கிறது என்பது அவரது கருத்து (Mikkelsen, E. 2000: 21).

இலங்கையிலுள்ள பௌத்த நிறுவனங்கள் அனைத்திலும் மாலைதீவின் காஷிடு மடாலயக் கட்டமைப்புகளுக்கு ஒத்ததன்மை கொண்டது யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடையே. (The only Buddhist site in Sri Lanka showing some similarities with the Kaashidhoo monastery is the one at Kantarodai in the Jaffna peninsula). அங்கிருக்கும் அழிபாடடைந்த கட்டடங்களும் பவளக் கற்களைக் கொண்டே கட்டப்பட்டிருக்கின்றன. அங்குள்ள சிறு ஸ்தூபிகள் காஷிடு போன்றவை (Mikkelsen, E. 2000: 21).



மாலைதீவு காஷிடு பௌத்தப்பள்ளியில் வட்ட வடிவான மேடையும், அதன் நீடிப்பான மூன்று அடுக்குகள் கொண்ட கல்மேடை அழிபாடும் (Ruin XLII). இந்த அழிபாட்டின் வடக்கிலும், தெற்கிலும் கீழே காணப்படுவது போன்ற நான்கு உடலங்கள் புதைக்கப்பட்டிருந்தன. Picture Source: Egil Mikkelsen.



மாலைதீவு காஷிடு பௌத்தப்பள்ளியில் அகழ்ந்தெடுத்த நான்கு கல்லறைகளில் ஒன்று. சடலங்கள் நீளக்கிடத்திய நிலையில் வலது பக்கம் சரித்து அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. Picture Source: Egil Mikkelsen.

## இலங்கை அரச தொல்லியல் துறையினர் செய்த மேற்கட்டுமானங்கள்

1966-1967ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசுத் தொல்லியல் துறையினர் கலாநிதி கொடகும்புரவின் தலைமையில் அகழ்வுகளை மேற்கொண்டபோது, ஈமப்புதையல்களின் மேல் பவளக் கற்களினாலான அடித்தளங்கள் மட்டுமே காணப்பட்டன. அதற்கு மேலே ஒருவிதமான கட்டுமானங்களும் காணப்படவில்லை. இதை அங்கே மேலாய்வு செய்வதற்காகச் சென்ற பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தினர் எடுத்த ஒளிப்படங்களிலும் காண முடிகிறது.

கந்தரோடையில் காணப்பட்ட அடித்தளங்கள் மாலைதீவு காஷிடுவில் காணப்பட்டதைப் போல வட்ட வடிவிலும் சதுர வடிவிலும் காணப்பட்டன.

இவ்விரண்டு இடங்களுக்குமிடையே இருந்த நெருங்கிய ஒற்றுமையை நோக்குமிடத்து, அந்த அடித்தளங்களுக்கு மேலேயிருந்த ஸ்தூபங்கள் காஷிடுவில் போல படியடுக்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் அந்த அடித்தளங்களுக்கு மேலாக மேல் கட்டுமானங்களைக் கட்ட வந்த இலங்கைத் தொல்லியல் துறை வேலையாட்கள், வட்ட வடிவான அடித்தளங்களுக்கு மேல் இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்படும் தாதுகோபங்களைப் போல குவிமாட வடிவில் (Domeshaped) இந்த ஸ்தூபங்களைக் கட்டியிருக்கிறார்கள்.

உடைந்திருக்கும் சில ஸ்தூபங்களின் உள்ளே நவீனகால கற்காரைக் கட்டிகளைக் (Concrete Slabs) காணலாம். வட்ட வடிவான அடித்தளங்களுக்கு மேலாக குவிமாடக் கட்டுமானங்களை அமைத்த தொல்லியல் துறையினர், சதுர வடிவான அடித்தளங்களைக் கவனிக்காது அப்படியே விட்டிருக்கிறார்கள்.

இச்செயலின் மூலம் இலங்கை அரசு, யாழ்ப்பாணப் பௌத்தத்தின் தனித்துவமான பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் சங்கமித்த அடையாளங்களை மாற்றி, அவற்றை உலகிற்கு சிங்கள-பௌத்த கலாசாரத்தின் தாதுகோபங்களாகப் பிரசாரம் செய்யும் வகையில் பெரியதொரு விளம்பரப் பலகையை நிறுவியுள்ளது. இது யாழ்ப்பாண மண்ணின் பாரம்பரிய வரலாற்றை ஆதாரமின்றி மறுத்துரைக்கும் செயலாகும்.




*கந்தரோடைப் பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த ஈமக்கல்லறைகளின் மேற்கட்டுமானங்களை மாற்றியமைத்தமை. Image Source: Siva Thiagarajah.*

### (4) பவளக்கல் - சுண்ணாம்புக்கல் கட்டடத் தொழில்நுட்பம் (Coral and Limestone Building Architecture)

யாழ்ப்பாணப் பௌத்தத்தில் காணப்படும் தனித்துவமான உள்நாட்டு அம்சம் பவளக் கற்களையும் சுண்ணாம்புக் கற்களையும் கொண்டு செதுக்கப்பட்ட கட்டடக் கலையும் சிற்பக் கலையுமாகும். இக்கற்களே யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஒரேயொரு கட்டடப் பொருட்களாகும். இக்கற்களை உபயோகித்த கட்டட-சிற்பக் கலையானது யாழ்ப்பாணப் பௌத்தக் கட்டடங்களைக் கட்டுவதில் ஆரம்பித்து, பண்டைய கட்டடங்களையும் சிற்பங்களையும் உருவாக்குவதிலும், சமீப காலங்களில் அவற்றை சீமெந்து கொண்டு மாற்றியமைக்கும் வரையிலும் உபயோகத்தில் இருந்துள்ளது. இக்கற்களைச் சிறப்பாக வெட்டி, பொழிந்து உருவாக்கும் தொழில்நுட்பத்தில் யாழ்ப்பாணக் கல்தச்சர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். யாழ்ப்பாணப் பௌத்தத்தில் காணப்படும் இந்தக் கட்டடப் பொருட்களும் அதை உபயோகிக்கும் தொழில்நுட்பமும் இலங்கையின் பெருநிலப்பில் காணப்படும் பௌத்த ஸ்தூபங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. இப் பவளக்கல் - சுண்ணாம்புக்கல் தொழில்நுட்ப உபயோகம் இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே நடைபெற்றதாகத் தெரியவில்லை.



*கடலுக்குள்ளிருந்து எடுத்து வந்து நீள்சதுரமாக வெட்டிய பவளக்கற் பாறைகள்.*



*ஆனைக்கோட்டை - நவாலி எல்லைப் பகுதியில் வெளிக்கொணரப்பட்ட பண்டைக்காலக் கட்டடம். இது பொழியப்பட்டு நீள்சதுரமாக வெட்டப்பட்ட சுண்ணாம்புக் கற்களினால் அடித்தளமும், சுவர்களும் அமைக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்தைய அரச, அல்லது வேளிர் வகுப்பு மக்களின் கட்டடங்கள் இவ்வாறான கட்டட அமைப்பைக் கொண்டிருக்கலாம். Image Source: Dr. P. Ragupathy.*

பவளக்கற்கள் கடலின் அடியில் உயிருள்ள வெண்ணிற '*Polyps*' ஆக வளருகின்றன. இவை மூன்று-நான்கு அடி உயரமும் ஆறு-எட்டு அடி நீளமும் கொண்டவையாக வளருகின்றன. இவற்றைக் கடலிலிருந்து பெயர்த்தெடுத்து, ஈரமாக இருக்கும் போது அல்லது நீரில் ஊறவைத்து மென்மையாக்கிய பின்னரே அவற்றை தேவையான உருவங்களில் அறுக்கவோ செதுக்கவோ முடியும். இக்கற்கள் காய்ந்துவிட்டால் அவற்றை வெட்டும்போது சிறு துண்டுகளாகப் பிளவுபடும். பவளக்கல் தொழில்நுட்பம் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மறக்கப்பட்டுவிட்டது. இத்தொழில்நுட்பம் இன்றும் மாலைதீவுகளில் காணப்படுகிறது. சுட்ட களிமண் கூரை ஓடுகளைப் போன்ற ஓடுகளை அவர்கள் பவளக்கற்களிலிருந்து வெட்டி எடுத்து உபயோகிக்கிறார்கள். யாழ்ப்பாணப் பௌத்தச் சிற்பங்களும் பண்டைய கட்டடங்களும் யாழ்ப்பாண மண்ணின் கீழே காணப்படும் 'மையோசீன்' காலத்து சுண்ணாம்புக் கற்களிலிருந்து உருவாக்கப்பட்டிருக்கின்றன.

### (5) ஆந்திர எழுத்து வடிவங்களும் வல்லிபுரப் பொற்சாசனமும்


வல்லிபுரப் பொற்சாசனம் பற்றி ஏற்கனவே இங்கு ஏழாவது இயலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. வல்லிபுரப் பொற்சாசனத்தில் இடம்பெறும் எழுத்து

வடிவங்கள் ஆந்திர நாட்டில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட பிராமி எழுத்து வடிவங்கள். அக்காலகட்டத்தில் இக்ஷ்வாகு மன்னர்களின் ஆட்சியின் கீழ் ஆந்திரநாடு இருந்ததனால், இந்த எழுத்து வடிவத்தை இக்ஷ்வாகு வகை எழுத்துகள் என்றும் அறிஞர்கள் அழைப்பர்.


வல்லிபுரப் பொற்சாசனத்தின் எழுத்து வடிவங்களை ஆராய்ந்த இந்தியத் தொல்லியலாளரும் தொல்லெழுத்துக் கலைஞருமான பேராசிரியர் ஏ.எச். டானி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'இந்திய தொல்லெழுத்துக்கலை' (*Indian Palaeography*) என்ற அவரது ஆய்வு நூலில், வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துகள் ஆந்திராவில் அமராவதி, நாகர்ஜுனாகொண்டா ஆகிய மையங்களில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும் நான்காம் நூற்றாண்டிலும் உபயோகிக்கப்பட்ட இக்ஷ்வாகு வகை எழுத்து வடிவங்கள் எனக் கூறியுள்ளார். இச்சாசனத்தில் காணப்படும் அ, ஐ, உ, க, ம, ய, ற, ல, வ ஆகிய எழுத்துகள் இக்ஷ்வாகு வகை எழுத்துகளே ஆகும். வல்லிபுரப் பொற்சாசனம் பற்றிய அவரது மதிப்பீடு வருமாறு:

*"Of these, the gold plate inscription has an individual character of its own. In this case the lower curves of the verticals are overem phasised and the medial i has a sharp curve to the left. The letters a, i, u, ka, ga, ma, ya, ra, la and va are all Ikshvaku forms.... In the inscription we have definite evidence of the school of Amarvati and Nagarjunakonda writing reaching Ceylon, probably in the latter half of the third century AD (Dani, A.H. 1963: 221).*

வல்லிபுரப் பொற்சாசனம் ஆந்திர தேசத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இருந்த கலாசாரத் தொடர்பை எடுத்துரைக்கும் மற்றுமொரு சான்றாகும்.



*கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய ஆந்திர இக்ஷ்வாகு வகைப் பிராமி எழுத்துக் கல்வெட்டு. Picture Source: Archaeological Survey of India.*



*கொழும்பு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் வல்லிபுரப் பொற்சாசனப் பிரதி. Image Source: National Museum, Colombo.*

## (6) நாடாளும் கலையுடன் இணைந்த யாழ்ப்பாணப் பௌத்தம் (Buddhism's link with Statecraft)

பௌத்த மதத்தின் இயல்பான அம்சம் தன்னை நாடாளும் கலையுடன் இணைத்துக் கொண்டதாகும். தென்னாசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் மாநிலங்களும் அரசுகளும் உருவாகுவதற்கு ஊக்கமளித்த காரணிகளில் ஒன்றாகப் பௌத்த மதம் இருந்திருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் பௌத்தமும் அதன் வணிகம் சார்ந்த தன்மையும் பண்டைய கிறிஸ்தாப்த காலத்திலிருந்த நகர-மாநில உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்ததுபோலத் தெரிகிறது.

தமிழகத்தின் சங்கமருவிய காலக் காப்பியமான மணிமேகலை நாகநாட்டில் (பண்டைய யாழ்ப்பாணம்) ஓர் அரசும், அங்கே வளைவாணன் என்ற பெயர் கொண்ட ஓர் அரசனும், அந்த அரசின் பௌத்த மதச் சார்பும், அந்த அரசு சோழ நாட்டுடன் கொண்டிருந்த உறவும் பற்றிக் கூறுகிறது. மற்றொரு காப்பியமான சிலப்பதிகாரம் நாகநாடு நகரம் பற்றியும், அந்த நகரம் சோழ நாட்டின் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினத்துடன் கொண்டிருந்த தொடர்பு பற்றியும் உரைக்கிறது.

வல்லிபுரப் பொற்சாசனம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஒரு பிராந்திய ஆட்சியாளன் ஒரு பௌத்த விகாரையைக் கட்டிய செய்தியை அறியத்தருகிறது.

## (7) உலகளாவிய மத, இன நடைமுறைகள் கொண்ட யாழ்ப்பாணப் பௌத்தம்

பண்டைய யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருந்தது ஓர் உலகளாவிய பன்முக மத நடைமுறை (*Cosmopolitan Religious Practice*) என்பது அறியக் கூடியதாக இருக்கிறது. நாட்டார் மதங்களும், நாக வழிபாடும், ஆரம்பகால சைவ மதமும், பௌத்த மதமும் அருகருகே பல மக்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. பின்னர் மத்தியகாலப் பகுதியில் நடைபெற்றது போன்ற மதவெறியோ, மத நிந்தனையோ அக்காலத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

உலகம் முழுவதும் பௌத்த மதத்தைப் பின்பற்றுவோருக்கு வட இந்தியாவில் புத்தகாயா ஒரு புனிதத் தலம் ஆகும். இதன் முந்தைய பெயர் உறுவெல. இந்த இடத்தில் கௌதம புத்தர் ஆறு ஆண்டுகள் இச்சையடக்கம் செய்து தன்னொறுப்புத் தவம் புரிந்தார் (Selfmortification). கி.மு. 250ஆம் ஆண்டளவில் அசோகச் சக்கரவர்த்தி இந்த இடத்தில் ஒரு புத்தக் கோயிலைக் கட்டியிருந்தார். அந்தக் கோயில் புத்தகாயா என அழைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பௌத்தத்தின் பொற்காலமான கி.மு. 100 - கி.பி. 500 காலப்பகுதியில், ஏப்ரல் மாதத்தில் இலங்கையிலுள்ள பௌத்த யாத்திரிகர்கள் வருடாந்த காயா யாத்திரைக்காக யாழ்ப்பாணத்தில் கூடுவார்கள். அக்காலத்தில் சிங்களவர், தமிழர் என்ற இன வித்தியாசம் கிடையாது — அவர்கள் எல்லோரும் பௌத்த யாத்திரிகர்களே. அக்காலத்தில் 'சிங்கள' என்ற பெயர் குப்த, மௌரிய, சோழ என்பது போல அநுராதபுர அரச வம்சத்தினரையே குறித்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பின்னரே சாதாரண மக்கள் சிங்களவர் என அழைக்கப்பட்டார்கள்.

புத்தகாயா செல்லும் யாத்திரிகர்கள் கப்பல் ஏறிய துறை 'காயாத்துறை' என அழைக்கப்பட்டது. அதுவே இன்றைய காங்கேசன்துறை (Thiagarajah 2016: 261).

## பின்னுரை

யாழ்ப்பாணத் தொல்லியல் ஆய்வுகளில் கி.மு. முதலாம் நூற்றாண்டிற்கும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் காணப்படும் வளமிக்க தொல்பொருள் கண்டுபிடிப்புகள், அக்காலத்திலிருந்த செல்வம் மிக்க ஒரு வணிகம்-சார்ந்த பௌத்தத்தைக் காட்டி நிற்கின்றன. இதற்கு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை வியாபித்திருந்த வளமான ரோமாபுரி வர்த்தகம் ஒரு முக்கியமான காரணமாகும்.

ஆனால் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் யாழ்ப்பாணத்து பௌத்த மையங்களில் குறிப்பிடத்தக்க ஒரு வீழ்ச்சி காணப்படுகிறது. இந்த வீழ்ச்சி பௌத்த மையங்களில் மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடியிருப்புகளிலும் வாழ்வாதார முறைகளிலும் காணப்படுகிறது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ரோம வர்த்தகத்தின் முடிவோடு யாழ்ப்பாண வர்த்தக நகரம்-மாநிலம் வறுமைக் காலங்களை அடைந்துவிட்டது போலத் தெரிகிறது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து மத்தியகால நூற்றாண்டுகள் ஈறாக (Medieval Centuries) தென்னாசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் குளங்கள் அமைத்து நீர்ப்பாசன விவசாயம் செய்வதன் மூலமே

**யாழ்ப்பாணத்து வணிகம்சார்பௌத்தம் வீழ்ச்சியடைந்துகொண்டிருந்த அந்த வேளையில் இலங்கையின் உலர்வலய நீர்ப்பாசன பௌத்தம் அதன் உச்ச நிலையை அடைந்தது. மத்திய காலத்தில் தென்னிந்திய பக்தி இயக்கமும் யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து இலங்கையின் உலர்வலயத்திலேயே தமது செல்வாக்கை உபயோகிக்க ஆரம்பித்தது. மத்தியகால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்திற்கு 100 கி.மீ. தெற்கிலிருந்த மாந்தைத்துறை நோக்கி நகர்ந்தன.**

தேசங்கள் தங்கள் பொருளாதாரச் செழிப்பைத் தக்கவைத்துக்கொண்டன. யாழ்ப்பாணத்திலோ நீர்ப்பாசன விவசாயம் செய்வதற்கான ஆறுகளோ குளங்களோ இல்லாமையால் இலங்கையின் பெருநிலத்துடனோ அல்லது தென்னிந்தியாவுடனோ அதனைப் பொருளாதார வளத்தில் ஒப்பிட முடியவில்லை.

யாழ்ப்பாணத்து வணிகம்சார்-பௌத்தம் வீழ்ச்சியடைந்துகொண்டிருந்த அந்த வேளையில் இலங்கையின் உலர்வலய நீர்ப்பாசன பௌத்தம் அதன் உச்ச நிலையை அடைந்தது. மத்தியகாலத்தில் தென்னிந்திய பக்தி இயக்கமும் யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து இலங்கையின் உலர்வலயத்திலேயே தமது செல்வாக்கை உபயோகிக்க ஆரம்பித்தது. மத்தியகால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்திற்கு 100 கி.மீ. தெற்கிலிருந்த மாந்தைத்துறை நோக்கி நகர்ந்தன.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் பெருநிலப்பரப்பின் தேரவாத புத்த செல்வாக்கை சில யாழ்ப்பாண பௌத்த மையங்களில் காண முடிகிறது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குரிய சிங்கள மொழிக் கல்வெட்டு ஒன்று கந்தரோடையில் ஒரு தூணில் காணப்பட்டது. இதை முதலில் P.E.P. தெரனியகல கண்டறிந்தார். ஒரு தூணின் மூன்று பக்கங்களில் ஒன்பதாம் நூற்றாண்டிற்குரிய சிங்கள மொழியில் இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருந்தது. இக்கல்வெட்டில் அரசன் நான்காம் கசப்பன் ஒரு விகாரைக்கு அளித்த தானம் பற்றிக் கூறப்பட்டிருந்தது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சோழர்களின் வருகையோடு யாழ்ப்பாணம் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. ராஜேந்திர சோழனின் கல்வெட்டுகளில்

யாழ்ப்பாண இந்துக் கோயில்கள் பற்றிக் கூறப்படுகிறது. அடுத்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணப் பௌத்தம் அமிழ்ந்து இந்துமதம் மேலோங்கி வந்திருக்கிறது. பௌத்த மையங்களில் காணப்பட்ட தடித்த விளிம்பு கொண்ட சிவப்பு மட்பாண்டங்கள் மறைந்து, பள்ளமிட்ட விளிம்பு கொண்ட மட்பாண்டங்கள் உபயோகத்திற்கு வருகின்றன. பௌத்த மையங்கள் கைவிடப்பட்டு, புத்த பகவான் ஐயனாரோடு ஒருங்கிணைக்கப்பட்டு, பௌத்த சைத்தியங்கள் கிராம ஐயனார் கோயில்களாக மாறுகின்றன.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் தொண்டை மண்டல வேளாள குலமரபுத் தலைவர்களின் வருகையோடும், சைவசித்தாந்தத்தின் அறிமுகத்தோடும், யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்துடனும் இக்கால யாழ்ப்பாண இந்து மதம் தோற்றம் பெற்றது. ஆனால் பதில் கிடைக்காத ஒரு கேள்வி இன்னும் நம்மை உறுத்திக்கொண்டே இருக்கிறது. இங்கே பெரிய பெரிய இந்துக் கோயில்கள் எல்லாம் வந்த பின்னரும் 'தாய்த்தெய்வம்', 'திரிசூலம்', 'நாகச்சிலை' போன்ற ஆதி யாழ்ப்பாணத் தெய்வ வழிபாடுகள் இன்னும் நாட்டார் சமயமாக, சிறு தெய்வ வழிபாடாக தொடர்ந்து கொண்டே வருகிறது. ஆனால் ஆயிரம் ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த யாழ்ப்பாணப் பௌத்தம் ஏன் அழிவுற்றுப் போனது என்பதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பௌத்தம் அன்றைய சமூகத்தின் வர்த்தக உயரடுக்கு மேலோரின் நடைமுறையாக இருந்ததாகவும், அது கீழ்மட்ட மக்களைச் சென்றடையவில்லை என்றும் ஒரு கருத்து உள்ளது. அது கீழ்மட்ட சமூகத்தில் பரவாது விட்டமையே அது தொடராமல் போனதற்கான காரணமாக இருக்கலாம்.

## உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்


**BASHAM, A.L (1982 reprint): The Wonder that was India; Fontana, Delhi.**

**BECHERT, HEINZ (1993): "The Nikayas of Medieval Sri Lanka and the Unification of the Sangha by Parakramabahu I", In Studies in Buddhism in Honour of Professor A. K.Warder, (eds.) N.K. Wagle & F. Watanabe, p.1121, University of Toronto, Toronto.**

**BEGLEY, VIMALA (1973): 'ProtoHistoric Material from Sri Lanka and Indian Contacts' in (eds.) Kenndy, K.A.R. & Possehl, G.L.: Ecological Backgrounds of South Asian Prehistory, Cornell University.**

**BOPEARACHCHI, O. & WICKRAMASINHA, W. (1999): Ruhuna, An Ancient Civilization Revisited, Nugegoda.**

**BOPEARACHCHI, OSMUND (2012): Early Buddhist Statues of Sri Lanka in New Dimensions in Tamil Epigraphy (Ed). Appas amy Murugaiyan, CreA, Chennai.**

**BRIDGET & RAYMOND ALLCHIN (1993): The Birth of Indian Civilization, Penguin Books, India.**

**CARSWELL, JOHN (2013): Mantai - City by the Sea, Linden Soft Verlag, Aichwald.**

**COOMARASWAMY, ANANDA K. (1935): Elements of Buddhist Iconography, Harvard University Press**

**COOMARASWAMY, ANANDA K. (1980 reprint): The Origin of The Buddha Image, Coronet Books Inc., India.**

**DEEGALLE, MAHINDA (1999): A Search for Mahayana in Sri Lanka, A Journal of the International Association of Buddhist Studies, Vol. 22, No. 2.**

**DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka, Govt. of Sri Lanka, Colombo.**

**GODAKUMBURA, C. (1968): Kantarodai; Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol.12.**

**GUNAWARDANA, R.A.H.L. (1977): Prelude to the State, An Early Phase in the Evolution of Political Institutions in Ancient Sri Lanka; The Sri Lanka Journal of Humanities, VIII (1&2).**

**HIRAKAWA AKIRA Transl.& Ed.: PAUL GRONER (1993): A History of Indian Buddhism,Motilal Banasidass Publications, Delhi.**

**INDRAPALA, K. (1973): A Brahmi potsherd inscription from Kantarodai, Purvakala, Bulletin of the Jaffna Archaeological Society No.1, Jaffna.**

**INDRAPALA, K. (2006): The Evolution of an Ethnic Identity, Kumaran Book House, Chennai.**

**LEWIS, J.P. (1916); Some Notes on Archaeological Matters in the Northern Province of Ceylon; Antiquary and Literary Register Vol.II, Part II, Colombo.**

**LONGHURST, A.H. (1917): The Buddhist Monuments at Guntupalle, Krishna District, Annual Report of the Archaeologi cal Department, Southern Circle, Madras 1916-1917.**

**LONGHURST, ALBERT HENRY (1938): The Buddhist Antiquities of Nagarjunakonda, Madras Presidency., Memoirs of the**

Archaeological Survey of India Vol. 54, Archaeological Survey of India, New Delhi

MAHAVAMSA, Transl & ed. WILHELM GEIGER (1950), Colombo

MANIMEKALAI by Chattanar, English Transl. ALAIN DANIELOU (1989): New Directions Publishing Corp., NY.

MARSHALL, JOHN (1931): MohenjoDaro and the Indus Civilization; Arthur Probsthain, London.

MIKKELSEN, EGIL (2000): Archaeological Excavation of a Monastery at Kaashidoo, National Centre for Linguistic and Historical research, Male.

MIKKELSEN, EGIL (2025): 'The Cemetery: Graves and Buddhist Funerary Practice' in The Archaeology of Buddhism in the Maldives, Brill, Leiden, The Netherlands.

ORTON, N (1995): The Early Ceramics of Kantarodai; Ancient Ceylon 13.

PARANAVITANA, S. (1959): A History of Ceylon Part I, University of Ceylon. Colombo.

PARANAVITANA, S. (1961): The Arya Kingdom in North Ceylon, Journal of the Royal Asiatic Society (C.B.), New Series Vol. VII, Part 2: 174224, Colombo.

PARANAVITANA, S. (1971): The Art of the Ancient Sinhalese, Colombo.

PIERIS, PAUL E. (1917): Nagadipa and Buddhist Remains in Jaffna Part I, Journal of the Royal Asiatic Society (C.B.), Vol. XVII, No. 70, Colombo.

PIERIS, PAUL E. (1919): Nagadipa and Buddhist Remains in Jaffna, Part II, Journal of the Royal Asiatic Society (C.B.), Vol. XVII, No. 72, Colombo.

PUSHPARATNAM, P. (2002): Ancient Coins of Sri Lankan Tamil Rulers, Bavani Publishers, Chennai.

RAGUPATHY, P. (1987): Early settlements in Jaffna, Mrs. Ragupathy, Madras.

RASANAYAGAM, C. (1926): Ancient Jaffna, Madras.

RAY, REGINALD A. (1994): Buddhist Saints in India, Delhi.

SCHALK, PETER (1990): Retelling P.Ragupathy's 'Mercantile Buddhism in Ylpnam', Lanka, December 1990, Uppsala University, Sweden,

SCHALK, PETER (1994): The Vallipuram Buddha Image Rediscovered, Paper presented at the Symposium of Dance, Music and Art in Religions, Abo, Finland, 16th18th August 1994.

SENEVIRATNE, S (1993): The Archaeology of Megalithic Black and Red Ware Complex in Sri Lanka; Ancient Ceylon 5, Colombo.

SENEVIRATNE, SUDHARSHAN (2003): The Philosophy and Social Role of Early Buddhism in South India; Vesak Commemo ration Lecture, Chennai.

VIMALA BEGLEY (1967): Archaeological Exploration in Northern Ceylon; Expedition Summer 1967: (9)4; Bulletin of the University Museum, University of Pennsylvania, Philadel phia.

VIMALA BEGLEY (1973): 'ProtoHistoric Material from Sri Lanka and Indian Contacts' in (Eds.) Kennedy, K.A.R & Possehl, G.L.: Ecological Backgrounds of South Asian Prehistory; Occasional papers and Thesis, Cornell University.

WEISSHAAR, H.J., ROTH, H., WIJEYAPALA, W. (2001): 'Ancient Ruhuna: Sri LankanGerman Archaeological Project in the Southern Province', Materialien zur Allgemeinen und Vergleichenden Archäologie, Vol. 58, 2001.

WHEELER, R.E.M. (1948): Brahmagiri and Chandravalli 1948: Megalithic and Other Cultures in the Chitaldug District, Mysore, Ancient India 4: 181308.

கிருஷ்ணராசா, செ. (1998): தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

கிருஷ்ணராசா, செ. (2004): வழுக்கையாற்று வடிநிலப் பகுதியில் கண்ட தொல்தமிழ் எழுத்து வடிவங்கள், வீரகேசரி 08.02.2004, 29.02.2004, 14.03.2004.

சிலப்பதிகாரம் (1920): பதிப்பு: உ.த்தமதானபுரம் வே. சாமிநாதையர், அடியார்க்கு நல்லார் உரையுடன், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை.

சிற்றம்பலம், சி.க. (1993): யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

புஷ்பரட்ணம், ப (1993): பூநகரி - தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

புஷ்பரட்ணம், ப. (2025): பௌத்த சிற்பங்கள் ஊடாக அறியப்படும் இலங்கை ஆந்திர உறவுகள், எழுநா, ஜனவரி 2025.

மணிமேகலை சீத்தலைச் சாத்தனார் (1965): உ.வே. சாமிநாதையர் பதிப்பு, அறம் பதிப்பகம், சென்னை.

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

*ஆங்கில மூலம்: சி. அரசரத்தினம்*

# இலங்கையில் 1956 ஆம் ஆண்டின் தேர்தல் புரட்சி

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

இலங்கையின் நவீனகால வரலாற்றைப் பற்றிய ஆழமான ஆய்வுகள் சிலவற்றை எழுதிய சின்னப்பா அரசரத்தினம் முதன்மையிடத்தைப் பெறுகின்ற வரலாற்றுப் புலமையாளர்களில் ஒருவராவார். 'Ceylon' என்ற தலைப்பில் 1964ஆம் ஆண்டில் இவர் ஒரு முன்னோடியான நூலை எழுதினார். அந்நூல் 'The Modern Nations in Historical Perspective' (வரலாற்றுப் பார்வையில் நவீன தேசங்கள்) என்ற நூல்வரிசையில் 'Prentice Hall Inco.' என்னும் பதிப்பகத்தின் வெளியீடாகப் பிரசுரமாயிற்று. இந்நூல் சமகால இலங்கையின் வரலாற்றை 'Ceylon Since Independence' என்னும் முதலாவது அத்தியாயத்தில் 35 பக்கங்களில் விவரிப்பதோடு, இலங்கையின் வரலாற்றை நூலின் மீதி நான்கு அத்தியாயங்களில் விளக்குவதாக அமைந்தது. இற்றை நாளில் இலங்கை எதிர்நோக்கும் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் விளக்கக்கூடிய வரலாற்றுக் காரணங்களை (Historical Causes of the Present Dilemmas) ஆய்வு நோக்கில் எடுத்துக் கூறுவதே தமது 'Ceylon' நூலின் நோக்கம் என்பதை அந்நூலின் நூன்முகத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசரத்தினம் அவர்களின் நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டன. அவரது நூல்கள் மேற்குநாட்டுப் பதிப்பகங்களால் வெளியிடப்பட்டன. அவரது நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளும் புலமையாளர்கள் மட்டுமே வாசிக்கும் தரமான பருவ இதழ்களில் (Journals) வெளியிடப்பட்டன. இக்காரணங்களால் தமிழ் அறிவுலகத்தால் இவர் நன்கு அறிந்துகொள்ளப்படாத ஒருவராகவே இருந்து வந்தார். 'Sri Lanka after Independence: Nationalism, Communalism and Nation Building' என்னும் இவரது நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1989 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அப்பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் கற்கைப் பிரிவின் மாணவர்களுக்கு இவர் ஆற்றிய விரிவுரைகளின் எழுத்துவடிவிலான தொகுப்பாக மேற்படி நூல் அமைந்தது. அந்நூலில் 'The Electoral Revolution of 1956' (பக். 18-26) என்ற விடயத்தலைப்பில் உள்ள பகுதியைத் தழுவி இத்தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

1956இல் தேர்தல் நடைபெற்ற வேளையில் இலங்கையின் பிரதமராக சேர் ஜோன் கொத்தலாவல பதவி வகித்தார். அவர் மேற்குமயப்பட்ட பண்பாட்டுப் பின்னணியை உடைய இலங்கையின் உயர் வர்க்கங்களின் பிரதிநிதியாக இருந்தார். சமயத்தைப் பற்றிய அக்கறையற்றவரான கொத்தலாவல, இலங்கையில் சமயக் கொந்தளிப்பு உச்சத்திற்குப் போய்க்கொண்டிருந்த காலத்தில் பிரதமராக இருந்தார் என்பது வரலாற்றின் நகைமுரண் ஆகும். ஏனெனில் நாட்டின் உயர் குழாம்கள் எதனைப் புனிதமானவை எனக் கருதியிருந்தனவோ அவை அனைத்தையும் ஒதுக்கும் மனோநிலை நாட்டில் உருவாகிய கருத்தியலின் மூலம் வெளிப்பட்டது. 1940களிலும் 1950களிலும் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள் புதிய கருத்துகளை மக்கள் மத்தியில் தோற்றுவித்தன. கல்வித்துறையின் முன்னேற்றம் சுதேசமொழிக் கல்வி கற்ற வகுப்பினரின் எண்ணிக்கையையும் பெருகச் செய்தது. நாட்டின் உட்பகுதிகளின் பட்டணங்களிலும் கிராமங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கல்வியில் முதலீடு பரவலாகியதால் ஒவ்வொரு ஆண்டிலும் சுதேச மொழியில் இரண்டாம் நிலைக் கல்வியை நிறைவு செய்தவர்களின் தொகை அதிகரித்துச் சென்றது. பாடசாலைகளில் இருந்து இரண்டாம் நிலைக் கல்வியை முடித்து வெளியேறுபவர்களில் பெரும்பான்மையினர் மூன்றாம் நிலைக் கல்விக்கு உயர முடியாத நிலை இருந்தது. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் தவிர்ந்த பிற கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் ஆங்கிலமே போதனா மொழியாக இருந்து வந்தது. சிங்கள, தமிழ் மொழி வழியே கல்வி கற்றோர் குறைந்த தரப் பதவிகளையே பெற முடிந்தது. ஆனால் அவர்கள் செலவிட்ட அதே அளவு ஆண்டுகள் செலவிட்டு (ஏறக்குறைய 11 ஆண்டுகள்) ஆங்கில மூலம் கற்றவர்கள் அரசாங்கத்திலும் தனியார் துறையிலும் சுயபாசைக் கல்வி பெற்றவர்களைவிட உயர்வான உத்தியோகங்களைப் பெற்றனர். சுயபாசைக் கல்வியின் தரம் உயர்ந்து சென்றது. அதன் வழி பயிலும் மாணவர் தொகையும் படிப்படியாக உயர்ந்து சென்றது. அவர்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாத காரணத்தினால் தாம் நிரந்தரமாகவே கீழ்நிலைக்குத் தள்ளப்படுகிறோம் என்ற உணர்வு விரக்தியாகவும் கோபமாகவும் அவர்களிடம் வெளிப்பட்டது. சுயபாசையில் கல்வி கற்றோர் தம் உணர்வுகளையும் மனக்குறைகளையும் வெளியிடத் தொடங்கினர்.



சி. அரசரத்தினம்
Image Source - en.wikipedia.org

## சிங்கள பௌத்த இயக்கம்

சிங்கள மொழி மூலம் கல்வி கற்ற பிரிவினரிடையே ஏற்பட்ட விரக்தியுணர்வோடு, பௌத்த சமய இயக்கம் என்ற அரசியல் சக்தியும் இக்காலத்தில் படிப்படியாக எழுச்சி பெற்றது. இதனைச் சமய மறுமலர்ச்சி இயக்கம் எனக் கூறுதல் தவறாகும். ஏனெனில், அவ்வாறு கூறுவது

1950களுக்கு முந்திய காலத்தில் அப்படியான மறுமலர்ச்சி இயக்கம் இருக்கவில்லை என்று கருத இடந்தரும். பௌத்த மறுமலர்ச்சியும் சீர்திருத்தமும் சிங்கள சமூகத்தில் நீண்ட காலமாகவே இருந்து வந்த ஒரு விடயமாகும். வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் சமய மறுமலர்ச்சி இயக்கம் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்டது. அவை அவ்வக் காலத்துத் தேவைகள், அரசியல் பின்னணி என்பனவற்றுக்கு ஏற்ப வேறுபட்ட வடிவங்களைப் பெற்றன. பௌத்தர்கள் நவீன காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் சமய இயக்கமாக அணிதிரண்டமை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம்பெற்றது. இந்த இயக்கத்தை முன்னெடுத்தவர்கள் மேற்குமயப்பட்ட பௌத்த அறிவாளிகள் வகுப்பினரேயாவர். அக்காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவ்வியக்கம் தீவிரம் பெற்றது. சமூகப் படிநிலையில் உயர்ச்சி பெற்றுச் சென்ற பிரிவினர் சாதாரண மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்கு பௌத்த சமய இயக்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இக்கட்டத்தில் வர்த்தகர்கள், தொழில் முயற்சியாளர்கள் என்போரிடம் சமய இயக்கத்தின் தலைமைத்துவம் கைமாறிச் செல்வதையும் காணலாம். ஆயினும், 1915 கலவரம் வரை சமய இயக்கம் தேசிய நிலையில் வெளிப்படாமல் உள்ளடங்கியே இருந்தது.

## காலனிய ஆட்சிக் காலம்

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பௌத்த சமய இயக்கம் அரசியல் இயக்கமாக மாற்றம் பெறவில்லை. சொத்துடைய வகுப்பினரிடம் சமய இயக்கத்தின் தலைமைத்துவம் இருந்தபடியால் அரசை எதிர்க்கும் துணிச்சல் அவர்களுக்கு இருக்கவில்லை. கிறிஸ்தவ மிசன்களின் மீது தம் கோபத்தை சமய இயக்கம் வெளியிட்டதே அல்லாது காலனிய அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழ முயற்சிக்கவில்லை.

டொனமூர் அரசியல் யாப்புக் காலத்தில் நாட்டிற்கு அறைகுறைச் சுயாட்சி அதிகாரங்கள் கிடைத்தன. இதனால், சமய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் டொனமூர் அரசியல் யாப்புக் கால அமைச்சர்களின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் சமயம் தொடர்பான சில முன்னேற்றகரமான காரியங்களை நிறைவேற்றினர். ஆயினும், அக்காலத்தில் பௌத்த சமய இயக்கம் அரசியல் இயக்கமாகப் பரிணமிக்கவில்லை. சுதந்திரம் பெற்ற காலத்தில் பௌத்த குருமார்களில் தீவிரவாதிகள் சிலர் இடதுசாரிகள் மீது அனுதாபம் கொண்டு அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். இடதுசாரிக் குழுக்களின் நடவடிக்கைகளிலும் பங்குபற்றினர். இடதுசாரிகள் அந்நிய ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டதால் பௌத்த குருமார் சிலருக்கு அவர்களை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சியாளர்களின் மனப்பாங்கில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. பௌத்தத்திற்கு அரசாங்கம் ஆதரவு அளிக்க முன்வரவில்லை. கிறிஸ்தவ சமயக் குழுக்களும் நிறுவனங்களும் தொடர்ந்து செல்வாக்கைச் செலுத்திவந்தன. இது பௌத்த சமயக் குருமார்களிடமும் பௌத்த சமயத்தவர்களிடமும் அதிருப்தியை உண்டாக்கியது. பௌத்த சமய நிறுவனங்களும் அதிருப்தியடைந்தன. சிங்கள சமூகத்தில் சிங்கள மொழி, இலக்கியம் என்பன பற்றிய கல்வியின் காவலர்களாக பௌத்த பிக்குகள் இருந்து வந்தனர். இக்கல்விக்கு உரிய மதிப்பு அளிக்கப்படவில்லை. ஆங்கிலக் கல்விக்கு அளிக்கப்பட்ட மதிப்பின் காரணமாக இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்ட சிங்கள மொழி மூலம் கல்வி பெற்றவர்களின் தரத்தில் வைத்தே குருமாரும் நோக்கப்படும் நிலை இருந்தது.

## சுதந்திரத்தின் பிந்திய நிலை

டி.எஸ். சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் பௌத்தத்தைப் புனர்நிர்மாணம் செய்யும் தேவை குறித்து அழுத்தம் கொடுக்கப்பட்டது. இவருக்குப்பின் பிரதமராக இருந்த கொத்தலாவல பௌத்த சமயம் பற்றி அக்கறையற்றவராகவே இருந்தார். 1952ஆம் ஆண்டில் கொத்தலாவல ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த பின் பௌத்தர்களின் அரசுக்கெதிரான எதிர்ப்பு அழுத்தம் பெற்றது.

உயர் குழாத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தம் கொடுப்பதில் தலைமை வகித்தனர். உயர் குழாத்தின் தேர்வு இல்லாமல் பௌத்த சமய இயக்கம் 1952ற்குப் பிற்பட்ட காலத்தில் பலம்பெற்றிருத்தல் முடியாது. உயர் குழாத்தின் சிந்தனையிலும் மனப்பாங்கிலும் ஏற்பட்ட இம்மாற்றம் இதுவரை நாட்டில் நிலவிவந்த பல்லின, சமயஞ்சார்ந்த இலட்சிய நோக்கை மாற்றியது. பௌத்த உயர்குழாம் பல்லின ஐக்கியம், சமயச் சார்பின்மை என்ற இலட்சியங்களைக் கைவிட்டு, சிங்கள மக்களுக்கான அடையாளம் ஒன்றை தேசியவாதத்தின் நோக்கில் வகுத்துக்கொள்ளத் தூண்டியது. அத்தோடு இக்கட்டத்தில் சிங்கள மக்கள் திடீரென அரசியல் அதிகாரம் பெற்ற குழுவாக தாம் மாறியிருப்பதையும் உணர்ந்தனர். ஆயினும் பிரதமர் பதவியில் அமர்ந்து கொண்ட சேர் ஜோன் கொத்தலாவல சிங்கள உயர் குழாமின் இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டவராக இருக்கவில்லை. அவரின் அரசியல்

நடவடிக்கைகளினால் அல்லாது, அவரின் மேற்குறித்தவாறான மனப்பான்மை காரணமாகவே பௌத்த சமய இயக்கத்தை அவர் பகைக்க வேண்டியதாக ஏற்பட்டது.

கொத்தலாவல பிரதமராக இருந்த காலத்தில் அரசு மதச்சார்பின்மை (Secularism) எனும் கொள்கையைப் பின்பற்றியது. அரசின் கொள்கை இவ்வாறு இருந்த பின்னணியில் பௌத்த சமய இயக்கத்தினரின் மக்கள்வாதம் (Populism) சிங்கள சமூகத்தில் ஆழமாக ஊடுருவியது. இம்மக்கள்வாதம் அடிமட்டத்தில் இருந்து தோன்றி உயர் குழாத்தைத் தாக்கிய ஓர் இயக்கமாக இருக்கவில்லை. இது உயர் குழாம் மத்தியில் தோன்றிய ஒரு சிந்தனைப் பிரிவாகவே இருந்தது. அவ்வாறு மேல்மட்டத்தில் தோன்றிய இச்சிந்தனை அரசியல் அணிசேர்ப்பு நடவடிக்கைகள் மூலம் கீழ்மட்டங்களுக்கும் பரவியது. பௌத்த பிக்குகள் நிகாயப் பிரிவுகள் ஊடாக பிராந்திய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இயக்கங்களை ஆரம்பித்தனர். அவர்களது அமைப்புகள் அழுத்தக் குழுக்களாகச் செயற்பட்டன. சமயக் குருமார் அல்லாதவர்களான சமயிகளின் அமைப்புகள் அதுவரை காலமும் கல்வி, பண்பாட்டு நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்திவந்தன. இப்போது அவை அரசியல் நடவடிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்த ஆரம்பித்தன. உயர் குழாத்தினால் தொடக்கப்பட்ட அரசியல் மயமாக்கல் நடவடிக்கையில் பிக்குகள், சிங்கள மொழி ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள் போன்றவர்களும் சிங்களத்தில் கல்வி பெற்ற படித்த பிரிவினரும் முக்கிய வகிபாகத்தை ஏற்றுச் செயற்பட்டனர். பண்டாரநாயக்க அரசில் இருந்து வெளியேறி தனக்குத் தனியாக ஒரு கட்சியை நிறுவியதை அடுத்தே, கொத்தலாவலயின் நடவடிக்கைகளால் அதிருப்தியுற்ற உயர் குழாத்தின் முன்முனைவினால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் மயப்படுத்தலும் நடைபெற்றது. இவ்வாறு தொடக்கப்பட்ட பௌத்த இயக்கத்தில் இணைவதற்குப் பண்டாரநாயக்கவும் அவரது கூட்டாளிகளும் தயங்கினர். ஆயினும் 1954ஆம் ஆண்டளவில் உயர் குழாம் மத்தியில் ஏற்பட்ட அரசியல் போட்டிச் சுழலில் பண்டாரநாயக்க பௌத்த இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அந்த இயக்கத்தின் மூலம் தன் அரசியல் தளத்தைப் பலப்படுத்திக் கொள்ள முனைந்தார்.

## மொழிக் கொள்கை

மேற்குறிப்பிட்ட பின்னணியில் இலங்கையின் தேசிய மொழி, நிர்வாக மொழி, உயர் கல்விக்கான போதனை மொழி என்பன குறித்த பிரச்சினைகள் மக்களின் கவனத்தை ஈர்த்த மிக முக்கிய விடயங்களாக மேற்கிளம்பின.



ஜோன் கொத்தலாவல
Image Source - moderndiplomacy.eu

அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை மொழிப் பிரச்சினை விடயத்திற்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சட்டசபையில் இறுதியாக இவ்விடயம் எடுக்கப்பட்டபோது ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இலங்கையின் உத்தியோக மொழிகள் என்ற இடத்தை ஆங்கிலத்திற்குப் பதில் சிங்களமும் தமிழும் காலப்போக்கில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் ஆங்கிலத்தை உத்தியோக மொழி அந்தஸ்தில் இருந்து நீக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. சுதேச மொழி ஆர்வலர்கள் கட்டாயத் தாய்மொழிக் கல்வி என்பதை வலியுறுத்திப் பெற்றுக்கொண்டனர். ஆயினும் நகரப் பாடசாலைகள் பலவற்றில் ஆங்கிலமே போதனா மொழியாக நீடித்தது. சிங்கள பௌத்த இயக்கத்தினருக்கு பௌத்தத்தை அரச மதமாக ஏற்றுக்கொள்ளச் செய்தல் என்பதனைவிட ஆங்கிலத்தை அது பெற்றிருந்த உயர் பீடத்தில் இருந்து அகற்றுவது இலகுவானதாக இருந்தது. சுதேச மொழி பற்றிய இவ்வெழுச்சி ஒரு புதிய வடிவத்தைப் பெற்றது. ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களம், தமிழ் என்ற இரு மொழிகளுக்குப் பதிலாக சிங்களம் மட்டுமே ஒரேயொரு மொழியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இலங்கையின் சிறுபான்மைக் குழுக்கள் மீது மேலாண்மையை நிறுவும் திட்டத்தின் முதற்படியாக இது அமைந்தது. இந்தப் பிறழ்வான திருப்பம் மேற்கொள்ளப்பட்டதும் அதுவரை காலமும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிப் பிரிவினரதும் ஆதரவைப் பெற்றிருந்த சுயபாசை இயக்கம் பிரிவினைவாத, இனவாத இயக்கமாக மாற்றம் பெற்றது. சிங்கள பௌத்த இனவாத இயக்கம் ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் எதிரான பிரசாரமாகவும்

அமைந்தது. பின்னர் தமிழர் மீதான தாக்குதலாகவும் மாறியது. தமிழர்கள் அவ்வேளை இவ்வாறான ஒரு தாக்குதல் நடைபெறும் என்று எதிர்பார்க்கவும் இல்லை; அதற்காக அவர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும் இல்லை.

## இனவாதப் பேரலை

*1954ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் இயக்கம் இனவாதப் பேரலையாக எழுந்தது. இது அரசியலை முற்றாகவே மாற்றியது. இவ்வேளை பௌத்த இயக்கமும் சில திட்டவட்டமான கோரிக்கைகளை முன்வைத்தது. பௌத்த சமய நிறுவனங்கள் ஒன்றிணைந்து 'பௌத்தத்தின் இன்றைய நிலை' என்ற விடயத்தை ஆராய்வதற்கு குழு ஒன்றை நிறுவின. அக்குழு விசாரணை நடத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கை காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பௌத்தர்கள் எவ்வெத் துறைகளில் பின்தங்கிப் போயினர் என்பதையும் சுட்டிக் காட்டியது. பௌத்தர்களுக்கு எதிரான பாரபட்சமான நடவடிக்கைகள், அரச ஆதரவு பௌத்தத்திற்கு இல்லாமற் போனமை, மதச்சார்பற்ற அரசுக் கொள்கையின் கீழ் கிறிஸ்தவத்துடன் போட்டியிட முடியாத கீழ்நிலைக்குப் பௌத்தம் தள்ளப்பட்டமை என்பன சுட்டிக்காட்டப்பட்டன. பௌத்தத்திற்கு அரசு ஆதரவு கொடுக்காத நிலை சுதந்திரத்தின் பின்னரும் தொடருவதையும் அறிக்கை சுட்டிக் காட்டியது. கல்வித்துறையைச் சமய நிறுவனங்கள் ஆக்கிரமித்திருப்பதை அறிக்கை எடுத்துக்காட்டியது. இவ்விடயம் பௌத்தர்களின் உணர்வுகளைக் கிளரச் செய்வதாக இருந்தது. பாடசாலைகளுக்கு நன்கொடை வழங்கும் முறை பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இருந்து தொடர்ந்து வந்தது. கிறிஸ்தவப் பாடசாலைகளுக்குக் கிடைத்த நன்கொடை கிறிஸ்தவர்களின் சனத்தொகை வீதாசாரத்திற்கு மிகையானதாக இருந்தது. கிறிஸ்தவப் பாடசாலைகளின் கல்வித் தரம் உயர்வாக இருந்தபடியால் ஆயிரக்கணக்கான பௌத்த மாணவர்கள் கிறிஸ்தவப் பாடசாலைகளிலேயே சேர்ந்து கற்கும் நிலை ஏற்பட்டது. கிறிஸ்தவப் பாடசாலைகளின் ஆதிக்கம் காரணமாக கிறிஸ்தவர்கள் தரமான கல்வியை பெற்றதோடு, பொதுச்சேவை, நீதிச்சேவை, ஆயுதப்படைகள், பிற சேவைகள் ஆகியவற்றில் உயர்பதவிகளைப் பிடித்துக் கொண்டனர். கிறிஸ்தவர்களின் சனத்தொகை வீதாசாரத்தைவிட அதிகமான எண்ணிக்கையான உயர்பதவிகள் அவர்களுக்குக் கிடைத்தன. இத்தகைய ஆதிக்கம் கல்வித்துறை மீது கிறிஸ்தவர்கள் செலுத்திய ஆதிக்கத்தின் விளைவே ஆகும்.*

பௌத்தத்தை அரசமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கை

*மேற்குறிப்பிட்ட அரச நடவடிக்கைகளின் மூலம் சமநிலைக் குறைவைச் சரி செய்வதற்கான பல நடவடிக்கைகளைப் பௌத்த விசாரணைக் குழு அறிக்கை பரிந்துரை செய்தது. கல்விக்கான நிதியைப் பகிர்ந்தளிப்பதில் உள்ள பாரபட்சம் நீக்கப்படுதல், அதுவரை காலமும் நிகழ்ந்த அநீதியான செயற்பாடுகளால் விளைந்த பாதிப்புகளைச் சரிசெய்வதற்கான நேர்மையான குறைதீர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எனப் பல விடயங்கள் சிபாரிசு செய்யப்பட்டன. பௌத்தத்தை அரச மதம் (State Religion) ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை பௌத்த இயக்கத்தின் தீவிர கோரிக்கைகளில் ஒன்றாகும். இதன் மூலம் காலனிய ஆட்சிக்கு முந்திய பௌத்த சிங்கள முடிமன்னர்கள் காலத்தில் அரச மதமாக இருந்த பௌத்தம் அரச ஆதரவை இப்போது இழந்து விட்டது; மீண்டும் அம்மதம் அரச ஆதரவு மதமாக இருந்த நிலை திரும்ப வேண்டும் என்பதான இனவாதக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஜனநாயக அரசியல் முறையோடு பொருந்திவராத இந்த இனவாதக் கோரிக்கைகளை முதலில், பிறரைவிட முந்திக் கொண்டு ஏற்ற அரசியல்வாதியாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க விளங்குகிறார்.*

*இவர் முதலில் சிங்களம் மட்டும் இயக்கத்தை ஆதரித்தார். இவ்வாறு தாம் சிங்களம் மட்டும் கொள்கையை ஆதரிப்பதற்கு சில போலி நியாயங்களை அவர் கண்டுபிடித்துக் கூறினார். தமிழைவிட சிங்களம் வளர்ச்சி குறைந்த மொழி என்ற வாதத்தை இவர் முன்வைத்தார். இந்தியாவில் மில்லியன் கணக்கான மக்களால் பேசப்படுவது தமிழ்; சிங்களம் இந்நாட்டில் மட்டும் பேசப்படும் மொழி; ஆதலால் சிங்களத்திற்கு விசேட பாதுகாப்பு வேண்டும் என்று அவர் கூறினார்.*

*அவரது இக்கருத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் விரும்பியோ விரும்பாமலோ ஏற்க வேண்டியதாயிற்று. ஐக்கிய தேசியக் கட்சி உளப்பூர்வமாக இதனை ஏற்கவில்லை என்ற தோற்றமே வெளிப்பட்டது. பௌத்த சமயம் தொடர்பான கோரிக்கைகளைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு வேறாக இருந்தது. பௌத்தம் பற்றிய விடயத்தால் அரசும் மதமும் பற்றிய பல சிக்கலான கொள்கைப் பிரச்சினைகளுடனான விவாதம் மேற்கிளம்பியது. தேசியவாத இயக்கங்கள் கடந்த காலத்தை மீளக் கொண்டு வருதல் என்றவாறான திட்டங்களை காலனிய எதிர்ப்புப் போராட்டக்*

கட்டத்தில் முன்வைப்பதும், அதற்கு அழுத்தம் கொடுப்பதும், அந்நாடுகள் சுதந்திரம் பெறும் கட்டத்தில் பலவிதமான பின்விளைவுகளை ஏற்படுத்துவதுண்டு. ஏனெனில் சுதந்திர அரசுகள் ஜனநாயக அரசுகளும் ஆகும். ஜனநாயக அரசுகளில் பெரும்பான்மை இனக்குழுமம் தனது இனக்குழுமத்தின் பண்பாட்டிற்கு (சமயம், மொழி என்பன) மேலாதிக்கத்தை வழங்கும் முறையில் முடிமன்னர் காலத்து நிலைமைகளை மீளக் கொண்டு வருதல் சிக்கலைத் தோற்றுவிக்கும். இலங்கையில் நடைபெற்றதும் இதுவே. சமயம், மொழி இரண்டும் ஒன்றிணைந்து ஒரு சக்தியாக மேலெழுந்தன. சமூகத்தில் இயங்கிய அரசியல் கட்சிகளுக்கு இந்தச் சக்தியை எதிர்கொள்ளும் துணிச்சல் இருக்கவில்லை. அச்சக்தியின் எழுச்சியை அலட்சியம் செய்யவும் முடியவில்லை.

## இனவாதமும் அரசியல் கட்சிகளும்

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரு பிரதான அரசியல் கட்சிகளிடையே சமயம், மொழி என்ற விடயங்கள் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தின. இக்கட்சிகளின் தலைவர்கள் பலர் தீவிரவாதக் கோரிக்கைகளால் கவரப்பட்டனர். தொடர்ந்தும் மதச்சார்பின்மை நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது இத்தலைவர்களுக்குச் சவால் நிறைந்ததாக இருந்தது. சட்டசபையின் செயற்திட்டங்களில் மதச்சார்பினால் அடையக்கூடிய நன்மைகளைவிட தீமைகளே அதிகம். பண்டாரநாயக்க பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கையின் படியான சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது பற்றித் தெளிவற்ற பதிலைக் கூறித் தப்பிக் கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சி பௌத்த விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை நேரடியாகவே எதிர்த்தது. பௌத்த இயக்கத்தினை அக்கட்சி எதிர்கொள்ளவும் தயாராகியது. இந்தப் பின்னணியில்தான் 1956இல் தேர்தல் நடைபெற்றது.

## எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க

ஐக்கிய தேசியக் கட்சியின் 9 ஆண்டு கால ஆட்சியினால் விரக்தியுற்ற சக்திகள் யாவற்றையும் பண்டாரநாயக்க ஒன்றிணைக்க முயன்றார். ஆளும் உயர் குழாமுக்குள் இருந்தோரில் விரக்தி நிலையில் இருந்தோர் அவருடன் ஒன்று சேர்ந்தனர். பண்டாரநாயக்க கரைநாட்டுப் பகுதியின் செல்வாக்கு மிக்க நிலப்பிரபுத்துவக் குடும்பத்தில் தோன்றியவர். அவர் கண்டியின் நிலப்பிரபுத்துவக் குடும்பத்தில் திருமணம் செய்துகொண்டவர். இதனால் மரபுவழி உயர்குலத்தவர்களின் ஆதரவுத் தளம் அவரிடம் இருந்தது. அதுவரை காலமும் இந்த ஆதரவுத் தளத்தைப் பயன்படுத்தியே அவர் அரசியலுக்குள் தன்னைத் தாபித்துக் கொண்டார். உயர்குழாமில் வெவ்வேறு படித்தரங்களைச் சேர்ந்த தலைவர்களும் இருந்தனர். இத்தகைய மரபுவழி உயர் குழாம் பிரிவினரின் ஆதரவைப் பண்டாரநாயக்க பெற்றுக் கொண்டதோடு, வெவ்வேறு மட்டங்களிலும் அழுத்தக் குழுக்களின் ஆதரவையும் அவர் பெற்றுக்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு அரசியல் யாப்பு வழிகளிலும், யாப்புக்கு அப்பாற்பட்ட வழிகளிலும் முயற்சித்துக் கொண்டிருந்த இடதுசாரிக் கட்சிகள், அக்கட்சியை அகற்றுவதற்கான வாய்ப்பு பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து செயற்படுவதால் கிட்டும் எனக் கருதினர். பலமற்ற தமது கட்சிகளில் தொடர்ந்து இருப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்த செல்வாக்கு மிக்க இடதுசாரி அரசியல்வாதிகள் பலர் அக்கட்சிகளை விட்டு நீங்கிப் பண்டாரநாயக்கவுடன் இணைந்து கொண்டனர். இவ்வாறு சேர்ந்து கொண்டதன் மூலம் பண்டாரநாயக்கவின் கட்சியின் கிளர்ச்சிவாத இயல்பைப் பலப்படுத்தியதோடு பண்டாரநாயக்கவை அவரது விருப்பத்திற்கு மாறாகக் கிளர்ச்சிப் பாதையில் இழுத்துச் சென்றனர்.

## இடதுசாரிகள்

மார்க்சியக் கட்சிகளில் ஒன்றாகிய பிலிப் குணவர்த்தன தலைமையிலான வி.எல்.எஸ்.எஸ்.பி (V.L.S.S.P) சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்தது. பிலிப் குணவர்த்தன இலங்கையில் மார்க்சியத்தின் தந்தை எனக் கருதப்பட்டவர். அவர் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடியாகவும் விளங்கினார். மேற்குறித்த இரு கட்சிகளும் பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து தேர்தலில் போட்டியிட முன்வந்தன. ஏனைய மார்க்சியக் கட்சிகளும் கூட எம்.இ.பி (M.E.P) கூட்டணியுடன் போட்டித் தவிர்ப்பு உடன்பாட்டின் கீழ், தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வாக்குகளைப் பிளவுபடாமல் வைத்திருப்பதற்கு உடன்பட்டன.

## கிராமப்புறத்தின் உயர் குழுக்கள்

மேற்குறித்தவாறான கட்சிகளிடையான உடன்பாட்டை விட இன்னொரு வகையான ஆதரவுத்தளமும் உருவாகியது. உயர்குழாம் வகுப்பின் கீழ்மட்டங்களைச் சேர்ந்தவர்களான கிராமப்புறம் சார்ந்த பிரிவினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பண்டாரநாயக்கவின் கூட்டணிக்கு ஆதரவு

வழங்கினர். வர்த்தகம், அரசுத்துறை வேலைகள் என்பன மூலமும் அரசியல் அதிகாரத்தை உபயோகித்தும் மேல் நோக்கிய சமூக அசைவியக்கத்திற்கு உட்பட்டுக்கொண்டிருந்தவர்களாக இப்பிரிவினர் விளங்கினர். இப்பிரிவினரை அதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் காலத்தில் தமக்கு வாக்குச் சேர்ப்பதற்காக நன்கு பயன்படுத்தி வந்தது. இப்போது இப்பிரிவினருக்கும் நகரம் சார்ந்த இன்னொரு போஷகர் பிரிவு கிடைத்தது. இப்புதிய போஷகர்கள் மேல்நோக்கிய உயர்ச்சியை உடனடியாக அடைவதற்குரிய வாய்ப்புகளை வழங்குவதற்குத் தயாராக இருந்தார்கள். விரைவான உயர்ச்சியை நாடிய கிராமத்து உயர் குழாத்திற்கு அடுத்த நிலையில் இன்னொரு முக்கியமான பிரிவு இருந்தது. இப்பிரிவினர் தேர்தலின்போது மட்டுமல்லாது அதற்குப் பிந்திய காலத்திலும் பிரயோசனம் உடையவர்களாக இருந்தனர். இவர்களுள் பௌத்த குருமாரும் அவர்களின் போதனைகளைப் பெற்று வந்த கிராமத்து சமயிகளும் உள்ளடங்குவர்.

பௌத்தத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தவற்றை அகற்றுவதற்குத் தேர்தல் ஒரு வாய்ப்பை வழங்கவிருப்பதாக அவர்கள் கருதினர். இப்பௌத்த சமயப் பற்றாளர் குழு சிங்கள மொழிக்குச் சார்பாக ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் எதிராகப் பிரசாரம் செய்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்தனர். இவர்கள் மத்தியில் தலைவர்களாக, இவர்களின் கருத்துகளுக்குக் குரல் கொடுத்தவர்களாக, பௌத்த குருமாருடன் சிங்கள மொழி ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், கிராமத்தின் கீழ்நிலை உத்தியோகத்தர்கள் என்போர் விளங்கினர். இவர்கள் யாவரும் தமக்கு ஆங்கில அறிவு இல்லாத காரணத்தால் தமது முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதாகக் கருதியவர்களாவர். அத்தோடு சிறுபான்மை இனத்தவர்கள் கூடிய எண்ணிக்கையில் உத்தியோகப் பதவிகளில் இருப்பதால் தம் முன்னேற்றம் தடைப்படுவதாகவும் இவர்கள் கருதினர். பௌத்தம், சிங்கள மொழி என்ற இரண்டும் பிரசாரத்திற்குப் பொருத்தமான சிறந்த விடயங்களாயின. மேடைப் பேச்சுகள், துண்டுப் பிரசுரங்கள், அரசியல் கேலிச்சித்திரங்கள் என்பன மூலம் இனவாதக் கருத்துகள் அரங்கேற்றப்பட்டன. இப்பின்னணியிலேயே 1956இன் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைந்தது. பாராளுமன்றத்தின் 54 ஆசனங்களில் 8 ஆசனங்கள் மட்டுமே அக்கட்சிக்குக் கிடைத்தது. போதியளவு பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்ட மகாஜன எக்சத் பெரமுன (M.E.P) அரசாங்கத்தை அமைத்தது.



**பிலிப் குணவர்த்தன**

Image Source - en.wikipedia.org

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியையடுத்து அரசியல் அரங்கில் புதிய சக்திகள் பிரவேசித்தன. இம்மாற்றங்களை அரசியல் விமர்சகர்கள் மிகைப்படுத்தி வருணித்தனர். 'சமூகப் புரட்சி', 'சாதாரண மனிதர்களின் யுகம் மலர்ந்தது', 'மக்கள் அரசாங்கம்', 'தேசியவாதத்தின் இரண்டாம் கட்டம்' என்ற தொடர்களால் இம்மாற்றம் விளக்கப்பட்டது. ஆனால் இன்று அக்காலத்தை திரும்பிப் பார்க்கும் வரலாற்றாசிரியர்களால் நீண்ட காலநோக்கில், அம்மாற்றங்களின் உண்மை இயல்பை எடுத்துக்காட்ட முடிகிறது. மைக்கேல் றொபர்ட்ஸ் அத்தகைய நீண்ட கடந்தகாலத்தின் வரலாற்றுப் பார்வையின் ஊடாக புதிதாகத் தோற்றம் பெற்ற சக்திகளை ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார். அவ்விளக்கத்தின் படி, 1956இல் பழைய உயர் குழு (Old Elites) ஆட்களின் இடத்தில் அதே குழுவின் (Old Elites) இன்னொரு பிரிவினரான ஆட்கள் ஆட்சியில் அமர்ந்தனர். 1956இன் பாராளுமன்றமும் மந்திரிசபையும் பழைய உயர்குழு அகற்றப்படவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. பழைய உயர்குழாம் ஒழிக்கப்பட்டது; அகற்றப்பட்டது என்பது உண்மையல்ல. ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த உயர்குழாத்தினர் அகற்றப்பட்டனர். ஆயினும், பழைய உயர்குழாத்தின் ஏனைய பிரிவினர் புதிய அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் அமர்ந்து கொண்டனர். ஆகையால், சிங்களம் கற்ற உயர்குழாத்தினர் ஆங்கிலம் கற்ற உயர்குழாத்தினை அகற்றி அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டனர் என்பதில் உண்மையில்லை. அவ்வாறே மத்திய வகுப்பின் கீழ்மட்டத்தினரும், விவசாயிகள்

**டி.எஸ். சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் பௌத்தத்தைப் புனர்நிர்மாணம் செய்யும் தேவை குறித்து அழுத்தம் கொடுக்கப்பட்டது. இவருக்குப்பின் பிரதமராக இருந்த கொத்தலாவல பௌத்த சமயம் பற்றி அக்கறையற்றவராகவே இருந்தார். 1952ஆம் ஆண்டில் கொத்தலாவல ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த பின் பௌத்தர்களின் அரசுக்கெதிரான எதிர்ப்பு அழுத்தம் பெற்றது.**

வகுப்பினரும் நகரம் சார்ந்த முதலாளி வகுப்பையும், செல்வம் படைத்த குழுக்களையும் அகற்றிவிட்டனர் என்பதும் உண்மையன்று.

### சாதாரண மனிதனின் யுகம்

1956க்கு முந்திய பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியில் இருந்த உயர்குழு அகற்றப்பட்டதனால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக, அவ்வேளை பழைய உயர்குழாம் அழிக்கப்பட்டுவிட்டது என்ற வெளித்தோற்றம் ஏற்பட்டது. கிராமப்புற மக்களும் 'சாதாரண மனிதனின் யுகம்' மலர்ந்துவிட்டது என்ற விளக்கத்தை நம்பினார்கள். தேர்தலுக்குப் பிந்திய பெருமகிழ்ச்சியின் போது இவ்வாறான கருத்துத் தோன்றியது. ஆயினும், விரைவிலேயே பழைய உயர்குழாமின் ஒரு பிரிவிடமே ஆட்சி அதிகாரம் உள்ளது என்பது தெளிவாயிற்று. ஆட்சியில் அமர்ந்துகொண்ட இப்பழைய உயர்குழு, உபஉயர்குழு (SubElite) ஒன்றின் மீது பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது. வரலாற்றில் முதற்தடவையாக கிராமங்களினதும் நகரப்பகுதிகளினதும் உப உயர்குழுக்கள் அரசியல் அரங்கில் வெளிப்பட்டன. புதிய அரசாங்கம், கிராம, நகர்ப்புற உப உயர்குழுக்களின் உணர்வு நிலையில் (Conciousness) தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாது, அப்பிரிவினரைத் திருப்திப்படுத்தும் வகையில் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பிராந்தியம், உள்ளூர் என்ற இருமட்டங்களிலும் பல்வேறு குறுகிய நலன்களுடைய குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுத்தலைவர்களோடு ஆளும் உயர்குழு தொடர்புகளை வலுப்படுத்தியது.

இதன் மூலம் உபஉயர்குழுக்கள் அரசியல் அரங்கில் வெளிப்பட்டன. அவற்றின் தலைவர்கள் பிரபல்யம் பெற்றனர். ஆளும் உயர்குழு, பிராந்திய உபஉயர்குழு (Regional Subelites) என்ற இரண்டு பிரிவினரும் இணைந்து கொண்ட அரசியல் கூட்டணி (Political Coalition) உருவானது. இக்கூட்டணியின் இருத்தரப்புகளில் ஒன்றான ஆளும் உயர்குழு தன் நலன்களுக்கு ஏற்றதாக கீழ்ப்பட்ட உப-உயர்குழுக்களைக் கையாள்வதாக எண்ணிச் செயற்பட்டது. கீழ்ப்பட்ட உயர்குழுக்களும் தம் நலன்களை அடைவதற்காக ஆளும் உயர்குழுவை தாம் ஆட்டிவைக்கிறோம் என்ற உணர்வுடன் செயற்பட்டன.

1956இல் அரசியல் அதிகார மாற்றம் அமைதி வழியில் வாக்குரிமையைப் பிரயோகிப்பதன் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இதனால், இத்தேர்தல் அரசியல் யாப்புவாதம் (Constitutionalism) ஒரு கொள்கையாக இலங்கையில் நிலைபெற உதவியது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது நலன்களையும் சலுகைகளையும் பேணுவதற்கு உகந்தது எனக் கருதிய அரசியல் யாப்புவாதம், இலங்கையின் அரசியல் முறைமைக்குள் இரு கட்சி முறையிலான போட்டி அரசியல் வளர இடமளித்தது. குறைந்தளவு பாராளுமன்ற ஆசனங்களையே ஐக்கிய தேசியக் கட்சி பெற்றதாயினும் மொத்த வாக்காளர்களில் 28 வீதத்தினர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்திருந்தனர். அக்கட்சி விரைவில் புதிய அரசியல் சூழ்நிலைக்குத் தகவமைத்துக் கொண்டது.


பண்டாரநாயக்கவின் அரசியல் பங்களிப்புகளில் இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாத்தமை முக்கியமானது என்று சில அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். பண்டாரநாயக்கவின் பிற பங்களிப்புகள் விவாதத்திற்குரியனவாயினும், இலங்கையை ஜனநாயகப் பாதையில் எடுத்துச் செல்ல அவர் உதவினார் என்பதற்காக அவரைப் பாராட்ட வேண்டும் என்பதும் இவ்வரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

'Sri Lanka after Independence: Nationalism, Communalism and Nation Building' என்னும் தலைப்பில் கலாநிதி சின்னப்பா அரசரத்தினம் அவர்களின் நூலொன்று 1986 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாகப் பிரசுரமாயிற்று. அந்நூலின் 18-26 வரையான பக்கங்களில் 'The Electoral Revolution of 1956' என்னும் உபதலைப்பில் அமைந்துள்ள பகுதியைத் தழுவி இத்தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

# நவீன இலங்கை வரலாற்றின் போக்கினை நிர்ணயித்த 1920கள்

கார்த்திகேசு இந்திரபாலா



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

ம காத்மா காந்தி இலங்கைக்கு 1927 நவம்பர் 12 இல் வந்தார். மறுநாள், நவம்பர் 13 இல், லண்டனில் இருந்து டொனமூர் ஆணைக்குழுவினர் வந்திறங்கினர். இந்த இரண்டு நிகழ்வுகளும் இலங்கையின் எதிர்கால அரசியல் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணக்கூடிய வலுவைப் பெற்றிருந்தன. ஆனால், ஒன்று, குறுகிய கால விளைவுகளை மட்டும் ஒரு குறுகிய பிரதேசத்தில் உண்டுபண்ணி வலுவிழந்து மறக்கப்பட்டது. மற்றது, அரசியல் வரலாற்றின் போக்கினைத் திசை திருப்பியது.

மறக்கப்பட்ட நிகழ்வு மகாத்மாவின் வருகை. மாபெரும் மக்கள் தொகையைக் கொண்ட இந்தியத் துணைக்கண்டத்தில் வலிய பிரித்தானியப் பேரரசுக்கு எதிராகப் போர் தொடுத்து வெற்றிப்பாதையில் சென்றுகொண்டிருந்த காந்தி சிறிய இலங்கைத் தீவில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டார்.

காந்தி இலங்கைக்கு வந்தது பிரித்தானியப் பேரரசுக்கு எதிராகத் தேசிய உணர்ச்சியைத் தூண்டுவதற்கல்ல. அவர் தனது கதர் நிதிக்குப் பணம் சேர்க்க வந்தார். எனினும் அவருடைய தேசியப் போராட்டமும் அரசியல் சிந்தனையும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் நன்கறிந்த விஷயங்களாக இருந்தன. ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பைச் சேர்ந்த இலங்கை அரசியல் தலைவர்கள் பேரரசுக்கு விசுவாசமாக இருந்தவர்கள்; காந்தியின் வழியைப் பின்பற்ற அவர்கள் விரும்பவில்லை. எனினும், இவர்களுள் சிலர் காந்திக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளில் பங்குகொண்டனர். கொழும்புத் தமிழ் யூனியன் (Tamil Union) கொடுத்த வரவேற்புக்குப் பொன்னம்பலம் இராமநாதன் தலைமை தாங்கினார். பௌத்தர்கள் கொடுத்த வரவேற்பில் டொன் பாரன் ஜயதிலக பங்குபற்றினார்.

காந்தியின் சிந்தனையால் கவரப்பட்டவர்கள் இளைஞர்களே. தெற்கில் ஏ.ஈ. குணஸிங்ஹ, விக்டர் கொறயா போன்றோரும் வடக்கில் யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸும் காந்தி வகுத்த 'பூர்ண ஸ்வராஜ்' என்ற பேரொலியை எழுப்பினர். மத்திய வகுப்புத் தலைவர்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை.

## 1920களின் தொடக்க ஆண்டுகள்

முதலாம் உலகப் போர் முடிவடைந்ததும் ஒரு புதிய காலகட்டம் ஐரோப்பாவில் மட்டுமல்ல ஆசியாவிலும் தொடங்கியது எனலாம். போர் 1918 நவம்பரில் முற்றுப் பெற்றது; போரின் விளைவாக ஏற்பட்ட உடன்படிக்கைகள் 1919 இல் கைச்சாத்திடப்பட்டன.

ஐரோப்பாவிலும் மேற்கு ஆசியாவிலும் இருந்த மூன்று முக்கியப் பேரரசுகள் போரின் விளைவாக வீழ்ச்சியுற்றன. இவ்வல்லரசுகளின் கீழ் அடக்கப்பட்டிருந்த இனக்குழுக்களும் பிரதேசக்குழுக்களும் விடுதலை பெற்றதும், ஒரு புதிய அரசியல் சூழ்நிலை உருவாகியது. இதில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாக அமைவது தேசியவாத எழுச்சியும் புதிய தேசங்களின் தோற்றமும் ஆகும்.

இவற்றை விரித்துக் கூறுவது எனது நோக்கம் அல்ல. எனினும், இவை தென் ஆசியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்திய காரணத்தால், சிலவற்றை இலங்கை நிகழ்வுகளுடன் ஒப்பிட நேரிடும். சிறப்பாக, ஒரு முக்கிய அரசியல் கோட்பாடு செல்வாக்குப் பெறுவதை முதல் உலகப் போர் முடிவில் இருந்து இன்று வரை காணலாம்.

போர் முடியும் கட்டத்தை அடைந்த நிலையில் போரின் பின் அமைய வேண்டிய அரசியல் ஒழுங்குகளுக்கு அடித்தளமாக இடம்பெறும் ஒரு கோட்பாட்டை அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்ஸன் (Woodrow Wilson) அழுத்தினார். அது தான் தன்னாட்சி உரிமை (சுய நிர்ணயம்/ Selfdetermination) என்ற கோட்பாடு. இதன் முக்கிய விளைவாக ஐரோப்பாவில் பல புதிய சுதந்திர அரசுகள் தோன்றின. தேசியவாத உணர்ச்சி வலுப்பெற்றது.

ஐரோப்பாவுக்கு அப்பால் வெள்ளையர் அல்லாத மக்கள் இடங்களிலும் தேசிய உணர்ச்சி தூண்டப்பட்டிருந்தாலும், போரில் வெற்றிபெற்ற வல்லரசுகள் அவ்விடங்களில் தன்னாட்சி உரிமையை வழங்க விரும்பவில்லை. மேற்கு ஆசியாவில் துருக்கியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அரபு நிலங்களைத் தங்கள் பாதுகாப்புக்கு உட்பட்ட அரசுகளாக (Mandated Territories) பிரித்துப் பிரித்தானியாவும் பிரான்ஸும் ஆட்சி செலுத்தின. இதன்படி, ஈராக் (Iraq) மற்றும் பாலஸ்தீனம் (Palestine) என்ற நாடுகள் பிரித்தானியாவின் கீழும், ஸிரியா (Syria) மற்றும் லெபனான் (Lebanon) என்ற நாடுகள் பிரெஞ்சு அரசின் கீழும் வந்தன.

துருக்கியர் பேரரசின் மையமாக இருந்த துருக்கி நாடு (Turkey/ T¨ürkiye) போரின் பின் தனிநாடாக மாறியதும் அங்கு புரட்சிகரமான தேசியவாத எழுச்சி ஏற்பட்டது. இதை வெற்றிகரமாக முன் நின்று நடத்திய தலைவர் கமல் அட்டாதுர்க் (Kemal Atatürk) என இன்று போற்றப்படும் முஸ்தாபா கெமால் ஆவார். மத்தியகாலப் பண்பாட்டில் மூழ்கிக்கிடந்த துருக்கியர்

சமூகமும் நாடும், நவீனமயப்பட்ட ஐரோப்பியப் பண்புகளைக்கொண்ட ஒரு நாடாக மாறியது இவர் தலைமையிலாகும்.

துருக்கியில் 1920களில் தொடங்கிய இப்புரட்சியை ஆசிய சமூகங்கள் ஆர்வமுடன் கவனித்தன என்பதில் ஐயமில்லை. ஐரோப்பியர் பேரரசுவாதம் கொடுத்த சவாலை (Challenge) எப்படி எதிர்நோக்கி ஏற்று நடந்துகொள்வது (Response) என்பது பற்றி இச்சமூகங்களுக்குத் தடுமாற்றம் இருந்தது. இச்சவாலைச் சமாளிப்பதற்குத் துருக்கியை ஓர் ஐரோப்பிய நாடாக மாற்றி ஐரோப்பியருடன் சமத்துவம் கோருவதே சரியான வழி என முஸ்தாபா கெமால் செயற்பட்டார் (ஜப்பானும் முன்னர் இவ்வாறே செயற்பட்டு, ஐரோப்பியப் பேரரசுவாதத்தைப் பின்பற்றிச் சமத்துவத்தைப் பெற்றது).

இலங்கையிலும் 1920களில் ஐரோப்பியப் பேரரசுவாதம் ஒரு திருப்புமுனையை அடைந்தது. ஒருபுறம், பிரித்தானிய அரசாங்கம் அரசியல் சீர்திருத்தங்களைச் செய்யத் தயாராகக் காணப்பட்டது. மறுபுறம், ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்புத் தலைவர்கள் கூடுதலான அரசியல் உரிமைகளைக் கோரத் தொடங்கினர்.

இலங்கையருடைய அரசியல் தலைவர்களாக இருந்த மத்திய வகுப்பினருக்குப் பிரித்தானியப் பேரரசுவாதம் ஒரு சவாலாகக் காணப்பட்டது என்று கூறுவது தவறாகும். இவர்கள் பிரித்தானியர் ஆட்சியில் திருப்தி கண்டவர்கள்; அந்நியர் ஆட்சியால் சமூகத்தில் மேலெழுந்தவர்கள். சில அரசியல் உரிமைகளைப் பெற விரும்பினாலும், பிரித்தானியர் ஆட்சி நீங்கவேண்டும் என இவர்கள் விரும்பவில்லை. பிரித்தானியப் பேரரசு நிலைக்கும் என நம்பினார்கள்; அந்தப் பேரரசில் இணைந்த ஒரு பாகமாக (Integral Part) இலங்கை அமைய வேண்டும் என்பதே இவர்கள் குறிக்கோள்.

இப்படியான ஓர் அமைதியான சூழலில், பிரித்தானிய அரசாங்கம் 1920களில் எடுத்த நடவடிக்கைகள் மத்திய வகுப்பினருக்கு ஏக்கத்தையும் குழப்பத்தையும் விளைவித்தன. கேட்டதை மட்டுமன்றிக் கேட்காததையும் ஆட்சியாளர் கொடுக்கத் தயாராக இருந்தனர். வருவதற்கு இருந்த மாற்றங்களை ஒரு சாரார் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்தனர். இன்னொரு சாரார் அச்சமடைந்து எதிர்க்கத் தொடங்கினர். இலங்கையின் எதிர்கால அரசியல் பின்னர் நாம் காணும் பாதையில் செல்லத் தொடங்கியது 1920களில் ஆகும். யாழ்ப்பாணத்தில் 1920கள் வரை அரசியல் செயல்பாடுகள் என்று சொல்வதற்கு எதுவும் இல்லை எனலாம். அரசியல்வாதிகள் இல்லை, அரசியல் கட்சிகள் இல்லை, தேர்தல்கள் இல்லை. எனினும் தெற்கில் இடம்பெற்ற அரசியல் சீர்திருத்தம் தொடர்பான உரையாடல்கள் வடக்கிலும் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும்.

இப்பின்புலத்தில், மத்திய வகுப்பைச் சேர்ந்த சில யாழ்ப்பாண ஆர்வலர்கள் 1906 ஜனவரி 6 இல் மத்திய கல்லூரியில் கூடி 'Jaffna Association' (யாழ்ப்பாணக் கழகம்) என்ற ஓர் அரசியல் அமைப்பை நிறுவினர். அன்று 54 பேர் அதன் உறுப்பினராகச் சேர்ந்தனர். கழகத்தின் முதலாவது தலைவராக ஜேம்ஸ் முத்தையா ஹென்ஸ்மன் தெரிவு செய்யப்பட்டார். இவர் யாழ்ப்பாணத்தில் பாடசாலைக் கல்வியை முடித்தபின் சென்னைக்குச் சென்று, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகி, இந்தியக் கல்விச் சேவையில் சேர்ந்து, கும்பகோணம் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்று யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிவந்திருந்தார்.

இக்கழகம் அமைக்கப்பட்ட பின் யாழ்ப்பாணத்து மத்திய வகுப்பினர் தேசிய அரசியலில் ஈடுபடத் தொடங்கினர். இவர்களுடைய செயல்பாடுகள் பற்றி விரிவாக அறிவதற்கு கழக அறிக்கைகளும் ஆவணங்களும் கிடைப்பது அரிது. இக்கழகத்தைத் தொடக்குவதற்கு யார் யார் ஆர்வம் காட்டினர்? சென்னையில் மேற்படிப்பை முடித்துத் தமிழ்நாட்டில் தொழில்புரிந்து ஓய்வு பெற்றபின் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிவந்த ஹென்ஸ்மன் ஏன் கழகத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்? அவர் இந்தியாவில் இருந்து தேசியவாதக் கருத்துகளைக் கொண்டுவந்து மத்திய வகுப்பினரை ஊக்குவித்தாரா? இப்படியான பல வினாக்களுக்கு வருங்கால ஆய்வுகள் விடையளிக்கும் என எதிர்பார்க்கலாம்.

தெற்கில் இயங்கிக்கொண்டிருந்த சிலாபக் கழகம் (Chilaw Association) அரசியல் சீர்திருத்தங்களைத் துரிதப்படுத்த விரும்பி 1909 இல் லண்டனில் காலனி ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சருக்கு ஒரு விண்ணப்பப் பத்திரத்தை (Memorial) இலங்கை ஆளுநர் ஊடாக அனுப்பிவைத்தது. இதை ஒத்த விண்ணப்பங்கள் 'Ceylon National Association', 'Jaffna Association' ஆகிய கழகங்களாலும் அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டன என அறியமுடிகின்றது. முக்கிய அம்சங்களைப் பொறுத்து இந்த விண்ணப்பங்களில் வேறுபாடு இருக்கவில்லை.

இவற்றில் ஓர் அம்சம் கவனத்துக்குரியது. அதாவது, நாட்டின் சட்டவாக்க சபையின் (Legislative Council) அங்கத்தவர்கள் ஆளுநரால் தெரிவு செய்யப்படாது தேர்தல் மூலம் (Election of Members) தெரிவு செய்யப்பட

வேண்டும் என்பதாகும். சிலாபக் கழகம் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தது. யாழ்ப்பாணக் கழகம் இதனை ஆதரித்தது. தேசிய அரசியல் நீரோட்டத்தில் முதல் தடவையாகச் சேர்ந்துகொண்ட யாழ்ப்பாண அரசியல் தலைவர்கள் தெற்கில் இருந்த தலைவர்கள் கோரிய மிக முக்கியமான அம்சமாகிய தேர்தல் முறைக்குச் சம்மதம் தெரிவித்தமைதான் கவனிக்கப்பட வேண்டியது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் மக்களாட்சிக் கருத்துகள் பரவத் தொடங்கிய காலமாகும். உலகின் பெரும்பாகம் பேரரசர்களுடைய ஆட்சிக்குள் அகப்பட்டிருந்தது. இதற்கு வெளியே பல நாடுகள் மன்னர் ஆட்சியின் கீழ் இருந்தன. ஐரோப்பாவின் சில நாடுகளிலும் அமெரிக்காவிலும் மக்கள் ஆட்சி முறை காணப்பட்டது.

இப்பின்புலத்தில் தேசியவாதம், மக்களாட்சி, தாராண்மைவாதம் ஆகியவை தொடர்பான கருத்துகள் உலகில் பரவத் தொடங்கின. ஆங்கிலக் கல்விகற்ற இலங்கையர் மத்தியிலும் இக்கருத்துகள் செல்வாக்குப் பெற்றன. இந்தியாவில் வளர்ந்துகொண்டிருந்த தேசிய இயக்கமும் இலங்கையில் ஓரளவு தாக்கத்தை உண்டுபண்ணியது. இச்சூழலில், ஆங்கிலம் கற்ற யாழ்ப்பாண மத்திய வகுப்பினர் தேசிய அரசியலில் பங்குகொள்ளத் தொடங்கினர். மக்களாட்சிக்கு இன்றியமையாத அம்சமாக விளங்கும் இடம்சார் பிரதிநிதித் தேர்தல் முறையை (Territorial Representation) இவர்கள் ஆதரித்தனர். இதன் மறுபக்கம், இனம்சார் பிரதிநிதித்துவத்தை (Communal Representation) கைவிடுவதாகும்.

### தேர்தலும் பெரும்பான்மை - சிறுபான்மைப் பிரிவினையும்

மத்திய வகுப்பினர் வேண்டிநின்ற இடம்சார் தேர்தல்முறைக்கு ஆளுநரும் லண்டனில் காலனி ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தனர். நாட்டின் இனக்குழுக்களைப் பிரித்து வைத்திருப்பது ஆட்சியாளருடைய 'பிரித்து ஆளும்' (Divide and Rule) கொள்கைக்குத் தேவைப்பட்டது என்பதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். பிரித்தானியர் சிங்கள இனக்குழுவையே கண்டியர் என்றும் கீழ்நாட்டுச் சிங்களவர் (Lowcountry Sinhalese) என்றும் பிரித்து வைப்பதை விரும்பினர்.

இப்பின்புலத்தில் 1921 இல் சட்டவாக்க சபையின் அமைப்பை மாற்றும் சீர்திருத்தங்கள் அறிமுகமாகின. இவற்றுடன் இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. மக்களாட்சிக்கு அடித்தளமாக அமையும் தேர்தல் முறை தொடக்கப்பட்டது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அரசியல்வாதிகள், வாக்காளர் மத்தியில் காணப்படும் வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் அழுத்திப் பயன்படுத்துவர். அப்படி இல்லாதவற்றை உண்டுபண்ணுவர். இதனை இக்காலகட்டத்தில் இருந்து இலங்கையில் காணலாம்.

இன்னொரு திருப்பமும் முக்கியமானது. தெற்கின் அரசியல் தலைவர்களுடைய வேண்டுகோள்களுக்குச் சம்மதம் தெரிவித்த யாழ்ப்பாணத்து அரசியல் தலைவர்கள் 1920களில் இருந்து சம்மதியாமை அரசியலில் (Politics of Dissent) ஈடுபடத் தொடங்கினர். இது பின்னர் மாறவே இல்லை.

ஆளுநர் மனிங் (Manning) 1921 இல் அறிமுகப்படுத்திய சீர்திருத்தப்பட்ட சட்டவாக்க சபையில் 14 அரச ஊழியர்களும் (Official Members), 23 அரச ஊழியர் அல்லாதோரும் (Unofficial Members) உறுப்பினராக இருந்தனர். அரச ஊழியர் அல்லாதோருள் 11 உறுப்பினர் இடம்சார் (அதாவது, பிரதேச அடிப்படையிலான) தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் ஒருவர் வட மாகாணத்தில் இருந்தும் இன்னொருவர் கீழ் மாகாணத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய ஏழு மாகாணங்களும் ஒன்பது உறுப்பினரைத் தெரிவு செய்தன.

வட மாகாணத் தேர்தலில் வெற்றிபெற்றவர் வைத்திலிங்கம் துரைசுவாமி (1875 - 1966) ஆவார். இவர் அடுத்த இரண்டு தசாப்தங்களுக்கு யாழ்ப்பாணத்து மத்திய வகுப்பினருடைய அரசியல் தலைவர்களுள் முக்கியமான ஒருவராகக் காணப்படுவார். கீழ் மாகாணத்தின் உறுப்பினராக E.R. தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டார்.

இவர்களுடன், பிற சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதிகளாக முஸ்லிம் ஒருவர், கண்டியர் இருவர், இந்தியத் தமிழர் ஒருவர் ஆகியோர் ஆளுநரால் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அரச ஊழியர் அல்லாத 23 உறுப்பினர்களுள், 12 பேர் சிங்களவர் (கண்டியர் உட்பட), 3 பேர் தமிழர் (இந்தியர் உட்பட).

இந்த நிலை 1924 இல் மேலும் மாற்றமடைந்தது. சட்டவாக்க சபை மேலும் சீர்திருத்தப்பட்டு விரிவாக்கப்பட்டது. இதில் 49 உறுப்பினர் இருந்தனர்; 12 அரச ஊழியர்கள், 37 அரச ஊழியர் அல்லாதோர். இந்த அரச ஊழியர் அல்லாதோருள் மூவர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர் (ஒரு சிங்களவர், ஒரு இலங்கைத் தமிழர், ஒரு பறங்கியர்), 34 பேர் தேர்தல் மூலம் உறுப்பினராகினர் (23 பேர் இடம்சார் தொகுதிகளின்

பிரதிநிதிகள் - 16 சிங்களவர், 7 இலங்கைத் தமிழர்; 11 பேர் இனக்குழுத் தேர்தல் மூலம் உறுப்பினராகினர் - 3 ஐரோப்பியர், 2 பறங்கியர், 3 முஸ்லிம்கள், 2 இந்தியர், மேல்மாகாணத்து இலங்கைத் தமிழர் ஒருவர்).

இச்சீர்திருத்தங்கள் இனக்குழு வேறுபாடுகளை அழுத்தியவையாக, மேலும் இவை நிலைப்பதை ஊக்குவிப்பவையாக அமைந்தமை கவனிக்கத்தக்கது. இதற்கு விதிவிலக்காக, கண்டியர் - கீழ்நாட்டுச் சிங்களவர் என்ற வேறுபாடு அழுத்தப்படவில்லை. இது விரைவில் அழிந்துபோவதைப் பின்னர் காணலாம். தம்மை ஒரு பெரும்பான்மைச் சமூகமாகக் கருதிய இலங்கைத் தமிழர் இக்காலகட்டத்தில் தாம் ஒரு சிறுபான்மைச் சமூகம் என்பதை உணரத் தொடங்குவதையும் காணலாம்.

### யாழ்ப்பாணத்து அரசியல் தலைவர்கள்

புதிய சட்டவாக்க சபை 1924 இல் அமைக்கப்பட்ட போது வட மாகாணத்தில் இருந்து பின்வருமாறு ஐவர் தேர்தல் மூலம் உறுப்பினராகினர்: வட மாகாணம் வடக்கு - பொன்னம்பலம் இராமநாதன், வ.மா. தெற்கு - ஆறுமுகம் கனகரத்தினம், வ.மா. மேற்கு - வைத்திலிங்கம் துரைசுவாமி, வ.மா. கிழக்கு - தம்பையா முதலியார் சபாரத்தினம், வ.மா. நடுத்தொகுதி (Central) - எஸ். ராஜரத்தினம்.

கீழ் மாகாணத்தில் இருந்து இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: திருகோணமலை - எம்.எம். சுப்பிரமணியம், மட்டக்களப்பு - ஈ.ஆர். தம்பிமுத்து. இனக்குழுத் தேர்தல் மூலம் மேல் மாகாணத்து இலங்கைத் தமிழர் பிரதிநிதியாக அருணாசலம் மகாதேவா (பொன்னம்பலம் அருணாசலத்தின் மகன்) தெரிவானார். இந்தியத் தமிழர் பிரதிநிதிகளாக கே. நடேச ஐயரும் ஐ.எக்ஸ். பெரைராவும் தெரிவானார்கள்.

இடம்சார் தேர்தல் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்களுக்குச் சாதகமாக அமையும் என்பது 1920களில் வெளிப்பட்டது. இது யாழ்ப்பாணத்து மத்திய வகுப்பினருடைய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவுகளைத் தணிப்பதற்கு யாழ்ப்பாணத்துத் தலைவர்கள் 1920களில் இருந்து பல்வேறு முயற்சிகளை எடுப்பதில் கவனம் செலுத்தினர்.

### இலங்கையர் தேசியவாதம்

இவ்வாறு 1920களில் உருவாகிய புதிய அரசியல் சூழ்நிலையில் பொன்னம்பலம் அருணாசலம் விதைத்த இலங்கையர் தேசியவாத விதை துளிர்த்தெழ வாய்ப்பே இருக்கவில்லை. யாழ்ப்பாணத்து அரசியல் தலைவர்கள் அருணாசலத்துக்கு முழுமனதாக ஆதரவு வழங்கத் தயங்கினர். கொழும்பில் இருந்த சிங்களத் தலைவர்கள் பலர் அவருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டவில்லை. இந்த நிலையில் அருணாசலம் தேசிய காங்கிரஸை விட்டுவிலகினார். இவற்றைப் பின்னர் பார்ப்போம்.

### பௌத்த இயக்கமும் மது ஒழிப்பு இயக்கமும்

அநகாரிக தர்மபால தொடக்கிய பௌத்த இயக்கம் 20 ஆம் நூற்றாண்டில் தொடர்ந்து வலிகுன்றாது வளர்ந்துகொண்டு சென்றது. பௌத்த மதத்தின் மறைந்துபோன (அவர் கற்பனை செய்த) பொற்காலத்தை மீண்டும் மலரச்செய்ய உழைப்பதாகக் கூறிக்கொண்டு தர்மபால ஒரு புதிய பௌத்த அமைப்பை உருவாக்கினார். இதற்கு மானிடவியல் அறிஞர் கணநாத் ஒபேஸேகர 'Protestant Buddhism' என்ற பெயரைக் கொடுத்தார். இன்னொரு மானிடவியல் அறிஞர், எச்.எல். ஸெனெவிரத்ன இதை 'NeoBuddhism' என்பார்.

இப்புதிய அமைப்பில் பௌத்த பிக்குமார் முன் ஒருபோதும் இல்லாத ஒரு வகிபங்கைச் சமூகத்தில் பெற்றனர். தர்மபாலவின் செயல்பாடுகள் 1920கள் வரை நீடித்தபின் அவர் வழிவந்த ('Dharmapalite Missionaries' என ஸெனெவிரத்ன வர்ணிக்கும்) துறவிகள் சிங்கள - பௌத்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர். இவர்களுள் பலர், கலுகொந்தயாவே பஞ்ஞாஸேகர தேரர் தொடக்கம் வல்பொல ராஹுல தேரர் வரை, அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி நவீன இலங்கையின் வரலாற்றுப் போக்கினைத் திசைதிருப்ப உதவினர். இதனைப் பின்னர் பார்க்கலாம்.

இதேவேளை, ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினர் வட்டத்துக்கு அப்பால் இருந்த ஊர்ப்புற மக்களை விழிப்படையச் செய்து அரசியல்சார் எதிர்ப்புணர்சிகளைத் தூண்டி, சிங்கள - பௌத்த சமூகத்தை ஒன்றிணைக்க உதவிய ஓர் இயக்கமாக மது ஒழிப்பு இயக்கம் (Temperance Movement) பரவியது. அத்துடன், கொழும்புக்கு வெளியே ஊர்ப்புற அதிகாரம் பெற்றிருந்த கொயிகம (/ வேளாளர்) சமூகத்தைச் சேர்ந்த பௌத்த மத்திய வகுப்புத் தலைவர்கள், தங்கள் தேசிய இயக்கத்தை மது ஒழிப்பு இயக்கத்துடன் சங்கமிக்க வைத்து உயர்வு பெறவும் உதவினர். ஸேனாநாயக்க குடும்பம் (F.R. ஸேனாநாயக்க, D.S. ஸேனாநாயக்க ஆகியோர்) இவ்வாறே எழுச்சி பெற்றது. இவை தெற்கில் நடந்துகொண்டிருந்த போது, வடக்கில் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இலங்கையின் அரசியல் போக்கை வேறொரு திசையில் திருப்ப முயன்றனர். இவை 1920களில் நடைபெற்றுக்கொண்டிருக்க, டொனமூர் ஆணையாளர் இலங்கைக்கு வந்தனர். இந்த வரலாற்று வளர்ச்சிகளை அடுத்துப் பார்க்கலாம்.

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது. அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

*ஆங்கில மூலம்: அருட்தந்தை நோயல் டயஸ்*

# இலங்கையில் சித்திரவதைகளைத் தடுப்பதற்கான சர்வதேச விதிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

**எஸ்.கே. விக்னேஸ்வரன்**



எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

இலங்கையில், சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான ஒரு தனிநபருக்குரிய உரிமையைப் பாதுகாப்பதில் மிகவும் கடினமான பிரச்சினையாக இருப்பது, சர்வதேசரீதியான கடப்பாடுகளை அங்கு அமுல்படுத்துவதில் உள்ள சிக்கலாகும். இலங்கை முழுமையான இணக்கத்துடன் செய்துகொண்டுள்ள இரண்டு முக்கியமான ஒப்பந்தங்கள் நடைமுறையில் இருந்தன. இதில் முதலாவது, 'சித்திரவதைகள், பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது மோசமான தாக்குதல்கள் அல்லது தண்டனைகள்' என்பவற்றுக்கு எதிரான ஐ.நா. மாநாட்டின் (இனி இது இக்கட்டுரையில் CAT என அழைக்கப்படுகிறது) தீர்மானம் ஆகும். இத்தீர்மானத்துடன் இலங்கை 1994 இல் ஒப்புக்கொண்டு ஒரு சார்புநாடாக இணைந்திருந்தது. மற்றொன்று, 'சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்' தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 7 (இனி ICCPR என குறிப்பிடப்படும்). இந்த 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க 'சித்திரவதை மற்றும் பிற தண்டனைகளுக்கு' எதிரான ஐ.நா. மாநாட்டு (இனி, இது இக்கட்டுரையில் சித்திரவதை எதிர்ப்புச் சட்டம் என அழைக்கப்படுகிறது) ஒப்பந்தத்தின் கீழ், அதன் சர்வதேசக் கடமைகளுக்கு அமைய, இலங்கை உள்நாட்டில் அதற்கான அமுலாக்கத்தை வழங்கியது. 'சட்டத்தின் ஆட்சி'யின் கீழ் இருக்க வேண்டிய ஒரு நாட்டில், சட்ட அமுலாக்கத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் (காவல்துறை, சிறை அதிகாரிகள், ஆயுதப்படை உறுப்பினர்கள் ஆகியோர்) சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, சித்திரவதைகள் நடக்கும்போது, சட்டத்தின் காவலாளிகள் என்று கூறப்படுபவர்களே பெரும்பாலும் அவற்றுக்கான குற்றவாளிகளாக இருக்கின்றனர். எனவே இங்கு எழுகின்ற கேள்வி என்னவென்றால், இந்தக் காவலர்களை யார் பாதுகாக்கிறார்கள் (*Who will guard the guards themselves?*) என்பதுதான்.

CATயின்படி, ஓர் ஆளும் தரப்பு என்ற வகையில், இந்த நவம்பரில்[2] செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் நிறுவப்பட்ட குழுவின் கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். இந்தக் கட்டுரை, இலங்கை அரசாங்கம் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய சில முக்கியமான பிரச்சினைகளைக் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அமைகிறது. 1988 முதல் 1992 வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலையுடன் ஒப்பிடுகையில், குறிப்பாகச் சித்திரவதையை மேற்கொள்வதில், இலங்கை தனது மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் ஓரளவு சிறப்பான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது என்பது உண்மையே. இருப்பினும், இலங்கை அரசாங்கம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது.[3]

இலங்கை, ICCPRஇன் கீழ் (சட்டப் பிரிவு 7 இன் கீழ்), அதை ஏற்றுக்கொண்ட தரப்புகளில் ஒன்றாக இருக்கிறது என்பதால், சித்திரவதை, கொடூரமானதும் மனிதாபிமானமற்றதுமான நடத்தைகள் என்பவற்றிலிருந்து தனது குடிமக்கள் பாதுகாக்கப்படுவதற்கான உரிமையை அவர்களுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டிய சர்வதேசக் கடப்பாட்டைக் கொண்டதாக இருக்கிறது. இதைவிட, சித்திரவதையைச் சட்டவிரோதமாக்கும் பிற சர்வதேச (பிராந்திய ரீதியான, உலகளாவிய சட்ட) ஏற்பாடுகளும் இருக்கின்றன.[4]

சித்திரவதையைத் தடுப்பதற்காக உள்ள நடவடிக்கைகளுக்கான இந்தச் சட்டங்கள் நடைமுறையில் இருந்தபோதிலும், நாட்டில் எழுந்த சமூகரீதியான கலவரங்கள் காரணமாக ஏற்பட்ட அவசரகால நிலைகளை எதிர்கொள்வதற்காக இலங்கை சட்டமியற்றும் நடவடிக்கைகள் இரண்டை அறிமுகப்படுத்தியது. அவை: ஒன்று, பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான அவசரகால விதிமுறைகள்[5]; மற்றையது, 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் (இது இனிமேல் பயங்கரவாதத் தடைச் சட்டம் என குறிப்பிடப்படுகிறது). 1982 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தின் 'தற்காலிக' என்ற கூறு ரத்துச் செய்யப்பட்டு, அது ஒரு நிரந்தரச் சட்டமாகச் சட்டப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டது[6]. அதன் பிறகு, சட்ட அமுலாக்க அதிகாரியால் தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான ஒரு வழிமுறையாகச் சித்திரவதையைப் பயன்படுத்துவது[7] பரவலாக நடைமுறைக்கு வந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட இரண்டு விண்ணப்பதாரர்கள், ஐ.நா. மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் முன்நிலையில், சட்ட அமுலாக்க அதிகாரிகளின் (தமக்கெதிரான மனித உரிமை) அத்துமீறல்களை வெற்றிகரமாக எதிர்த்து நின்றனர். அவர்கள்: ஜெகதீஷ்வரன் சர்மா எதிர் இலங்கை[8], சிங்கராசா எதிர் இலங்கை[9] என்ற வழக்குகளின் வழக்காளிகளாவர்.

### 1. சித்திரவதையின் வரைவிலக்கணம்

இந்தத் தலைப்பை சர்வதேசச் சட்டம், இலங்கையின் உள்நாட்டுச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையின் கீழ் நாம் தனித்தனியாகப் பிரித்து நோக்கலாம்:.

### 1 (a) சர்வதேசச் சட்டத்தில் சித்திரவதையின் வரையறை

சர்வதேசச் சட்ட வரலாற்றில், சித்திரவதையின் வரையறை என்ற விஷயத்தில் மிகவும் விரிவான நீதித்துறை விளக்கங்கள் 'ஸ்ட்ராஸ்பேர்க்' நிறுவனத்திடமிருந்து வெளியாகின. அங்கு ECHR இன் பிரிவு 3, அதன் உருவாக்கத்தில் 'கொடூரமான' என்ற வார்த்தையை நீக்கியதைத் தவிர, கிட்டத்தட்ட UDHR, ICCPR ஆகியவற்றினவை போன்ற ஒரே மாதிரியான சொற்களையே கொண்டிருந்தது.

சித்திரவதை என்பது மிக மோசமான அளவில் அமைந்த ஒரு கையாளுகையாகும். இது 'இழிவுபடுத்துதல்' நிலையில் தொடங்கி, பின்னர் 'மனிதாபிமானமற்ற' நிலைக்கு வளர்ந்து, பின்னர் 'கொடூரமான' நிலைக்கு வந்து, இறுதியாக 'சித்திரவதை' என்ற மட்டத்துக்கு வளர்கிறது.

**சித்திரவதை என்பது மிக மோசமான அளவில் அமைந்த ஒரு கையாளுகையாகும். இது 'இழிவுபடுத்துதல்' நிலையில் தொடங்கி, பின்னர் 'மனிதாபிமானமற்ற' நிலைக்கு வளர்ந்து, பின்னர் 'கொடூரமான' நிலைக்கு வந்து, இறுதியாக 'சித்திரவதை' என்ற மட்டத்துக்கு வளர்கிறது.**

'கிரேக்க வழக்கு'[10] ஒன்றில், முதன்முறையாக ஐரோப்பிய மனிதவள ஆணையம் 'ஃபாலங்கா' அல்லது 'பாஸ்டிடோ' எனப்படும் (எந்தவொரு அடையாளங்களும் காயங்களும் இல்லாமல், கடுமையான வலியை ஏற்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் திறமையாக அடிப்பது) செயல் சித்திரவதைக்குச் சமமானது என்று கூறியது.

சித்திரவதையின் வரையறை, அயர்லாந்து எதிர் இங்கிலாந்து (1978) என்ற வழக்கில் மேலும் செம்மைப்படுத்தப்பட்டது. இந்த வழக்கில், இங்கிலாந்தின் ஒரு பகுதியாக இருந்த வடக்கு அயர்லாந்தில் IRA கெரில்லாக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட ஐந்து சித்திரவதை வழிமுறைகளில் ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ பயன்படுத்தி, அவை ECHR இன் பிரிவு 3 இனை மீறியவை என்பது கண்டறியப்பட்டது. அந்த ஐந்து சித்திரவதை நுட்பங்கள் இவைதான்: (1) சுவரில் நின்று கொண்டே (கைதிகள் தங்கள் விரல்களைத் தலைக்கு மேலே சுவருக்கு எதிராக உயர்த்தி, கால்களை விரித்து, கால்களை பின்னால் நகர்த்தி, கால் விரல்களில் நீண்ட நேரம் நிற்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்; இதனால் அவர்கள் உடல் எடையை முக்கியமாக கால் விரல்களில் வைத்து நிற்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்); (2) முகமூடி அணிதல் (விசாரணை தவிர மற்ற நேரங்களில் கருப்புத் துணியால் தலையை மூடுதல்); (3) அவர்களை தொடர்ச்சியான சத்தத்திற்குள் உட்படுத்துதல்; (4) தூக்கமின்மை; (5) உணவு இல்லாமை.

'சித்திரவதை என்பது கொடூரமாகவும், தீவிரமாகவும் வேண்டுமென்றே செய்யப்படுகின்றதுமான ஒரு தண்டனை வடிவமாகும்': ரையர் வழக்கு[11].

சித்திரவதையின் இவற்றை ஒத்த விளக்கங்கள் ICCPR இன் கீழ் மனித உரிமைகள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டன (உதாரணமாக, 'ரோட்ரிக்ஸ் எதிர் உருகுவே' வழக்கு, 1994), இலங்கையிலிருந்து HRC வரை சென்ற சில வழக்குகள் உட்பட.[12]

### 1 (b) இலங்கையில் சித்திரவதையின் வரையறை

சர்வதேசச் சட்டத்தில் சித்திரவதையின் மேற்சொல்லப்பட்ட வரையறையுடன் ஒப்பிடுகையில், சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான உரிமையின் மீதான கடுமையான மீறல்கள் இருப்பதை ஒருவரால் காண முடியும்.

1994 இன் மனித உரிமைகள் ஆணைக்குழு, அந்த நேரத்தில் கிடைத்த வழக்குச் சட்டம் தொடர்பான ஆய்விலிருந்து பெறப்பட்ட சித்திரவதைகளாக பின்வரும் செயல்களைப் பட்டியலிட்டது. இங்கிலாந்து அரசாங்கம் பயன்படுத்திய ஐந்து வகை நடவடிக்கைகள் தவிர, சட்ட அமுலாக்க அதிகாரிகள் தங்கள் விசாரணைகளின் போது பின்வரும் மூர்க்கத்தனமான முறைகளைப் பயன்படுத்துகின்றனர். அவை: (1) சிகரெட்டுகளால் சுடுதல்; (2) நீர்மூழ்கிக் கப்பல் முறை (பகுதி மூச்சுத்திணறல் ஏற்படும் வரை தலையைத் தண்ணீரில் புதைத்தல்); (3) பெட்ரோலில் நனைத்த பிளாஸ்டிக் பைகளால் மூடி மூச்சுத்திணற வைத்தல்; (4) வேறு பொருட்கள் அல்லது மின்சாரம் என்பவற்றால் பாலியல் ரீதியான வன்கொடுமைகளைச் செய்தல்; (5) பாலியல் வன்முறை செய்தல்; (6) மலக்குடல் அல்லது யோனிக்குள் போத்தல்களின் கழுத்துப் பகுதிகளைச் செருகுதல்; (7) பற்களில் ஏற்படுத்தப்படும் சித்திரவதைகள்; (8) 'தொலைபேசி வகை தாக்குதல்' (ஒரே நேரத்தில் உள்ளங்கைகளால் காதுகளில் அறைதல், இது செவிப்பறையைச் சேதப்படுத்தும்); (9) ஆண்குறியை அடிப்பது அல்லது மேசை இழுப்பறைகளுக்குள் விதைப்பகுதியை வைத்து மூடி அழுத்துவது; (10) 'தர்மசக்ரா' செய்தல் (கால்களையும் கைகளையும் பின்னோக்கிக் கட்டியபடி சுழற்றுதல்) போன்றவை.

*1994 ஆம் ஆண்டு சித்திரவதை எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 12 பின்வருமாறு கூறுகிறது: "சித்திரவதை என்பது வேறு எந்த நபருக்கும் உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ கடுமையான வலியை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் செய்கின்ற ஒரு செயலாகும்: (அ) அது பின்வரும் நோக்கங்களுக்காகச் செய்யப்படுகிறது: (i) அத்தகைய நபரிடமிருந்தோ அல்லது மூன்றாம் நபரிடமிருந்தோ ஏதேனும் தகவல் அல்லது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளல்; அல்லது (ii) அத்தகைய நபரை அல்லது மற்றொரு நபரை, அவர் அல்லது மூன்றாவது நபர் செய்த அல்லது செய்ததாகச் சந்தேகிக்கப்படும் எதாவதொரு செயலுக்காகத் தண்டித்தல்; அல்லது (iii) அத்தகைய நபரை அல்லது மூன்றாம் நபரை மிரட்டுதல் அல்லது கட்டாயப்படுத்துதல்; அல்லது (ஆ) பாகுபாட்டின் அடிப்படையில் எந்தவொரு காரணத்திற்காகவும் செய்யப்படுவது; மேலும் ஒவ்வொரு வழக்கிலும், ஒரு பொது அதிகாரியால், அல்லது உத்தியோகபூர்வ நிலையில் செயற்படும் மற்றொரு நபரால், அல்லது அவரது தூண்டுதலின் பேரில், அல்லது அவரது சம்மதம் அல்லது ஒப்புதலுடன் செய்யப்படும் ஒரு செயலாக இருப்பது."*

*இலங்கையில் உள்ள நீதிமன்றங்கள், குறிப்பாக அரசியலமைப்பின் பிரிவு 11 இன் கீழ், மேற்கண்ட முறைகள் சித்திரவதைக்குரியவை என்பதை ஒப்புக்கொண்டுள்ளன. உதாரணமாக: தடியடி அல்லது தடிகளால் தாக்குதல் (கோணேசலிங்கம் எதிர் மேஜர் முத்தலிஃப் மற்றும் பலர்);[13] மற்றும் ஒரு ஆர்ப்பாட்டத்தின் போது நெருங்கிய தூரத்தில் சுடப்பட்டமை.[14]*

*CAT இன் கீழ் நிறுவப்பட்ட சித்திரவதைக்கு எதிரான குழு, 1998 இல் சில அவதானிப்புகளை வெளியிட்டது: (1) சித்திரவதை எதிர்ப்புச் சட்டத்தில் சித்திரவதையின் வரையறை; (2) சித்திரவதைக்குச் சமமான செயல்கள்; மற்றும் (3) நாடுகடத்தல், திருப்பி அனுப்புதல் மற்றும் வெளியேற்றம்.[15]*

*சித்திரவதையின் வரையறையைப் பொறுத்தவரை, குழுவின் கருத்து என்னவென்றால், சட்டத்தின் பிரிவு 2 (1) பிரத்தியேகமான ஒன்றாக இருக்கக்கூடாது; மாறாகத் துன்புறுத்துவதை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் அனைத்துச் செயல்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஆண் குழந்தைகளை, சவுக்கடி போன்ற நீதிமன்ற உத்தரவுகளின் தண்டனைகளிலிருந்து தடுக்க, பிரிவு 2 (3) இனைத் திருத்துவதும் சட்டம் தொடர்பான மற்றொரு அவதானிப்பாகும்.*

## 2. சித்திரவதை எதிர்ப்புத் தொடர்பான சர்வதேசச் சட்டத்தை, உள்நாட்டில் செயல்படுத்தல்

*சித்திரவதை எதிர்ப்பை நிர்வகிக்கும் சர்வதேசக் கடமைகளைச் செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகளை இந்தப் பிரிவு கோடிட்டுக் காட்ட முயற்சிக்கிறது.*

### 2 (a) அரசியலமைப்பு விதிகள்

*அரசியலமைப்பின் பிரிவு 11, சர்வதேச ஆவணங்களில் கூறப்பட்டுள்ளபடி, சித்திரவதையை முழுமையாகத் தடைசெய்வதாகத் தெரிகிறது.*

*இருப்பினும், அரசியலமைப்பின் பிரிவு 16 கூறுகிறது: "சட்ட நடைமுறைக்குப் பிறகு (பிரிவுகள் 82 & 84 இன் கீழ்) இயற்றப்பட்ட எந்தவொரு சட்டமும் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடி அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று குற்றம் சாட்டப்படக்கூடாது." இது ஒரு விநோதமான விதி, ஏனெனில் இது சித்திரவதையை ஏற்படுத்த சட்டத்திற்கு இடமளிக்கிறது.*

*எனவே, பிரிவு 11 இன் கீழ் சித்திரவதைக்கு ஆளாகாமல் தனிநபர்களைப் பாதுகாப்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. அந்த வகையில், அரசியலமைப்பின் 11 இன் இந்தப் பகுதி புறக்கணிக்கப்பட முடியாததாக மாற்றப்படுவதன் மூலம் மேம்படுத்தப்பட வேண்டும்.*

*அரசியலமைப்பின் பிரிவு 126 இன் படி, எந்தவொரு குடிமகனும் பிரிவு 11 இன் மீறலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் வழக்கைத் தாக்கல் செய்யலாம். 'மேலாண்மை அல்லது நிர்வாகச் சட்டம்' மூலம் பல வழக்குகள் வெற்றிகரமாக வாதிடப்பட்டுள்ளன. ஏற்கனவே அதிகப்படியான சம்பிரதாயங்களால் நிரம்பியுள்ள நீதித்துறையின் தரப்பில், சமீபகாலமாக இந்த நடைமுறையைத் தீவிரமாக ஆதரிப்பதில் தயக்கம் இருப்பதாகத் தெரிகிறது.*

### 2 (b) சட்டபூர்வ விதிகள்

*அரசியலமைப்பினால் வழங்கப்பட்டிருக்கும் இந்த விதியைத் தவிர, சித்திரவதை எதிர்ப்புச் சட்டமும், அதை மீறுபவர்களுக்கான தீர்ப்புகளை உயர்நீதிமன்றமும் வழங்குகிறது.*

*இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளைத் தொடர்வது வழக்கறிஞரின் விருப்பத்துக்கு விடப்படுவதாலும், பெரும்பாலும் சித்திரவதைகளுக்குக் காரணமான குற்றவாளிகளான*

காவல்துறையினரே விசாரணைகளைச் செய்ய வேண்டியிருப்பதாலும், இவ்வாறான சித்திரவதை வழக்குகளைக் கையாள தனியான சுயாதீன வழக்குத் தொடருநர் அமைப்பு ஒன்று இருக்க வேண்டிய மிக அவசியமான தேவை நிலவுகிறது.[16]

17 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ், தேசிய காவல் ஆணையத்தை நிறுவுவது பொதுமக்கள் மத்தியில் அமோக ஆதரவுடனான வரவேற்பைப் பெற்றது. இந்த 17 ஆவது திருத்தத்தின் முழு நோக்கமும், தேர்தல் ஆணையம், பொதுச் சேவை மற்றும் காவல்துறை போன்ற சில முக்கியமான நிர்வாகத் துறைகளை அரசியலற்றதாக்குவதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் ஓய்வு பெற்ற காவல்துறைப் பணியாளர்களை காவல் ஆணையம் பகுதி ஒருங்கிணைப்பாளர்களாக நியமித்துள்ளது. இருப்பினும், பயனுள்ள முறைப்பாடுகளைச் செய்வதற்கான நிலை இன்னமும் நடைமுறையில் இல்லை.[17]

### 2 (c) இலங்கை மனித உரிமைகள் ஆணையம்

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் எண் இலங்கை மனித உரிமைகள் ஆணையச் சட்டத்தின் மூலம், தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) பின்வருவனவற்றிற்கு அதிகாரம் அளிக்கிறது:

(1) நிர்வாக மற்றும் நிர்வாக நடைமுறைகளைக் கண்காணித்தல்;

(2) மனித உரிமை மீறல்களை விசாரித்தல்;

(3) மனித உரிமைப் பிரச்சினைகளில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

ஆணையத்தால் அடையப்பட்ட குறிப்பிட்ட அளவிலான வெற்றியைத் தக்கவைக்க - குறிப்பாக சித்திரவதையைக் குறைப்பது தொடர்பாக - அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் மற்றும் சித்திரவதை எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடருதல் ஆகிய இரண்டிலும் மிகவும் சக்திவாய்ந்ததும் விரைவான செயற்பாட்டுக்குமான சுயாதீன அமைப்புத் தேவைப்படுகிறது.

சித்திரவதைக்கு எதிரான குழுவின் முன், இலங்கையின் மூன்றாவது மற்றும் நான்காவது காலமுறை அறிக்கைகளுக்குப் பிறகு, அரசியலமைப்பின் பிரிவு 11 இற்கு (அதாவது சித்திரவதை) எதிரான புகார்களை மத்தியஸ்தம் செய்யவோ அல்லது சமரசம் செய்யவோ கூடாது என்ற கொள்கை முடிவை தேசிய மனித உரிமை ஆணைக்குழு (NHRC) எடுத்தது. சித்திரவதைக் குற்றத்தின் தீவிரத்தை எதிர்கொள்ளும் போது இது ஒரு நியாயமான தேர்வாகும். மேலும், NHRC இற்கு முன்வருகின்ற ஏராளமான (ஆண்டுக்கு 400-700 வரையான) வழக்குகளுக்கு நீதி வழங்குவதற்கான நிபுணத்துவமோ வளங்களோ இல்லை.

இந்திய HRC போலவே, NHRC உம் நீதிமன்றங்களை நேரடியாக அணுக அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. NHRC சட்டம் 1996 இன் பிரிவு 15 (3) (b) இல் ஏற்கனவே சட்டபூர்வ ஏற்பாடு உள்ளது. NHRC வழியாக பொருத்தமான மற்றும் பயனுள்ள அமலாக்க இயந்திரங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் விதிகளை வழங்குவதே அவசரத் தேவை.[18]

மேலும், 1996 ஆம் ஆண்டு HRC சட்டத்தின் பிரிவு 9 (h) இன் படி, சித்திரவதை வழக்குகள் தொடர்பாகச் சட்டமா அதிபரின் விருப்புரிமையை ஆணைக்குழு உண்மையில் கண்காணிக்க முடியும் என்பது ஒரு நல்ல முன்னேற்றமாகும்.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தின் முன் சட்டபூர்வமாக செயல்படுத்தக்கூடிய வழக்கு இல்லாத அல்லது நிறுவ முடியாதவர்களுக்கு உதவுவது மற்றொரு முற்போக்கான முயற்சியாகும். தற்போதைய நிலவரப்படி, அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான விண்ணப்பங்களை NHRC ஏற்றுக்கொள்கிறது. தற்போதைய வடிவத்தில் உள்ள அடிப்படை உரிமைகள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு போதுமானதாக இருக்காது என்பதால், NHRC அத்தகைய வழக்குகளை மத்தியஸ்தம் மற்றும் சமரச முறையில் எடுத்துக்கொண்டு, சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்கலாம்.

## 3. சில பரிந்துரைகள்

அரசு ஆதரவுடன் சித்திரவதைகள் அதிகரித்து வருவதைக் குறைப்பதற்கான சில பரிந்துரைகள் பின்வருமாறு.

### 3 (a) அரசு நிறுவனங்களின் தண்டனையிலிருந்து விலக்கு அளித்தல்

ஆரம்பத்தில் கூறியது போல், முக்கியமான கேள்வி என்னவென்றால், குற்றவாளிகளை யார் காவலில் வைக்கிறார்கள் என்பதுதான். எனவே, துன்புறுத்துபவர்களை விசாரித்து வழக்குத் தொடர மிகவும் சக்திவாய்ந்ததும் சுயாதீனமானதுமான ஒரு நிறுவனத்தின் அவசரத் தேவை உள்ளது.

### 3 (b) கல்வி மற்றும் முறையான மறுஆய்வு

அபாசின் பண்டா எதிர் ஹங்குரான்கெட்டாவின்[19] எஸ் ஐ குணரத்ன வழக்கில் உச்ச நீதிமன்றம், சித்திரவதை மற்றும் பிற வகையான மோசமான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான கல்வித் திட்டங்கள் மற்றும் படிப்படியான நடைமுறை சார்ந்த முன்னெடுப்புகளை எடுக்க வேண்டிய அவசரத் தேவை இருப்பதாகக் கூறியது.

தற்போதுள்ள நிலையில், காவல்துறை, ஆயுதப்படை அதிகாரிகள் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு பொதுவாக மனித உரிமைகள் பற்றிய கல்வி, குறிப்பாகச் சித்திரவதை தொடர்பான பயிற்சி, அளிக்கப்படுவது மிகக் குறைவு. குற்ற அலை காரணமாக பொதுமக்களின் உணர்வு இழுத்துச் செல்லப்படுகிறது. மேலும், சித்திரவதைக்கு ஓரளவு சகிப்புத்தன்மை பாதிப்பில்லாதது என்று பலர் கருதுகின்றனர். [20] ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நீதித்துறையும் கூட இந்தக் கருத்தைப் பகிர்ந்து கொண்டது (போன்சர் ஜே எதிர் கே.வி. தாஜுதீன் பார்க்கவும்20). சித்திரவதையை நாடுவதை ஊக்குவிக்கும் இத்தகைய நீதித்துறை அணுகுமுறைகள் பலமான கல்வியூட்டல் மூலம் ஒழிக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் பற்றிய கல்வியும் சித்திரவதையை வெறுப்பதற்கான மனப்பாங்கும் அவ்வப்போது மதிப்பாய்வுகளுடன் இணைக்கப்பட வேண்டும். அரசாங்க நடவடிக்கையின் இத்தகைய முறையான மறுஆய்வு கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளிலும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் ஒரு சலசலப்பு ஏற்படும்போது, எடுத்துக்காட்டாக பொது அதிகாரிகளால் சித்திரவதை செய்யப்படும் போது, விசாரணை ஆணையங்கள் நியமிக்கப்படுகின்றன. இருப்பினும், பரிந்துரைகளைப் பின்பற்றுவது இல்லை. விதிகள், நடைமுறைகள் மற்றும் வழக்குகள் தொடர்பான சித்திரவதை குறித்த மறுஆய்வு முறைப்படுத்தப்பட வேண்டும்.

### 3 (c) அகதிகள் சட்டம் மற்றும் திருப்பி அனுப்பாத கொள்கை

அகதிகள் நிலை தொடர்பான மாநாட்டை இலங்கை அங்கீகரிக்கவில்லை. CAT இன் பிரிவு 3 (இந்த ஏற்பாடு ஓர் அகதியை அவரின் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதிலிருந்து பாதுகாக்கிறது) இருந்தபோதிலும், இலங்கை 'திருப்பி அனுப்பாதது' விதியால் கட்டுப்படவில்லை என்று வாதிடுகிறது. இது இலங்கை அகதிகளை சித்திரவதைக்கு ஆளாகும் ஒரு நாட்டிற்கு அனுப்ப அனுமதிக்கிறது. இந்த நிச்சயமற்ற தன்மை சரிசெய்யப்பட வேண்டும்.[21]

**மனித உரிமைகள் பற்றிய கல்வியும் சித்திரவதையை வெறுப்பதற்கான மனப்பாங்கும் அவ்வப்போது மதிப்பாய்வுகளுடன் இணைக்கப்பட வேண்டும். அரசாங்க நடவடிக்கையின் இத்தகைய முறையான மறுஆய்வு கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளிலும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் ஒரு சலசலப்பு ஏற்படும்போது, எடுத்துக்காட்டாக பொது அதிகாரிகளால் சித்திரவதை செய்யப்படும் போது, விசாரணை ஆணையங்கள் நியமிக்கப்படுகின்றன.**

### 3 (d) நீதித்துறை அமைப்பில் சீர்திருத்தங்கள்

அரசியலமைப்பின் பிரிவு 126 இன் கீழ், அடிப்படை உரிமைகள் நடைமுறை மிகவும் சிக்கலானதும் மிகப் பொருட் செலவானதும் கூட. பூசா வழக்கில் சில கடுமையான சம்பிரதாயங்கள் குறைக்கப்பட்டிருந்தாலும், அத்தகைய நீதித்துறை பின்னாளில் பின்பற்றப்படவில்லை. எழுத்து வடிவிலான அதிகார வரம்பின் கீழ் நமது உச்ச நீதிமன்றம், இந்தியப் பகுதியில் உள்ள அதே அதிகார வரம்பைக் கொண்ட நீதிமன்றங்களிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய உள்ளது. இந்த எழுத்து வடிவிலான அதிகார வரம்பை சித்திரவதை போன்ற கொடூரமான குற்றங்களில் பயன்படுத்த முடியாவிட்டால், அத்தகைய சட்ட அமைப்பைப் பயன்படுத்துவது அதன் ஆற்றலுக்கு மதிப்பளிக்கும் ஒன்றாகக் கருத முடியாது.

ஐரோப்பிய (ஸ்ட்ராஸ்பேர்க்) மனித உரிமைகள் நீதிமன்றத்தின் அறை முடிவுகளின் வழக்குகளைப் போலவே, வாதிடத் தகுதியான வழக்குகள் தேவையில்லாதவற்றிலிருந்து முறைசாரா வகையில் வகைப்படுத்தப்பட வேண்டும். முன்மொழியப்பட்டுள்ள உயர் நீதிமன்றங்களின் பரவலாக்கம் பொதுவாக அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளில் — குறிப்பாகச் சித்திரவதை தொடர்பான வழக்குகளில் — ஏற்படும் தாமதம் மற்றும் அவற்றுக்கான செலவுகளை சரிசெய்யும் என்று நம்பப்படுகிறது.

### 3 (e) பாரபட்சமற்ற மருத்துவப் பதிவுகள்

'அமல் சுதத் எதிர் கொடித்துவாக்கு'[22] வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியது: "காவல்துறை அலுவலகத்தில்

மருத்துவப் பரிசோதனைக்காக ஒரு சந்தேக நபர் ஆஜர்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், எந்த ஒரு மருத்துவ அதிகாரியும் அக்காயங்கள் காவல்துறையின் சித்திரவதை காரணமாக ஏற்பட்ட விளைவுகளே என்று காவல்துறை அதிகாரியிடமே, அவர் முன்னிலையிலேயே சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது அபத்தமானது." எனவே, மருத்துவச் சட்ட அறிக்கையை நீதிமன்றம் பயனற்றது என்றும், ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் நிராகரித்தது.

எனவே, நீதித்துறை அதிகாரிகள் போன்ற மருத்துவப் பயிற்சியாளர்கள் தங்கள் அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஆழமான நெறிமுறைகளை கடைப்பிடிப்பது முக்கியமாகும்.

### 3 (f) சித்திரவதை தொடர்பான காவல்துறையின் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்

இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 4 (d) இன் கீழ், மக்கள் இறையாண்மையின் ஒரு வெளிப்பாடு குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் பொது அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் ஆகும்:

"மக்களின் இறையாண்மை பின்வரும் முறையில் பயன்படுத்தப்பட்டு அனுபவிக்கப்படும். அதாவது, அரசியலமைப்பின் மூலம் அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கான உரிமை மதிக்கப்படும்; அது அரசாங்கத்தின் அனைத்து உறுப்புகளாலும் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்படும்; மேலும் அது வழங்கப்படும் விதத்திலும், அளவிலும் அல்லாமல் குறுக்கப்படவோ, அல்லது கட்டுப்படுத்தப்படவோ அல்லது மறுக்கப்படவோ கூடாது."

அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்தின் கீழ், அரசியலமைப்புக் கவுன்சில், தேர்தல் ஆணையர், சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் போன்ற மிக முக்கியமான பொது அமைப்புகளின் பாரபட்சமற்ற தன்மையைக் கண்காணிக்க ஒரு பல்கட்சி மேற்பார்வை அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, நிர்வாகத்தின் பங்குதாரர்களிடையே அதிகப்படியான அரசியல் பேரம்பேச்சு நிகழ்வது, அரசியலமைப்பு சபை மற்றும் பொலிஸ் ஆணையம் என்பவற்றின் பயனுள்ள செயல்பாட்டை தேவையற்ற முறையில் தடைசெய்துள்ளது. நல்லாட்சியை நிலைநாட்டுவதில் சோம்பலும் அரசியல் விருப்பமின்மையும், பொலிஸ் விசாரணையின் போது சித்திரவதையின் பயன்பாட்டைக் குறைப்பதில், பொலிஸ் மா அதிபர் மற்றும் அவரது துணை அதிகாரிகள் போன்றோரின் பயனுள்ள கட்டுப்பாட்டைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.[23]

இப்படியான பயங்கரமான சம்பவங்களில் ஒன்று (இது விதிவிலக்கல்ல என்றாலும்) கடந்த ஆண்டு நடந்தது. நல்ல ஒரு வேலையில் இருந்த முற்றிலும் நிரபராதியான ஜெரால்ட் பெரேரா என்பவர் வத்தளைக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். பின்னர் குற்றவாளி வேறு யாரோ என்றும், ஜெரால்ட் முற்றிலும் நிரபராதி என்றும் கண்டறியப்பட்டது. சட்டமா அதிபர், வத்தளைக் காவல்துறையின் பொறுப்பாளர் உட்பட வேறு சில பொலிஸ் அதிகாரிகள் மீது வழக்குத் தொடர்ந்து நடாத்தப்பட்ட விசாரணைக்குச் சில நாட்களுக்கு முன்பு, இந்த விசாரணையில் சாட்சியமளிக்க வேண்டிய ஜெரால்ட் கொலை செய்யப்பட்டார்.

**தற்போதுள்ள நிலையில், காவல்துறை, ஆயுதப்படை அதிகாரிகள் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு பொதுவாக மனித உரிமைகள் பற்றிய கல்வி, குறிப்பாகச் சித்திரவதை தொடர்பான பயிற்சி, அளிக்கப்படுவது மிகக் குறைவு. குற்ற அலை காரணமாக பொதுமக்களின் உணர்வு இழுத்துச் செல்லப்படுகிறது.**

பெரும்பாலான அதிகாரிகள் (OIC உட்பட) குற்றவாளிகள் என்று நீதித்துறை கண்டறிந்த போதிலும், அவர்கள் இன்னும் காவல்துறையில் பதவி வகிக்கின்றனர். இலங்கையில் இன்றைய காவல்துறையில் இது அசாதாரணமானது அல்ல. உண்மையில், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை கோரல் விண்ணப்பங்களின் கீழ், சித்திரவதை செய்ததாகக் கண்டறியப்பட்ட அதிகாரிகள் பதவி உயர்வு பெற்ற சம்பவங்களும் உள்ளன. அத்தகைய அதிகாரிகள் மீது துறைரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு உச்ச நீதிமன்றத்தால் காவல்துறைத் தலைவரிடம் கேட்கப்பட்டது. அவரும் அவரது முன்னோடிகளும் இந்தக் கோரிக்கைகளைப் புறக்கணித்துள்ளனர். பொலிஸ் மா அதிபர் (IGP)

போன்ற ஒரு மூத்த அதிகார மட்டத்தில் உள்ளவர்களின் இத்தகைய புறக்கணிப்பு என்பது, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு ரீதியான கடமைப் புறக்கணிப்பு என்ற குற்றமாகக் கொள்ளப்படும். ஆயினும், அவர்கள் மீது அத்தகைய குற்றம் சுமத்தப்படும் ஒரு நிலைக்குத் தம்மைத் தாமே ஆளாக்குகின்ற ஓர் ஆச்சரியமான நிலை தொடர்ந்து இருந்து வருவது உண்மையாகும்.

நடைமுறையில் இப்போது நாடு ஒன்றும் அவசரகால நிலையின் கீழ் இல்லை என்றாலும், நாட்டின் வடக்குக் கிழக்கில் ஓர் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இருப்பினும், "...சித்திரவதை நடைமுறைகள் அவ்வப்போது பரவலாகி வருகின்றன; அத்துடன் அவை முரட்டுத்தனமான ஒரு சில பொலிசாருடன் மட்டும் நின்றுவிடுகின்ற ஒன்றாகவும் இல்லை" என்று கூறப்படுகிறது.[24]

'கேமசிறி குமார கல்தேரா'[25] வழக்கில் உச்ச நீதிமன்றம், அறிக்கைகளைப் பதிவு செய்யும் முறையானது உண்மையிலேயே பழமையான ஒன்று என்றும், அதிகாரபூர்வ பதிவுகளைச் சேதப்படுத்துதல் என்பது காவல்துறையின் நடைமுறைகளில் ஒரு பழக்கமாகிவிட்டது என்றும் கண்டறிந்தது.

## 4. முடிவுரை

சட்ட அமலாக்கம் தொடர்பான நிறுவனங்களுக்குள் நிலவி வரும் பரவலான சித்திரவதை நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு அவசியமான சில அவசரமான சீர்திருத்தங்களாக, (1) காவல்துறை அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதும், காவல்துறையிலிருந்து சுயாதீனமான ஒரு தனிக்கிளையை உருவாக்குதலும்; (2) மனித உரிமை மீறல்களை விசாரிக்கப் போதுமான கட்டமைப்புகளை வழங்குதல்; (3) ஒரு சுயாதீன புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குத் தடயவியல் பயிற்சிகளை வழங்குதல்; (4) சித்திரவதை தொடர்பான புகார்களை விசாரிப்பதற்காக காவல்துறைக்குள் ஒரு சுயாதீன மேல்முறையீட்டு நியாயசபையை அல்லது தீர்ப்பாயத்தை (Tribunal) வழங்குதல்[26] போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வெளிப்படையான இந்த விடயங்களைக் கூறும் அதேவேளை, இந்த முக்கியமான அறிவுறுத்தல்களைத் தவிர, நீண்டகாலத்திற்கு அவர்களுக்கான சாதாரண 'வாழ்வுக்கான பண்பாட்டை' (Culture of Life) வளர்ப்பதற்கான அவசரத் தேவையும் உள்ளது என்பதைக் குறிப்பிடுவதும் அவசியமாகிறது. இப்படிச் சொல்வதன் மூலம், இன்னும் 'பிறக்காதவர்களை' பாதுகாப்பதற்கான அல்லது கருத்தடை எதிர்க்கப்படுவது அவசியம் என்ற கருத்தை ஆதரிக்கின்ற செயற்பாட்டாளர்களின் ('Prolife Activists') குறுகிய பார்வையுடன் (அது முக்கியமானது என்றாலும்) நாங்கள் இதைக் குறிப்பிடவில்லை.

வாழ்க்கைக்கான கலாசாரம், மரணக் கலாசாரத்திற்கு முற்றிலும் எதிரானது. அது (1) மனிதத்தின் மதிப்புகளைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும்; (2) மனித உரிமைகளைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும்; (3) பண்பு, நேர்மை மற்றும் கௌரவம் என்பவற்றைக் கொண்ட நபர்களை உருவாக்குதலும் ஆகிய அம்சங்களைக் கொண்டதாக அமைகிறது.

## கட்டுரையாசிரியர் பற்றிய குறிப்பு

வழக்கறிஞரும் சட்ட ஆலோசகருமான அருட்தந்தை நோயல் டயஸ் அவர்கள், 1987 முதல் கொழும்பு பல்கலைக்கழகச் சட்டப்பீடத்தின் மூத்த விரிவுரையாளராவார். கொழும்பு பல்கலைக்கழகச் சட்டப்பீடத்தின் 'Sri Lanka Journal of International Law' என்ற இதழின் நிறுவன ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் இயங்கிவரும் இவர், இங்கிலாந்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் கார்டிஃப் சட்டப் பள்ளி உட்படப் (Cardiff Law School, University of Wales) பல கல்வி நிறுவனங்களில் வருகைதரு விரிவுரையாளரும் ஆவார். பல நூல்களையும், பத்திரிகைக் கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர், கொழும்பு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க சர்வதேச ஆய்வுகள் மையம், இலங்கைச் சட்டக் கல்லூரி ஆகியவற்றின் சட்டப் பீடங்களுக்குப் பாடப்புத்தக நூலாகப் பரிந்துரைக்கப்பட்ட 'International, Comparative and Human Rights Law' என்ற நூலை எழுதி இத்துறைக்கான முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளார். கலைமாணி பட்டப்படிப்பு மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கான, சிங்கள மொழியில் உள்ள சர்வதேசச் சட்டத்திற்கான ஒரே ஒரு நிலையான பாடப்புத்தகமும் இதுவேயாகும்.

## அடிக்குறிப்புகள்:

1. இந்தக் கட்டுரை கட்டாரினா மார்த்தோம் எழுதிய 'சித்திரவதை எதிர்ப்பு மாநாட்டை செயல்படுத்துதல்' (1998) 10 இலங்கை JIL 133 என்ற கட்டுரையிலிருந்து கணிசமான உள்ளீட்டைப் பெற்றது. மேலும் பார்க்கவும்: கூரே, ஜே.ஏ.எல்., அரசியலமைப்பு மற்றும் நிர்வாகச் சட்டம், கொழும்பு, 1995, பக். 623-629.
2. பின்டோ, 'பொலிஸ் மா அதிபர்' மீது விதிக்கப்பட்ட அரசியலமைப்புக் கடமைகள் மற்றும் அவர்களின் 'பைபாசிங்': த சண்டே

டைம்ஸ், ஒக்டோபர் 2, 2005.

3. பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால விதிமுறைகள் என்பவை செயலில் இல்லாவிட்டாலும், சித்திரவதையைப் பயன்படுத்துவதன் தொடர்ச்சி நிறுத்தப்படவில்லை. ஜூலை 6, 2004 அன்று இலங்கை காவல்துறையினரால் 46 நபர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட 31 சித்திரவதை மற்றும் கொலை வழக்குகள்: http://www.article2.org/mainfile.php/0301/120/ இல் பதிவாகியுள்ளன.

4. UDHR, கட்டுரை 5; கைதிகளை நடத்துவதற்கான ஐ.நா.வின் தரநிலை குறைந்தபட்ச விதிகள் (1955).

5. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி அவசரகால விதிமுறைகள் வெளியிடப்படுகின்றன. அவர் பிரகடனத்தின் மூலம் அவசரகால நிலையை அறிவிக்கலாம். அவசரகால விதிமுறைகள் நாட்டின் பிற சட்டங்களை விட மேலோங்கி நிற்கின்றன என்பதுடன், அவை பற்றி 'எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாது' (அரசுச் சட்டத்தின் பிரிவு 7). ஜனாதிபதியினது பிரகடனங்களை நீதித்துறை மறுஆய்வு செய்வதை இந்த அவசரகாலச் சட்டம் திட்டவட்டமாக மறுத்தாலும், இதே போன்ற சூழ்நிலையில் உயர் நீதிமன்றம் இந்தப் பிரகடனங்கள் அந்த அளவுக்குப் புனிதமானவை அல்ல என்று கூறியது. (மார்க் பெர்னாண்டோ ஜே., சஞ்சீவ அருணா சேரசிங்க எதிர் பொலிஸ் அத்தியட்சகர், நுகேகொட வழக்கில், வாக்கெடுப்புச் சட்டத்தின் கீழ் ஊர்வலத்தைத் தடை செய்வது பாரதூரமானது; ஏனெனில் சட்டத்தின் பிரிவு 2 (2) இன் கீழ் முன்வைக்கப்பட்ட கேள்வி தெளிவற்றதாக உள்ளது). ஒத்த சூழ்நிலைகளில், அவசரச் சட்டத்தின் பிரிவு 3 மற்றும் கலை. 1978 அரசியலமைப்பின் 154J (2) திருத்தப்பட வேண்டும்; இதனால் அவசரநிலையை அறிவிக்கும் ஜனாதிபதியின் பிரகடனங்களை நீதித்துறை மறுஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும். வரைவு அறிக்கை, குறிப்பு 7, ப. 41 ஐப் பார்க்கவும்.

6. வரைவு அறிக்கை, குறிப்பு 7 இன் கீழ், பக். 3 ஐப் பார்க்கவும்: போர் நிறுத்தத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால விதிமுறைகள் காலாவதியாகிவிட்டன. போர் நிறுத்தத்தின் போது ஒரு வரையறுக்கப்பட்ட காலத்தில் அவசரகால விதிமுறைகள் மீண்டும் விதிக்கப்பட்டன. டிசம்பர் 26, 2004 இல் சுனாமி சோகத்தைத் தொடர்ந்து, ஒரு வரையறுக்கப்பட்ட சூழலில் அவசரகால விதிமுறைகள் மீண்டும் விதிக்கப்பட்டன.

7. முதல் வரைவு அறிக்கை, 'தொடர்ச்சியான குழப்பம்: இலங்கையில் அரசால் ஆதரிக்கப்படும் வன்முறையின் பரவல்', சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளை மதிப்பாய்வு, தொகுதி 15 (பிப்ரவரி & மார்ச்) 2005, ப. 1 (இனி 'வரைவு அறிக்கை' என அழைக்கப்படுகிறது). இரண்டு சட்டங்களும் (அவசரகால விதிமுறைகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்) அரசுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க வடிவமைக்கப்பட்டிருந்தாலும், குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் 'பயங்கரவாத நடவடிக்கைகள்' என்ற சொற்களின் வரையறை மிகவும் மேலோட்டமாக இருந்ததாலும், அதிகாரிகள் கொலை, கொள்ளை போன்ற சாதாரண வழக்குகளிலும் அவற்றைப் பயன்படுத்தியுள்ளனர் என்று அறிக்கை கூறுகிறது.

8. ஜெகதீஷ்வரன் சர்மா எதிர் இலங்கை, வழக்கு CCPR/C/78/D/1033/950/2000, ஜூலை 31, 2003 அன்று முடிவுறுத்தப்பட்டது. இந்த வழக்கில், திருகோணமலையைச் சேர்ந்த தந்தையான விண்ணப்பதாரர், தனது மகன் இராணுவக் காவலில் இருந்தபோது சித்திரவதை செய்யப்பட்டதாகவும் பின்னர் காணாமல் போனதாகவும் குற்றம் சாட்டினார். ஓர் இராணுவத்தினர் அல்லது பிற அதிகாரி தனது அதிகாரப் பதவியைப் பயன்படுத்தி ஒரு தவறான செயலைச் செய்திருந்தாலும், ICCPR உரிமைகள் மீறப்பட்டதாகக் குழு கண்டறிந்தது. அந்த அதிகாரி தனது அதிகாரத்திற்கு அப்பால் செயல்பட்டிருந்தாலும் கூட, அந்தச் செயலுக்காக அரசு பொறுப்புக்கூறத்தக்கதாகும் என்று தீர்மானிக்கப்பட்டது.

9. சிங்கராசா எதிர் இலங்கை, CCPR/C/81/D/1033/2001, ஜூலை 21, 2004 அன்று முடிவு செய்யப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 16 (2) (இந்தப் பிரிவு ASP அல்லது உயர் அதிகாரியிடம் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கது) அதன் சர்வதேசக் கடமைகளை கடுமையாக மீறுவதாக இலங்கை அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியதால், இந்த முடிவு முக்கியமானது.

பாதிக்கப்பட்ட தரப்பினரான விண்ணப்பதாரர் சிங்கராசா, பாதுகாப்பு அமைச்சரால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவின் கீழ்

இருந்தார். இந்தப் பிரிவு, ஒரு சந்தேக நபரை 18 மாதங்களுக்கு எந்தக் குற்றச்சாட்டையும் தெரிவிக்காமல் தடுத்து வைக்க அனுமதிக்கிறது; மேலும் அந்தக் காலம் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் புதுப்பிக்கத்தக்கது.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, ஒரு ASPக்கு முன் விண்ணப்பதாரர் கட்டாயமாக கையொப்பமிடுவதற்கு முன் செய்யப்பட்ட ஒரு வாக்குமூலத்தில் (ASP விண்ணப்பதாரரின் கட்டைவிரல் ரேகையை வலுக்கட்டாயமாக வாக்குமூலத்தில் தோன்றும்படி அழுத்தியிருந்தார்), (1) சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தல்; (2) நான்கு இராணுவ முகாம்களைத் தாக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டார். அவருக்கு ஐம்பது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் அவரது தண்டனை குறைக்கப்பட்டது; அத்துடன் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதி கோரிய அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் ICCPR இன் பிரிவு 14 (3) (g) (நியாயமான விசாரணைக்கான உரிமை) இனை மீறியுள்ளது என்று HRC கண்டறிந்தது. அந்தக் குழு கூறியது: “சித்திரவதை மற்றும் மோசமான சிகிச்சை தொடர்பான புகார்களை நிராகரிக்க (இலங்கை) நீதிமன்றங்கள் அனைத்து நிலைகளிலும் தயாராக இருக்கும் நிலை, இந்த வரம்பு பூர்த்தி செய்யப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. முறைப்பாட்டாளரது (சிங்கராசா) குற்றச்சாட்டுகளை, அவர் நீதிபதி முன்னிலையில் மோசமான தாக்குதல்கள் நடந்தது குறித்துப் புகார் செய்யத் தவறியதால் நம்பகத்தன்மையற்றது என்று கூறி நீதிமன்றங்கள் தலையிடுமானால், அவர் மீண்டும் பொலிஸ் காவலுக்குத் திரும்ப வேண்டிய நிலை வரும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அந்த வாதம் வெளிப்படையாக நிலைநிறுத்தப்பட முடியாதது என்று குழு கருதியது.”

10. ECHR ஆணைக்குழு (1969): ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய ஜெனரல்களால் ஆளப்பட்ட கிரேக்கத்திற்கு எதிராக ஸ்கண்டினேவிய நாடுகளால் கொண்டுவரப்பட்ட மனுவில் வழங்கப்பட்ட முடிவு.
11. Tyrer Case — டைரர் வழக்கு, 26 Pub. Eur. Ct. மனித உரிமைகள், Ser. A (1978): வைட் தீவில் ஓர் இளம் குற்றவாளியை வெற்றுப் பிட்டத்தில் பிரம்பால் அடிப்பது சித்திரவதை என்று கண்டறியப்பட்டது.
12. குறிப்புகள் 8 மற்றும் 9 ஐப் பார்க்கவும்.
13. கோணேசலிங்கம் எதிர் மேஜர் முத்தலிஃப் மற்றும் பலரும் என்ற வழக்கு, உயர் நீதிமன்றம் (FR) எண். 555/2001; மற்றும் சண்முகராஜா எதிர் டிர்லுக், உதவிப் பொலிஸ் அதிபர், வவுனியா, SC (FR) இல. 47/2002.
14. ஏக்கநாயக்க எதிர் வீரவாசம், SC (FR) இல. 34/2002.
15. குழு அவதானிப்புகள், பத்தி 9: http:/www.unchr.ch/tbs/doc.nsf/0/4a09cbe1c56a96b38025660f004bf3a7?Open document
16. நாங்கள் வேறு பல இடங்களிலும் வாதிட்டுள்ளோம். சட்டமா அதிபரிடம் இருக்கும் வழக்குரைஞர் தற்றுணிவு மிகவும் பரந்ததாகவும் கட்டுப்படுத்தப்படாததாகவும் உள்ளது. பார்க்க: Doe and Dias இன் ‘வழக்குரைஞர் விருப்புரிமை மற்றும் விசாரணைக்கு முந்தைய செயல்முறை’ (Prosecutorial Discretion and PreTrial Process) (2004) 16 இலங்கை JIL 235; மார்க் பெர்னாண்டோ, ‘Victor Ivan v. Sri Lanka decision: Its Impact on Sri Lanka’ (2004) 16 Sri Lanka JIL 289.
17. வரைவு அறிக்கை, குறிப்பு 7, ப. 17.
18. வரைவு அறிக்கை, குறிப்பு 7, ப. 20.
19. Abasin Banda v. SI Guneratne of Hanguranketa, SC 109/95.
20. K v. Tajudeen, (1902) 6 NLR 16.
21. Committee Observations, Para. 9: http:/www.unchr.ch/tbs/. மேலும் பார்க்க: Draft Report, note 7, p. 32, doc. nst/0/4a09cbe1c56a96b38025660f004bf3a7?Opendocuments
22. Amal Sudath v. Kodituakku (1987) 2 Sri Lanka LR 119.
23. Draft Report, note 6, p. 13. The National Police Commission is ailing from lack of financial and other resources. Out of 156 complaints of police torture in 2003, only 11 cases have been completed.
24. The statement of the Chairperson of the Sri Lanka Human Rights Commission to a Londonbased NGO called REDRESS: See note 2 above.
25. Kemasiri Kumara Caldera’s case, SC (FR) No. 343/99, SCM dated November 6, 2001.
26. Draft Report, note 6, p. 17.

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.

# இலங்கை மலையக மக்களின் வாழ்வியலில் சடங்குகள்

**பகுதி 4**

**மெய்யநாதன் கேதீஸ்வரன்**



மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புழுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.

## வீட்டுக்கு அழைத்தலும் திவசமும்

மனித நாகரிகத்தின் தோற்றத்திலிருந்தே, வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் செயல்முறை நிகழ்ந்து வந்ததை காண முடிகின்றது. இதன் ஒரு பாலமாக மூதாதையர் வழிபாடு இருந்து வருகிறது. இது வெறும் சடங்கு ரீதியான மரபு என்பதைத் தாண்டி, ஒரு சமூகத்தின் வரலாறு, அறநெறி மற்றும் உளவியல் கட்டமைப்பின் அடித்தளமாகத் திகழ்கிறது. குறிப்பாக தமிழகத்தில் 'தென்புலத்தார்' என்று அழைக்கப்படும் முன்னோர்களுக்கான கடமைகளை ஆற்றுவது இல்லறத் தர்மத்தின் தலையாயக் கடமையாகக் கருதப்படுகிறது. அதன் வழி வந்த மலையக மக்களும் இதன் தொடர்ச்சியைப் பேணுவதைக் காண முடிகின்றது.

மூதாதையர் வழிபாடு என்பது இறந்துபோன உறவினர்களின் ஆவிகளிடத்தில் பிரார்த்தனை செய்தல் மற்றும் காணிக்கைகளைப் படைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நம்பிக்கையமைப்பாகும். உலகெங்கிலும் உள்ள பல கலாசாரங்களில், மூதாதையர்களின் ஆவிகளுக்கு இயற்கை உலகில் தங்கியிருந்து தற்போதைய தலைமுறையினரின் நல்வாழ்வையும் அதிர்ஷ்டத்தையும் தீர்மானிக்கும் ஆற்றல் உண்டு என்று நம்பப்படுகிறது. உதாரணமாக, சீனக் கலாசாரத்தில் 'சிங் மிங்' (Qingming) திருவிழா முன்னோர்களைக் கௌரவிக்கும் நாளாகும். சீனர்கள் தங்கள் வீடுகளில் முன்னோர்களுக்கென்று தனிப் பலிப்பீடங்களை (Domestic Altars) அமைத்து தினமும் ஊதுபத்தி ஏற்றி வழிபடுகிறார்கள். ஆன்மாக்களுக்குத் தேவையான காகிதப் பணம் மற்றும் உணவுகளைப் படைப்பது அவர்களின் மரபாகும். அந்த வகையில் ஆவிகள் படைப்பவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாகச் செயற்படுவதாகக் கருதப்படுகிறது.

அத்தோடு இது தனிமனிதனுக்கு மட்டும் உரியதல்ல; அது ஒரு குடும்பத்தின் கூட்டுப் பொறுப்பாகவும் கருதப்படுகிறது. குடும்ப உறுப்பினர்கள் தலைமுறைகளைக் கடந்த கர்மவினைகளால் பிணைக்கப்பட்டுள்ளனர். முன்னோர்களைக் கௌரவிப்பதன் மூலம் ஒரு குடும்பத்தின் கூட்டுக் கர்மவினைகளைத் தூய்மைப்படுத்தவும், கடந்த காலத் தவறுகளுக்கு மன்னிப்புத் தேடவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இது சந்ததியினருக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் சுபிட்சமான எதிர்காலத்தை உறுதி செய்வதாகவும் நம்புகின்றனர்.

தமிழகத்தின் மரபுசார் வழிபாடாக இருந்த 'வீடு எடுத்தல்' அல்லது 'கூப்பிடு சடங்கு' தமிழகத்தின் கிராமப்புறப் பண்பாட்டிலும் குலதெய்வ வழிபாட்டு முறைகளிலும் முக்கியமானதாகும். 'வீடு எடுத்தல்' அல்லது 'ஆன்மாவை வீட்டிற்கு அழைத்தல்' என்பது மிகவும் உணர்ச்சிகரமான மற்றும் ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சடங்காகும். இதன் தொடர்ச்சியே மலையகத்திலும் 'வீட்டுக்கு அழைத்தல்' என்ற முறையில் செய்யப்படுகின்றது. ஒரு நபர் இறந்து ஓராண்டு நிறைவடைந்த பிறகு அல்லது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு, காற்றில் அலைந்து கொண்டிருப்பதாகக் கருதப்படும் அந்த ஆன்மாவை முறைப்படி அழைத்து வந்து வீட்டின் முன்னோராக அல்லது காவல் தெய்வமாக நிலைநிறுத்துவதே இந்தச் சடங்கின் சாராம்சம்.



பித்ரு தர்ப்பணம்
Image Source - www.indiamart.com

தமிழர் மரபில் இறப்பு என்பது ஒரு முடிவல்ல; அது ஒரு நிலை மாற்றம் மட்டுமே. இறந்தவர்கள் 'தென்புலத்தார்' என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களின் வாரிசுகளைக் காக்கும் சக்திகளாக மாறுகிறார்கள் என்பது நம்பிக்கை. ஒரு நபர் இறந்தவுடன் அவரது ஆன்மா உடனடியாகத் தெய்வ நிலையை அடைவதில்லை. ஒரு வருடம் வரை அந்த ஆன்மா பித்ரு லோகத்திலோ அல்லது வெளியிலோ தங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது. அந்த ஓராண்டு காலத் தீட்டு முடிந்தவுடன் அந்த ஆன்மாவைத் தனிமைப்படுத்தாமல் மீண்டும் தன் சொந்த வீட்டிற்கே அழைத்து வந்து குடும்பத்தோடு இணைப்பதே 'வீடு எடுத்தல்' ஆகும்.

இச்சடங்கின் தொன்மம் மற்றும் வரலாற்றைப் பற்றி அறிவது முக்கியமானது. இது ஆரியப் பண்பாடு கலப்பதற்கு முந்தைய மெய்யியல் மற்றும் நடுகல் வழிபாட்டு முறையோடு ஆழமான தொடர்புடையதாகும். இதன் வரலாற்றுப்

பின்னணியை ஐந்து முக்கியக் கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒன்று, நடுகல் வழிபாடு. இந்தச் சடங்கின் மிக முக்கியமான தொன்மம் 'நடுகல்' மரபாகும். சங்க காலத்தில் (சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்) போரில் வீர மரணம் அடைந்த அல்லது ஊரைக் காத்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்தது. தொல்காப்பியம் மற்றும் புறநானூறு ஆகிய நூல்கள் வீரர்களைத் தெய்வமாக்கும் முறையை விளக்குகின்றன. எல்லைக்குச் சென்று கல்லைத் தேர்ந்தெடுத்து, அதை நீரில் நீராட்டி, முறைப்படி வீட்டிற்கோ அல்லது ஊர் பொது இடத்திற்கோ கொண்டு வந்து நட்டு வழிபடுவதே இன்றைய 'வீடு எடுத்தல்' சடங்கின் ஆதி வடிவம்.

இரண்டாவது, 'தென்புலத்தார்'. தமிழர்கள் இறந்தவர்களை 'தென்புலத்தார்', அதாவது தெற்குத் திசையில் வாழும் முன்னோர்கள் என்று அழைத்தனர். திருக்குறளில் "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்று வள்ளுவர் கூறுகிறார். அதாவது, தெய்வத்திற்கு முன்பாக முன்னோர்களுக்கே (தென்புலத்தார்) முதலிடம் அளிக்கப்பட வேண்டும். இறந்தவர் காற்றில் அலைவது குடும்பத்திற்குப் பாதுகாப்பற்றது என்றும், அவர் வீட்டுக்குள் வந்துவிட்டால் 'காவல் தெய்வமாக' மாறிச் சந்ததியினரைக் காப்பார் என்பதும் தமிழர்களின் தொன்மையான நம்பிக்கை.

மூன்றாவது, ஆவி வழிபாடும் குலதெய்வ உருவாக்கமும். வரலாற்று ரீதியாக இன்று நாம் வணங்கும் பல குலதெய்வங்கள் ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்த மனிதர்களே. ஒரு குடும்பத்தில் அகால மரணமடைந்தவர்களை அல்லது பெரும் சாதனைகள் புரிந்து இறந்தவர்களை, மீண்டும் வீட்டிற்கு அழைத்து வந்து 'சுடலை மாடன்', 'பேச்சியம்மாள்' போன்ற பெயர்களில் வழிபடத் தொடங்கினர். 'வீடு எடுத்தல்' என்பது ஒரு சாதாரண மனித ஆன்மாவை வழிபாட்டிற்குரிய 'குலதெய்வமாக' மாற்றும் ஒரு வரலாற்றுப் பரிணாமச் சடங்காகும்.

நான்காவது, சமண மற்றும் பௌத்தத் தாக்கம். தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் உருவ வழிபாட்டை விட 'நினைவுச் சின்னங்களுக்கு' முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இறந்தவர்களின் நினைவாக எழுப்பப்பட்ட 'பள்ளிப்படைக் கோயில்கள்' இதன் ஒரு வளர்ச்சியே. சாதாரண மக்கள் பெரிய கோயில்களைக் கட்ட முடியாமல், தங்கள் முன்னோர்களை ஒரு கல் வடிவிலோ அல்லது அடையாளப் பொருளிலோ வீட்டுக்கு அழைத்து வந்து வணங்கும் எளிய முறையைப் பின்பற்றினர்.

ஐந்தாவது, சமூகப் பரிமாணம். வரலாற்று ரீதியாக ஒரு குடும்பத்தில் தீட்டு என்பது சமூகப் புறக்கணிப்பாகக் கருதப்பட்டது. இறந்த ஒரு வருடம் வரை அந்தக் குடும்பத்தினர் ஊர்ப் பொது நிகழ்வுகளில் பங்கேற்க முடியாது. 'வீடு எடுத்தல்' சடங்கு என்பது அந்தத் தீட்டை அதிகாரபூர்வமாக நீக்கி, அந்தக் குடும்பத்தை மீண்டும் சமூகத்தோடு இணைக்கும் ஒரு சமூக அங்கீகாரச் சடங்காக வரலாற்றில் உருவெடுத்தது.

இச்சடங்குகள் தமிழரின் வாழ்வியலோடு ஆரம்பத்தில் இருந்தே மலர்ச்சியடைந்து வந்துள்ளமையை இலக்கிய ஆதாரங்களுக்கூடாக நோக்கும் போது, சங்க இலக்கியங்களில் 'நடுகல் வழிபாடு' குறித்த செய்திகள் ஏராளமாக உள்ளன. நடுகல் எடுக்கும் முறை, அதாவது இறந்த வீரனைத் தெய்வமாக்க எடுக்கப்படும் ஆறு நிலைகளைப் பற்றித் தொல்காப்பியம் விளக்குகிறது. இன்று பூசாரி செய்யும் சடங்குகளோடு இது நெருங்கிய தொடர்புடையது.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல் சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தென்று" (தொல்காப்பியம், பொருளதிகாரம் - 63)

காட்சி என்பது கல்லைத் தேர்ந்தெடுத்தல் (இன்று பூசாரி ஆற்றங்கரையில் கல்லைத் தேடுவது), நீர்ப்படை என்பது கல்லைத் தூய்மைப்படுத்துதல் (மஞ்சள் நீராட்டு), நடுதல் என்பது முறைப்படி நிலைநிறுத்துதல் (வீட்டில் குடிவைத்தல்), வாழ்த்தல் என்பது புகழ்ந்து பாடுதல் (பூசாரி பாடும் அழைப்புப் பாடல்கள்), பெயரும் பீடும் எழுதுதல் (இறந்தவரின் பெயரைச் சொல்லி அழைக்கும் இன்றைய முறை) என்றவாறு இன்றைய சடங்குகளோடு ஒத்துப்போவதாக இப்பாடல் அமைகிறது.

"பெயரும் பீடும் எழுதி அதர்தொறும் பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (புறநானூறு - 264)

இறந்த வீரனின் பெயரையும் அவனது பெருமையையும் (பீடு) கல்லில் எழுதி, அதற்கு மயில் தோகைகளைச் சூட்டி வழிபட்டனர். இன்றும் 'வீடு எடுத்தல்' சடங்கில் இறந்தவரின் வம்சாவளியைப் பூசாரி பாடுவதை இதோடு ஒப்பிடலாம்.

அடுத்து, படையல் இடுதல். இன்று 'வீடு எடுக்கும்போது' இறந்தவருக்குப் பிடித்த உணவுகளைப் படைப்பது போல, சங்க காலத்திலும் படையல் இட்டனர். ஆதாரமாக:

"பரல்நடைப் படுத்த பசுந்தடிப் பிண்டம் நடுகல் பீலி சூட்டி நாரரி தேறல் மாந்தி..." (அகநானூறு - 35)

நடுகல்லுக்கு மயில் பீலி சூட்டி, ஊன் சோற்றைப்

(இறைச்சி கலந்த சோறு) படையலாக இட்டு, கள்ளைப் பருகி மக்கள் வழிபட்டனர். இது இன்றைய 'அசைவப் படையல்' முறையின் தொன்மமாகும். மேலும் வில்லும் வேலும் சாற்றுதல், இறந்தவர் பயன்படுத்திய பொருட்களை வைத்து வணங்கும் முறை ஆகியனவும் விளக்கப்படுகிறது.

"வில்லும் வேலும் தொலையாத் தகைப்பின் பல்லவர் ஏத்தும் படிவழி நடுகல்" (மலைபடுகடாம் - 394)

வீடு எடுத்தல் சடங்கில் இறந்தவர் பயன்படுத்திய கத்தி, கைத்தடி அல்லது உடைகளை வைத்து வணங்குவது இந்தத் தொன்மையான 'ஆயுத வழிபாட்டின்' தொடர்ச்சியே ஆகும்.

சமூகவியல் மற்றும் மானிடவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் நோக்கும் போது, இது வெறும் ஒரு சடங்காக மட்டுமன்றி சமூகத்தின் கட்டமைப்பு மற்றும் மனித உளவியலின் வெளிப்பாடாக அமைகிறது. இதனை விளக்கும் முக்கிய மேலைத்தேயக் கோட்பாடுகளை நோக்குவது அவசியமாகின்றது. எமில் துர்கெய்மின் புனிதமும் சாதாரணமும் (Sacred and Profane) என்ற கருத்தை நோக்கும் போது, இறந்த ஒரு சாதாரண மனிதரை (Profane) சடங்குகளின் மூலம் புனிதமான ஒரு தெய்வமாக (Sacred) மாற்றுவதன் மூலம் அந்தச் சமூகத்தின் விழுமியங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

மேலும் ஆர்னால்ட் வான் கென்னப்பின் 'நிலை மாற்றச் சடங்குகள்' (Rites of Passage) கோட்பாட்டை நோக்கும் போது, இவர் மனித வாழ்க்கையின் மாற்றங்களை மூன்று நிலைகளாகப் பிரிக்கிறார். முதலாவது பிரிவு (Separation) - மரணம் ஒரு நபரைச் சமூகத்திலிருந்து பிரிக்கிறது. இடைநிலை (Liminality) - இறந்ததிலிருந்து 'வீடு எடுத்தல்' சடங்கு நடைபெறும் வரை அந்த ஆன்மா சமூகத்திற்கும் தெய்வ நிலைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் அலைவதாகக் கருதப்படுகிறது. இணைப்பு (Incorporation) - 'வீடு எடுத்தல்' சடங்கு மூலம் அந்த ஆன்மா மீண்டும் குடும்பத்திற்குள் ஒரு 'தெய்வமாக' இணைக்கப்படுகிறது. இதுவே அந்த மாற்றத்தின் முழுமையாகும்.

மேலும் சிக்மண்ட் பிராய்டின் 'துயரமும் துயரம் களைதலும்' (Sigmund Freud - Mourning and Melancholia) கோட்பாட்டின்படி உளவியல் ரீதியாகப் பார்த்தால், இந்தச் சடங்கு ஒரு 'ஆன்மீகச் சிகிச்சை' ஆகும். ஒரு பிரியமானவரை இழந்த துயரத்தில் இருக்கும் குடும்பத்தினர் "அவர் மீண்டும் வீட்டுக்கே வந்துவிட்டார்; இனி நம்மைப் பாதுகாப்பார்" என்று நம்புவது அவர்களின் ஆழ்மன அழுத்தத்தைக் குறைக்கிறது. இறந்தவரை ஒரு பயங்கரமான ஆவியாகப் பார்க்காமல், அன்பான தெய்வமாக மாற்றும் இந்த உளவியல் மாற்றம் குடும்பத்தினரின் குற்ற உணர்வை நீக்கி நிம்மதியைத் தருகிறது.

'வீட்டுக்கழைத்தல்' என்பது வெறும் சடங்கு மட்டுமல்ல; அது ஒரு சமூக இயந்திரம். இது மரணம் என்ற இழப்பை ஒரு புனிதமான வழிபாட்டு நிகழ்வாக மாற்றி, குடும்ப உறுப்பினர்களின் மன அழுத்தத்தைக் குறைத்து, தலைமுறை தலைமுறையாகத் தொடரும் ஒரு கலாசாரத் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.


ஹெர்பர்ட் ஸ்பென்சரின் 'முன்னோர் வழிபாட்டுக் கோட்பாடு' குறிப்பிடத்தக்கது. ஸ்பென்சர் தனது சமூகவியல் கோட்பாடுகளில் மனிதர்களின் மத நம்பிக்கையின் ஆரம்பப் புள்ளியே 'ஆவி வழிபாடு' (Ghost Worship) தான் என்கிறார். ஆதி மனிதன் கனவில் தோன்றும் இறந்தவர்களின் உருவங்களைக் கண்டு பயந்து, அவர்களைத் திருப்திப்படுத்த உணவும் வழிபாடும் செய்தான். மலையகத்தில் 'வீட்டுக்கு அழைத்தல்' சடங்கில் படையலிடுதல் மற்றும் பூசாரி பாடும் பாடல்கள், ஸ்பென்சரின் இந்தக் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில், மரணத்திற்குப் பிந்தைய வாழ்வு குறித்த மனிதனின் ஆதி நம்பிக்கையை நிரூபிக்கின்றன.

மரணம் ஏற்படுத்திய வெற்றிடத்தை 'தெய்வம்' என்ற புதிய அடையாளத்தால் நிரப்புவதன் மூலம் அந்தச் சமூகம் தனது தொடர்ச்சியை உறுதி செய்கிறது. மேலே குறிப்பிட்ட மேலைத்தேயக் கோட்பாடுகளைக் கொண்டு 'வீட்டுக்கு அழைத்தல்' சடங்கு எவ்வாறு ஒரு குடும்பத்தின் உளவியல் மற்றும் சமூகச் சமநிலையை மீட்டெடுக்கிறது என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

மலையகத்தில் பொதுவாக ஒரு நபர் இறந்து ஓராண்டு முடிந்த பிறகு வரும் அதே நாட்களில் இந்தச் சடங்கு நடத்தப்படும். குடும்பத்தில் ஏதேனும் சுப காரியங்கள் (திருமணம், காதுகுத்து) செய்யத் திட்டமிடும்போது, அதற்கு முன்னதாக முன்னோர்களின் ஆசி வேண்டி இந்தச் சடங்கைச் செய்வது கட்டாயமாகக் கருதப்படுகிறது. இந்தச் சடங்கு பெரும்பாலும் ஒரு பூசாரி அல்லது குடும்பப் பெரியவர் முன்னிலையில் மாலை ஆறு அல்லது ஏழு மணிக்குத் தொடங்கும். அந்த நேரத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீட்டில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம். பூசாரியே 'வீட்டுக்கு அழைத்தல்' சடங்கில் முக்கியமானவர். இறந்தவர் எந்த அறையில் இறந்தாரோ அந்த அறையிலேயே இந்தச் சடங்கு நிகழ்த்தப்படும். சில நேரங்களில் வேறு ஏதாவது இடத்தில் இறந்து பின்னர் வீட்டுக்குக் கொண்டுவந்திருந்தால், பிரேதம்

வைக்கப்பட்ட அந்த இடத்தில் இந்தச் சடங்கை நிகழ்த்துவர். இச்சடங்கு நிகழ்ச்சிக்கு 'உடுக்கை' மிகவும் முக்கியமானது. அத்தோடு கையில் சாட்டையும் 'சக்தி' பொருந்திய தடியும் (சில இடங்களில் மந்திரக் கோல் என்று சொல்வார்கள்) இருக்கும். இவற்றைப் பூசாரி வைத்திருப்பார். தரையில் அமர்ந்து கொண்டுவந்த பொருட்கள் அனைத்தையும் முறையாக அடுக்கி வைப்பார், பூசாரி. விளக்கு, கற்பூரம், இளநீர், தின்பண்டங்கள், தேங்காய், சாராயம், சுருட்டு, நூல் என்பன முக்கியமான பொருட்கள். முதலாவதாக முத்துகளைப் போட்டு சம்பிரதாயமாக 'வீட்டுக்கு அழைத்தல்' சடங்கைப் பூசாரி தொடங்குவார். பின்னர் மெதுவாக உடுக்கை இசைத்துப் பாடல்களைப் பாடுவார். இதில் பல்வேறு காவல் தெய்வங்களையும் — உதாரணமாக மாரி, காளி, மாடன், மதுரைவீரன் போன்ற தெய்வங்களை — அழைத்து, அந்தத் தெய்வங்களிடமிருந்து தான் இந்த ஆத்மாவை வீட்டுக்கு அழைத்து வரப்போகிறேன்; அதற்குத் துணையாக நீங்களும் என்னோடு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்வார். இவ்வாறு அழைக்கப்படும் தெய்வங்கள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுகின்றன. இறுதியாக மாடனை அழைத்து, மாடனோடு வீட்டின் உறவினர் ஒருவரையும் அவரோடு இன்னும் சில ஆண்களையும் சேர்ந்து ஆத்மாவை அழைத்து வரச் சொல்வார்கள். பெரும்பாலும் பங்காளிகள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் ஊர் எல்லைக்கோ, ஆற்றங்கரைக்கோ அல்லது இறந்தவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கோ செல்வார்கள். இறந்தவருக்குப் பிடித்த உணவுகள் (சைவம் அல்லது அசைவம்), சுருட்டு, வெற்றிலை பாக்கு, துணிமணிகள் போன்றவை படையலாகக் கொண்டு செல்லப்படும். பூசாரி உடுக்கையடித்து பாடல்களைப் பாடி இறந்தவரின் ஆன்மாவை அந்த இடத்திற்கு வருமாறு அழைப்பார். இறந்தவரின் பெயரைச் சொல்லி, "நீ எங்களை விட்டுப் போகவில்லை; மீண்டும் உன் வீட்டிற்கே வந்து எங்களைக் காக்க வேண்டும்" என்று உருக்கமாக வேண்டுவார்கள்.

அந்த ஆன்மா வந்ததற்கான அடையாளமாக ஒரு கல்லைத் தேர்ந்தெடுப்பார்கள் அல்லது ஒரு செப்புக் கலசத்தில் புனித நீரை நிரப்பி அதில் அந்த ஆன்மாவை ஆவாகனம் செய்வார்கள். சில பகுதிகளில் பூசாரி ஒரு கத்தியை ஏந்தி அதன் நுனியில் ஒரு பூவை வைப்பார். அந்தப் பூ அசையும்போது ஆன்மா வந்துவிட்டதாகக் கருதப்படும். பெரும்பாலும் பூசாரி அல்லது வீட்டில் நெருங்கிய உறவினரின் உடலிலும் ஆத்மா புகுந்து கொள்ளும். ஆன்மா புகுந்த நபர் அந்த இறந்த நபர்



உடுக்கை

Image Source - commons.wikimedia.org

போலவே பிரதி செய்வார். நம்பிக்கையை நீக்கிப் பார்க்கும் போது, இது ஓர் ஆற்றுகை போலவே தோன்றும். இது பெரும்பாலும் நள்ளிரவு 12 மணியளவில் தான் நடைபெறும். பின்னர் அனைவரும் ஊர்வலமாக வீட்டிற்கு வருவர். ஆன்மா குடிகொண்டதாகக் கருதப்படும் பூசாரி அல்லது நபர் முன்னால் ஆடிக்கொண்டே வருவார். அவர் கையில் அடையாளக் கல் அல்லது பிடி மண் இருக்கும்; அதனையும் சுமந்து கொண்டு ஆடி வருவார். பின்னால் உறவினர்கள் ஒப்பாரி வைத்து அழுதுகொண்டு வருவார்கள். வழியில் சந்திக்கும் கோவில்களில் வழிபாடு நடத்தப்பட்டு, ஊர் எல்லையில் ஒரு தேங்காய் உடைக்கப்படும். இது அந்த ஆன்மாவுடன் வரும் பிற தீய சக்திகளைத் தடுப்பதற்காகச் செய்யப்படுவதாகும். வீட்டிற்கு வந்தடைந்ததும் சுமந்து வந்த கல்லை அல்லது பிடி மண்ணை நேரடியாக உள்ளே கொண்டு செல்ல மாட்டார்கள். வீட்டின் வாசலில் கழிப்புக் கழிப்பார்கள். பின்னர் இறந்தவரின் காலடிகள் வீட்டிற்குள் நுழைவதைக் குறிக்கும் வகையில் வாசலில் மஞ்சள் நீர் தெளிக்கப்படும். வீட்டின் பூஜை அறையில் அல்லது ஒரு தனிப் பகுதியில் அந்த அடையாளப் பொருள் (கல் அல்லது பிடி மண்) வைக்கப்படும். அதன் மீது புதிய ஆடைகள் சாற்றப்பட்டு, சந்தனம், குங்குமம் இட்டு அலங்கரிக்கப்படும். அப்போது முதல் அந்த ஆன்மா அந்த வீட்டின் 'காவல் தெய்வமாக' மாறுகிறது. இதற்குப் பிறகு அவர்கள் 'முன்னோர்கள்' அல்லது 'சாமி' என்று அழைக்கப்படுவார்கள். இந்தச் சடங்கில் தந்தை வழி உறவினர்கள் அனைவரும் கலந்துகொள்வது அவசியம். இது குடும்பப் பிணைப்பை வலுப்படுத்துகிறது. வீட்டுக்கு அழைத்தல் என்பது

வெறும் சடங்கு மட்டுமல்ல. அது தமிழர்களின் நன்றியுணர்வையும் முன்னோர்கள் மீதான தீராத அன்பையும் பறைசாற்றும் ஒரு நிகழ்வு. “நீ இறந்த பிறகும் எங்களோடுதான் இருக்கிறாய்” என்ற ஆறுதலை குடும்பத்தினருக்கு இந்தச் சடங்கு வழங்குகிறது. நவீன காலத்தில் பல மாற்றங்கள் வந்தாலும், கிராமப்புறங்களில் இன்றும் இந்த மரபு அதன் தொன்மை மாறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சடங்கு முறையில் மாவட்டத்திற்கு மாவட்டம் மற்றும் சமூகத்திற்குச் சமூகம் சில மாற்றங்கள் இருக்கின்றன; ஆனால் மரபு தொடர்ந்து பேணப்பட்டுக் கொண்டிருக்கிறது. ‘கிராமியத் தெய்வ வழிபாட்டு’ முறையைப் பின்பற்றுபவர்களிடையே இது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

வீட்டுக்கு அழைத்தல் சடங்கில் பாடப்படும் மந்திரங்களும் பாடல்களும் மிகவும் உருக்கமானவை. இவை பெரும்பாலும் ‘அழைப்புப் பாடல்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. இறந்தவர் எங்கு இருந்தாலும் பாசத்திற்குக் கட்டுப்பட்டு மீண்டும் தன் இல்லத்திற்கு வர வேண்டும் என்பதே இப்பாடல்களின் மையக்கருத்து. அந்தப் பாடல்களில், திசை போற்றி மற்றும் எல்லைத் தெய்வ வழிபாடு முதலில் இடம்பெறும். பூசாரி அந்த ஆன்மாவை அழைப்பதற்குக் காவலாக ஊர் எல்லைத் தெய்வங்களையும் திசைத் தெய்வங்களையும் நோக்கிப் பாடுவார். உதாரணமாக பின்வரும் பாடலை குறிப்பிடலாம்.

*“எல்லைக் கருப்பாயி...*
*எம்மைக் காக்கும் பிடாரியே!*
*செல்லும் வழி விடம்மா...*
*சேதி சொல்ல நேரமாச்சு!*
*காத்து கருப்பு அண்டாம...*
*கை கொடுத்துக் கூட்டி வர*
*கோட்டை வாசல் திறந்து...*
*வழி விடம்மா மாரியம்மா!”*

மேலும் ஆன்மாவைத் தேடி அழைக்கும் பாடல்களில், ஆன்மா எங்கு தங்கியிருக்கும் என்று ஊகித்து, பூசாரி அவ்விடங்களைச் சொல்லி அழைத்து வருவார். இறந்தவர் அடக்கம் செய்யப்பட்ட இடம், அவர் வாழ்ந்த இடங்கள் ஆகியவற்றை இப்பாடல் விவரிக்கும்.

*“காட்டோரம் போயிருப்பியோ...*
*கானகத்தில் நின்றிருப்பியோ?*
*ஆத்தோரம் அமர்ந்திருப்பியோ...*
*ஆலமர நிழலிருப்பியோ?*
*பேரச் சொல்லி அழைக்க வந்தோம்...*
*பிஞ்சு முகம் பார்க்க வந்தோம்!*
*வாசம் உள்ள வீட்டிற்கு...*
*வரிசையோடு வாரும் ஐயா”*

மேலும் இறந்தவர் விட்டுச் சென்ற பிள்ளைகள், பேரன், பேத்திகள் படும் துயரத்தைப் பாடி, ஆன்மாவின் மனதைக் கரைக்க பூசாரி முயல்வார். இது சடங்கில் கலந்துகொள்பவர்களை மிகவும் நெகிழ்ச்சியடையச் செய்யும்.

*“பெத்த பிள்ளை அழுகுதைய்யா...*
*வாசல் படி பார்க்குதைய்யா!*
*கட்டிய பொண்டாட்டி...*
*கண்ணீரில் நிற்குதையா!*
*பங்காளிக் கூட்டம் எல்லாம்...*
*பந்தி வைக்கக் காத்திருக்கு!*
*சொந்தம் எல்லாம் கூடி நிற்க...*
*சோகம் தீர்க்க வாரும் ஐயா!”*

அடுத்து, வீட்டின் பெருமையையும் படையலையும் பாடுதல், வீட்டிற்கு வந்தால் என்னென்ன சிறப்புகள் காத்திருக்கின்றன, என்னென்ன உணவுகள் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பூசாரி விவரிப்பார்.

*“மஞ்சள் நீர் தெளிச்சிருக்கோம்...*
*மங்கலமாய் காத்திருக்கோம்!*
*புத்தாடை எடுத்திருக்கோம்...*
*பூச்சூடி அழைக்க வந்தோம்!*
*பிடிச்ச சோறு படைச்சிருக்கோம்...*
*பிரியமா வாரும் ஐயா!*
*குலதெய்வம் ஆகி நின்று...*
*குறைகளைத் தீர்க்க வாரும்..”*

இப்பாடல்களின் மெட்டு பெரும்பாலும் ‘ஒப்பாரி’ மற்றும் ‘சிந்து’ மெட்டுகளின் கலவையாக இருக்கும். ஆரம்பத்தில் மெதுவாகத் தொடங்கி, ஆன்மா வருவதாகக் கருதப்படும் நேரத்தில் உடுக்கைச் சத்தம் வேகமெடுக்கும். அந்த நேரம் உடுக்கையும் ஆட்டமும் அதிகமாகும். பார்ப்பவரை நடுங்க வைக்கும் தன்மை அதில் இருக்கும்; அது பூசாரியின் குரல்வளத்திலும் வெளிப்படும். பூசாரி பாடும்போது கையில் வேப்பிலை அல்லது பிரம்பை வைத்துக்கொண்டு நிலத்தில் தட்டி ஆவேசமாகப் பாடுவார். இந்தப் பாடல்களைப் பாடி முடிக்கும்போது ஒரு பூ விழுந்தாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட அடையாளம் தெரிந்தாலோ, ஆன்மா

பாசத்திற்குக் கட்டுப்பட்டு வந்துவிட்டதாக மக்கள் நம்புகிறார்கள். பின்னர் அடுத்த நாள் காலை திவசம் இடம்பெறும். இந்தச் சடங்குகள் பெரும்பாலும் குடும்ப வழக்கம் மற்றும் சாஸ்திரங்களின்படி மாறுபட்டாலும், பொதுவான நடைமுறைகளை நோக்கும் போது, முதலாவதாக ஒரு வருடத் தீட்டுக் கழித்தல் இடம்பெறும். இறப்பு நிகழ்ந்த ஒரு வருடத்திற்குள் அந்தக் குடும்பத்தில் சுப காரியங்கள் தவிர்க்கப்படும். ஓராண்டு முடிவில் செய்யப்படும் இந்தச் சடங்கிற்குப் பிறகு குடும்பத்தினர் மீண்டும் கோவிலுக்குச் செல்லவும், பண்டிகைகளைக் கொண்டாடவும் அனுமதிக்கப்படுவர்.

அடுத்து சிராத்தம் என்று சொல்லப்படும் சடங்கு நடைபெறும். இறந்த அதே தமிழ் மாதம் மற்றும் அதே திதியில் இந்தச் சடங்கு செய்யப்படும். புரோகிதர்கள் முன்னிலையில் மந்திரங்கள் ஓதி, இறந்தவரின் ஆன்மா சாந்தியடைய வழிபாடு நடத்தப்படும். அரிசி மற்றும் எள் கலந்து பிண்டங்கள் செய்து, முறைப்படி நீர் வார்த்து முன்னோர்களுக்கு அர்ப்பணிக்கப்படும். இறுதியாகத் தானங்கள் வழங்குதல் இடம்பெறும். ஆண்டுத் திதியன்று தானம் செய்வது மிகுந்த புண்ணியமாகப் பார்க்கப்படுகிறது. புரோகிதர்களுக்கு வேட்டி, அரிசி, காய்கறிகள் மற்றும் தட்சிணை வழங்கும் வழக்கம் காணப்படுகிறது. அடுத்து முக்கியமானது அன்னதானம். இறந்தவரின் நினைவாக உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் ஏழை எளியோருக்கும் அறுசுவை உணவு வழங்குவது மலையகத்தில் மிக முக்கியமான நடைமுறையாகும். மறைந்தவருக்குப் பிடித்த உணவுகளைப் படைத்து வழிபடுவதும் வழக்கம். பின்னர் பந்தி போடுதல் நடைபெறும். சடங்கு முடிந்ததும் ஊர் மக்களுக்கும் உறவினர்களுக்கும் பெரிய அளவில் விருந்து வைக்கப்படும். இதனைச் ‘சாமி கும்பிடுதல்’ என்று கிராமங்களில் அழைப்பார்கள்.

மலையகத்தில் ஓர் இறந்த ஆத்மா எவ்வாறு ஒரு குடும்பத்தின் குலதெய்வமாக மாறுகிறது என்பதை மேற்குறிப்பிட்ட சடங்கு முறைகள் ஊடாக விளங்கிக் கொள்ளலாம். இக்குலதெய்வம் பல தலைமுறைகள் கழித்து ஊர்க் கோவிலில் தெய்வமாக வழிபடப்படுகின்றது. உதாரணமாக, கருப்பண்ணசாமிக்கு அருகிலிருக்கும் சின்னக் கருப்பு, முனியாண்டி போன்றோர் பெரும்பாலும் இத்தகைய சடங்குகள் மூலம் தெய்வமாக்கப்பட்ட முன்னோர்களே ஆவர். ஏன் இது குலதெய்வமாக மாறுகிறது? என்றால் முதன்மையானது நன்றியுணர்வு. அந்த முன்னோரின் உழைப்பால் உருவான சொத்து அல்லது வம்சத்தை அனுபவிக்கும் சந்ததியினர் அவருக்குச் செய்யும் மரியாதையே இதன் அடிப்படை. அடுத்து பயமும் பக்தியும். மறைந்த முன்னோரின் ஆசி இல்லாவிட்டால் குடும்பத்தில் சுப காரியங்கள் தடைபடும் என்ற நம்பிக்கை இதனுடன் இணைந்துள்ளது. இறுதியாக, பாதுகாப்பு. வீட்டின் வாசலில் அல்லது மாடத்தில் அமர்ந்து அந்த ஆன்மா குடும்பத்தைக் காக்கும் என்ற ஆழமான நம்பிக்கை நிலவுகிறது. சுருக்கமாகச் சொன்னால், “மண்ணில் வாழ்ந்த மனிதன் - சடங்கால் தூய்மைப்படுத்தப்பட்டு, நம்பிக்கையால் தெய்வமாகி, காலத்தால் குலதெய்வமாக” நிலைபெறுகிறார். குலதெய்வ வழிபாடு என்பது வெறும் கடந்த காலத்தின் நினைவுப் பதிவு அல்ல; அது எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தும் ஒரு வாழ்வியல் முறையாகும். ஒரு மரத்தின் வேர்கள் எவ்வளவு ஆழமாக மண்ணில் புதைந்துள்ளனவோ, அவ்வளவு உறுதியாக அந்த மரம் வளரும். அதுபோல மனித வாழ்வின் வேர்கள் அவனது முன்னோர்களிடம் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணைகள் நூல்கள்


சிவத்தம்பி, க., 1993. இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும். உதயம் நிறுவனம். கொழும்பு.

சிவரத்தினம், சு., 2008. சடங்குகளினூடாக மட்டக்களப்பு. விபுலம் பதிப்பகம். மட்டக்களப்பு.

சோமசுந்தரம், அ., (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்து வாழ்வியல் சடங்குகள்.

தருமராஜன், டி., 2006. சனங்களின் சாமிகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தமிழ்நாடு, இந்தியா.

தர்ஸ்டன், எட்கர். 2025. தென்னிந்திய ஈமச் சடங்குகள். மொழிபெயர்ப்பு, வானதி. சுவாசம் பதிப்பகம். சென்னை.

பக்தவத்சல பாரதி., 2012. மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் வெளியீடு, சென்னை.

மௌனகுரு, சி., 1988. சடங்கிலிருந்து நாடகம் வரை. நாகலிங்கம் நூலாலயம். யாழ்ப்பாணம்.

வேல்முருகு, ந., 1993. மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். வாசகர் பதிப்பகம்.

சஞ்சிகைகள்

குன்றின் குரல், ஆண்டு 12, இதழ் 03, ஜூலை – செப்டம்பர் 1993, பக். 19–20

குன்றின் குரல், ஆண்டு 13, இதழ் 01, ஜனவரி – மார்ச் 1994, பக். 19–20

நட்புறவுப் பாலம், இதழ் 12, செப்டம்பர் 1987, பக். 14–16

நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர், ஆகஸ்ட் 1993, பக். 25–27

பண்பாடு, இதழ் 02, செப்டம்பர் 1992, பக். 30–56

'அரசறிவியல் கலைக்களஞ்சியம்' (Encyclopedia Of Political Science) என்னும் தலைப்பில் அமையும் இத் தொடரில் அரசியல் கோட்பாடுகள் (Political Theories), அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்கள் (Concepts) சமகால அரசியல் விவாதங்கள் என்பன குறித்த கட்டுரைகள் வெளியிடப்படவுள்ளன. பொதுவெளியில் (Public Sphere) நடைபெறும் அரசியல் விவாதங்களை ஆரோக்கியமுடையனவாக ஆக்குவதற்கு, அரசியல் கருத்தாக்கங்கள் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துவதும், சமூகத்தின் பல மட்டங்களிற்கும் அரசியல் அறிவை எடுத்துச் செல்வதும் அவசியமான பணி என நாம் உணருகின்றோம். தமிழ் அரசியல் சூழலில் நிலவும் கோட்பாட்டு வறுமையை (Theoretical Poverty) நீக்குவதற்கு இக் கட்டுரைத் தொடர் உதவும் என்பது எமது நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் மூலதனம் (Intellectual Capital) ஒரு சிறு மேட்டிமைக் குழுவிடம் (Elite Group) குவிந்திருப்பதை நீக்கி, அறிவுச் செல்வத்தின் மறுபங்கீட்டின் மூலம் சமூக விடுதலை, ஜனநாயக மயப்படுத்தல், அடிமட்டத்தினர் அதிகாரத்தில் பங்கேற்றல் ஆகிய இலக்குகளை அடைதல் இத் தொடரின் நோக்கமாகும்.

*ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட*

# அதிகாரம்:
# ஓர் அரசியல் மெய்யியல் விளக்கம்

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

### அதிகாரம்

அதிகாரம் (Power) என்னும் கருத்தாக்கம் அரசியல் கோட்பாடுகள் பற்றிய ஆய்வில் முதன்மையான ஆய்வுப் பொருளாக அமைந்துள்ளது. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தோமஸ் ஹொப்ஸ் முதல் 19 ஆம் நூற்றாண்டினரான கார்ல் மார்க்ஸ், 20 ஆம் நூற்றாண்டின் அரசியல் சிந்தனையாளர்களான மக்ஸ் வெபர், றொபர்ட் டால் (Robert Dahl), ஹன்னா அரன்ட் (Hannah Arendt) வரை பலர் அதிகாரம் பற்றிய ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளனர். பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்கள் 'அதிகாரம்' என்னும் கருத்தாக்கம் பற்றி 'Politics as a Relation of Power' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அவர் எழுதிய 'Politics and Political Science - A Contemporary Introduction' (2018) என்னும் நூலின் 5 ஆவது அத்தியாயமாக (பக். 57-68) இக்கட்டுரை அமைந்துள்ளது. அரசியல் மெய்யியல் (Political Philosophy) நோக்கில் அதிகாரம் பற்றி ஆராயும் இத்தமிழ்க் கட்டுரை மேற்படி அத்தியாயத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. ஜயதேவ உயன்கொட அவர்களின் கருத்துகள் இக்கட்டுரையில் எளிமைப்படுத்தப்பட்ட வடிவத்தில் தரப்பட்டுள்ளன.

### அதிகாரம் (Power) பற்றிய வரைவிலக்கணம்

அரசியல் (Politics), அதிகாரம் (Power) என்னும் இரு கருத்தாக்கங்களும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டவையாக உள்ளன. அரசியல் விஞ்ஞானம் என்னும் கற்கைத் துறையை அதிகாரம் பற்றி ஆய்வு செய்வது (The Study of Power) எனச் சிலர் வரையறை செய்துள்ளனர்.

பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் மெய்யியலாளர் 1938 ஆம் ஆண்டில் 'Power: A New Social Analysis' என்னும் நூலை எழுதினார். அந்நூலில் அவர் அதிகாரம் (Power) என்றால் என்ன என்பதைப் பற்றி ஒரு வரைவிலக்கணத்தைக் கூறினார்: "பௌதிகவியலில் சக்தி (Energy) எவ்வாறு அடிப்படையான கருத்தாக்கமாக உள்ளதோ, அதனைப் போன்றே சமூக விஞ்ஞானங்களில் அதிகாரம் அடிப்படையான கருத்தாக்கமாக (Fundamental Concept) உள்ளது" (Russell, 1955:4). அதிகாரத்தை அடிப்படையான கருத்தாக்கமாகக் கூறும் ரஸ்ஸல், மனித இயல்பைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோலாகவும் அதிகாரம் என்ற கருத்தாக்கம் விளங்குகிறது என்றும் கூறினார். அதிகாரம் அரசியலின் அடிப்படையான கருத்தினம் (Power is the fundamental theme in politics) என்னும் எடுகோளை முன்வைத்து நாம் இவ்வுரையாடலைத் தொடர்வோம். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மேற்குறித்த நூலில் 'அரசியல் என்பது அதிகாரத்திற்கான போராட்டம்' (Politics is a struggle for power) என்றும் குறிப்பிடுகிறார். அவரின் இக்கூற்று சாதாரணமாக மக்கள் அரசியலை எப்படி புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதோடு ஒத்துப்போவதாக இருக்கிறது. அரசியல்வாதிகள் அதிகாரத்தின் மீது அளவற்ற பேராசை கொண்டு அலைவதை மக்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். 'அரசியல்வாதிகள் அதிகாரத்திற்கு அளவில்லா விருப்பம் கொண்டவர்கள்' (Politicians' Love for Power) என்று அவர்கள் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம்.

அதிகாரம் என்பது அரசியலின் மையக்கருத்து (Central Theme in Politics) என்பதை அரசியல் சிந்தனை வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ளலாம். இது 16 ஆம் நூற்றாண்டு முதல் மெய்யியலாளர்களால் ஆராயப்பட்டு வந்த கருத்தாக உள்ளது. மாக்கியவலி, ஹொப்ஸ், கார்ல் மார்க்ஸ் ஆகிய அரசியல் மெய்யியலாளர்களும் (Political Philosophers), இக்கால அரசியல் விஞ்ஞானிகளும் அரசியல் விஞ்ஞான ஆய்வில் அதிகாரம் என்பதை முதன்மைப்படுத்தியுள்ளனர். அரசியல் விஞ்ஞானம் அரசியலில் அதிகாரத்தினை முதன்மைப்படுத்துகிறது. இக்காரணத்தினாலேயே அரசியல் விஞ்ஞானம் இன்று தனித்தொரு கற்கைப் புலமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அரசியல் கோட்பாடு, அதிகாரம் என்பதை பிறரது செயற்பாடுகளையும், பிறர் எடுக்கும் முடிவுகளையும் தீர்மானிப்பதற்கு ஒருவரிடம் இருக்கும் ஆற்றல் என வரையறை செய்கிறது. எமது நடைமுறை வாழ்க்கையில் இருந்து ஓர் உதாரணத்தைக் கூறி இதனை விளக்கலாம். தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளை பெற்றோர் கட்டுப்படுத்துவதையும், அவர்களைத் தம் சொற்படி ஒழுக வைப்பதையும் நாம் காண்கிறோம் அல்லவா? இது போன்றதுதான் அரசியல் அதிகாரம் என்பதை அரசியல் கோட்பாடு விளக்கிக் கூறுகிறது. மனித உறவுகளின் ஒரு கூறாகவே அதிகாரம் பார்க்கப்படுகிறது.

### றொபர்ட் டால் வரைவிலக்கணம்

அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான றொபர்ட் டால் (Robert Dahl) அதிகாரம் என்பதை வரையறை செய்து விளக்கம் கூறிய முன்னோடியாவார். 1957 ஆம் ஆண்டில் அவர் பிரசுரித்த 'அதிகாரம் என்னும் கருத்தாக்கம்' (The Concept of Power) எனும் கட்டுரை அரசியல் கோட்பாட்டு வரலாற்றில் முக்கியமான ஓர் ஆக்கமாகும். அக்கட்டுரையில் அவர் அதிகாரம் என்பதைப் பற்றிய விரிவான விளக்கத்தை கூறினார். அவர் அதிகாரம் என்பதைப் பின்வருமாறு வரையறை செய்தார்: "A என்பவர் B மீது அதிகாரம் உடையவராக இருக்கிறார் என்று கூறும்போது, B சாதாரணமாகச் செய்ய முன்வராத ஒரு செயலை அவரைக் கொண்டு செய்விக்கும் ஆற்றலை A பெற்றிருக்கிறார் என்று

பொருள்படும். இதனையே அதிகாரம் என்று கூறுவர்." (*A has power over B to the extent that he can get B to do something that B would not otherwise do - Dahl, 1957, 202-03*).

றொபர்ட் டால் நடத்தைவாதம் (Behaviouralism) என்னும் அரசியல் சிந்தனைப்பள்ளியைச் சேர்ந்தவர். நடத்தைவாதியான அவர் அனுபவத்தின் அடிப்படையில் வலிதுடைய, உறுதிப்படுத்தக்கூடிய (Empirically Valid and Provable) ஆதாரங்களின் அடிப்படையில் அரசியல் கருத்தாக்கங்களை வடிவமைக்க வேண்டும் என்ற கருத்தை உடையவர். அவரின் அதிகாரம் பற்றிய வரைவிலக்கணம் நடத்தைவாத அணுகுமுறையின் அளவுக்கோல்களுக்குப் பொருந்துவதாக அமைந்தது. றொபர்ட் டால் அவர்களின் வரைவிலக்கணம் அரசியல் கோட்பாட்டிற்கு ஒரு முக்கிய பங்களிப்பாகும்.

டால் அவர்களின் வரைவிலக்கணம் நடத்தைவாத அரசியல் கோட்பாட்டாளர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால் நடத்தைவாதிகள் அல்லாத அரசியல் விஞ்ஞானிகள் (Nonbehavioural Political Scientists) அவரது கருத்தை ஏற்காமல், அதனை விமர்சனம் செய்தனர்; அவரது வரைவிலக்கணத்தின் போதாமைகளைச் சுட்டிக்காட்டினர். பிறர் மீது செல்வாக்குச் செலுத்துதல் அதிகாரத்தின் ஒரு கூறு மட்டுமே; அதிகாரத்தில் வேறு பல கூறுகளும் உள்ளடங்கியுள்ளன என்று கூறப்பட்டது.

அதிகாரத்தின் பிற பரிமாணங்களை எடுத்துக் கூறியவர்களுள் ஸ்டீவன் லூக்ஸ் (Steven Lukes) முக்கியமான அரசியல் சிந்தனையாளர் ஆவார். அவர் 'Power: A Radical View' என்னும் நூலை **1974** இல் வெளியிட்டார். இந்நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு ஏற்ப, இந்நூல் 'அதிகாரம் பற்றிய புரட்சிகரமான நோக்கை' முன்வைத்தது. றொபர்ட் டால் கருத்தை விமர்சனம் செய்த ஸ்டீவன் லூக்ஸ், அதிகாரம் மூன்று பரிமாணங்களைக் (Three Dimensions of Power) கொண்டது எனக் குறிப்பிட்டார். அவையாவன:

1. முடிவுகள் மீது செல்வாக்குச் செலுத்துவதான ஆற்றல் (The Capacity to Influence Decisions).
2. அரசியல் நிகழ்ச்சி நிரல்களைத் தீர்மானிப்பதில் செலுத்தக்கூடிய செல்வாக்கும் ஆற்றலும் (Capacity to Influence Political Agendas).
3. பிற மனிதர்களின் சிந்தனையையும் செயல்களையும் கட்டுப்படுத்தும் வகையிலான செல்வாக்கைச் செலுத்தும் ஆற்றல் (The Capacity to Influence the Thinking and Action of Other People)

மேலே குறிப்பிட்டவற்றுள் மூன்றாவதான 'பிற மனிதர்களின் சிந்தனையையும் செயல்களையும்' கட்டுப்படுத்தும் ஆற்றல் என்னும் கூறு ஸ்டீவன் லூக்ஸ் கூறிய நவீனமான கருத்தாகும். இந்த மூன்றாவது கூறு மிகவும் முக்கியமானது. சமூகத்தில் அதிகாரம் எவ்வாறு செயற்படுகிறது என்பதைப் பற்றிய ஆழமான புரிதலை இதன் மூலம் பெற முடிகிறது.

பிற மனிதர்களின் சிந்தனையையும் செயல்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பயன்படுத்தி, அதிகாரத்தில் உள்ளவர்கள், பிற மனிதர்கள் சாதாரணமாகச் செய்ய முன்வராதவற்றை அவர்களைக் கொண்டு செய்விக்கும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்குகின்றனர். அது மட்டுமல்லாமல், மக்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்வதை விருப்பத்தோடு ஏற்றுச் செயற்படுபவர்களாகவும், தம்மை அதிகாரத்திற்குப் பணிந்து நடப்பவர்களாகவும் மாற்றிக் கொள்வதையும் காண்கிறோம். அவர்கள் இவ்வாறு அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்யும் தீர்மானங்களை (Choices) (ஆட்டுமந்தைகள் போல்) ஏற்றுச் செயற்படுவதையும், தமது உண்மையான தேவைகள், நலன்கள் எவை என்பதைச் சிந்திப்பதையே மறந்தவர்களாகச் செயற்படுவதையும் காண்கிறோம்.

லூக்ஸ் அவர்கள் குறிப்பிட்ட அதிகாரத்தின் மூன்றாவது கூறு, மார்க்சிய அதிகாரக் கருத்துடன் ஒற்றுமையுடையதாகக் காணப்படுகிறது. மார்க்சியக் கோட்பாட்டின்படி, சமூகத்தில் ஆளும் வகுப்பின் (Ruling Class) கருத்தியல் மேலாதிக்கம் காரணமாக, ஆளும் வர்க்கத்திற்குக் கீழ்ப்பட்ட சமூக வர்க்கங்கள் (Subordinate Social Classes) தமது சொந்த நலன்கள் எவை என்பதையே உணராத அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பது விளக்கப்படுகிறது. லூக்ஸ் அதிகாரம் பற்றிய இம்மூன்றாவது கூறினை 'மேலாதிக்கம்' (Domination) எனக் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் கோட்பாடு அதிகாரம் என்பதில் உள்ளடங்கியுள்ள வேறு இரண்டு கூறுகளையும் எடுத்துக்காட்டி, அவை இரண்டுக்கும் இடையிலான நுண்ணிய வேறுபாடுகளையும் விளக்கிக் கூறியுள்ளது. இவற்றுள் முதலாவது கூறு ஆங்கிலத்தில் 'Power Over' என்ற வினைத்தொடராலும், இரண்டாவது கூறு 'Power To' என்ற வினைத்தொடராலும் அழைக்கப்படுகின்றன (வினைத்தொடர் என்பது Phrasal Verbs என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும்). நாம் மேலே கூறிய உதாரணமான பெற்றோர் பிள்ளைகள் மீது செலுத்தும் அதிகாரத்தை 'Power Over' என்று கூறலாம். அதாவது 'பிள்ளைகள் மீது' பெற்றோரால் மேலாதிக்கம் செலுத்த

முடிகிறது. கம்பனி ஒன்றின் பணிப்பாளர்கள் தொழிலாளர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும், ஆண்கள் பெண்களை ஆதிக்கம் செய்து கட்டுப்படுத்துவதும் இவ்வகை மேலாதிக்கத்திற்கு உதாரணங்களாகும்.

மக்கள் பிறரது அதிகாரத்திற்குப் பணிந்துபோவதும், அடங்கி ஒடுங்கி நடப்பதும் யதார்த்த உலகில் நாம் காணும் விடயம்தான். ஆயினும், அதே மக்கள் அதிகாரத்தை எதிர்த்து நிற்பதையும், அதனை நிராகரிப்பதையும் கூடக் காண்கிறோம். இவ்வாறு பிறரின் மேலாதிக்கத்தை எதிர்த்தல் (Resistance Against Power) மக்களின் 'Power To' அதிகாரமாகும். மக்கள் அதிகார எதிர்ப்பை மௌனமாகவும் அமைதியாகவும் கூட வெளிப்படுத்தலாம். மாறாக, அது வெளிப்படையாகவும் நேரடியான கிளர்ந்தெழுதலின் ஆதாரமாகவும் அமைவதுண்டு. 'புரட்சி' (Revolution) பற்றிய மார்க்சியக் கோட்பாடு மக்களின் 'Power To' என்னும் அதிகாரத்தை விளக்கும் கோட்பாடாகும். உலகின் புரட்சிகர அரசியல் சமூக மாற்றங்கள் யாவும் அதிகாரத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் போது தோன்றின என்பதை வரலாறு உணர்த்துகிறது.

தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம், அதிகாரத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெறுகிறது என மார்க்சிஸ்டுகள் விளக்கம் கூறுவர். மார்க்ஸிசக் கோட்பாட்டின் அதிகாரத்தினை எதிர்த்து நிற்கும் கூறினை பின்வருமாறு விளக்கலாம்:

1. எதிர்த்து நிற்கும் அதிகாரம் (Power to Resist)

2. கிளர்ந்தெழும் அதிகாரம் (Power to Revolt)

3. மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் (Power to Change)

ஆகிய மூன்று அதிகாரங்களையும் தொழிலாளர் வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் தனதாக்கிக் கொள்கிறது.

'Power To' என்ற வினைத்தொடர் குறிப்பிடும் அதிகாரத்தின் வேறு சில கூறுகளையும் விளக்கும் அதிகாரம் குறித்த கோட்பாடுகளும் (Theories of Power) உள்ளன.

அதிகாரம் பற்றிய அடிப்படைக் கூறுகளை இதுவரை எடுத்துக் கூறினோம். அடுத்து ஆங்கில வினைத்தொடர்களான 'Power Over' - பிறர் மேல் செலுத்தும் அதிகாரம், 'Power To' - அதிகாரத்தை எதிர்த்து நிற்கும் அதிகாரம் என்பன குறித்த வேறுபட்ட நுட்பவிவரங்களை நோக்குவோம்.

### பிறர் மேல் அதிகாரத்தைச் செலுத்துதல்

பிறர் மேல் அதிகாரத்தைச் செலுத்துதல் (Power Over) என்பதன் அறவியல் (Ethics) மூலங்களையும், அதிகாரம் செலுத்துவோர் அதிகாரத்தை ஓர் அரசியல் உரிமையாக (Political Right) எவ்வாறு நியாயப்படுத்துகின்றனர் என்பதையும் மக்ஸ் வெபர் (Max Weber) என்னும் சமூகவியலாளர் ஆராய்ந்து கூறியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் செல்வாக்கு மிக்க சிந்தனையாளரான மக்ஸ் வெபர் 'சட்டரீதியான அதிகாரம்' (Legitimate Power) என்னும் எண்ணக்கருவை அறிமுகம் செய்தார். இச்சட்டரீதியான அதிகாரத்தை அவர் 'அதிகாரத்துவம்' (Authority) என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

1922 இல் மக்ஸ் வெபர் எழுதிய 'Economy and Society' (பொருளாதாரமும் சமூகமும்) என்னும் நூலில் 'அதிகாரத்துவம்' பற்றிய கோட்பாட்டை அவர் விளக்கிக் கூறினார். மக்கள் எந்தக் காரணத்திற்காக அதிகாரத்தை ஏற்று அதற்குப் பணிந்து நடக்கிறார்கள்? தம் மீது அதிகாரம் செலுத்துவது சட்டரீதியானது (Legiti mate) எனவும், அது ஓர் உரிமை எனவும் ஏன் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்? என்னும் அடிப்படையான கேள்விகளை மக்ஸ் வெபர் எழுப்புகிறார்.

வெபருடைய ஆய்வு 'அதிகாரம்' என்ற கருத்தின் முக்கியமான கூறொன்றை விளக்குவதாக இருந்தது. அதிகாரம் செயற்படுத்தப்படும் போது, அவ்வதிகாரத்தில் 'அதிகாரத்துவம்' (Authority) என்ற பண்பும் சேர்ந்து கொள்கிறது. மக்கள், குறித்த அதிகாரம் சட்டபூர்வமானது (Legitimate) என நம்புவதால், அதிகாரம் 'அதிகாரத்துவம்' என்ற பண்பைப் பெறுகிறது என மக்ஸ் வெபர் கூறுகிறார்.

'சட்டரீதியான அதிகாரம்' (Legitimate Power), 'சட்டரீதியானது' (Legitimacy) போன்ற சொற்கள் அதிகாரத்திற்கு இருவகைப் பொருள் உள்ளதை உணர்த்துகின்றன:

1. அதிகாரம் சட்டமுறையானது (Power is legal).

2. அதிகாரம் அறம் சார்ந்தது; சரியானது (Power is morally right).

மக்கள் அதிகாரம் சட்டரீதியானது எனவும், அது அறம் சார்ந்தது என்றும் நம்பும்போது, அதனை ஏற்றுக் கொள்கிறார்கள்; அதிகாரத்திற்குப் பணிந்து நடக்கின்றனர்; அதிகாரத்தால் தாம் மேலாதிக்கம் செய்யப்படுவதை ஏற்றுக் கொள்கிறார்கள் (Accept, obey and allow themselves to be dominated by power). இவ்வாறு அதிகாரம் 'அதிகாரத்துவம்' (Authority) என்ற பண்பையும் பெற்றுக் கொள்கிறது.

வெபர் அதிகாரத்துவத்தின் மூலங்களை மூன்றாக வகுத்துக் கூறியுள்ளார்:

1. மரபுவழி அதிகாரத்துவம் (Traditional Authority)
2. கவர்ச்சி அதிகாரத்துவம் (Charismatic Authority)
3. பகுத்தறிவுசார் - சட்டரீதியான அதிகாரத்துவம் (Rational-legal Authority)

இவற்றுள் முதலாவது வகை அதிகாரத்துவம் மரபுவழியாலும் வழக்கங்களின் மூலமும் பெறப்படுகிறது. நவீனத்திற்கு முற்பட்ட காலச் சமூகங்களின் (Premodern Societies) மரபுவழி வழக்கங்கள் அதிகாரத்துவத்தின் மூலங்களாக அமைந்தன. அச்சமூகங்களில் அதிகாரம் செலுத்தும் நிலையில் இருந்தோருக்கு மரபும் வழக்கமும் (Tradition and Custom) அதிகாரத்திற்கு உதவின. அவர்களுக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு விசேட திறன்கள் (Skills or Talent) எவையும் தேவையாக இருக்கவில்லை.

இரண்டாவது வகையான கவர்ச்சி அதிகாரத்துவம் (Charismatic Authority) சில மனிதர்களிடம் உள்ள 'கவர்ச்சி' (Charisma) என்ற விசேட பண்பின் காரணமாக உருவாகிறது. இக்கவர்ச்சி தனிநபர்களிடம் அமைந்துள்ள மந்திரதந்திர சக்தியாகவும் (Magical Power) கருதப்படுவதுண்டு. பெருமனிதர்களான சமயத் தலைவர்கள் பலர் இத்தகைய கவர்ச்சி ஆளுமையுடையவர்களாக இருந்துள்ளனர். புத்தர், யேசு, முகம்மது நபிகள் நாயகம் ஆகியோர் இத்தகைய சமயத் தலைவர்களாவர்.

தற்கால வரலாற்றில் மகாத்மா காந்தி, ஆபிரஹாம் லிங்கன், மா ஓ சேதுங், மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் கவர்ச்சி ஆளுமை மிக்க தலைவர்களாக விளங்கினர். மேற்குறித்த தலைவர்களைப் பின்பற்றி நடப்பதற்கு பெருந்திரளான மக்கள் முன்வந்தனர். அவர்களிடம் காணப்பட்ட விசேடமான கவர்ச்சிப் பண்புதான், சாதாரண மனிதர்களில் இருந்து வேறுபட்ட உயர்நிலைக்கு அவர்களை உயர்த்தியது எனலாம்.

## தோமஸ் ஹொப்ஸ் எழுதிய 'லெவியாதன்' என்னும் நூல்

தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbes) என்னும் ஆங்கிலேயர் 1651 ஆம் ஆண்டு 'லெவியாதன்' (Levia than) என்னும் நூலினை எழுதி வெளியிட்டார். அரசியல் மெய்யியல் (Political Philosophy) பற்றிய மிக முக்கியமான நூல்களில் ஒன்றாக ஹொப்ஸ் எழுதிய லெவியாதன் கருதப்படுகிறது. ஒரு சமூகத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வேண்டுமானால் அதிகாரத்துவம் மிக்க அரசியல் நிறுவன அமைப்புத் தேவை என்பதை வலியுறுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஹொப்ஸின் சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract Theory) அரசு என்ற நிறுவனம் எவ்வாறு தோன்றியது? எந்தச் சூழ்நிலையில் தோன்றியது? என்ற கேள்விகளுக்கு விடை கூறுகிறது. அராஜகம் (Anarchy) தலைவிரித்தாடிய சூழலில் மக்கள் பொதுவான அதிகாரம் உடைய அரசை (State) நிறுவினர். அவ்வாறு உருவாக்கப்பட்ட அரசின் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டவரிடம் மக்கள் தமது இயற்கை உரிமையான சுதந்திரத்தை (Freedom) ஒப்படைத்தனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்தார். தனிப்பட்ட பாதுகாப்பை (Personal Security) உறுதிசெய்து கொள்வதற்காக மக்கள் தமது சுதந்திரத்தை விட்டுக்கொடுத்தனர். அரசின் அதிகாரம் சட்டமுறையானதாகவும், உரிமையானதாகவும் (State Power as Legitimate and Right) மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நவீனத்துக்கு முற்பட்ட கால அரசுகள் யாவும் சர்வாதிகார அரசுகளாகவும், ஜனநாயகத்திற்கு முற்பட்ட அரசியல் முறைமைகளைக் கொண்டனவாகவும் (Predemocratic Political Systems) விளங்கின. ஹொப்ஸின் அரசுக் கோட்பாடு இத்தகைய அரசு முறைகளைப் புரிந்துகொள்ள உதவும் தத்துவமாக அமைந்துள்ளது.

ஹொப்ஸின் அரசியல் அதிகாரம் பற்றிய விளக்கம், செவ்வியல் லிபரல் அரசியல் கோட்பாட்டினால் (Classical Liberal Political Philosophy) விமர்சிக்கப்பட்டது. லிபரலிசம் (தாராண்மைவாதம்) என்னும் கோட்பாடு ஐரோப்பாவின் முடியாட்சி அரசுகளின் சர்வாதிகாரத்திற்கு (Autocratic Power) எதிராகத் தோன்றியது. லிபரலிசம் தனிமனித விடுதலையை வலியுறுத்தியது. பொருளாதார முயற்சிகளில் தனிநபர்கள் ஈடுபடுவதற்குச் சுதந்திரம் வேண்டும்; அரசு அதிகாரம் மூலம் தனிநபர் சுதந்திரத்தை கட்டுப்படுத்தக் கூடாது என்பதையே இது வலியுறுத்தியது.

செவ்வியல் லிபரல் அரசியல் சிந்தனையாளர்களான ஜோன் லொக், ஜோன் ஸ்டுவார்ட் மில், மொன்டஸ்கியு ஆகியோர் ஐரோப்பிய முடியாட்சி அரசுகள் தனிநபர் சுதந்திரத்தைத் தடைசெய்யும் வகையில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துவதைக் கண்டித்தனர். அரசியல் அதிகாரம் கொடுங்கோன்மைக்கு வழிவகுக்கக் கூடாது என்றும், பிரஜைகளின் உரிமைகளும் சுதந்திரங்களும் மதிக்கப்பட வேண்டும் என்றும் இச்சிந்தனையாளர்கள் கருத்துரைத்தனர்.

அவர்களின் எழுத்துகளின் மூலம் பின்வரும் ஜனநாயக அரசியல் எண்ணக்கருக்களை உள்ளடக்கிய வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

1. அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)
2. சட்டத்தின் ஆட்சி (Rule of Law)
3. வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை உடைய அரசாங்கம் (Limited Government)
4. ஜனநாயகப் பொறுப்புக் கூறல் (Democratic Account ability)
5. சுதந்திரமுடைய நீதித்துறை (Independent Judiciary)
6. அதிகார வேறாக்கம் (Separation of Powers)

அதிகாரம் என்பதைப் பிறர் மேல் செலுத்தும் ஆதிக்கம் (Power Over) எனக் கூறும் தத்துவத்திற்கு எதிரான கருத்துகளை உள்ளடக்கியதாக லிபரல் அரசியல் மெய்யியல் வளர்ச்சியுற்றதைக் காணலாம்.

## மார்க்சிய அரசுக் கோட்பாடு

அரசின் அதிகாரத்திற்கு எதிர்ப்பை வெளியிடுதல், அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுதல், மாற்றங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய புரட்சிக் கோட்பாடாக மார்க்சியம் விளங்குகிறது. இக்கோட்பாடு அதிகாரத்தின் 'Power To' என்ற பண்பிற்கு அழுத்தம் கொடுப்பதாக உள்ளது. மார்க்சியம் மட்டுமல்லாது, வேறு சமகால அரசியல் நோக்கு முறைகளிலும் அதிகாரத்திற்கு எதிர்ப்பு என்ற விடயம் அழுத்தம் பெறுகிறது. மார்க்சியம் ஒரு வர்க்கம் பிற வர்க்கங்கள் மீது செலுத்தும் அதிகாரத்தை (Power Over) 'வர்க்க அதிகாரம்' (Class Power) என வரையறை செய்கிறது. சொத்துடைய சமூக வர்க்கங்கள் பிற சமூக வர்க்கங்கள் மீது வர்க்க மேலாதிக்கத்தைச் (Class Domination) செலுத்துகின்றன; அம்மேலாதிக்கம் அவற்றின் சுரண்டலுக்கும், கீழ்ப்பட்ட சமூக வர்க்கங்களை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொப் ஜெசொப் (Bob Jessop) என்னும் தற்கால மார்க்சிஸ்ட் எழுத்தாளரின் 'The Capitalist State' (2012) என்னும் நூலில், 'சமூகத்தின் அதிகார உறவுகள் தனிநபர் உறவுகளை (Individual Relations) மட்டும் குறிக்கவில்லை; அவை சமூக அமைப்பின் (Social Structure) அடிப்படையில் அமைந்த வர்க்க உறவுகள் (Class Relations) ஆகும்' என விளக்கம் தரப்பட்டுள்ளது.

சமூகத்தில் வர்க்க அதிகாரம் எவ்வாறு உருவாகிறது? அதன் மூலங்கள் எவை? வர்க்க அதிகாரம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது? ஆகியவற்றை ஆராய்வதை மார்க்சியம் முதன்மைப்படுத்துகிறது. அத்தோடு அதிகாரத்தின் மேலாதிக்கம் செய்தல் (Power Over) என்ற கூறில் மட்டுமல்லாது, அதிகாரத்தை எதிர்த்து நிற்றலும், மாற்றங்களை அதிகாரத்தின் மூலம் செயற்படுத்தலும் ஆகிய கூறுகளிலும் ('Power To' என்ற கூறு) மார்க்சியம் கவனம் செலுத்துகிறது.

வர்க்க மேலாதிக்கம் சமூகத்தில் முரண்பாடுகளைத் (Contradictions) தோற்றுவிக்கிறது; முரண்பாடுகள் அதிகரிக்கும் போது சமூகத்தில் உறுதிநிலை குலைகிறது. வர்க்க மேலாதிக்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. இக்காரணத்தால் வர்க்க மேலாதிக்கம் நிரந்தரமானதல்ல. வர்க்க மேலாதிக்கத்திற்கு எதிரான அதிகாரத்தை (Counter Power) கொண்ட அமைப்புகளின் செயற்பாடுகள் வலுவடைகின்றன. புரட்சி (Revolution) என்பது இருந்து வரும் சமூக உறவுகளை மாற்றி அமைக்கும் செயல்முறை என மார்க்சியம் விளக்குகிறது.

சுருங்கக் கூறினால் மார்க்சியத்தின் புரட்சி பற்றிய கோட்பாடு, மேலாதிக்கம் உடைய சமூகக் குழுக்கள் பிற சமூகக் குழுக்கள் மீது எவ்வாறு அதிகாரம் செலுத்துகின்றன (Power Over) என்ற விடயத்தை முதலில் விளக்கிக் கூறுகிறது. பின்னர், மேலாதிக்கமுடைய சமூகக் குழுக்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதிலும் புதிய வர்க்க உறவுகளையும் சமூக உறவுகளையும் உருவாக்குவதிலும் அதிகாரத்தின் 'Power To' என்ற கூறு எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

புரட்சி என்ற செயல்முறையின் ஊடாகக் கீழ்ப்பட்ட நிலையில் இருந்த சமூகக் குழுக்கள் தமது மக்களை அணிதிரட்டி ஒழுங்கமைத்தல், அரசு அதிகாரத்திற்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடருதல், நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியவற்றின் மூலம், தம்மை ஒடுக்கப்படுவோர் என்ற நிலையிலிருந்து தமக்குக் கிடைத்த புதிய அதிகாரத்தின் முகவர்களாக (Agents of New Power) செயற்படும் நிலைக்குத் தம்மை உயர்த்திக் கொள்கின்றன என்பதை மார்க்சியம் எடுத்துக்காட்டுகிறது.

இக்காரணங்களால், அதிகாரம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு சமூகவிடுதலை (Social Emancipation) பற்றிய கோட்பாடாக விளங்குகிறது என்பதை உயன்கொட அவர்கள் எடுத்துக் காட்டுகிறார் (பக். 6).

## ஹன்னா அரன்ட் அவர்களின் அதிகாரம் பற்றிய கோட்பாடு

சமகால அரசியல் கோட்பாடுகளில் ஹன்னா அரன்ட்

*(Hannah Arendt)* என்னும் பெண்மணியின் அதிகாரம் பற்றிய கோட்பாடு முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. ஹன்னா அரன்ட் ஜெர்மனி தேசத்தில் பிறந்தவர். அவர் பிறப்பால் யூதராவார். 1930களில் ஜெர்மனியின் ஆட்சியை நாஜிகள் கைப்பற்றினர்.

ஹன்னா அரன்ட் அவர்களின் எழுத்துகள் விடுதலை, புரட்சி, அரசியல் செயற்பாடு (Political Action), அரசியல் அதிகாரம் ஆகிய கருத்தாக்கங்கள் பற்றிய ஆழமான பகுப்பாய்வுகளாக அமைந்தன. அதிகாரத்தின் 'Power To' என்ற கூறிற்கு, அதாவது புரட்சிகர மாற்றங்களை உருவாக்கும் அதிகாரத்தின் ஆற்றலுக்கு, ஹன்னா அரன்ட் முதன்மையளித்தார். அந்தக் கூறை முதன்மைப்படுத்திய அதிகாரக் கோட்பாட்டை அவர் கட்டமைத்தார். அவர் ஐரோப்பியச் செவ்வியல் கோட்பாட்டில் அரசியல் அதிகாரம் பற்றிக் கூறப்பட்டவற்றை முற்றாக நிராகரித்தார். மேலாதிக்கக் குழுக்கள் பிற சமூகக் குழுக்கள் மீது செலுத்தும் அதிகாரம், அதாவது 'Power Over', ஒடுக்கப்பட்ட குழுக்களை ஆற்றலற்றவர்களாக்கும் (Disabling Force) சக்தியாகும் என அவர் எடுத்துக் காட்டினார். இதற்கு மாறாக, ஒடுக்கப்பட்டவர்களை ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கும் (Enabling Force) சக்தி, சமூக உறவுகளில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தும் 'Power To' என்ற கூறுதான் என அவர் குறிப்பிட்டார்.

ஹன்னா அரன்ட் அவர்கள் அதிகாரம் பற்றிய புதிய கோட்பாட்டை வடிவமைத்தார். அவர் 'அதிகாரம்' என்பதில் உட்பொதிந்துள்ள பலம் (Strength), சக்தி (Force), வன்முறை (Violence) என்பவற்றை நீக்கிவிட வேண்டும் என்று குறிப்பிட்டார். பலம், சக்தி, வன்முறை என்பவை மக்களை அடக்கி ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் என அவர் விளக்கினார். அதிகாரம் பற்றிய ஹன்னா அரன்ட் அவர்களின் கோட்பாடு பின்வரும் நூல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது:

1. *On the Human Condition* **(1958)**, *Chicago: University of Chicago Press*
2. *On Revolution* **(1963)**, *New York: Penguin*
3. *The Origins of Totalitarianism* **(1951)**, *New York: Harcourt, Brace & Jovanovich*
4. *Crisis of the Republic* **(1972)**

அதிகாரம் என்பது தனிநபர் ஒருவர் தனது உடைமையாக வைத்திருக்கக் கூடிய ஒரு பொருள் அன்று; அல்லது தனிநபர்கள் பலரின் ஒன்றிணைவால் எழும் கூட்டுப் பலம் என்று கூட அதனை வரையறை செய்ய முடியாது.

தனிநபர்கள் ஒன்றிணைந்து கூட்டாகச் செயற்படும் போது அதிகாரம் தோன்றுகிறது. தனிமனிதர்களிடம் ஒரு சக்தி (Force) இருப்பது உண்மைதான். தனிமனிதர்களின் அச்சக்தியை ஒன்றுசேர்த்தால் வரும் கூட்டுத்தொகையான 'சக்தி' என்பதை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். ஆனால் இந்தக் கூட்டுச்சக்தியை விட பலம் வாய்ந்த கூட்டுப்பலம் (Collective Strength), மனிதர்கள் கூட்டாகச் செயற்படும் போது (Acting in Concert) உருவாகிறது. இந்தக் கூட்டுப்பலம் தமது ஒன்றிணைந்த செயற்பாடுகளால் உருவாக்கப்படுவது என்பதைக் கண்டு மனிதர்கள் வியப்படைகிறார்கள். மனிதர்களின் இக்கூட்டுப்பலம் வன்முறை ஆயுதங்கள் (Weapons of Violence) மூலம் அடையப்படுவதில்லை; அவ்வாயுதங்களுக்கான தேவையும் இல்லை. காந்தி கூறிய சாத்வீக நடவடிக்கை (Practice Of Nonviolence) என்பதையே ஹன்னா அரன்ட் மக்களின் கூட்டுப் பலமாக விளக்கம் தருகிறார். சாத்வீக முறையிலான எதிர்ப்பு, ஒத்துழையாமை ஆகியவற்றின் மூலம் மனிதர்களால் அரசியலில் அசாதாரண சாதனைகளை நிகழ்த்த முடியும். மனிதர்கள் கூட்டாகச் செயற்படுதல் (Acting in Concert) என்னும் ஹன்னா அரன்ட் அவர்களின் கருத்து அதிகாரம் பற்றிய புதிய விளக்கமாகும். அவரது அதிகாரம் பற்றிய இந்தப் புதிய விளக்கம், ஐரோப்பாவில் 1930களில் தோன்றிய இரண்டு வரலாற்றுப் போக்குகளின் பின்னணியில் உருவானது. ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் பாசிசம் (Fascism) ஒடுக்குமுறை ஆட்சியாக அமைந்தது. இதேபோல் சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலினிசம் (Stalinism) மக்களை ஒடுக்கும் ஆட்சிமுறையாகச் செயற்பட்டது. இவ்விரு நாடுகளிலும் அரசியல் அதிகாரம் (Political Power) மனித உரிமைகளைப் பறிக்கும் மேலாதிக்கமாகவும் ஒடுக்குமுறையாகவும் வடிவம் பெற்றது.

மேற்கண்ட அனுபவங்களின் பின்புலத்திலேயே ஹன்னா அரன்ட், அதிகாரம் மக்களின் விடுதலைக்கான பலத்தைத் தருவது; அது ஆயுதபலத்தாலோ வன்முறையாலோ பெறப்படும் பலம் அன்று என்ற கருத்தை விளக்கினார். ஹன்னா அரன்ட் போலவே, இந்தியரான மகாத்மா காந்தியும் அதிகாரம் பற்றிய தமது கோட்பாட்டை வன்முறையற்ற பலம் என்ற அடிப்படையில் வடிவமைத்தார். அவர் கூறிய சாத்வீக எதிர்ப்பு, நடைமுறை அரசியலில் அதிகாரத்தை மேலாதிக்கத்திற்கான கருவியாகப் பயன்படுத்துவதை எதிர்க்கும் கோட்பாடாகும். காந்தியின் அதிகாரமும் அரசியலும் (Power and Politics) குறித்த கோட்பாடு மேற்குநாட்டு அரசியல் மெய்யியல் கருத்துகளில் இருந்து பெறப்பட்டது அல்ல; அவரது கருத்துகளின் மூலமாக, இந்தியச் செவ்வியல் சமய மரபுகளான இந்து, பௌத்த, சமண மரபுகள் அமைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுருக்கம்

இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. அதிகாரம் என்பது பிறரது முடிவுகளையும் செயல்களையும் (Decisions and Actions) தீர்மானிப்பதற்குரிய ஆற்றல் என அரசியல் கோட்பாடு வரையறை செய்கிறது. இது அதிகாரம் குறித்த பொதுவான கருத்தாகும்.

2. மேற்படி கருத்தை நடத்தைவாத அரசியல் விஞ்ஞான (Behavioural Political Science) நோக்கில் றொபர்ட் டால் விளக்கினார். 'A என்பவர் B மீது அதிகாரம் உடையவராக இருக்கிறார் என்று கூறும்போது, B சாதாரணமாகச் செய்ய முன்வராத செயலை அவரைக் கொண்டு செய்விக்கும் ஆற்றலை A பெற்றிருக்கிறார் என்று பொருள்படும்; இதனையே அதிகாரம் என்று கூறுவர்' என்பது றொபர்ட் டால் முன்வைத்த வரைவிலக்கணமாகும். இது ஆங்கிலத்தில் 'Power Over' எனக் குறிக்கப்படும் அதிகாரத்தைச் சுட்டுகிறது எனலாம்.

3. அரசியல் கோட்பாட்டில் 'Power To' என்னும் அதிகாரத்தின் பிறிதொரு கூறும் முதன்மைப்படுத்திப் பேசப்படுகிறது.

4. மக்கள் எக்காரணத்திற்காக அதிகாரத்திற்குப் பணிந்து போகின்றனர்? ஏன் அதிகாரத்தை ஏற்றுக் கொள்கின்றனர்? என்ற வேறொரு கோணத்தில் மக்ஸ் வெபர் (Max Weber) என்னும் சமூகவியலாளர் ஆய்வு செய்தார். அவர் 'சட்டரீதியானது' (Legitimacy) என்ற அம்சம் அதிகாரத்திற்கான ஏற்புடைமையை வழங்குகிறது எனவும், மக்கள் அதிகாரத்திற்குப் பணிந்து போவதற்கு இதுவே காரணம் எனவும் குறிப்பிட்டார். மக்ஸ் வெபர் 'அதிகாரத்துவம்' (Authority) என்ற கருத்தாக்கத்தை அறிமுகம் செய்தார்.

5. 'Power To' அதிகாரம் என்பது 'மேலாதிக்கம் செலுத்துதல்' (Power Over) என்பதில் இருந்து வேறுபட்டது. இது அதிகாரம் பற்றிய புரட்சி நோக்கிலான விளக்கம் ஆகும். அதிகாரத்தை எதிர்த்து நிற்றல் (Resistance to Power) என்ற அம்சத்திற்கு இது முதன்மை அளிக்கிறது. கார்ல் மார்க்ஸ், மகாத்மா காந்தி, ஹன்னா அரன்ட் ஆகிய மூவரும் இந்த அம்சத்திற்கு முதன்மையளிக்கும் மூன்று வெவ்வேறு கோட்பாடுகளை முன்வைத்தனர்.

## மீளாய்வு வினாக்கள்

கட்டுரையின் இறுதியில் மீளாய்வு வினாக்கள் (Review Questions) சிலவற்றைப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்கள் தந்துள்ளார். அரசியல் அதிகாரம் பற்றிய கோட்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கு உதவக்கூடிய இவ்வினாக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அரசியல் கோட்பாடு 'அதிகாரம்' (Power) என்னும் கருத்தாக்கத்தை எவ்வாறு வரையறை செய்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூறுக.

2. ஸ்டீவன் லூக்ஸின் (Steven Lukes) அதிகாரம் குறித்த கோட்பாடு யாது? விளக்கிக் கூறுக (What is Steven Lukes' theory of power).

3. 'Power Over', 'Power To' என்ற ஆங்கில வினைத்தொடர்கள் அதிகாரம் என்பதை எவ்வாறு வரையறை செய்துள்ளன (Define 'Power Over and 'Power To')?

4. மக்கள் அதிகாரத்திற்கு ஏன் பணிந்து போகின்றனர் என்பதற்கு மக்ஸ் வெபர் (Max Weber) கூறும் விளக்கம் யாது?

5. மக்ஸ் வெபர் குறிப்பிடும் மூவகை 'அதிகாரத்துவம்' (Authority) யாவை? அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்கிக் கூறுக.

6. 'Power To' என்றால் என்ன? அது எங்ஙனம் 'Power Over' இல் இருந்து வேறுபடுகிறது (What is 'Power To'? How does it differ from 'Power Over')?

7. 'Power To' என்னும் அதிகாரத்தின் புரட்சிகர அம்சத்திற்கு முதன்மை அளிக்கும் கோட்பாடுகள் இரண்டினை விவரித்துக் கூறுக.

8. மகாத்மா காந்தியின் அதிகாரம் பற்றிய கருத்தாக்கத்தை விளக்குக.

இத்தமிழ்க் கட்டுரை ஜயதேவ உயன்கொட அவர்களின் 'Political and Political Science: A Contemporary Introduction என்னும் நூலின் (பக். 57-68) 'Politics as a Relation of Power' என்ற தலைப்பிலான கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. அதிகாரம் பற்றிய அரசியல் மெய்யியல் ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் ‘யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்’ என்ற இத்தொடர் அமையவுள்ளது.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி – நாவற்குழி

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சிப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் உள்ள சாவகச்சேரிக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில் அதே பிரிவில் உள்ள நாவற்குழிக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் குறித்த நிலப்படத்திலுள்ள தகவல்களைப் பார்க்கலாம்.


நாவற்குழிக் கோவிற்பற்றில் நாவற்குழி, நுணாவில், கோயிலாக்கண்டி ஆகிய மூன்று துணைப் பிரிவுகளை நிலப்படம் காட்டுகிறது (படம்1).




லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நாவற்குழிக் கோவிற்பற்றுப் பகுதி

## எல்லைகள்

லெயுசிக்காமின் நிலப்படம் நாவற்குழிக் கோவிற்பற்றை மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட ஒரு தீவக்குறை போல் காட்டுகிறது. வடக்கு, மேற்கு, கிழக்குப் பக்கங்களில் கடல் நீரேரியால் சூழப்பட்டுள்ளதாக வரையப்பட்டுள்ளது. தெற்கு முனைப் பகுதி மட்டும் சாவகச்சேரிக் கோவிற்பற்றுடன் இணைந்துள்ளது. தற்கால நிலப்படங்களின்படி கோவிற்பற்றின் கிழக்கு எல்லையோரமாகக் கடல்நீரேரி தொடர்ச்சியாக நீண்ட தூரம் ஊடுருவிச் செல்லவில்லை. வடக்கு, மேற்குப் பக்கங்களில் மட்டுமே கடல்நீரேரி காணப்படுகின்றது. நாவற்குழிக் கோவிற்பற்றின் நீளப்பாட்டு அச்சு வடமேற்கு/ தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. வடமேற்கு முனையை அண்டிய பெரும்பகுதியில் நாவற்குழித் துணைப் பிரிவு அமைந்துள்ளது. தென்கிழக்கு முனையை அண்டி நுணாவில் துணைப்பிரிவு காணப்படுகின்றது. நடுப்பகுதியில் மேற்கு எல்லையை ஒட்டியபடி கோயிலாக்கண்டி துணைப்பிரிவு உள்ளது. இத்துணைப்பிரிவு ஒரு பக்கத்தில் கடல்நீரேரியை எல்லையாகக் கொண்டுள்ளது. ஏனைய மூன்று பக்கங்களிலும் நாவற்குழித் துணைப் பிரிவினால் சூழப்பட்டுள்ளது (படம்2).




லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட நாவற்குழிக் கோவிற்பற்றின் படம்

ஒல்லாந்தர் கால நாவற்குழிக் கோவிற்பற்று தற்போதைய சாவகச்சேரி பிரதேசச் செயலர் நிர்வாகப் பிரிவின் ஒரு பகுதியாக உள்ளது. உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை இக்கோவிற்பற்றின் நாவற்குழி, கோயிலாக்கண்டி ஆகிய துணைப் பிரிவுகள் சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குள் அடங்குவது தெளிவு. ஆனால், மூன்றாவது துணைப்பிரிவான நுணாவிலில் அடங்கியிருக்கக்கூடிய நுணாவில் ஊரின் பெரும் பகுதி இன்று சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ளது.

லெயுசிக்காமின் நிலப்படத்தில் நுணாவில் துணைப் பிரிவு கடல்நீரேரியினால் இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருப்பதாகக் காட்டியுள்ளனர். நாவற்குழியின் ஏனைய பகுதிகளுடன் இணைந்துள்ள தெற்கேயுள்ள பகுதியே நுணாவில் என முறையாகப் பெயர் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. வடக்கில் மட்டுவில், சாவகச்சேரி ஆகிய கோவிற்பற்றுகளுடன் இணைந்த வடக்குப் பகுதியை "இது நுணாவிலைச் சேர்ந்தது" எனக் குறித்துள்ளனர். அப்பகுதியில் வேறெந்த அம்சத்தையும் நிலப்படம் காட்டவில்லை. லெயுசிக்காமின் நிலப்படத்தில் நுணாவில் துணைப்பிரிவின்

**பிரித்தானியர் காலத்தில் கிறித்தவ மதப் பணியாற்ற வந்த மிசன்களில் எவரும் நாவற்குழியில் இருந்த ஒல்லாந்தர்காலத் தேவாலயத்தைக் கையேற்று அதைத் திருத்திப் பயன்படுத்தியதாகவோ, அத்தேவாலயம் இருந்த நிலத்தைப் பெற்று அதில் புதிய தேவாலயத்தை அமைத்ததாகவோ உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் கிடைக்கவில்லை. நாவற்குழி மகா வித்தியாலயம் 1868 ஆம் ஆண்டில் கிறிஸ்தவ திருச்சபையால் நிறுவப்பட்டது எனவும், பாடசாலையின் பெயர் 'சி. எம். எஸ்.' (C. M. S.) என்றும் படசாலை வரலாற்றுக் குறிப்பு ஒன்றில் தகவல் உள்ளது. ஆனால், இது தொடர்பான விவரமான தகவல்களோ முறையான எழுத்துமூலச் சான்றுகளோ இல்லை.**

தென்பகுதியில் குறித்துள்ள குளங்களைக் கவனத்திற்கொண்டு பார்க்கும்போது அதன் பெரும்பகுதி மறவன்புலோவுக்கே உரியதாகத் தெரிகிறது. நுணாவில் ஊர் வடக்குப் பகுதியில் இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்பகுதி தற்கால நிலப்படங்களில் உள்ள நுணாவில் ஊரின் அமைவிடத்துடன் சரியாகப் பொருந்தவில்லை. இவ்விடத்தில் நிலப்படம் சரியாக வரையப்படவில்லை என்றே தோன்றுகிறது.

## வீதிகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி யாழ்ப்பாணத்திலிருந்து வரும் வீதி உப்பாறு கடல்நீரேரியைக் கடந்து நாவற்குழித் துணைப் பிரிவின் மேற்கு முனையூடாக நாவற்குழிக் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. இது நாவற்குழித் துணைப்பிரிவை ஊடறுத்து நீரேரியொன்றைக் கடந்து சாவகச்சேரிக்குச் செல்கிறது. லெயுசிக்காமின் நிலப்படத்தில் இந்த வீதி நாவற்குழிக் கிராய் எனக் குறிப்பிட்டுள்ள நிலப்பகுதிக்குத் தெற்காகச் செல்கிறது. அதற்கு அப்பால் தக்கன்கட்டுக் குளத்துக்கு (தச்சன்தோப்புக் குளம்) மிக அருகாக அதற்கு வடக்குப் பக்கமாகச் செல்கிறது. தற்கால யாழ்ப்பாணம் - சாவகச்சேரி வீதி (கண்டி வீதியின் பகுதி) மேற்குறித்த கிராய்ப் பகுதிக்கு வடக்காகவும் தச்சன்தோப்புக் குளத்துக்கு வடக்கே குறிப்பிடத்தக்க அளவு தொலைவிலும் செல்கிறது. லெயுசிக்காமின் நிலப்படத்தில் இந்த வீதியின் தடத்தைப் பிழையாக வரைந்திருக்கலாம் அல்லது உண்மையிலேயே ஒல்லாந்தர் காலத்து வீதி நிலப்படம் காட்டும் தடத்தில் சென்றிருக்கலாம். இரண்டுக்கும் வாய்ப்பு உண்டு. இப்பகுதியில் இன்றைய தொடர்வண்டிப் பாதை நிலப்படத்தின் வீதித் தடத்துடன் பல இடங்களில் பொருந்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. 1658 ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குப் படையெடுத்து வந்தபோது சாவகச்சேரித் தேவாலயம், நாவற்குழித் தேவாலயம் ஆகியவற்றைக் கடந்து இந்த வீதியூடாகவே சென்றனர்.[1] நாவற்குழியிலிருந்து படைகள் நீரேரிக் கரை நோக்கிச் சென்றதாகவும், அங்கிருந்து முன்னேறி சுண்டிக்குழிக்குச் சென்றதாகவும் நூலில் குறிப்புகள் உள்ளன. ஆனால், நீரேரியைக் கடந்த விதம் குறித்த தகவல் எதுவும் இல்லை. நடந்தே அப்பகுதியைக் கடந்திருக்கக்கூடும்.

இந்த வீதியைத் தவிர வேறு வீதியெதையும் இக்கோவிற்பற்றுக்குள் நிலப்படம் காட்டவில்லை. தற்காலத்தில், இக்கோவிற்பற்றுக்கூடாகச் செல்லுகின்ற நாவற்குழி - கேரதீவு வீதி, மானிப்பாய் - கைதடி வீதி என்பன நிலப்படத்தில் இல்லை. அவை பிற்காலத்திலேயே முறையான வீதிகளாக ஆகியிருக்கலாம்.

## கட்டடங்கள்

இதுவரை பார்த்த ஏனைய கோவிற்பற்றுகளில் இருந்தது போலவே நாவற்குழிக் கோவிற்பற்றிலும் கிறிஸ்தவ தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் நிலப்படத்தில் முக்கியத்துவம் கொடுத்துக் குறித்துள்ளனர். இவற்றைத் தவிர ஒரு மடத்தையும் இன்னொரு மடத்துடன்கூடிய மீன்பிடித்துறை ஒன்றையும் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது.

### தேவாலயமும் தேவாலய இல்லமும்

போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள குறிப்பின்படி நாவற்குழித் தேவாலயமும் தேவாலய இல்லமும் மண் சுவர்களையும் ஓலைக் கூரைகளையும் கொண்ட கட்டடங்களாகவே இருந்தன.[2] இக்கட்டடங்களைக் காட்டும் அந்நூலிலுள்ள படமும் மேற்படி விவரிப்பை உறுதி செய்யும் வகையிலேயே

உள்ளது[3] (படம்3). இந்தத் தேவாலயம் போர்த்துக்கேயர் காலத்திலேயே ஒரு கத்தோலிக்கத் தேவாலயமாக இவ்விடத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஒல்லாந்தப் படைகள் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக யாழ்ப்பாணம் நோக்கி வந்தபோது நாவற்குழித் தேவாலயத்தில் ஓர் இரவு தங்கியிருந்ததாக போல்டேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.[4] போல்டேயஸ் பாதிரியார் தந்துள்ள விவரங்கள் 1665 ஆம் ஆண்டுக்கு முற்பட்டவை. அதற்குப் பின்னரும் ஒல்லாந்தர் 130 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆண்டுள்ளனர். அந்தக் காலப் பகுதியில் நாவற்குழித் தேவாலயத்தை நிரந்தரக் கட்டடப் பொருட்களால் கட்டி மேம்படுத்தினார்களா என்பது பற்றிய தகவல்கள் இல்லை.



போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள நாவற்குழித் தேவாலயத்தினதும் தேவாலய இல்லத்தினதும் படம்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி தேவாலயம் நாவற்குழித் துணைப் பிரிவுக்குள், நாவற்குழியூடாக, யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ளது. தேவாலயமும் தேவாலய இல்லமும் மேற்குறிப்பிட்ட வீதியின் வடக்குப் பக்கத்தில், முன்னர் குறிப்பிட்ட நாவற்குழிக் கிராயப் பகுதிக்கும் வீதிக்கும் இடையில் இருப்பதாக நிலப்படம் காட்டுகிறது.

பிரித்தானியர் காலத்தில் கிறித்தவ மதப் பணியாற்ற வந்த மிசன்களில் எவரும் நாவற்குழியில் இருந்த ஒல்லாந்தர்காலத் தேவாலயத்தைக் கையேற்று அதைத் திருத்திப் பயன்படுத்தியதாகவோ, அத்தேவாலயம் இருந்த நிலத்தைப் பெற்று அதில் புதிய தேவாலயத்தை அமைத்ததாகவோ உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் கிடைக்கவில்லை. நாவற்குழி மகா வித்தியாலயம் 1868 ஆம் ஆண்டில் கிறிஸ்தவ திருச்சபையால் நிறுவப்பட்டது எனவும், பாடசாலையின் பெயர் 'சி. எம். எஸ்.' (C. M. S.) என்றும் படசாலை வரலாற்றுக் குறிப்பு ஒன்றில் தகவல் உள்ளது.[5] ஆனால், இது தொடர்பான விவரமான தகவல்களோ முறையான எழுத்துமூலச் சான்றுகளோ இல்லை. அத்துடன், பாடசாலையை நிறுவிய கிறிஸ்தவத் திருச்சபை எது என்ற தகவலையும் மேற்படி குறிப்புத் தரவில்லை. பாடசாலையின் பெயர் சி. எம். எஸ் எனக் குறிப்பிட்டிருப்பதால் மேற்கூறிய கிறிஸ்தவ அமைப்பு சேர்ச் மிசன் சபையாக (Church Mission Society - C. M. S.) இருக்க வாய்ப்பு உள்ளது. சேர்ச் மிசன் சபையின் நூற்றாண்டு மலரில் நாவற்குழியில் சமயப்பணி செய்தது பற்றியோ பாடசாலையை நிறுவியதைப் பற்றியோ குறிப்புகள் எதுவும் இல்லை.

நிலப்படம், ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம் - சாவகச்சேரி வீதியின் தடத்தைச் சரியாகவே காட்டுகிறது எனக் கொண்டால், நிலப்படம் காட்டும் ஒல்லாந்தர் தேவாலயத்தின் அமைவிடமும் தற்கால நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அமைவிடமும் பொருந்துவதைக் காண முடிகிறது. இது சரியானால், பாடசாலை வரலாறு குறிப்பிடும் கிறிஸ்தவ திருச்சபையினர் ஒல்லாந்தத் தேவாலயம் இருந்த வளவிலேயே தமது பாடசாலையைத் தொடங்கினர் என எண்ணுவதற்கு ஏதுவாகும். ஆனால், இப்போது எமக்குக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் இதை உறுதியாகக் கூற முடியாது.

## மடம்

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் வீதி உப்பாற்றைக் கடந்து நாவற்குழிக்குள் நுழையும் இடத்தில் ஒரு மடம் உள்ளது. நிலப்படத்தில் இதற்குக் கல்மடம் எனப் பெயர் குறித்துள்ளனர். வீதிகள் கடல்நீரேரிகளைக் கடக்கும் பெரும்பாலான இடங்களில் பயணிகளின் வசதிக்காக இரண்டு பக்கங்களிலும் மடங்கள் இருந்தது பற்றி ஏற்கெனவே பல இடங்களில் குறிப்பிட்டுள்ளோம். இவ்விடத்திலும் நாவற்குழிக்கு எதிர்ப் பக்கத்தில் சிவியாதெரு (அரியாலை) கடல்நீரேரிக் கரையிலும் ஒரு மடம் உள்ளது. அக்காலத்தில் இவ்வாறான பல

மடங்கள் மண்ணால் கட்டப்பட்டவையாக இருந்திருக்கலாம். நாவற்குழியில் இருந்த மடம் கல்லால் கட்டப்பட்டிருந்ததால் அதைக் கல்மடம் என்ற பெயரால் அழைத்திருக்கக்கூடும்.

## மீன்பிடித் துறையும் மடமும்

நாவற்குழித் துணைப் பிரிவில் கோயிலாக்கண்டி, நுணாவில் ஆகிய துணைப்பிரிவுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் கடல்நீரேரிக் கரையோரமாக மடம் போன்ற ஒரு குறியீட்டைக் காண முடிகிறது. இதன் அருகே 'Vis Ratel' எனப் பெயர் குறித்துள்ளனர். ஒல்லாந்தருடைய டச்சு மொழியில் 'Ratel' என்பதற்கு இவ்விடத்துக்குப் பொருந்தக்கூடிய பொருளை அறிய முடியவில்லை. ஆனால், 'Vis' என்பது மீனைக் குறிப்பதால் இது மீன்பிடியோடு தொடர்புடைய ஒன்றாக இருக்கலாம். குறிப்பாக ஒரு மீன்பிடித் துறையாக இருக்க வாய்ப்பு உள்ளது. இங்குள்ள குறியீடு வழமையாகத் துறைகளில் காணப்படும் மடம் என ஊகிக்கலாம்.

## குளங்கள்

நாவற்குழிக் கோவிற்பற்றுக்குள் 29 குளங்களை நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. இவற்றுள், கந்தன் துரவு, இந்தனைக் குளம், இயத்தைக் குளம், நெருஞ்சிக் குளம், இயட்டவளைக் குளம், பிச்சன்பள்ளன் குளம், காவடுக் கிராய், நாவற்குழிக் கிராய், தக்கென்கட்டுக் குளம், நீர்ப்பென் கிராய், பெரிச்சிக் குளம் ஆகியவற்றுடன் குளம் எனப் பொதுப்பெயரால் குறித்த ஒரு குளமும் உட்பட 12 குளங்கள் நாவற்குழித் துணைப் பிரிவுக்குள் உள்ளன. கோயிலாக்கண்டித் துணைப் பிரிவுக்குள் தெல்லப் பொக்கணை, வேலம்பிராய், சிறு குளம், இறவாலைக் குளம், கம்பில் குளம், மருதடிக் குளம் ஆகிய ஆறு குளங்கள் காணப்படுகின்றன. எஞ்சிய 11 குளங்கள் நுணாவில் துணைப் பிரிவுக்குள் உள்ளன. அவை, பெருச்சிக் குளம், சாலக் குளம், வண்ணாத்திக் குளம், வல்லக் குளம், செல்லைக் குளம், வண்ணாத்திக் குளம், வண்ணான்துறைக் குளம், வல்லக் குளம், பெரிய கிராய், பெரிய தூவல் குளம், குறிய தூவல் குளம் என்பன. இங்கே வண்ணாத்தி குளமும், வல்லக் குளமும் இரண்டு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இப்பெயர்களில் இரண்டிரண்டு குளங்கள் இருந்தனவா அல்லது தவறுதலாக இரண்டு இடங்களில் குறித்துள்ளனரா தெரியவில்லை.

ஒல்லாந்தர்கால நாவற்குழிக் கோவிற்பற்றுப் பகுதிக்குள் அடங்கும் வகையில் தற்காலத்தில் 80க்கு மேற்பட்ட குளங்கள் உள்ளதாகப் பதிவுகள் காட்டுகின்றன.[6] மேற்படி பதிவிலுள்ள பெயர்களுடன் ஒப்பிடும்போது, நிலப்படம் காட்டும் குளங்களுள் இயத்தைக் குளம், நீர்ப்பென் கிராய், வேலம்பிராய், சாலக் குளம், வண்ணாத்திக் குளம், வல்லக் குளம், பெரிய தூவல் குளம் ஆகிய குளங்கள் இன்றும் அதே பெயர்களாலேயே அழைக்கப்படுவதை அறிய முடிகிறது. இயத்தவளைக் குளம், பிச்சன் பள்ளன் குளம், தெல்லப் பொக்கணை, வண்ணான் துரவு என்பன இன்று சிறிய மாற்றங்களுடன் முறையே யட்டவளைக் குளம், பீச்சாம்பள்ளக் குளம், தெக்கிலான் பொக்கணை, வண்ணாதுறைக் குளம் ஆகிய பெயர்களால் அறியப்படுகின்றன. அத்துடன், இன்று சிறிய தூவல் குளம் எனப்படும் குளத்தையே நிலப்படத்தில் பிழையாக 'குறிய தூவல் குளம்' எனக் குறித்துள்ளனர் எனத் தோன்றுகிறது. அதேவேளை, தற்காலத்தில் பெரிய ரவாலிக் குளம், சின்ன ரவாலிக் குளம் எனப் பதிவுகளில் உள்ள குளங்களில் ஒன்றையே நிலப்படத்தில் இறவாலைக் குளம் எனக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. நிலப்படத்தில் தக்கென்கட்டுக் குளம் எனக் குறித்துள்ள குளத்தின் அளவு, வடிவம், அமைவிடம் ஆகியவற்றைத் தற்காலக் குளங்களுடன் ஒப்புநோக்கும் போது அது இன்று தச்சன் தோப்புக் குளம் அல்லது நெடுங்குளம் என அழைக்கப்படும் குளத்துடன் பெருமளவுக்குப் பொருந்துகிறது. எனவே, மேற்படி மூன்று பெயர்களும் ஒரே குளத்தையே குறிக்கின்றன எனலாம். நிலப்படத்தில் குறித்துள்ள 'தக்கென்கட்டுக் குளம்' என்ற பெயரில், 'தச்சன்' என்பதையே 'தக்கென்' எனப் பிழையாக எழுதியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## குறிப்புகள்

1. Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 299.
2. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 330.
3. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 329.
4. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 299.
5. சு. சுதர்சன், "நாவற்குழி மகாவித்தியாலய இற்றைப்படுத்தப்பட்ட வரலாறு," 150 ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்புமலர் - யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் (நாவற்குழி: யா/ நாவற்குழி மகா வித்தியாலயம், 2019), 29.
6. தகவல்: விவசாய அபிவிருத்தித் திணைக்களம்.

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக 'ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.

# ஈழத்தின் வடமேற்கில் அன்றிருந்த தமிழ்க் கூத்து மரபு

## பகுதி 1

**சின்னையா மௌனகுரு**



சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர். ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். 'இராவணேசன்', 'சங்காரம்' முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின.

இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

## முன்னுரை

ஈழத்து தமிழ்க் கூத்துகள் பற்றிய தேடலும் ஆய்வும் கடந்த 65 வருடங்களாக நடந்து வருகின்றன. 1960களிலே கூத்துகளின் அறிமுகமாக ஆரம்பித்த இவ்வாய்வு, 1970களிலே ஆழம் பெறத் தொடங்கியது. 1980களில் இது பல்கலைக்கழக ஆய்வுப் பொருளாக வளர்ச்சி கண்டது. அக்காலங்களிலும் பின்னரும் இது பிரதேச ஆய்வுகளாகவும் நுணுக்க ஆய்வுகளாகவும் மலர்ந்து, இப்போது அது விமர்சன ஆய்வாக வளர்ந்து செல்வதைக் காணுகிறோம்.

இந்த 65 வருட கால ஆய்விலேயே ஈழத்தில் கூத்து நிகழ்ந்த எல்லாப் பிரதேசங்களும் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டனவா என்ற வினாவை நாம் எழுப்ப வேண்டும். இன்னும் ஆய்வு செய்யப்படாத பிரதேசங்கள் உள்ளன. ஆங்காங்கே அந்தப் பிரதேசங்கள் பற்றி ஓரிரு கட்டுரைகள் வந்தாலும், ஆழமான ஆய்வுகள் சில பிரதேசங்களில் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வகையில், இந்தக் கூத்தாய்வுப் பிரதேசங்களை ஆய்வு வெளிச்சம் பாய்ச்சப்படாத பகுதிகள், ஆய்வு வெளிச்சம் பாய்ச்சப்பட்ட பகுதிகள் என இரண்டு வகையாக நாங்கள் பிரிக்கலாம்.

### வெளிச்சம் பாய்ச்சப்படாத பகுதிகள்

ஈழத்துக் கூத்து ஆய்வில் வெளிச்சம் பாய்ச்சப்படாத பகுதிகளும் உண்டு. அந்தப் பகுதிகளில் ஒன்று ஈழத்தின் வடமேற்குப் பகுதி. இங்குதான் மன்னார், மாதோட்டம், உடப்பு, முந்தல், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய கரையோரப் பகுதியை அண்டிய முக்கிய ஊர்கள் இருக்கின்றன. இதனை நாம் வடமேற்கு எனலாம். இங்கெல்லாம் தமிழர் வாழ்ந்தனர்; இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு மன்னார் தவிர்ந்த வடமேற்குக் கூத்து மரபு பற்றி இந்தக் கட்டுரை பேசுகிறது. மன்னார்க் கூத்து மரபு தனியாக எழுதப்பட வேண்டியது; அது வெளிச்சம் பாய்ச்சப்பட்ட பகுதி.

### வெளிச்சம் பாய்ச்சப்பட்ட பகுதிகள்

ஈழத்துக் கூத்து மரபு பற்றிய தேடல்களிலும் ஆராய்ச்சிகளிலும் 1960களில் பிரதானப்படுத்தப்பட்டது கிழக்கு மாகாணமாகும். அதிலும் முக்கியமாக மட்டக்களப்புக் கூத்து மரபே ஆகும். அன்றைய கலைக்கழகம் அதில் அதிக அக்கறை செலுத்தியது. பேராசிரியர் வித்தியானந்தனும் சிவத்தம்பியும் அந்தப் பிரதேசத்துக் கூத்துகளைத் தேட ஆரம்பித்தார்கள். உள்ளூர் அறிஞர்களான வி.சீ. கந்தையா போன்றோரும் அது பற்றி எழுதினர். அது இன்று பெரியதோர் ஆய்வுப் பரப்பாக பரந்து விரிந்து வளர்ந்து இருக்கிறது.

அடுத்து அதிகம் கவனம் செலுத்தப்பட்ட இடம் யாழ்ப்பாணப் பிரதேசமும் அதன் கூத்து மரபுமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின், யாழ்ப்பாணக் கூத்து மரபில் புலமைத்துவப் பார்வை திரும்பியது. ஏற்கனவே அங்கு கூத்துகள் ஆடப்பட்டிருந்தும், அது பற்றி நூல்கள் வந்திருந்தும், அதுவரை அது புலமைத்துவ ரீதியில் அணுகப்படவில்லை.

அதற்குப் பின்னால் மன்னார்க் கூத்து மரபு பற்றிய ஆய்வுகளும் நூல்களும் வரத் தொடங்கின. 1970களின் பிற்பகுதியில் வன்னி மாவட்டக் கலை விழா ஒன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. அதையும் கலைக்கழகமே நடத்தியது. அதிலே வன்னி மரபு நோக்கி ஆய்வுப் பார்வைகள் திரும்பின. கோவலன் கூத்து அங்கு ஆய்வுப் பொருளாக மேற்கிளம்பியது.

மன்னார்க் கூத்து மரபு ஒரு வித்தியாசமான மரபாகும். கத்தோலிக்க மரபுக் கூத்தாக ஈழத் தமிழ்க் கூத்து மரபு அங்கு கிளைவிட்டது. அது பற்றிய ஆய்வுகள் பின்னால் எழுந்ததுடன், இன்று அதுவும் ஒரு கவனிப்புக்குரிய ஈழத் தமிழ்க் கூத்து மரபாக மேல் எழுந்து நிற்கிறது.

அதன் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகமும் கிழக்குப் பல்கலைக்கழகமும் மலையகக் கூத்துகளில் ஆய்வுகள் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்தின. அதன் விளைவாக மலையகக் கூத்துகள் பற்றிப் பல ஆய்வு நூல்கள் வந்தன. மலையகக் கூத்து மரபு பற்றிப் பல்கலைக்கழகம் சாராதோர் எழுதிய சிறந்த ஆய்வு நூல்களும் வந்திருக்கின்றன.

வடக்கு, மன்னார், வன்னி, கிழக்கு, மலையகம் பற்றிய மரபு வழி நாடகங்கள் ஆராயப்பட்ட அளவுக்கு இன்னொரு பிரதேசம் பற்றி ஆராய்வார்களின் கவனம் செல்லவில்லை. அந்தப் பிரதேசம் தான் தமிழர்கள் பண்டைய காலத்தில் பரவி வாழ்ந்த வடமேற்குப் பிரதேசம் ஆகும். அதனைப் பற்றிச் சிறிது அறிவோம்.

### வடமேற்குப் பிரதேசம்

இந்த வடமேற்குப் பிரதேசத்திலே போர்த்துக்கேயரும் அவர்கள் கொணர்ந்த கத்தோலிக்க மதமும் வர முன்னரே இந்து-சைவக் கோவில்கள் இருந்திருக்கின்றன. அதன் எச்சங்களை இன்று காண்கிறோம். செழுமையான ஆற்றுகை மரபுகளும் கூத்து மரபுகளும் இந்து சைவக் கோவில்களோடு

ஒட்டியனவாக அங்கு இருந்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன. முக்கியமாகச் சிலாபத்தில் ஆடப்பட்ட சில கூத்து நூல்கள் பதிப்பிக்கப்பட்டும் உள்ளன. இங்கு நாம் அந்த வடமேற்குத் தமிழரின் கூத்து மரபை, அதிலும் போர்த்துக்கேயரும் அவர்களின் அரச மதமான கத்தோலிக்க மதமும் அங்கு வருவதற்கு முன்னர் இருந்த கூத்து மரபைப் பற்றிப் புரிந்துகொள்ள முயல்வோம்.

போர்த்துக்கேயர் வருகையின் முன்னர் மன்னாரிலும் இதே நிலைமைதான் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. அங்கு இந்து மதம்சார் கூத்துகள் ஆடப்பட்டன. ஆனால் அவை பற்றிய செவிவழிச் செய்திகள் கிடைக்கின்றனவே ஒழிய ஆதாரபூர்வமான சான்றுகள் கிடைப்பது குறைவாகவே உள்ளது. இங்கு நாம் வடமேற்குப் பகுதியில், மன்னார் தவிர ஏனைய பகுதிகளில் வாழ்ந்த தமிழர் மத்தியிலிருந்து வழக்கொழிந்து போன ஒரு கூத்து மரபைப் பற்றி பார்ப்போம்.

### போர்த்துக்கேயர் வருகையின் முன்னர் ஈழத்தின் வடமேற்குப் பிரதேசம்: மன்னார் - நீர்கொழும்புக் கடலோரத் தமிழர் வரலாறு மற்றும் கலாசாரம்

இலங்கையின் வடமேற்குக் கடலோரம் மன்னாரிலிருந்து நீர்கொழும்பு வரை நீளமாகப் பரவும் பகுதியாகும். இப்பகுதி பண்டைய காலத்திலிருந்தே தமிழ் மீனவர் சமூகம் வாழ்ந்த திராவிடக் கடலோரப் பகுதியாகும். இந்தப் பகுதிகளில் தமிழர்கள் மீன்பிடி, சிறு விவசாயம் மற்றும் கடல்சார் வணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தனர். மன்னார், உடப்பு, சிலாபம், நீர்கொழும்பு ஆகிய நகரங்கள் கடற்கரைக் கிராமங்கள் என்றழைக்கப்படுவதற்குக் காரணம், இங்கே வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் கடலோடு நெருங்கிய வாழ்வை கொண்டிருந்தமையினாலாகும்.

பண்டைய காலத்தில் தமிழர்கள் இந்து மதத்தைப் பின்பற்றினர். சிறிய கிராமங்களில் சிவன், முருகன், காளி போன்ற தெய்வங்களின் தலங்கள் இருந்தன. உடப்பு திரௌபதி அம்மன் கோவில், சிலாபம் முன்னேஸ்வரம் கோவில் போன்ற ஆலயங்கள் அந்தக் காலத்தின் முக்கிய மதச்சின்னங்களாக இருந்தன. கோவில்கள் மட்டும் அல்ல; அதோடு கூடிய கூத்து, நாட்டுப்புற நாடகங்கள், ஊர்வலம், ஆடல்-பாடல், தீமிதிப்பு போன்ற பக்தி-கலாசார நிகழ்வுகள் தமிழர் சமூகத்தின் முக்கிய மரபுகளாக வளர்ந்தன. இவை கிராம மக்கள் வாழ்க்கையைச் சித்திரித்தன; தலைமுறை தலைமுறைக்குப் பாரம்பரியமாகக் கற்றும் கொடுக்கப்பட்டன.

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வருகை முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் கத்தோலிக்க மதத்தை அறிமுகப்படுத்தினர். இதனால் மன்னாரிலும் நீர்கொழும்பிலும் சில தமிழர்கள் இந்து மதத்துடன் கிறிஸ்தவ மதத்தையும் இணைத்தனர். சில இடங்களில் ஆலயங்கள் கிறிஸ்தவத்துடன் இணைந்தவையாகவும், சில சமூகங்கள் கிறிஸ்தவர்களாகவும் மாறின. இதற்குக் காரணம் பலவாகும்: போர்த்துக்கேயரின் ஆட்சியின் அழுத்தம், வர்த்தக நலன் பெற விரும்பும் சமூகங்கள் மற்றும் அரசியல் பாதுகாப்புத் தேவை ஆகியவை.

டச்சு மற்றும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கிராமங்கள், நெடுங்கடலோடு தொடர்பு கொண்ட மீனவர் சமூகங்கள், சிறிய துறைமுகங்கள் மற்றும் கடற்கரை நகரங்கள் அமைதியாக இருந்தாலும், அவற்றின் மக்கள் தொகையில் மாறுதல் ஏற்பட்டது. சில தமிழர்கள் நகரங்களுக்கு இடம்பெயர்ந்தனர்; சிலர் மக்கள் தொகை குறைந்த சமூகங்களில் மீண்டும் வாழ்ந்து வந்தனர். அதே நேரத்தில் சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் கலந்தமையினால், அச்சமூக அமைப்பில் பன்முகத் தன்மை உண்டானது.

நீர்கொழும்பு - சிலாபம் - உடப்பு - மன்னார்க் கடலோரப் பாதையில் தமிழர் சமூகத்தின் கலை மற்றும் மரபுகள் மெல்ல மெல்ல மாறினாலும், சில நிலையான அம்சங்கள் தொடர்ந்து இருந்தன. மீன்பிடித் தொழில், கோவில் வழிபாடு, ஊர்வலம், கூத்து மரபுகள், நாட்டுப்புற இசை ஆகியவை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து பரவிச் சென்றன. இவை சமூக ஒற்றுமையை, பண்பாட்டுத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தின. சுருக்கமாகச் சொன்னால், மன்னார் முதல் நீர்கொழும்பு வரையான தமிழர் சமூகத்தின் வரலாற்றை ஒரு 'கடலோரத் தமிழர் பண்பாட்டு பாதை'யின் வரலாறு எனக் கூறலாம். ஆரம்பத்தில் இந்து மதமும் தமிழ் மொழியும் பிரதானமாக இருந்தன; போர்த்துக்கேயர் வருகையுடன் கிறிஸ்தவ மதம் அறிமுகமானது. பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் வர்த்தகக் காரணங்கள் சமூக அமைப்பிலும் கலாசார மரபிலும் மெல்ல மெல்ல மாற்றங்களை ஏற்படுத்தின. ஆனால் தமிழ் மொழி, மீன்வளம், கோவில் வழிபாடு மற்றும் கூத்து/ கலை மரபுகள் நிலைத்திருந்து, அந்தப் பகுதியின் கலாசாரச் சிறப்பைப் பேணின. இலங்கையின் வடமேற்குப் பகுதியில் முக்கியமாக இரண்டு பகுதிகளில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சிலாபத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்கள் பலர் இப்போது சிங்கள மக்களாகிவிட்டனர். இது சரியா பிழையா என நான் வாதிக்க வரவில்லை; ஆனால் வரலாறு இப்படிச் சமூக அமைப்புகளை மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. இந்த வடமேற்குப் பகுதி இலங்கை வரலாற்றில் ஒரு

முக்கியமான பகுதியாகும். காரணம், தமிழ்நாட்டில் இருந்து அந்தப் பகுதிக் கூடாகத்தான் இலங்கைக்குள் ஆரம்ப காலத்தில் பலர் வந்திருக்கிறார்கள். பொம்பரிப்பு தொடக்கம் பாலாவி வரை அந்த வருகை நடந்திருக்கிறது. அந்த வருகையும், இருந்த சமூகமும் சேர்ந்து ஒரு புதிய சமூகம்—தமிழ்ச் சமூகம்—வடமேற்குப் பகுதியில் உருவாகி இருக்கிறது போலத் தெரிகிறது.

திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய இரண்டு சிவ ஈச்சுரங்களும் இந்தப் பகுதியில்தான் இருக்கின்றன. இரண்டும் வரலாற்றுப் பெருமை மிக்கவை. இந்த இரண்டு இடங்களையும் சுற்றி ஒரு பண்பாடும் கூத்து மரபும் வளர்ந்து வந்திருக்கின்றது என்பதைக் காட்டுவதற்கு எங்களுக்குக் கிடைக்கின்ற மிக முக்கியமான ஆதாரம் சிலாபத்தில் கண்டெடுக்கப்பட்டு பேராசிரியர் சிவத்தம்பியால் பதிப்பிக்கப்பட்ட ‘மார்க்கண்டேய நாடகம்’, ‘வாளபிமன் நாடகம்’ எனும் இரண்டு கூத்து நூல்களாகும்.

உடப்பில் அமைந்துள்ள திரௌபதை அம்மன் கோவில் மிக முக்கியமான கோயிலாகும். அங்கு நடைபெறும் ‘செவ்வாட்டு’ எனும் ஒரு சடங்கும் ‘கும்மியும்’ முக்கியமான சடங்குகளாகும். நவீனத்தின் வருகை அதன் பாரம்பரியத்தை இன்னும் அழித்துவிடவில்லை என்பதற்கு அது ஓர் உதாரணமாகும். அந்தக் கோயிலை மையமாக வைத்து ஆண்டுதோறும் அங்கு நடைபெறும் சடங்குகளில் வீடுகள் தோறும், ஊர்கள் தோறும் வைக்கப்படுகின்ற படையல்களும் கும்பங்களும் மிக முக்கியமானதாகும். சிலாபத்திலும் மன்னாரிலும் ஆரம்பத்தில் ஓர் இந்து மதம் சார்ந்த பண்பாட்டு முறை, வழிபாட்டு முறை வேரூன்றி இருந்தமைக்குச் சான்றாக சில கூத்து நூல்களும் எங்களுக்குக் கிடைக்கின்றன.

ஆனால் 1590ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு போர்த்துக்கேயர்கள் மன்னாரைக் கைப்பற்றிய பின் இந்த நிலைமை மாறுகிறது. அது வெறும் மாற்றம் அல்ல; ஒரு பண்பாட்டு மாற்றமாகவும் அமைந்துவிடுவதனைக் காணுகின்றோம். இந்தப் பண்பாட்டு மாற்றத்தில் முக்கிய பங்கு வகித்த மதம் கத்தோலிக்க மதமாகும்.

சிலாபம் - மன்னார்ப் பகுதிகள் முத்துக் குளித்தலுக்குப் பேர் பெற்ற இடங்களாகும். கண்ணகி வழக்குரையிலே கண்ணகியின் காற்சிலம்புக்கு முத்துக்கள் தேடி அந்தப்



சிலாபம் முன்னேஸ்வரம் கோவில்

Image Source - india-tours.com

பகுதிக்கு பணியாளர்கள் வந்ததாக கர்ணபரம்பரைக் கதைகள் உண்டு. சிலாபம் பகுதிகளில் முன்னாளில் ஓர் அரசு இருந்திருக்கின்றது; அந்த அரசின் தலைமை ஸ்தானம் முக்குவரிடம் இருந்தது என்றும் அறிகிறோம். வெடியரசன் கதை, கண்ணகி வழக்குரைக் கதை என்பன இதைச் சாடமாடையாகச் சொல்லுகின்றன. மீன்பிடி, முத்துக்குளிப்பு, விவசாயம் போன்ற மூன்றும் இணைந்த பொருளாதார வளம் மிக்க இந்தப் பிரதேசம், கடலை மையமாகக் கொண்டு பாடுபடுவர்களையும் வயலை மையமாகக் கொண்டு வாழ்பவர்களையும் கொண்ட மக்களைக் கொண்டது. இந்த அமைப்பிலே சமூகப் பிரிவினைகளும் காணப்படுகின்றன. இந்தப் பின்னணியிலே தான் நாங்கள் மன்னார்க் கூத்துகளைப் பற்றியும், முக்கியமாக வடமேற்குக் கூத்துகளைப் பற்றியும் பார்க்க வேண்டும்.

இப்படிப் பார்க்கின்ற பொழுது, இந்து மதத்தில் இருந்து வந்த கூத்து மரபு, கத்தோலிக்கக் கூத்து மரபாக மாறி, இன்னொரு கூத்து மரபு தோன்றிய காட்சி எங்களுக்குள் விரிகிறது. அந்தப் பிரதேசங்களில் காணப்பட்ட பொருள்வளம், தொழில், சமூக அமைப்பு என்பன இந்தப் பிரதேசங்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் இருந்த உறவுகளையும், கடற்கரை சார்ந்த கிராமங்களையும் நகரங்களையும் நினைவூட்டுகின்றன. இந்தப் பின்னணியில் அங்கு மேற்கிளம்பிய இந்து-சைவ மதம் சார்ந்த கோயில்கள் இந்தப் பகுதியின் பண்பாட்டு உருவாக்கலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிலாபம் முன்னேஸ்வரம் கோயில், திருக்கேதீஸ்வரன் சிவன் கோயில், உடப்பு திரௌபதி அம்மன் கோயில் மற்றும் சிறிய சிறிய ஊர்க்கோவில்கள் என்பன இந்தப் பண்பாட்டு உருவாக்கலில் முக்கிய இடம் பெறுகின்றன. இந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு பெரும் நாடகங்கள் மார்க்கண்டேயன், வாளபிமன்

என்பனவாகும். அந்த இரண்டு நாடகங்களும் 1967 ஆம் ஆண்டு அச்சில் வந்துள்ளன. அவற்றைப் பதிப்பித்தவர் பேராசிரியர் சிவத்தம்பி ஆவார். இந்த இரண்டு நாடகங்களும் வடமோடி நாடகங்கள். இந்த ஏடுகளைச் சிவத்தம்பிக்குக் கொடுத்தவர் மருத்துவப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள். இந்தப் பதிப்பு நூலுக்கு பேரா. வித்தியானந்தன் ஒரு முன்னுரையும், சிவத்தம்பி ஒரு பதிப்புரையும் எழுதியுள்ளார்கள். வித்தியானந்தன் தன் முன்னுரையில், சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலில் இராப்பூசையின் பின் இந்த நாடகம் விடிய விடிய நடைபெற்ற செய்தியைக் கூறுகிறார். சிலாபத்திலே ஒரு வடமோடிக் கூத்து மரபு இருந்திருக்கிறது என்ற செய்தி இன்றைய தலைமுறைக்குப் பெருவியப்பளிக்கும் செய்தியாகும்.

அத்தோடு அப்பகுதியில் ஆடப்பட்ட இன்னொரு வடமோடி நாடகம் வாளாபிமன் நாடகம் ஆகும். இந்த இரண்டு நாடகங்கள் பற்றிய அறிமுகம் அந்த இரண்டு நாடகப் பிரதிகளையும் மையமாக வைத்து இங்கே தரப்படுகிறது. அங்கு முன்னர் ஆடப்பட்ட கூத்துகள், அந்த மரபு மற்றும் அதன் தேவைப்பாடு என்பனவற்றை அறிய இது உதவும்.

### மார்க்கண்டேயன் வடமோடி நாடகம்: பிரதியில் உள்ளபடி

ஆரம்பத்தில் கட்டியக்காரன் தோன்றுகிறான். குசல ராஜாவின் மகன் மிருகண்ட மகரிஷி கொலுவுக்கு வருவதைக் கூறிச் செல்கிறான். அவர் வருகிறார். பின்னர் தனது மனைவி மருத்துதியை அழைக்கிறார். அதன் பின்னர் கன்னிமார் தோன்றுகிறார்கள். மருத்துதி கன்னிமாரை விருந்துக்கு அழைக்கிறாள். விருந்துக்கு வந்த கன்னிமார் அவர்கள் வீட்டில் பிள்ளை இல்லாதபடியால் சாப்பிட முடியாது என்று கூறிச் செல்கிறார்கள். பிள்ளை இல்லை என்று மருத்துதி அழுகிறாள். சிவபெருமானை நினைத்து அழுகிறாள். மிருகண்டர் இது கண்டு துயரம் அடைகிறார். இருவரும் பிள்ளை வரம் கேட்டுச் சிவனைத் தேடி செல்கிறார்கள். சிவன் ரிஷப வாகனத்தில் வருகிறார். மிருகண்ட ரிஷியும் மனைவியும் தம் குறையை கூறுகிறார்கள். 16 வயது ஆயுளுடைய ஒரு அறிவாளி மகனை அளிப்பதாக சிவன் கூறுகிறார். சோழ மகாராஜாவின் மகனான வீதிவிடங்கனை சிவன் அழைத்து அவர்களுக்கு மகனாகப் பிறக்கச் சொல்லுகிறார். “16 வயதில் உயிர் எடுக்க எமன் வருவானே?” என்று அவன் சிவனைக் கேட்க, “நான் வந்து உன்னைக் காப்பாற்றுவேன்; என்றென்றும் 16 வயது உனக்கு இருக்கும்” என்று சிவன் கூறுகிறார்.

மருத்துதி கர்ப்பமடைகிறாள். மார்க்கண்டேயன் பிறக்கிறான். மார்க்கண்டேயன் கல்வி கற்கும் வயதை அடைந்ததும் உபாத்தியாயரை அழைத்துக் கல்வி கற்பிக்கிறார்கள். மார்பினில் பூணூல் பூண்ட ஒரு பிராமண வாத்தியார் வருகிறார். அதுவும் போதாமல் நான்முகனையும் அழைத்துச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய எல்லாவற்றையும் கற்பிக்கிறார்கள். கற்பித்தலின் போது சிவன், ஐந்து எழுத்து, சூலம் எல்லாம் விளங்கப்படுத்திச் சிவஞானம் போதிக்கிறார்கள், குருமார். மார்க்கண்டேயன் வளர்ந்ததும் தவம் செய்யத் தாயிடம் விடை கேட்கின்றான். “16 வயது வந்தால் எமன் வருவான்” என்று தாய் எச்சரிக்கிறாள். “சிவனை நோக்கிச் செய்யும் தவம் என்னைக் காக்கும்” என்று கூறி அவன் தவம் செய்யச் செல்கிறான். சதுர்முகனார் உபதேசம் செய்த பின்பு சிவசங்கரனைப் பூஜை செய்ய மார்க்கண்டேயன் விதிமுறையாய் நதியினிலே ஸ்நானம் பண்ணி, விநாயகனை ‘நாயகனே’ என்று நமஸ்கரித்து பூஜை செய்யப் புறப்படுகிறான். இந்தக் காட்சி இந்தக் கூத்திலே மிக மிக நீண்ட நேரம் வருகிறது. சிவனைத் துதிக்கின்ற பாடல்கள் அதிலே மிக அதிகம் வருகின்றன.

> “நஞ்சை அமிர்தமாக உண்டவா
> திருவயிற்றில் நம சிவாய பரமையான குருவே
> எங்கும் நீர்நாடி வாழும் வங்கிர மகேஸ்வரா
> சிவ சம்போ சிவா
> காலன் வராமல் பூஜை செய்கிறேன்
> அருள் பெருகி உன் காட்சி கொடுத்து தாக்கி
> வாராமல் காப்பாற்றும்” என வேண்டுகிறார்.

இந்தக் கட்டம் இந்தக் கூத்தில் மிக அதிக நேரத்தை எடுக்கிறது. ஒரு வகையில் சைவம், சிவன் பற்றிய பிரசாரம் அல்லது போதனையாகவே இது காணப்படுகிறது.

சிவன் தோன்றுகிறார். “காலனுக்குப் பயப்பட வேண்டாம்; நம்முடைய காலடியில் இருந்து பூஜை செய்யும்” என்று கூறிச் செல்கிறார். அதன் பின் எமதர்மராஜன் வருகிறார். சித்திரபுத்திரனாரை அழைத்துக் கணக்குக் கேட்கின்றார். “மார்க்கண்டேயருக்கு 16 வயதாகிவிட்டது; அவன் கணக்கு முடிந்துவிட்டது” என்று சித்திரபுத்திரனார் கூறுகிறார். செங்கண்மாள் பூதம், செந்தணல் பூதம் என்ற இரண்டு பூதங்களை மார்க்கண்டேயன் உயிரைக் கவர எமன் அனுப்புகிறார். பூதங்கள் மார்க்கண்டேயனைத் தம்முடன் வரும்படி அழைக்கின்றன. மார்க்கண்டேயன் செல்ல மறுக்கிறான். மேலும் மேலும் சிவனை வணங்குகிறான். அவனது உயிரை வாங்கப் பூதங்களால் முடியவில்லை.

எமனிடம் சென்று பூதங்கள் தங்கள் இயலாமையைக் கூறுகின்றன. அவர்களைப் விட பெரிதான இன்னும் இரண்டு பூதங்களை எமன் அனுப்பி வைக்கிறார். அவர்களாலும் மார்க்கண்டேயன் உயிரைப் பறிக்க முடியவில்லை. சிவபக்தி அவனைக் காக்கிறது. அப்பூதங்கள் இரண்டும் எமனிடம் சென்று தங்கள் இயலாமையைக் கூறுகின்றன. எல்லாப் பூதங்களையும் அழைத்துக் கொண்டு அட்டகாசமாக மார்க்கண்டேயன் உயிரை வாங்க எமன் செல்கின்றான்.

தன்னைக் காப்பாற்ற வேண்டி சிவனிடம் மார்க்கண்டேயன் முறையிடுகின்றான். சிவன் பயப்பட வேண்டாம் என்று அவருக்கு தைரியம் கூறுகிறார். மீண்டும் எமன் வருகிறார். எமனுக்கும் மார்க்கண்டேயனுக்கும் இடையில் கடுமையான வாதங்கள் நடைபெறுகின்றன. வடமோடிக் கூத்தின் இறுதி எப்போதும் ஒரு சண்டையில் முடியும். அந்தச் சண்டை போல இங்கே எமனுக்கும் மார்க்கண்டேயனுக்கும் இடையில் ஓர் இறுதிச் சண்டை நடைபெறுகிறது. எமன் பாசக்கயிற்றை வீச, தன்னைக் காப்பாற்றும்படி சிவனிடம் மார்க்கண்டேயன் முறையிடுகிறான். “பயப்பட வேண்டாம்; நீ தொடர்ந்து பூஜை செய்” என்று சிவன் மார்க்கண்டேயனுக்கு நம்பிக்கை அளிக்கிறார். எமனும் மார்க்கண்டேயனும் மீண்டும் தர்க்கம் புரிகிறார்கள். மிக நீண்ட தர்க்கம் அது. அதிலே சிவனின் சிறப்புகள் வரிசையாகக் கூறப்படுகின்றன. இறுதியில் எமன் வலிமையான பாசக்கயிற்றை வீசுகிறார். சிவன் தோன்றி எமனை உதைக்கிறார். இந்தக் காட்சியைக் காண விஷ்ணு வருகின்றார்; பூமாதேவியும் வருகின்றாள். எமன் சிவனுடைய உதையினால் பாதாளம் சென்றுவிடுகிறார். இறப்புகள் நடைபெறவில்லையே; பூமி பாரமாகிவிட்டது என்று பூமாதேவி வருந்துகிறாள். சிவனிடம் சென்று அவர்கள் இதுபற்றி முறையிடுகிறார்கள். சிவன் எமனை உயிர் கொடுத்து மீண்டும் பழைய தொழிலுக்கு அனுப்புகிறார். சிவன் எமனுக்குப் பல புத்திமதிகள் கூறுகிறார்.

*“ஐந்து எழுத்தை மறக்காதே*
*சிவனை வணங்குவோரின்*
*மீது பாசக் கயிறு வீசாதே*
*கோயில்தோறும் பூஜை செய்பவரை*
*திருவிளக்கேத்தி வைப்போரை*
*இராமா என்று பணிபுரிவோரை*
*பாசக் கயிறால் கலங்கப் பண்ணாதே”*

என்று புதிய விதிகள் கூறி சிவன் அவரை அனுப்பி வைக்கிறார். எமன் அதை ஏற்றுக்கொண்டு செல்கிறார். விதியையும் சிவன் வெல்லுவார் என்பதை மிகவும் அழுத்திக் கூறும் நாடகம் இது. சிவனுடைய புகழையும், அவரை வணங்குவோர் எமனால் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற செய்தியையும் கூறுகின்ற இந்த நாடகம் மிகுந்த நாடகத் தன்மை கொண்டுள்ளது.

மார்க்கண்டேய புராணத்தில் வரும் ஒரு கதை எடுக்கப்பட்டுக் கூத்து வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. கட்டியக்காரன், பாத்திரங்களின் வரவு, உச்சக் காட்சியான எமன் பாசக் கயிறு வீசும் காட்சி நோக்கிச் செல்லுதல், எமன் அணி அணியாக மார்க்கண்டேயனின் உயிரைக் கவர பூதங்களை அனுப்புதல் ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெறுகின்றன. வடமோடி நாடகக் கட்டமைப்பைப் பின்பற்றி எமனுக்கும் மார்க்கண்டேயனுக்கும் இடையே நடைபெறும் சண்டையில் உச்சம் பெறும் ஒரு முடிவை இது காண்கிறது. இந்த நாடகம் சிலாபம் முன்னேஸ்வரம் கோயிலில் இராக்காலங்களில் விடிய விடிய அரங்கேற்றப்பட்டது என அறிகிறோம். சில வேளைகளில் இது திருக்கேதீஸ்வரத்திலும் அரங்கேற்றப்பட்டிருக்கலாம்.

### சமய அரசியல்

பழைய காலங்களில் சமயங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டன. ஒவ்வொரு சமயமும் தமது இறைவனை உயர்த்திப் பேச முயன்றது. அந்தச் சூழலில் சைவ சமயம் தனது கருத்துகளை மக்களிடம் பரப்ப பல வழிகளைப் பயன்படுத்தியது. அவற்றில் ஒன்று கூத்து.

மார்க்கண்டேயன் கூத்தில் சிவன் மிக உயர்ந்த இறைவனாகக் காட்டப்படுகிறார். யமன் போன்ற தெய்வங்களும் அவரது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் காட்டப்படுகின்றனர். இதன் மூலம் சைவ சமயத்தின் உயர்வு வலியுறுத்தப்படுகிறது. பக்தி மற்றும் சமூக ஒழுக்கம் என்பன இங்கு இடம் பெறுகின்றன. இந்தக் கூத்து மக்களுக்கு ஒரு முக்கியமான செய்தியை வழங்குகிறது: இறைவனை நம்ப வேண்டும்; நல்ல வாழ்க்கை வாழ வேண்டும்; தர்மத்தைப் பின்பற்ற வேண்டும். இவை மனித வாழ்க்கையின் முக்கியமான நெறிகள். கூத்து இந்த நெறிகளை மக்களிடம் நினைவூட்டுகிறது.

### கிராமியச் சமூகத்தில் கூத்தின் பங்கு

கிராமியச் சமூகத்தில் கூத்து ஒரு முக்கியமான கலாசார நிகழ்வாக இருந்தது. மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி அதை அனுபவித்தனர். அது மக்களுக்கு

மகிழ்ச்சியையும் அறிவையும் வழங்கியது. புராணக் கதைகள் இதன் மூலம் தலைமுறை தலைமுறையாகப் பரவின. அதனால் கூத்து ஒரு பண்பாட்டு நினைவகம் போலச் செயற்பட்டது.

சிவபெருமானின் மைய நிலை இங்கு முக்கியமானது. மார்க்கண்டேயன் கூத்தில் சிவன் ஒரு சாதாரணத் தெய்வமாகக் காட்டப்படுவதில்லை; அவர் பரம இறைவனாகக் காட்டப்படுகிறார். அவரது அருள் எல்லாவற்றையும் மீறும். அவரது பக்தன் பாதுகாக்கப்படுவான். இந்தக் கருத்து கூத்தின் முழு அமைப்பிலும் வெளிப்படுகிறது.

மார்க்கண்டேயன் கூத்து ஒரு புராணக் கதையை மட்டும் சொல்லும் நாடகம் அல்ல; அது சமயச் செய்தியையும் சமூகச் சிந்தனையையும் கொண்ட கலாசார வெளிப்பாடாகும். இதில் சிவபக்தி உயர்த்திப் பேசப்படுகிறது. பக்தியின் சக்தி வலியுறுத்தப்படுகிறது. இறைவன் மீது நம்பிக்கை வைத்தால் வாழ்க்கை பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை மக்களிடம் உருவாக்கப்படுகிறது. இதனால் மார்க்கண்டேயன் கூத்து தமிழ்ச் சமூகத்தில் ஒரு முக்கியமான சமய-கலாசார நாடகமாக விளங்கியது.

### வாளபிமன் வடமோடி நாடகம்: பிரதியில் உள்ளபடி

சிலாபத்தில் ஆடப்பட்ட இன்னொரு நாடகம் வாளபிமன் நாடகமாகும். இந்த நாடகம் மகாபாரதத்தில் வரும் ஒரு கிளைக் கதை; ஒருவகையில் பஞ்சபாண்டவர்களின் பிள்ளைகளின் சாகசக் கதை.

சுந்தரி கிருஷ்ணருக்கு மகள் முறை ஆனவள்; அண்ணன் பலராமரின் மகள். கிருஷ்ணரின் வருகையின் பின்னால் அவள் தோன்றுகிறாள். அவர் அவளை ஆசீர்வதித்துச் செல்கிறார். அதன் பின் அர்ஜுனன் தோன்றுகிறார். அர்ஜுனனின் மனைவி சுபத்திரை கிருஷ்ணரின் தங்கை. அவர்களின் மகன் அபிமன்யு. கிருஷ்ணர் சமூகம் சென்று அவர்கள் தன்னுடைய மகனுக்கு கல்யாணம் பேசுகிறார்கள். அபிமன்யுவுக்கும் சுந்தரிக்கும் கல்யாணம் செய்ய ஒத்துக் கொள்கிறார்கள்.

அடுத்து துரியோதனன் கொலுவுக்கு வருகிறான். சூதில் தோற்றதனால், எல்லாச் செல்வத்தையும் அள்ளிக்கொண்டு, பஞ்சபாண்டவரை அவன் வனத்துக்கு அனுப்புகிறான். அர்ஜுனன் மனைவி சுபத்திரை தான் தனியே இருக்கப் போவதாகச் சொல்லிக் கவலைப்படுகிறாள். அவன், மகன் வாளபிமன் வனவாசம் போகத் தேவையில்லை என்று கூறுகிறான். சுபத்திரையையும் அபிமன்யுவையும் விட்டுவிட்டு அவர்கள் வனவாசம் போகிறார்கள்.

துரியோதனன் மனைவி, தன் கணவனிடம் தங்கள் மகனுக்கு ஒரு பெண் பார்க்கக் கூறுகிறாள். சுந்தரியைத் திருமணம் பண்ணலாம் என்று ஆலோசனை கூறப்படுகிறது. திருமணம் நிச்சயமாகிறது. கிருஷ்ணரின் ஆலோசனையை சுந்தரியின் தந்தையார் பலராமர் கேட்கவில்லை. கல்யாணம் நிச்சயிக்கப்படுகிறது. சுந்தரி தனது காதலனான வாளபிமனை நினைத்துத் துயரமடைகிறாள். தோழியின் ஆலோசனைப்படி தன் நிலை உரைத்து வாளபிமனுக்குக் கடிதம் அனுப்புகிறாள்.

வாளபிமன் சுந்தரியைத் திருமணம் செய்ய தனியே புறப்படுகிறான். வரும் வழியிலேயே பீமனின் மகனான கடோற்கசனையும், அர்ஜுனன் மகனான அரவானையும், நகுலன் மகனான தொந்திச் செட்டியையும் சந்திக்கிறான். ஆரம்பத்தில் அவர்களோடு போர் புரிந்து, பின்னர் சகோதரர் என இனம் கண்டு சமாதானமாகி, அனைவரையும் கூட்டிக்கொண்டு சுந்தரியின் மாளிகைக்கு வருகிறான். அங்கு வந்து சுந்தரிக்கு ஒரு பூமாலை கட்டும் கிழவி மூலம் செய்தி அனுப்புகிறான். தயிர் கொண்டுவரும் இடையர்களோடு சேர்ந்து இவர்களும் திருமணத்துக்குள் நுழைகிறார்கள். அங்கு பல குழப்படிகள் செய்கிறார்கள். துரியோதனன் பகுதியாரோடு சண்டை செய்து வெல்கிறார்கள். பின்னர் சுந்தரிக்கும் வாளபிமனுக்கும் திருமணம் நடைபெறுகிறது.

சிலாபத்தில் முன்னொரு காலத்தில் ஆடப்பட்டு, இப்போது அந்த வழமை அழிந்து போன மார்க்கண்டேயன் நாடகத்தையும் வாளபிமன் நாடகத்தையும் ஒப்பிட்டு ஆராய்வது பல விடயங்களை அறிந்து கொள்ள உதவும். அதற்கு இது சமயம் அல்ல. எனினும், மார்க்கண்டேய நாடகத்தில் வாளபிமன் நாடகத்தை விட சைவ சமயப் பிரசாரம் மிக அதிகமாக இருக்கிறது.

வாளபிமன் நாடகத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் அதிகமாக இருக்கின்றன. இவை இரண்டும் வடமேற்கு இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே இருந்த ஆகமம் சார்ந்த கோவில்களில் நடைபெற்ற கூத்துகளாகும். இதனை விட ஆகமம் சாரா உள்ளூர் வழிபாட்டுக் கோவில்களில் வைஷ்ணவக் கடவுளான திருமாலும், ஏனைய சிறு கோவில்களில் திரௌபதி, மாரியம்மன், காளியம்மன் முதலான பெண் தெய்வ வழிபாடுகளும் கிராமிய முறையில், நாட்டார் முறையில் அன்று வழக்கிலிருந்தன; இன்றும் உள்ளன.

(தொடரும்)

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. ‘இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்’ என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்

*ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட*

# மார்க்சிய சமூகவியலாளர் கலாநிதி நியூட்டன் குணசிங்க: 1946 – 1988


**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

**க**லாநிதி நியூட்டன் குணசிங்க 1946ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதி நாவலப்பிட்டியில் பிறந்தார். அவர் தமது இரண்டாம் நிலைக் கல்வியை கம்பளை விக்கிரமபாகு மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார். 1963ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு அவர் சமூகவியலை சிறப்புப் பாடமாகக் கற்று 1968ஆம் ஆண்டில் பட்டப்படிப்பை முடித்தார். பேராசிரியர் ரால்ப் பீரிஸ், கணநாத் ஒபயசேகர, லக்சிறி ஜயசூரிய ஆகியோர் பேராதனையில் இவரது ஆசிரியர்களாக இருந்தனர். பட்டப்படிப்பினை முடித்ததும் உயர்கல்விக்கான தேசிய ஆணைக்குழு (NCHE) என்ற அமைப்பில் ஆய்வு உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். அப்போது அவ்வமைப்பின் தலைவராக இருந்தவர் பேராசிரியர் குணபால மலலசேகர ஆவார். நியூட்டன் குணசிங்க ஒருவருட காலம் வித்தியோதய பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் இருந்தார்.

1973ஆம் ஆண்டு அவர் அவுஸ்ரேலியாவின் மொனஷ் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். அதன் பின்னர் கலாநிதிப்பட்டப் படிப்புக்காக அவர் இங்கிலாந்து சென்றார். முதலில் அவர் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்தார். அப்போது அங்கு சிறந்த புலமையாளர்களான மக்ஸ் குளுக்மன் (Max Gluckman) என்ற சமூக மானிடவியலாளரும், பீட்டர் வூல்ஸ்லி (Peter Worsley) என்ற சமூகவியலாளரும் முறையே சமூக மானிடவியல், சமூகவியல் ஆகிய துறைகளில் பேராசிரியர்களாகப் பணியாற்றினர். குணசிங்க மான்செஸ்டரில் இருந்து சசெக்ஸ் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கு 1979இல் கலாநிதிப் பட்டப்படிப்பை நிறைவு செய்தார். சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் பின்பட்டப்படிப்புத் துறையின் கருத்தரங்க அறையிலும், புலமையாளர்களின் சந்திப்பு மன்றுகளிலும், ஐரோப்பா, மூன்றாம் உலக நாடுகள், (போலந்து, ஹங்கேரி போன்ற) கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகிய பல்தேசத்து அறிஞர்களோடும் கலந்துரையாடும் அரிய வாய்ப்பை அவர் பெற்றார். அவர் அறிஞர் உலகில் முதற்தரமான புலமையாளர்களில் ஒருவர், சுவாரசியமாகவும் சிந்தனையைக் கிளறும் வகையிலும் உரையாடும் திறன் மிக்கவர் என்ற புகழைப் பெற்றார்.




நியூட்டன் குணசிங்க
Image Source - colombotelegraph.com

பல்துறை அறிவுமிக்க புலமையாளரான கலாநிதி குணசிங்கவின் வாழ்வு குறுகிய காலமாயினும் அவரது பங்களிப்புக் காத்திரமானது. இலங்கையின் முதலாவது மார்க்சிஸ்ட் மானிடவியலாளர் என்ற பெருமை அவரையே சாரும். இலங்கையில் மார்க்சிய புலமை ஆய்வுகளை நெறிமுறைப்படி வழிநடத்திய முன்னோடி இவர் எனலாம். மார்க்சியத்தை உயர் தகைமையுடைய ஐரோப்பிய மார்க்சிய சமூகவியல், மானிடவியல் மரபுகளுடன் இணைத்த புத்தாக்க முன்னோடி அறிஞர்களுள் இவரும் ஒருவராவர். இருபது ஆண்டு கால இவரது புலமைவாழ்வும், பங்களிப்புகளும் ஈடு இணையற்றவை. இலங்கையில் 'Agrarian Studies' என்ற கல்வித்துறையை வளர்த்த முன்னோடியாக இவர் திகழ்ந்தார்.

இவரது கலாநிதிப் பட்ட ஆய்வேடு இலங்கையின் கண்டிய கிராமிய சமூகம் பற்றிய சிறப்பான ஆய்வாகும். அது ஆய்வு வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையான படைப்பு. கலாநிதி குணசிங்க குறிப்பிட்டதொரு அரசியல் நெறியில் நம்பிக்கை உடையவராய் இருந்தார். தமது அரசியல் நம்பிக்கையையும், புலமைத்துறைப் பயிற்சியையும் ஒன்றிணைத்து ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்த சமூக விஞ்ஞானியாக அவர் விளங்கினார்.

நியூட்டன் குணசிங்கவின் சிறப்பியல்புகளில் முக்கியமானது அவரது அரசியல் நம்பிக்கைகளை ஆக்கபூர்வமான முறையில் சமூக விஞ்ஞானப் புலமைத்துறை அக்கறைகளுடன் இணைத்தமையாகும். இளமையில் நாவலப்பிட்டியில் கல்வி கற்ற காலப்பகுதியில், 1960களின் தொடக்கத்தில் அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளர்ச்சிவாத அரசியலால் கவரப்பட்டார். 1963இன் பின்னர் மாஓசேதுங் கொள்கைகளால் கவரப்பட்டு மார்க்சியத்தின் மாஓசேதுங் பிரிவு ஆதரவாளராகியமை அவரது வாழ்வில் ஒரு திருப்புமுனையாகும். பல்கலைக்கழகத்தில் அவர் ஒரு மாணவர் தலைவராகவும் பீக்கிங் பிரிவுக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளராகவும் விளங்கினார். கம்யூனிஸ்ட் கட்சியின் பீக்கிங் பிரிவின் தலைவராக

நா. சண்முகதாசன் விளங்கினார். 1960களின் நடுப்பகுதி எமது நாட்டின் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் முக்கியமான காலப்பகுதியாகும். அக்காலத்தின் மாணவர்கள் தீவிரவாத அரசியலால் ஈர்க்கப்பட்டிருந்தனர். உக்கிரமான கோட்பாட்டு விவாதங்கள் அக்காலத்தில் இடதுசாரிகள் மத்தியில் இடம்பெற்றன. இவ்விவாதங்களால் இத்தலைமுறையினர் பாதிக்கப்பட்டனர். சீனசோவியத் சர்ச்சை, ட்ரொட்ஸ்கியவாதிகளிடம் தோன்றிய புதிய கிளர்ச்சிவாதம், 1964இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிகளுக்கும் இடையிலான கூட்டணி உருவானமையும் அதன் பின்விளைவுகளும் 1960களின் பத்தாண்டுக் கால வரலாற்றை பாதித்த முக்கிய நிகழ்வுகளாகும். அக்காலத்தில் நியூட்டன் குணசிங்க ஒரு மாணவர் தலைவராகவும், நாவலப்பிட்டி-கண்டி வலயத்தின் தொழிற்சங்க செயற்பாட்டாளராகவும் விளங்கினார்.



மக்ஸ் குளுக்மன்
Image Source - navymule9.sakura.ne.jp

நியூட்டன் குணசிங்க அக்காலத்தில் தொழிலாளர் கல்வி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார். அப்போது அவர் பேராதனையில் புகழ்பெற்ற சமூகவியல் துறையின் மாணவராகவும் இருந்தார். இவ்வாறு, சமூகவியல் மாணவராகவும், அரசியல் செயற்பாட்டாளராகவும் இயங்கியமை இவருக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு எனலாம். ஒரே சமயத்தில் அவர் இரண்டு அறிவுத்துறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். மார்க்சிசம் மற்றும் சமூகவியல் என்ற இரண்டிலும் அவர் ஆழமான பரிச்சயத்தைப் பெற்றார். மேற்குலக சமூகவியலை ரால்ப் பீரிஸ், கணநாத் ஒபயசேகர போன்ற அறிவாளிகளிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்றார். இவ்வாய்ப்பு கலாநிதி குணசிங்கவின் அறிவுத்துறைப் பயணத்தில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியது.

கார்ல் மார்க்ஸ், மக்ஸ் வெபர் என்ற இரு சிந்தனையாளர்களின் கருத்துகளையும் ஆழமாகக் கற்றிருந்த குணசிங்க, தம் உரையாடல்களில் அவற்றினை எளிமையாக வெளிப்படுத்திய விதம் பலரையும் வியப்பில் ஆழ்த்துவதாக இருந்தது. மான்செஸ்டர் பல்கலைக்கழகம், சசெக்ஸ் பல்கலைக்கழகம் என்ற இரு பல்கலைக்கழகங்களிலும் அவர் கல்வியிலும் ஆய்விலும் ஈடுபட்ட காலப்பகுதி அவர் புடம்போடப்பட்ட புலமையாளராக பிற்காலத்தில் மிளிர்வதற்கு உதவியது. மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் அவர் மக்ஸ் குளுக்மன் (Max Gluckman) என்னும் புகழ்பெற்ற மார்க்சிய அறிஞரின் செல்வாக்கிற்கு உட்பட்டார். குணசிங்க இறப்பதற்குச் சில மாதங்கள் முன்பு இதுபற்றிக் குறிப்பிட்டிருந்தார். மக்ஸ் குளுக்மன் தென் ஆபிரிக்கா பற்றிய மானிடவியலில் ஆழங்கால்பட்டவர். ஆங்கில நாட்டின் பழமைவாதப் பல்கலைக்கழகங்களில் மார்க்சியம் அக்காலத்தில் நன்கு வேரூன்றியிருக்கவில்லை. ஆயினும் இங்கிலாந்துக்கு வெளியே மேற்கு ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் நெறிமுறைப்படுத்தப்பட்ட மார்க்சிய ஆய்வுகள் இடம்பெற்றன. மோரிஸ் கொடலியர் (Maurice Godelier), சமிர் அமின், குந்தர் பிராங், எர்னெஸ்டோ லக்லோ (Ernesto Laclau) ஆகியோர் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னரான காலத்தில் மார்க்சியப் புலமைத்துறையை செழுமைப்படுத்திய அறிவாளிகளாகத் திகழ்ந்தனர். குணசிங்க இங்கிலாந்தின் பழமைவாத சிந்தனைகளில் இருந்து விடுபட்டு இச்செழுமையான மார்க்சிய மரபின் மீது தம் கவனத்தைத் திருப்பினார். மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இருந்து அவர் சசெக்ஸ் பல்கலைக்கழகத்திற்கு மாறியபோது அவர் மானிடவியலாளர் என்பதோடு அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்ற பயில்நெறியையும் தழுவிய ஒருவரானார். பழமையான மானிடவியல் மரபில் இருந்து விடுபட்ட மானிடவியலாளர், அரசியல் பொருளாதாரவியலாளர் (Political Economist) என்ற இரு பரிமாணங்கள் அவரது புலமை ஆளுமையில் வெளிப்பட்டன.

## சசெக்ஸ் பல்கலைக்கழகம்

குணசிங்கவின் அறிவியல் ஆக்கத்திறன் முறையாக வளர்ச்சி பெற்ற இடம் சசெக்ஸ் பல்கலைக்கழகமாகும். மான்செஸ்டரில் அக்காலத்தில் சமூகவியலாளர்களுக்கும் சமூக மானிடவியலாளர்களுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. சமூக விஞ்ஞானத் துறையில் யாருக்குத் தலைமையிடம் வேண்டும் என்பதாக அப்போட்டி அமைந்தது. குணசிங்கவிற்கு மான்செஸ்டரின் புலமைச்சூழல் பிடிக்கவில்லை. அவரது புலமைத்துறை விருப்புகளுக்கு ஏற்ற இடம் சசெக்ஸ் பல்கலைக்கழகமே.

அங்கு சமூக விஞ்ஞானங்களின் சமூகக் கோட்பாடு (Social Theory), சமூக ஆராய்ச்சி (Social Research) ஆகியவற்றில் ஆக்கபூர்வமான பரிசோதனைகள் நிகழ்த்துவதற்கு வாய்ப்பு உள்ளது என அவர் கண்டுகொண்டார். சசெக்ஸில் அவருக்கு மூன்றாம் உலகில் இருந்து அங்கு வந்திருந்த கிளர்ச்சிவாதச் சிந்தனையுடைய மாணவர்கள் பலருடன் நட்பை வளர்த்துக்கொள்ள முடிந்தது. இங்கிலாந்தின் பல்கலைக்கழகங்கள் யாவற்றிலும் பார்க்க சசெக்ஸ் பல்கலைக்கழகம் அந்நாளில் கிளர்ச்சிவாத அறிவியலாளர்களின் சிந்தனைக் கூடம் என்ற வகையில் முதன்மை பெற்றிருந்தது. அங்கு அவர் தமது பின்பட்டப்படிப்பை ஸ்கார்லெட் எப்ஸ்டின் (Scarlett Epstein), டட்லி சியர்ஸ் (Dudley Seers), ரிச்சார்ட் ஜொல்லி (Richard Jolly) ஆகியோரின் வழிகாட்டலில் தொடர்ந்தார்.

சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் குணசிங்க ஆய்வு மாணவராக இருந்த காலத்திலேயே அவர் 'கண்டியின் கிராமங்களில் உற்பத்தி உறவுகள்' என்னும் விடயம் பற்றிய கலாநிதிப் பட்டப்படிப்பிற்கான ஆய்வை மேற்கொண்டார். குணசிங்கவை மிகவும் கவர்ந்த பேராசிரியர் மக்ஸ் குளுக்மன், அவரை தமது ஆபிரிக்கா பற்றிய ஆய்வுக்கு தமது மாணவனாக இணையும்படி வேண்டினார். குணசிங்கவிற்கு புகழ்பெற்ற 'றோட்ஸ்லிவிங்ஸ்டன்' (RhodesLivingston) புலமைப்பரிசை வழங்கவும் தயாராக இருந்தார். ஆபிரிக்க மானிடவியல் ஆய்வுத்துறையில் மக்ஸ் குளுக்மனால் தமது கூர்ந்த மதிமிக்க மாணவரான குணசிங்கவை ஈர்க்க முடியவில்லை. இச்சந்தர்ப்பத்திலேயே கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஈ.ஆர். லீச் (E.R. Leach) அவர்களை குணசிங்க சந்திக்கிறார். இச்சந்திப்பு அவர் இலங்கையின் மானிடவியல் ஆராய்ச்சியில் ஈடுபடுவது என்ற உறுதியான முடிவை எடுப்பதற்கு உதவியது. இலங்கையின் அனுராதபுர மாவட்டத்தின் புல் எலிய (Pul Eliya) என்ற கிராமத்தில் ஈ.ஆர். லீச் அவர்கள் 1960களில் தங்கியிருந்து ஆய்வொன்றை மேற்கொண்டார். அவர் புல் எலியவிற்குச் சென்று புதிய ஆய்வு ஒன்றை நிகழ்த்தும்படி குணசிங்கவிற்கு ஆலோசனை கூறினார். ஆயினும் குணசிங்க, தான் அனுபவ ரீதியாக அறிந்திருந்த கண்டியின் உடுநுவர கிராமப் பகுதியில் கள ஆய்வைச் செய்வதென்ற முடிவை சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது மேற்கொண்டிருந்தார்.

நியூட்டன் குணசிங்கவின் கலாநிதிப் பட்ட ஆய்வேடு 1990ஆம் ஆண்டிலேயே நூலுருவம் பெற்றது. இலங்கைச் சமூகம் பற்றிய நெறிமுறை தவறாத மார்க்சிய ஆய்வினைத் தொடக்கிவைத்த ஆய்வு இது எனலாம். அதுவரை காலமும் இலங்கையின் மார்க்சிய ஆய்வுகள் எவையும் இலங்கைச் சமூகத்தை அதன் ஸ்தூல நிலையில் ஆய்வு (Concrete Study) செய்ய முயற்சிக்கவில்லை. இலங்கையின் மார்க்சியம் பழைய பாணியிலான மார்க்சியக் கோட்பாட்டாளர்களையே (Theoreticians) தோற்றுவித்திருந்தது. லேர்ஸ்கி (Lerski) ஒருமுறை குறிப்பிட்டது போன்று, அக்கோட்பாட்டாளர்கள் யாவரும் கண்டனத் துண்டுப் பிரசுரங்களை எழுதுவதில் முடிசூடா மன்னர்களாக இருந்தனர். அவர்களை மார்க்சியப் புலமையாளர்கள் எனக் கூற முடியாது. அக்காலத்தில் சமூகவியல் துறையில் லிபரல் மரபுப் புலமையாளர்கள் இருந்தனர். எம்.டி. ராகவன், ரால்ப் பீரிஸ், கணநாத் ஒபயசேகர ஆகியோர் இலங்கை பற்றிய ஆய்வுகளில் வித்தியாசமான மரபை உருவாக்கியிருந்தனர். இம்மரபை மார்க்சியத்திற்கு முந்திய புலமைமரபு என்று கூறலாம். கலாநிதி குணசிங்கவின் ஆய்வு இப்பின்புலத்தில் புலமைத்துவச் செயல்முறையில் (Academic Practice) புதியதொரு போக்கைத் தொடங்கிவைத்தது. மார்க்சியக் கோட்பாட்டை செறிவான கள ஆய்வு முறைகளுடன் முதன்முறையாக இணைத்தவர் என்ற பெருமை கலாநிதி நியூட்டன் குணசிங்க அவர்களுக்கே உரியது. இலங்கையின் கிராமிய சமூகத்தில் உற்பத்தி உறவுகள் (Production Relations), வர்க்க உருவாக்கம் (Class Formation) என்ற இரண்டையும் இணைத்து ஆய்வு நிகழ்த்திய முதலாவது புலமையாளர் என்ற சிறப்பும் கலாநிதி நியூட்டன் குணசிங்க அவர்களுக்கே உரியது எனலாம்.

## 1970களின் மார்க்சிய விவாதங்கள்

நியூட்டன் குணசிங்க அவர்கள் தமது கலாநிதிப் பட்ட ஆய்வில் முன்வைக்கும் கோட்பாடுகள் பற்றியும், அக்கோட்பாடுகள் எழுந்த அறிவியல் பின்புலம் பற்றியும் சில குறிப்புகளைக் கூறுதல் பொருத்தமுடையது. உலகம் முழுவதிலும் மார்க்சியர்களிடையே பெரும் விவாதங்கள் 1970களில் இடம்பெற்றன. இந்த விவாதங்களின் மையக்கருத்தாக மூன்றாம் உலகின் முதலாளித்துவ வளர்ச்சியின் இயல்பு யாது என்ற விடயம் அமைந்தது. இந்தப் பிரச்சினையை நவமார்க்சிஸ்டுகள் எனப்படுவோரின் வார்த்தைகளில் 'சார்பு மண்டல முதலாளித்துவ உருவாக்கம்' என்ற தொடரால் குறிப்பிடலாம்.

இந்த விடயம் குறித்த விவாதத்தின் தொடக்கத்தை 1960களின் பிற்பகுதியில் வெளியான குந்தர் பிராங் அவர்களின் எழுத்துகளில் காணலாம். குந்தர் பிராங் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிந்திய காலத்து மார்க்சியம் எனப்படும் சார்புக் கோட்பாட்டுப் பள்ளியைச் (Dependency School) சேர்ந்தவராவார். சார்புக்

கோட்பாட்டாளர்கள் உலகம் எங்கும் ஏகாதிபத்தியம் முதலாளித்துவ உற்பத்தி முறையைப் புகுத்தியுள்ளது எனக் கூறினர். இவ்வாறு முதலாளித்துவம் புகுத்தப்பட்டமை குறைவிருத்தி, சமத்துவமற்ற பரிவர்த்தனை என்னும் இரு செயல்முறைகளால் ஆனது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எர்னெஸ்டோ லக்லோ (Ernesto Laclau) **1972** இல் இக்கருத்தை மறுத்துரைத்தார். பிராங் அவர்களும் பிறரும் முன்வைத்த 'சார்புப் பொருளாதாரம்' அல்லது சார்புநிலை (Dependency) என்ற கருதுகோள் அடிப்படையில் தவறானது என எர்னெஸ்டோ லக்லோ எடுத்துக்காட்டினார். பிராங் போன்றோர் முதலாளித்துவம் பற்றிய ஆய்வை உற்பத்தி என்ற நிலையில் (At the Level of Production) ஆய்வு செய்யாது, உற்பத்திப் பண்டங்களின் பரிவர்த்தனை அல்லது வர்த்தகச் சுழற்சி என்ற நிலையில் (At the Level of Exchange and Circulation) ஆய்வு செய்ய முயன்றனர் எனக் குறிப்பிட்டார். லக்லோ சுட்டிக்காட்டிய இந்த விடயம் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்தி முறைகள் பற்றிய விவாதத்தை (Modes of Production Debate) தொடக்கிவைத்தது. இவ்விவாதம் உயிர்ப்புடையதும் பயனுடையதுமானதாக அமைந்தது. உற்பத்தி முறைமைகள் பற்றிய விவாதம் பொருளியல், வரலாறு, அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், மானிடவியல் ஆகிய ஒன்றோடொன்று தொடர்புடைய சமூக விஞ்ஞானத் துறைகளின் (Social Science) ஆய்வுகளுக்கு வழிசமைத்தது.

கலாநிதி குணசிங்கவின் கலாநிதிப் பட்ட ஆய்வும், அவர் எழுதிய இலங்கையின் விவசாயச் சமூக உறவுகள் (Agrarian Relations) பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் மேற்குறித்த உற்பத்தி முறைமைகள் பற்றிய ஆய்வுக்கு ஒரு முக்கிய பங்களிப்பாகும். கலாநிதி குணசிங்க சார்பு மண்டல முதலாளித்துவம் (Peripheral Capitalism) என்ற கருதுகோளை தம் ஆய்வுகளில் முன்வைத்தார். இக்கருதுகோளின் படி இலங்கையில் சார்பு மண்டல முதலாளித்துவம்:

அ. மூலதனத்தின் மேலாண்மையின் கீழ் செயற்படுகிறது.

ஆ. அது முதலாளித்துவத்திற்கு முந்திய முறைமைகளை மறு உற்பத்தி செய்கிறது.

என எடுத்துக்காட்டினார். குடியான் விவசாயத்தின் பழமையான உற்பத்தி முறைமைகள், சார்பு மண்டல முதலாளித்துவத்தின் கீழ் மீள் உயிர்ப்புச் செய்யப்படுகின்றன என்ற அவரது கருத்தை விளக்குவதற்கு இது உதவுகிறது (ஆங்கிலத்தில் 'The Reactivation of Archaic Production Relations in Peasant Agriculture under the Conditions of Peripheral Capitalism' என்ற தொடரால் அவர் இக்கருத்தை விளக்கிக் கூறினார்). சமூக மாற்றம் குறித்த மார்க்சிய சமூகவியலிற்கும் கலாநிதி குணசிங்கவின் விளக்கம் மிக முக்கியமான ஒரு பங்களிப்பாகும்.

## கிராம்சியும் அல்தூசரும்

கலாநிதி குணசிங்க சமூக அரசியல் கோட்பாடு (Social and Political Theory) என்ற விடயம் பற்றிய செவ்வியல் கோட்பாடு (Classical Theory), நவீன கோட்பாடு என்ற இரண்டிலும் முறையான படிப்பும் பரிச்சயமும் உடையவரான சமூக விஞ்ஞானியாக இருந்தார். அவர் கோட்பாடு பற்றி மிகுந்த அக்கறை செலுத்தினார். சமூகம் பற்றிய அரைகுறையான புரிதல் கூட வெற்றுத் தொடர்கள், சொற்கள் மூலம் அடையப்படக் கூடியதல்ல எனவும், அது முழுமையான அறிவுக் கோட்பாடுகள் வழங்கக்கூடிய பகுப்பாய்வுக் கருவிகளின் (Analytical Tools) துணையுடன் மட்டுமே சாத்தியமாகும் எனவும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். இலங்கையில் அவர் தம் காலத்து இளம் சமூகவியலாளர்களில் இருந்து வேறுபட்ட இயல்பு உடையவராகக் காணப்பட்டார்.

மார்க்சிய சமூகக் கோட்பாட்டில் உள்ள இடைவெளிகளை பிற அறிவுத்துறை மரபுகளில் இருந்து பெறக்கூடியன மூலம் இட்டு நிரப்பும் தேவை உள்ளதென்பதை அவர் தமது மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் கூறுவார். அவர் தமது கோட்பாட்டு அனுமானங்களை மேலும் வளப்படுத்திக் கொள்வதற்காக மார்க்சியவாதிகள், மோரிஸ் கொடலியர், வெபர், டர்க்கீம், பரெட்டோ (Pareto), லூயி துமோன் (Louis Dumont), உம்பெர்டோ எக்கோ (Umberto Eco) ஆகிய சிந்தனையாளர்களின் ஆக்கங்களை ஆழ்ந்து கற்றார். பிராங்கன்பெர்க் என்பவரின் விஞ்ஞானக் கற்பனை நாவல்களைக் கூட அவர் படிப்பதுண்டு.

கண்டியின் சமூக உருவாக்கம் குறித்து அறிந்து கொள்வதற்காக அவர் கள ஆய்வை நிகழ்த்திய போது மார்க்சிய சமூகக் கோட்பாட்டில் உள்ள இடைவெளிகள், குறைகள் என்பனவற்றை அவர் அவதானித்தார். அதன் பின்னர் அவர் இருபதாம் நூற்றாண்டின் மார்க்சிய சிந்தனையாளரான அந்தோனியோ கிராம்சியை கவனமாக வாசிக்கத் தொடங்கினார். அப்போது அவருக்கு விவசாய வர்க்கக் கூட்டு (Agrarian Block) என்ற கருத்தாக்கம், கண்டியின் சமூக உருவாக்கத்தில் பல்வேறு சிக்கலான கூறுகளின் இயைபாக்கம் பற்றிப் புரிந்துகொள்வதற்கு உதவுவதாக இருப்பதைக் கண்டார்.

லூயி அல்தூசர், கிராம்சி என்ற இரு சிந்தனையாளர்களின் கருத்துகளும் குணசிங்க மீது பெரும் தாக்கத்தைச் செலுத்தின. அல்தூசர் உத்தியோகபூர்வ மார்க்சியம் எனப்படும் கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்சியம் மீது அதிருப்தி கொண்டிருந்த கிளர்ச்சியாளர் ஆவார். அவர் பிரான்சின் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகவும் இருந்தவர். 1968ஆம் ஆண்டின் மாணவர் கிளர்ச்சியின் பின்னர் பிரான்சில் மார்க்சிய கோட்பாட்டு அலை ஒன்று எழுந்தது. அவ்வேளை அல்தூசர் பாரிஸ் நகரின் 'Ecole Normale' இல் தத்துவத் துறையின் பேராசிரியராக இருந்தார்.


அல்தூசரின் 'மூலதனத்தை வாசித்தல்' (Reading Capital) என்ற நூல் நியூட்டன் குணசிங்கவின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நூலின் முதலாவது அத்தியாயத்தின் தொடக்கப் பந்தியில் உள்ளவற்றை மனப்பாடமாகவே ஞாபகத்தில் வைத்திருந்த குணசிங்க முக்கியமான தொடர்களை மேற்கோள் காட்டுவதை அவரது நண்பர்கள் நினைவு கூர்வதுண்டு. உரையாடல்களின் போது அல்தூசரின் அழகிய உரைநடையில் அமைந்த முக்கியமான தொடர்களுக்கு தமது அழுத்தத்தைக் கொடுத்து விளக்கம் கூறுவார்.

நியூட்டன் குணசிங்கவும் அவரது தலைமுறையினரும் அல்தூசரின் நூலால் ('மூலதனத்தை வாசித்தல்') கவரப்பட்டு மார்க்ஸின் பெரும்படைப்பான 'மூலதனம்' நூலைத் திரும்பத் திரும்ப வாசித்தார்கள். இளைய அறிவாளிகளான நியூட்டன் குணசிங்க போன்றவர்கள் புதிய விமர்சனப் பொருள்கோடலியல் (Critical Hermeneutics) நோக்கில் 'மூலதனம்' நூலை மீள்வாசிப்பு செய்தனர்.

கலாநிதி குணசிங்க தம்மை அல்தூசரின் வழிவரும் அமைப்பியல் மார்க்சிஸ்ட் (Structural Marxist) எனக் கூறிக்கொள்வதுண்டு. குணசிங்கவின் அமைப்பியல் மானிடவியலில் அல்தூசரின் தாக்கம் வெளிப்பட்டது.

## அல்தூசரின் இரு எண்ணக்கருக்கள்

சமூக உருவாக்கம், அரசு, கருத்தியல் போன்றவை பற்றிய ஆய்வில் நியூட்டன் குணசிங்க அல்தூசரின் அறிவாராய்ச்சியில் முறிவு (Epistemological Rupture), முரண்பாடுகளின் மேல்நிர்ணயம் (Overdetermination of Contradictions) என்ற இரண்டு எண்ணக்கருக்களைப் பயன்படுத்தியுள்ளார். இவ்விரு எண்ணக்கருக்களோடு, கிராம்சியின் மேலாண்மை (Hegemony) என்ற எண்ணக்கருவையும் பயன்படுத்தியுள்ளார்.



அந்தோனியோ கிராம்சி
Image Source - versobooks.com

அல்தூசரின் கோட்பாட்டு வரைசட்டத்தை மிகச்சிறப்பான முறையில் 1980களின் முற்பகுதியில் அவர் ஒரு கட்டுரையில் பயன்படுத்தியிருந்தார். இது ஒரு சிறிய கட்டுரை ஆயினும் நியூட்டன் குணசிங்க இனத்துவமும் கருத்தியலும் (Ethnicity and Ideology) பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனையை இக்கட்டுரையில் வெளியிட்டிருந்தார். 1983 வன்முறைகள் நாட்டில் குழப்பமானதும், கொந்தளிப்பானதுமான நிலையை ஏற்படுத்தியிருந்தது. சிங்களவர்களிடமும் தமிழர்களிடமும் இனத்துவ உணர்வு மேலோங்கியிருந்தது. இந்த நெருக்கடியான சூழலில் சில சமூக விஞ்ஞானிகள் சில கோஷங்களைக் கோட்பாடு எனவும், சில நபர்களைக் குற்றம் சாட்டி அரசியல் பழிவாங்குதலுக்கு ஆளாக்குவதை சமூக அக்கறை எனவும் காட்டும் முறையில் மக்களைத் தவறாக வழிநடத்தும் கருத்துகளை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். இவை உண்மையான கோட்பாட்டு உருவாக்கத்திற்கு எதிரானவை. அடிப்படைவாதச் சிந்தனையின் வெளிப்பாடுகள் இவை.

கலாநிதி குணசிங்க அவர்களால் இனத்துவமும் கருத்தியலும் பற்றிப் பயனுள்ள கருத்துகளை எடுத்துக் கூற முடிந்தது. 'லங்கா கார்டியன்' சஞ்சிகையில், அரசியல் கட்டமைப்புகளில் (Political Structure) இனத்துவம் எவ்விதம் மேல்நிர்ணயம் (Overdetermination) செய்கிறது என்பதை அவர் எடுத்துக் காட்டினார். தேசியவாதக் கருத்தியலின் மேல்நிர்ணயப் பிடிக்குள் சிக்கியிருந்த சிங்களச் சமூகத்தின் நிலையை அல்தூசரின் முரண்பாடுகளில் மேல்நிர்ணயம் என்ற எண்ணக்கருவின் துணையுடன் விளக்கிக் கூறினார். சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால இலங்கை அரசியலை நியூட்டன் குணசிங்க தெளிவாக விளக்கிக் கூறினார்.

குணசிங்க பன்முக ஆளுமை மிக்க புலமையாளர் ஆவார். சமயக் கருத்தியல், சமூகக் கட்டமைப்புகள், அரசு என்ற மூன்று விடயங்களில் அவர் தமது கவனத்தைச் செலுத்தினார். அவரது முதுகலைமாணி ஆய்வு அவுஸ்ரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அது

பௌத்தத்தின் சமூகவியல் பற்றியது. பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து சமயம் ஆகிய சமயங்கள் பற்றியும் அவருக்கு நல்ல அறிவு இருந்தது. அவர் சமயம் பற்றிய குறிப்பிடத்தக்க ஆய்வுகள் எதனையும் வெளியிடாத போதும், சமயம் தொடர்பான ஆய்வுத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தத் திட்டமிட்டிருந்தார். பௌத்தம், கிறிஸ்தவம் என்ற சமயங்களின் சமூக அறிவியல் வரலாறு (Social and Intellectual History) என்ற விடயம் பற்றி அவர் ஆராயத் திட்டமிட்டிருந்தார். அவரது மரணத்தினால் இத்திட்டம் நிறைவேறவில்லை. இந்த ஆய்வினை புரூஸ் கப்பெரர் (Bruce Kapferer) என்ற அவரது மான்செஸ்டர் காலத்து நண்பருடன் இணைந்து நிறைவேற்றுவதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. புரூஸ் கப்பெரர் பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் பேராசிரியரானார். இந்த ஆய்வில் கிறிஸ்தவம் பற்றிய பகுதியை நியூட்டன் குணசிங்க எழுதுவதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. மத்தியகால கிறிஸ்தவ இறையியல் பற்றி எழுதுவதற்கான நிறையத் தகவல்களை நியூட்டன் குணசிங்க சேர்த்து வைத்திருந்தார். அதனை எழுதுவதற்கு முன்பே அவர் காலமானார்.

இலங்கை, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளின் பௌத்த சமயத்தின் வரலாறு பற்றி மீளாய்வு ஒன்றைச் செய்தபோது சமயக் கருத்தியல் (Religious Ideology), சமூகக் கட்டமைப்பு (Social Structure) என்ற இரண்டு விடயங்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து நியூட்டன் சிந்தித்தார். முதலில் கருத்தியல் சில சந்தர்ப்பங்களில் மேல்நிர்ணயம் செய்கின்றது என்ற கருத்தைக் கொண்டிருந்த நியூட்டன் குணசிங்க இறுதியில் சமூகக் கட்டமைப்புகளே கருத்தியல் மாற்றங்களை நிர்ணயம் செய்வதாக முடிவுசெய்தார். அதற்கமைய வரைசட்டத்தைத் திருத்திக் கொண்டார்.

மேற்குறித்தவாறு, சமூகக் கட்டமைப்புகளே இறுதியிலும் இறுதியான நிர்ணய சக்தியென்ற நியூட்டன் குணசிங்கவின் முடிவை வெறுமனே மார்க்ஸின் கருத்தை மீண்டும் கூறுவதாகக் கருத முடியாது. சமூக வர்க்கங்கள், கருத்தியல், அரசு என்ற மூன்று விடயங்களும் இலங்கையின் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறையிலும், முதலாளித்துவ உற்பத்தி முறை புகுந்தபின் உள்ள நிலையிலும் எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தன என்பதை அவர் ஆழமாக ஆய்வு செய்தார்.

அல்தூசரால் கவரப்பட்டிருந்த குணசிங்க பின்னர் மக்ஸ் குளுக்மன் (Max Gluckman), லூயி துமோன் (Louis Dumont) என்போர் ஊடாக மார்க்ஸிடம் திரும்பி வந்தார். அல்தூசரின் பொருள்கோடலியல் முறை சமூகக் கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை குறைத்துவிட்டதாக நியூட்டன் குணசிங்க உணர்ந்திருக்க வேண்டும். சமூகக் கட்டமைப்புகள் நீண்ட காலத்தில் வரலாற்றுப் போக்கில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன என்ற முடிவை அவர் செய்தார்.

இவ்விடயத்தில் கிராம்சியைப் போன்று நியூட்டன் குணசிங்கவும், கருத்தியல் வெவ்வேறு உற்பத்தி முறைகளின் கீழ் தன்னைத் தகவமைத்து மாற்றிக்கொண்டு நிலைத்திருப்பதை அவதானித்தார். இத்தகைய ஆற்றல் கருத்தியலுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று என்ற கேள்வியை நியூட்டன் குணசிங்க முன்வைத்தார். கருத்தியல்கள் சுயமாகத் தாமே மாறுகின்றனவா அல்லது அவை சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவால் மாறுகின்றனவா என்ற வினாவை அவர் எழுப்பி விடைகாண முயன்றார்.



லூயி அல்தூசர்
Image Source - versobooks.com

சிங்கள பௌத்த மரபில் அதிகாரமிக்க பௌத்த சமயக் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கூறும் எதிர்ப்பாளர்கள் (Heretics) எவ்வாறு நோக்கப்பட்டனர் என்ற விடயத்தைப் பற்றி குணசிங்க விளக்கம் கூறுவதுண்டு. புனிதமானது (Sacred), புனிதம் கெட்டது (Profane) என்பன வெறுமனே இறையியல் சார்ந்த வினாக்கள் அல்ல; சமூகத்தில் மேலோர், கீழோர் என்ற சமூக உறவுகளின் அடுக்கமைவின் வெளிப்பாடுகளாகும் என்றும் அவர் தமக்கே உரிய பாணியில் உரையாடல்களின் போது நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவதுண்டு. அவர் காலமானதற்கு முன்பான ஆறுமாத கால எல்லையில் எழுதிய இரண்டு நூல் மதிப்புரைக் கட்டுரைகள் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. அவற்றுள் ஒன்று

கணநாத் ஒபயசேகரவின் *'A Meditation on Conscience'* என்ற கட்டுரை பற்றியது. மற்றது புரூஸ் கப்பெரரின் அண்மைய வெளியீடாக வந்திருந்த *'Legends of People - Myths of State'* என்ற நூல் பற்றியது. இவ்விரு ஆக்கங்கள் குறித்த அவரது விமர்சனம் கருத்தியலின் உருவாக்கத்தில் சமூக உறவுகளின் முதன்மையான வகிபாகத்தை அழுத்திக் கூறும் முறையில் அமைந்தன. வர்க்கங்கள், சமூகக் குழுக்கள் என்பனவும் அதிகார வரன்முறைப்படி அமைந்த சமூக உறவுக் கட்டமைப்பும் கருத்தியல் உருவாக்கத்தை நிர்ணயம் செய்வதை அம்மதிப்புரைகளில் அவர் எடுத்துக் காட்டினார்.

## பருநிலை சமூகக் கோட்பாடு (Macro - Social Theory)

தென்னாசியப் பிராந்தியச் சமூகம் முழுமையையும் தழுவிய பருநிலைச் சமூகக் கோட்பாடு ஒன்றினைக் கட்டமைப்பதற்கு கலாநிதி நியூட்டன் குணசிங்க, காலமாவதற்கு முன்னுள்ள அவரது வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் முயற்சி செய்து கொண்டிருந்தார். 1988 அக்டோபர் மாதத்தில் அவரது மரணம் சம்பவித்தது. அவ்வாண்டு ஜூன் மாதம் அவர் *'Notes towards Sub-continental Social Structural Perspective on South Asia'* (உபகண்ட சமூகக் கட்டமைப்பு நோக்கிலான தென்னாசியா பற்றிய பார்வை - சில குறிப்புகள்) என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி வெளியிட்டார். தென்னாசிய முழுமையையும் புரிந்து கொள்வதற்கான சமூகக் கோட்பாடு (*Social Theory*) ஒன்று இதுவரை உருவாகவில்லை. இனிமேல்தான் அது உருவாக்கம் பெறும் என்பதை உணர்ந்திருந்த அவர், அக்கோட்பாட்டிற்கான முறையியல் பார்வையை (*Methodological Perspective*) நிறுவுவதற்கு முன்வந்தார். இது நியூட்டன் குணசிங்க அவர்களின் சிக்கலான கோட்பாட்டு முன்மொழிவு. இதனை விளக்குவதற்கு அவரின் மேற்குறித்த கட்டுரையில் இருந்து மேற்கோள் ஒன்றைத் தருகிறேன்.

"தென்னாசிய சமூக உருவாக்கங்களில் அமைப்பியல் வேறுபாடுகளும், ஒற்றுமைகளும் காணப்படுவதை அடையாளம் காண்பதே இக்குறிப்புகளை நான் எழுதுவதன் நோக்கமாகும். ஆனால் இந்த அமைப்பியல் வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும் தேசிய அரசுகள் (*Nation States*) என்ற புவியியல் பிரதேச (*Territory*) எல்லைக்குள் நின்று பார்க்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஏனெனில் 20ஆம் நூற்றாண்டில், 1950களின் பிற்பகுதியில் தான் தென்னாசிய சமூகங்கள் தெளிவான தேசிய அரசுகள் என்ற வரையறையைப் பெற்றுக்கொண்டன. லூயி துமோன் தென்னாசியப் பிராந்தியம் முழுமையையும் உள்ளடக்கிய சமூகச் செயல்முறைகளை விளக்கக்கூடிய கோட்பாடு ஒன்றை முன்வைத்தார். அவரின் அந்த முழுமை நோக்கிய முயற்சியில் இருந்து நாம் மேற்செல்ல வேண்டும். அந்த வழிகளில் கட்டமைக்கப்படும் பருநிலைக் கோட்பாட்டில் (*Macro-theory*) தென்னாசியாவில் வெவ்வேறு இனத்துவக் குழுமங்களின் (*Ethnic Segmentations*) சமூகச் செயல்முறைகளை விளக்கக்கூடிய பொருத்தமான உப கோட்பாடுகளையும் (*Sub-theories*) இணைக்க வேண்டும். சிங்களவர், தமிழர், வங்காளிகள், குஜராத்திகள் போன்ற இனத்துவக் குழுமங்களின் பொருத்தமுடைய உப கோட்பாடுகளும் இப்பருநிலைக் கோட்பாட்டுடன் இணைவு பெறும். தென்னாசிய சமூக உருவாக்கங்களின் அமைப்பியல் பொதுமைக் கூறுகளை அடையாளம் காட்ட நான் முனைகிறேன். இப்பொதுமைக் கூறுகள் வெவ்வேறு வடிவங்களில் பல இடங்களிலும் முரண்பாடான வடிவிலும் இயைபாக்கம் பெற்றிருப்பதையும் கவனிக்கத் தவறக் கூடாது."

மேற்குறித்த உபகண்ட சமூகக் கோட்பாட்டை நியூட்டன் குணசிங்க முன்மொழிந்த அரசியல் பின்னணியை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் இனக்குழுமப் பிரச்சினையும் நெருக்கடியும், இலங்கை ஒரு தேசம் என்ற வகையில் தனிமைப்படுத்தலுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தியிருந்தன. சிங்களத் தேசியவாதக் கருத்துருவாக்கிகள் எமது சமூகத்தின் சிக்கலான அமைப்புகளை மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட சூத்திரங்களுள் ஒன்றான 'சிங்கள பௌத்த கிராமம்' (*Sinhala Buddhist Village*) என்பதன் மூலம் விளக்க முனைந்தனர். இலங்கைத்தீவுக்கு வெளியே இருந்துவரும் அனைத்தையும் இவர்கள் அந்நியமானவை எனப் புறந்தள்ளினர். எமது சமூகத் தீங்குகள் அனைத்திற்கும் தீர்வாகவும், எல்லா நோய்களுக்குமான ஒரேயொரு மருந்தாகவும் தனிமைப்படுத்திக் கொள்ளும் தேசியவாதத்தை (*Isolationist Nationalism*) முன்மொழிந்தனர். கலாநிதி நியூட்டன் குணசிங்க இத்தனிமைப்படுத்திக் கொள்ளும் தேசியவாதத்திற்கு மறுப்பாக தென்னாசிய உபகண்டம் முழுமைக்குமான பருநிலைச் சமூகக் கோட்பாட்டை முன்னிலைப்படுத்தினார். அவரது அறிவுரை, "நீங்கள் தென்னாசியாவை முழுமையாகப் புரிந்து கொள்ளாத வரை, இலங்கையைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாது' (*You will never understand Sri Lanka, until you understand South Asia as a totality*) என்பதாக அமைந்தது. அவரது கட்டுரையின் சாரமான கருத்தாக இவ்வறிவுரை அமைந்தது. கலாநிதி நியூட்டன் குணசிங்க அறிவியல் சர்வதேசத்தை (*Intellectual Internationalism*) பிரதிநிதித்துவப்படுத்தினார். 1980களில் கலாநிதி நியூட்டன் குணசிங்க இலங்கையில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக்குச் செய்த பங்களிப்பைப் பற்றி

விசேடமாகக் குறிப்பிடுதல் வேண்டும். 1980ஆம் ஆண்டு முதல் நியூட்டன் குணசிங்க இலங்கைச் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் பிரதான ஆய்வாளராகவும், அச்சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார். இலங்கையின் கிராமிய விவசாயக் கட்டமைப்பு (Agrarian Structure) பற்றிய முக்கியமான ஆய்வுத் திட்டத்தின் நெறிப்படுத்துநராக அவர் கடமையாற்றினார். இந்த ஆய்வுத் திட்டத்தின் பெறுபேறாக 'மூலதனமும் குடியான் உற்பத்தியும்' (Capital and Peasant Production) என்னும் நூல் வெளியாயிற்று. இந்நூலை அவர் சார்ள்ஸ் அபயசேகரவுடன் இணைந்து பதிப்பித்தார். இக்காலத்தில் இனத்துவத்தின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பொன்றும் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டது. இந்நூலிற்கு 'Facets of Ethnicity' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

கலாநிதி நியூட்டன் குணசிங்க காலமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை பற்றிய இனவரைவியல் ஆய்வு ஒன்றின் பதிப்பு வேலையை நிறைவு செய்திருந்தார். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் அவரது நண்பர்களான புலமையாளர்கள் பலரின் கூட்டு முயற்சியாக இது அமைந்தது. அக்கட்டுரைத் தொகுப்பு நூலில் அவர் எழுதிய முன்னுரை இலங்கையின் இனவரைவியல் எழுத்துகள் தொடர்பான மிகவும் முக்கியமான மீளாய்வாகும்.

ஆய்வாளர், புலமையாளர், பல்கலைக்கழக ஆசிரியர் ஆகிய நிலையில் அவர் வழங்கிய புலமைத்துவப் பங்களிப்பு ஒருபுறம் இருக்க, அவர் தொழிற்சங்க நடவடிக்கை, வெகுசனக் கல்வி, மனித உரிமைகள் ஆகிய செயற்பாடுகள் ஊடாக ஆற்றிய பங்களிப்பும் பெறுமதி மிக்கவை. கண்டி தொழிலாளர், விவசாயிகள் நிறுவனம் (Workers and Peasants Institute, Kandy) என்ற கல்விப் பணிக்கான அமைப்பை நிறுவி வெகுசனக் கல்வியைப் பரப்பினார். சமூக-அரசியல் விடயங்கள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக தொழிலாளர்-விவசாயிகள் வர்க்கத் தொண்டர்களுக்கு இந்நிறுவனம் ஊடாகக் கல்வி வகுப்புகளையும் கருத்தரங்குகளையும் நடத்தினார். தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு அந்தோனியோ கிராம்சி பற்றிய தொடர் சொற்பொழிவு ஒன்றை இவர் நிகழ்த்தினார். சிங்கள மொழியில் கல்வி கற்ற புத்திஜீவிகளுக்கு கிராம்சி என்ற மார்க்சிய சிந்தனையாளரை முதன்முதலாக அறிமுகம் செய்து வைத்த இவரது உரை பின்னர் சிறுநூலாக வெளியிடப்பட்டது. மார்க்சியத் தத்துவத்தில் அவருக்கு இருந்த புலமையும், சிங்கள மொழியில் அவருக்கிருந்த அறிவும் சிக்கலான கோட்பாடுகளையும் மிக எளிமையாக விளக்கிக் கூறுவதற்கு அவருக்கு உதவின. குணசிங்கவின் தொழிற்சங்க நடவடிக்கைத் தளமாக கண்டிப் பிராந்தியம் விளங்கியது. அவர் அப்பகுதியிலேயே அரசியல் செயற்பாட்டாளராக இயங்கினார். இலங்கைப் பொதுச் சேவை சங்கம் (Lanka General Service Union) என்ற தோட்டத்துறை தொழிற்சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் அவர் பதவி வகித்தார். மனித உரிமைகள் நடவடிக்கையில் அவருக்கு நீண்டகாலப் பங்களிப்பு இருந்தது. 1979இல் 'இனங்களுக்கிடையிலான நீதிக்கும் - சமத்துவத்திற்குமான இயக்கம்' (The Movement for Inter-racial Justice and Equality) என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்பட்ட போது நியூட்டன் குணசிங்க அவ்வமைப்பின் ஆரம்ப நிறுவன உறுப்பினராக இருந்தார். இவ்வமைப்பு இனத்துவ அமைதி, மனித உரிமைகள் என்ற இரண்டு விடயங்களில் அர்ப்பணிப்போடு செயற்பட்டது.

நியூட்டன் குணசிங்க அன்பும் பண்பும் நிறைந்தவர், தாராள உள்ளம் படைத்தவர். அவரது நகைச்சுவை உணர்வும், மணிக்கணக்காக நட்புரிமையுடன் அறிவார்ந்த விடயங்களை உரையாடும் திறமையும் வியந்து போற்றப்பட்டது.

1977க்குப் பிந்திய இலங்கையில் (திறந்த பொருளாதாரக் கொள்கைப் பின்புலத்தில்) தனது திறமைகளைப் பயன்படுத்தி பணம் திரட்டும் புலமையாளராக அவர் இருக்கவில்லை. அவர் மனிதநேயம் மிக்கவர்; இலட்சிய நோக்குடையவர். அமைதி, ஜனநாயகம், சோசலிசம் என்பன இந்நாட்டில் மலர வேண்டும் என அவர் உழைத்தார். எமது சமூகம் அழிவின் விளிம்பிற்கே சென்று விட்டதைக் கண்டு அவர் உளம் வருந்தினார். எமது சமூகத்தைச் சூழ்ந்து வந்த சமூக-அரசியல் பேரழிவை நியூட்டன் குணசிங்க, எம்மில் பலர் கண்டுணர்வதற்கு முன்பே தெளிவாக உணர்ந்திருந்தார். பேரழிவுகளினதும் அவலங்களினதும் வேதனையை முழுமையாக அனுபவிக்காமலேயே நல்ல சாவு அவருக்குக் கிட்டியது. மனிதாபிமானப் பண்புகள் நிறைந்த ஆய்வறிவாளன் என்ற கௌரவமுடைய கலாநிதி நியூட்டன் குணசிங்க விட்டுச் சென்ற வெற்றிடம் நிரப்பப்படப் போவதில்லை.

'Newton Gunasinghe - A Tribute to a Scholar' என்னும் தலைப்பிலான இக்கட்டுரை, நியூடன் குணசிங்க அவர்கள் காலமானபோது அவருக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் Lanka Guardian (November 15, 1988) இதழில் பிரசுரமானது. பின்னர் இக்கட்டுரை சசங்க பெரேரா அவர்கள் தொகுத்துப் பதிப்பித்த 'Newton Gunasinghe: Selected Essays' (SSA, 1996; 2011) எனும் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பு நூலின் முன்னுரையாக அமைந்தது.

ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே ‘இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்‘ எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.

# இலங்கையில் கண்ணகி வழிபாட்டுத் தலங்களும் சடங்குகளும்

ஜெகநாதன் அரங்கராஜ்



முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். ‘செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு’ என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.

ஈழ நாட்டில் காணப்படும் கண்ணகி வழிபாட்டுத் தலங்களை இரு பிரிவுகளாக வகைமை செய்து கொள்ளலாம். தமிழர்கள் வழிபடும், தமிழரின் தாயகப் பகுதியில் காணப்படும் கண்ணகை அம்மன் கோயில்கள், சிங்கள மக்களால் வழிபடப்படும் பத்தினி தெய்வக் கோயில்கள் என்பனவாம் அவை. கண்ணகி வழிபாட்டின் தொன்மையினை இலக்கியங்களின் வழியும் அவ்வழிபாட்டுச் சடங்குகளின் வழியும் அறியலாம். கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலன் கதை என்பன கண்ணகி வரலாறு தொடர்பான பக்தி நிலையில் எழுந்த இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்களின் அல்லாமல் உடுக்கையடிச் சிந்து, அம்மானை, குளுத்திப்பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், கலியாணப் பாடல்கள் என்பனவாக கண்ணகியம்மன் குறித்த இலக்கியங்கள் நீளும்.

அத்துடன் பழஞ்சிறப்பு வாய்ந்த கண்ணகி கோவில்களுக்குக் காவியம் என்ற இலக்கிய வகையும் உண்டு. இக்காவியங்கள் அவ்வவ்வூரிலுள்ள கண்ணகி அம்மனின் சிறப்புகளை எடுத்துக் கூறுகின்றன. ஒருவகையில் இவற்றைத் தலபுராணங்களின் சுருக்க வடிவமாகவும் தொன்மை வடிவமாகவும் கருதலாம். இவ்விலக்கியங்கள் அத்தலத்திற்கு கண்ணகி வந்த செய்தியினையும், கோயிலின் வரலாற்றினையும், கண்ணகியின் அற்புதச் செயல்களையும் வெளிப்படுத்துவனவாக அமைந்தவை. ஆண்டுதோறும் நடைபெறும் கண்ணகை அம்மன் சடங்கு என்றழைக்கப்படும் கண்ணகி கோயிற் திருவிழாக்களில் படிக்கப்படுபவை. இவ்விலக்கியங்களே ஈழத்தில் கண்ணகியின் பழமையான வழிபாட்டுத் தலங்களை அறிதலுக்குப் பெருந்துணை புரிகின்றன. பாடல் பெற்ற இருநூற்றுப்பத்தேழு சிவத்தலங்களைத் திருமுறைகளின் வழியும், நூற்றெட்டு வைணவத் தலங்களை நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களின் மூலமும் அறிதல் போல, கண்ணகையம்மன் தலங்களை அறிதலுக்குக் கோவலனார் கதை, சிலம்பு கூறல், வழக்குரைக்காவியம், வசந்தன் கவிகள், உடுக்கையடிச்சிந்து முதலான நூல்கள் துணை செய்கின்றன. எண்ணிக்கையளவில் ஒவ்வொரு நூலிலும் சில தலங்கள் விடுபட்டும் பெயர் மாறுதலடைந்தும் உள்ளமையினைக் காணலாம். பழமையான கண்ணகி கோயில்களைச் சுட்டும் நூல்களில் தலையான நூலாகக் கருதப்படுவது கண்ணகி ஊர்சுற்று காவியம் என்னும் உடுக்கையடிச்சிந்து என்ற எழுபது பாடல்களைக் கொண்ட குறுநூலாகும். இது பெரும்பாலான கண்ணகியம்மன் கோயிற் சடங்குகளில் படிக்கப் பெறும் சிறப்பிற்குரிய நூலாகும். இந்நூலிலுள்ள கண்ணகி தலங்களின் வைப்பு முறையினை அங்கணாமக்கடவை, களுவாஞ்சிக்குடி, காரேறுசோலை, காரைநகர், காரைதீவு, தம்பிலுவில், வீரமுனை, பட்டிமேடு, கல்முனை, பாண்டிருப்பு, கல்லாறு, மகிழூர், எருவில், களுதாவளை, பழுகாமம், தோற்றாதீவு, செட்டிபாளையம், புதுவை, மகிழடித்தீவு, மண்முனைவூர், வந்தாறு மூலை, நீலாப்பழை, குளக்கண்டி, கதிர்நகர், சாகாமம், மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, சிற்றாண்டி, போரதீவு, கதிர்காமம், மண்டூர் என்றவாறு கொள்ளலாம்.

ஈழத்துக் கண்ணகி தலங்களுக்கெல்லாம் தாய்த்தலமாக அங்கணாமக்கடவை குறிப்பிடப்பட்டுள்ளது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்த காலம், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் அவ்விழாவில் பங்குபற்றினான். விழா நிறைவில் கண்ணகி சிலையுடன் இலங்கை வந்த கயவாகு, இலங்கையில் முதன்முதலாக கண்ணகி சிலையை நட்டு வழிபட்ட தலமாக அங்கணாமக்கடவை குறிப்பிடப்படுகிறது. அங்கண்ணம்மைக் கடவை என்ற ஊர்ப்பெயர் அங்கணாமக்கடவையாயிற்றென்பர். அங்கண் அம்மை என்பது கண்ணகியைக் குறிக்கும் பெயராகும். அங்கணாமக்கடவையில் கண்ணகிக்குக் கோயிலும் குளமும் எடுப்பித்த கயவாகு மன்னன், குளக்கரையில் கண்ணகியைத் தாம் வழிபடுவது போன்ற சிலையையும் வடித்தான். அச்சிலை 1974 ஆம் ஆண்டு வரை அங்கு இருந்ததாகவும், பின்னர் அனுராதபுரத்திலுள்ள அருங்காட்சியகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் செ. கிருஷ்ணராசா குறிப்பிடுவார். பழந்தமிழரின் தொல்லியல் இடமான கந்தரோடைக்கருகில் இன்றும் அங்கணாமக்கடவை கண்ணகியம்மன் கோயில் அமைந்திருக்கக் காணலாம்.

*"பத்தியொடு வருவோர்கள் இடரகல அருள்கோண்டு*
*பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமாநகரம்*
*மொய்த்த புகழ் வீரமுனை கல்முனை கல்லாறு*
*மகிழூர் செட்டிபாளையம் எருவில் மண்முனையூரும்*
*வைத்த மகிழடிச்சோலை முதலைக்குடா*
*வளமை வரு புதுக்குடி நகரமொடு வந்தாறுமூலை*
*இத்தனை தலங்களிலும் அங்கணா மங்கடவை*
*என வந்து காரைநகர் இனிதிருந்தவளே"*

இந்நூலிற் காணப்படும் எழுபது பாடல்களின் வரிசைமுறையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள தலங்களை வகைமைப்படுத்தும் இந்நூலின் பாடலில், அங்கணாமக்கடவையில் உள்ள கண்ணகியே மேற்கண்ட மட்டக்களப்புக் கோயில்களை அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளமை

எண்ணத்தக்கதாகும். சைவத் திருக்கோயில் மரபில் கோயிலென்றால் தில்லைச் சிற்றம்பலத்தையே குறிக்கும். சிற்றம்பல இறைவனே மற்றைய அம்பலங்களிலெல்லாம் உறைகின்றான் என்னும் கருத்தமையப் பாடப்பெற்றதே சேத்திரக் கோவை, ஊர்த்தொகை என்பனவான பதிகங்களாகும். இப்பதிகங்களே ஒவ்வொரு நாள் இரவும் சிற்றம்பலத்தில் பாடப்படுவனவுமாகும்.

*"காட்டூர்க்கடலே! கடம்பூர்மலையே! கானப்பேரூராய்!*

*கோட்டூர்க்கொழுந்தே! அழுந்தூர்அரசே! கொழுநல் கொல்ஏறே!*

*பாட்டுஊர் பலரும்பரவப்படுவாய்! பனங்காட்டூரானே!*

*மா(ட்)டு ஊர் அறவா! மறவாது உன்னைப் பாடப் பணியாயே!*

இப்பாடலை ஒத்ததாகவே ஊர்சுற்றுக் காவியப்பாடல்களும் உள்ளன. ஈழம் முழுவதும் உள்ள கண்ணகி கோயில்களை ஒருங்கிணைப்பதாக இப்பாடல்களின் பொருண்மை அமையக் காணலாம். இப்பாடலில் நாம் ஆராய வேண்டிய சிலவற்றினைக் காண்போம்.

காரைதீவு என்னும் ஊர் வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்துள்ள தீவுகளுள் ஒன்றினையும் கிழக்கின் மட்டக்களப்பின் ஓர் ஊரினையும் (விபுலானந்த அடிகள் பிறந்த ஊர்) குறிப்பதாகும். இரண்டு ஊர்களிலும் கண்ணகி கோயில் உண்டு. ஆதலால் இங்கு குறிப்பிடப்படும் காரைநகரினையும் காரைதீவினையும் தெளிவு செய்து கொள்ளல் வேண்டும். மண்முனையூர் என்னும் இப்பாடலில் குறிப்பிடப்படும் ஊரானது இன்று மட்டக்களப்பில் மண்முனை என்று வழங்கப்படுகின்றது. ஆனால் இன்று இவ்வூரிலே கண்ணகி கோயில் இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டளவில் மண்முனையூரில் 'வைசூரி' என்னும் கொள்ளைநோய் தாக்கி மக்கள் பலர் மடிந்தனர். இந்நிலையில் அவ்வூரினர் தங்களது கண்ணகி கோயிலின் திருச்சின்னங்களுடன் அவ்வூரை விட்டகன்று ஆரையம்பற்றையில் குடியேறி, தாங்கள் காவி வந்த கண்ணகியின் திருச்சின்னங்களை நிறுவிக் கோயில் செய்து வழிபட்டனர். ஆதலாலேயே பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கண்ணகி பாடல்களில் ஆரையம்பதி என்னும் ஆரையம்பற்றை இடம்பெறவில்லை எனலாம். ஆயிரத்து அறுநூறுகளில் இயற்றப்பட்ட தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்ச்சுற்றுக் காவியம் மட்டக்களப்பில் உள்ள முப்பது கோயில்களைக் குறிப்பிடுகின்றது. அந்நூலும் முதற்கோயிலாக அங்கணாமக்கடவையினையே குறிப்பிட்டுச் செல்கிறது. பட்டிமேடு கண்ணகை அம்மன் காவியமும் அத்தன்மையதே.

சேரவேந்தன் செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையை சந்தனப் பேழையில் வைத்துக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னனிடம் கொடுக்க, அவன் இலங்கைக்கு வந்து அச்சிலைக்கு வழிபாடு நடத்திய முதற்றலம் அங்கணாமக்கடவை என்றும், அச்சிலையே பல ஊர்களின் வழி கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் பின்வரும் கதையாடல்களில் காணலாம்:

"சந்தன மரத்தால் செய்த கண்ணகி உருவத்தையும் ஒரு சிலம்பையும் சந்தன மரப்பலகையால் செய்த பேழையில் வைத்துக் கயவாகுக்குச் செங்குட்டுவன் கொடுத்தான். பாண்டிய அரசன் வெற்றிவேற்செழியன் யானைமேல் சந்தனப் பலகையால் செய்த பெட்டியையும் அரசனையும் ஏற்றி வேதாரணியத்தில் கொண்டு வந்து விட்டான். அங்கிருந்து கப்பலில் காரைதீவுக்கும் கீரிமலைக்கும் இடையிலுள்ள திருவடிநிலையில் இறங்கினார்கள். யானைப்பவனிக்கு அலங்கரிக்கப்பட்ட யானைகள் அங்கே நின்றன. திருவடிநிலையிலிருந்து யானை ஊர்வலம் மாசியப்பிட்டி வழியாய் அங்கணாமைக்கடவைக்கு வந்தது. அங்கே முதலாவது ஆராதனை நடத்தப்பட்டது.

அங்கிருந்து நாவற்குழியை அடுத்துள்ள வேலம்பறை என்னுமிடத்திற்கு வைகாசிப் பூரணையன்று வந்து சேர்ந்தது. பூரணை விழா அங்கு நடந்தது. கரம்பகம், கோவிற்குளம், நாகர்கோவில், வன்னிப்புட்டுக்குளம், விழாங்குளம், முள்ளியவளை, வற்றாப்பளை, சாம்பல்தீவு, திருகோணமலை, தம்பலகாமம், பாலம்போட்டாறு, நீலாப்பளை வரையும் யானை ஊர்வலம் சென்றது.

நீலாப்பளையிலிருந்து தாவளமாட்டின் மூலமாகக் கோராவெளி கொக்கட்டி மூலைக்கு சந்தனப் பலகையால் செய்த அம்மன் பெட்டி கொண்டு செல்லப்பட்டது. கிளிவெட்டிக்கு நீலாப்பளையிலிருந்து தாவளமாட்டின் மூலமாக வந்தது.

தாண்டவன்வெளி, வந்தாறுமூலை, ஈச்சந்தீவு, கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா, மகிழடித்தீவு, மண்முனை, தாழைநகர், காத்தநகர் (ஆரையம்பதி), புதுக்குடியிருப்பு, செட்டிபாளையம், எருவில், மகிழூர், கல்லாறு, கல்முனை, வீரமுனை, காரைதீவு, பட்டிமேடு, தம்பிலுவில், பாணமை, கதிர்காமம்,

கண்டிவரை கொண்டு செல்லப்பட்டது. கண்டியில் ஒரு கோவில் கட்டி சந்தனப் பலகையால் செய்த பெட்டி சேமிக்கப்பட்டது. தலதா மாளிகையிலுள்ள பத்தினி கோவிலில் சந்தனப் பலகையால் செய்த பெட்டி சேமிக்கப்பட்டுள்ளது."

கண்ணகி சிலையைக் கொண்டு செல்லும் போது இடையில் தங்கி வழிபட்ட இடங்களிலெல்லாம் பிறகாலத்தில் கோயில்கள் கட்டப்பட்டன எனலாம். கோவலன் கதை முதலான சில நூல்களில் அங்கணாமைக்கடவை முதற்கோயிலாகக் குறிப்பிடப்படவில்லை. இதனை,

*"சீருற்ற மதுரைநகர் மாறனுடை அகந்தையால்*
*செப்புக் குடத்தில் மாங்கனிய தாகி*
*செழியனுடன் வாதாடி சிலம்பினாற் றீப்பரப்பி*
*காருற்ற அனலை தீவுதனில் வந்து*
*பெண்பனையை ஆண்பனையாக்கி*
*ஆண்பனையை ஈஞ்சாக்கியே*
*பேருற்ற திப்படிக் குன்புதுமை*
*பின்பேசும் அன்னையே*
*பெருமை ஊரெழு உடுவில் மாவிட்டபுரம்*
*ஊர்பெருகும் அச்செழுப் பதிதன்னிலும்*
*ஊருற்ற மட்டுவில் நுணாவில் வேலம்பிராய்*
*உயர்வேலம் மண்டுவில் கச்சாய்*
*கரம்பகம் போக்கட்டி விழுபளை*
*அம்பாவளை அறத்தி திரியாய் ஓங்கு*
*வற்றாப்பளை தன்னில் வந்து*
*உப்புத் தண்ணீரை விளக்கெண்ணெயாக்கி*
*எங்கெங்கு மங்கங்கதாய் நின்றொளிர்கின்ற*
*கண்ணகைச் செல்வியாரே."*

என்ற கோவலன் கதைப்பாடலால் அறியலாம். இப்பாடலில் அனலைதீவு முதற்கோயில் கொண்ட இடமாக முன்வைக்கப்படுகின்றது. இதனைப் போலவே மாதனைக் கண்ணகை அம்மை பாடலும் தேவதுறை தம்பாலையை முதற்கோயிலாகக் குறிப்பிடுகின்றமையைக் காணலாம். அனலைதீவு, நயினாதீவு என்பனவற்றினூடாகக் கண்ணகி வழிபாடு யாழ்ப்பாணக் குடாநாட்டினுக்குள் நுழைந்திருப்பினும் அங்கணாமைக்கடவையே முதலும் மூலமுமான கோயிலாக அமைந்திருக்கும் என்பதற்குச் சில புறச்சான்றுகளையும் கொள்ளலாம். கடவை என்னும் சொல் வழிப்பாதையைக் குறிப்பதும், மாசியப்பிட்டி முதலான இடங்களின் வாணிபச் சார்பும், வழுக்கையாற்றுப் பகுதியில் கிடைத்த பாண்டியன் பெருவழுதி நாணயங்களும், கந்தரோடையின் அருகாமையும், அங்குள்ள கண்ணகி கோயிலின் சூழலும் இவ்விடத்தின் வரலாற்று முதன்மையை உறுதிசெய்யும்.

கண்ணகி கோயிற் தலங்களின் தொகையினைப் பாடல்களில் பாடும் மரபானது தங்களது சமய வழிபாட்டு மேலாண்மையினை வெளிப்படுத்துவதற்கும், அடியார்களை அத்தலங்கள் யாவற்றிற்கும் சென்று வழிபடச் செய்து ஒரு சங்கிலித் தொடர் இணைப்பை ஏற்படுத்துவதன் வழி தங்களது பண்பாட்டு மரபினைப் பாதுகாத்தலுக்கான தகவமைப்பினைப் பெறுதலுக்கும் வழியினைச் செய்கின்றதெனலாம். அதனாலேயே தலங்களை அடிப்படையாகக் கொண்டு ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகை, சேத்திரக்கோவை முதலான பதிகங்களைச் சைவக்குரவர்கள் செய்தார்கள் எனலாம். இதனை ஊர்சுற்றுக் காவியம் போன்றவற்றின் மரபிலும் காணலாம்.

இந்நூல்கள் அல்லாமல் கோவலன் கதைப்பாடல்கள் முதலியவற்றின் வழி அனலைதீவு, நயினாதீவு, கரம்பன், புங்குடுதீவு, வேலணை, கட்டுடை (சீரணி), மாசியப்பிட்டி (அங்கணாமைக்கடவை), கந்தரோடை, ஊரெழு, உடுவில், மாவிட்டபுரம், அம்பாவளை, துவளி, வாணாவெட்டி, வேம்பிராய், நுணாவிற்குளம், பன்றித்தலைச்சி, மட்டுவில், சுட்டிபுரம், போக்கட்டி, கச்சாய், செல்லியாதீவு, பொறிக்கடலை, மிருசுவில், கரம்பகம், விழுபளை, நாகர்கோயில், அறத்தி, திரியாய், கண்ணகை தோட்டம், கன்னார்வயல், கலவெட்டித்திடல், வன்னிப்புதுக்குளம், வன்னிவிளாங்குளம், கல்லிருப்பு, முள்ளிப்பளை, வற்றாப்பளை, சாம்பற்றீவு, திருகோணமலை, பாலம்பட்டாறு, தம்பலகாமம், ஆரையம்பதி, கோராவெளி, கொக்கட்டிச்சோலை, பட்டிமேடு, தம்பிலுவில், காரைதீவு, வீரமுனை, கல்முனை, கல்லாறு, மகிழூர், எருவில், செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, முதலைக்குடா, சிற்றாண்டி, வந்தாறுமூலை என்பனவான நிலையில் ஈழத்துக் கண்ணகித் தலங்கள் ஓர் ஒருங்கிணைவில் உள்ளமையினைக் காணலாம்.

ஆசீவகம், பௌத்தம், கண்ணகி வழிபாடு, எழுமங்கை வழிபாடு முதலிய சமய மரபுகளைச் சோழ நாட்டிற்கும் ஈழ நாட்டிற்கும் இடையே பரிமாறிக் கொள்ளும் தலங்களாக அனலைதீவு, நயினாதீவு (மணிபல்லவம்), காரைதீவு முதலியன அமைந்தன எனலாம்.

ஈழத்தில் வழங்கும் கண்ணகி வழிபாட்டு நூல்களை உற்றுநோக்குகின்ற போது கண்ணகி வழிபாட்டு மரபானது வடஇலங்கையிலிருந்தே தென்கிழக்கு நோக்கி நகர்ந்தது எனலாம். கிழக்கிலும் மிகுதியான கண்ணகி கோயில்கள் இன்றளவும் வடக்கில்

காணப்படுகின்றன எனலாம். ஆயினும் கண்ணகி வழிபாட்டு மரபின் சிறப்புகள் இன்றும் செறிவுடன் விளங்குவது கிழக்கிலங்கையிலேயே எனலாம்.

எவ்வகையிலாயினும் ஈழத்துக் கண்ணகி வழிபாட்டுத் தலங்களை வரைபடத்தில் புள்ளியிட்டுக் காணுகின்ற போது முத்துகளை வரிசைப்படுத்தியமை போன்ற பண்பாட்டு மரபின் இருவழிப்பாதையினைக் காணலாம். திருமுறைத் தலங்களை வரிசைப்படுத்துவது போலவே கண்ணகி வழிபாட்டுத் தலங்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது தலமாக அங்கணாமைக்கடவையும், பத்தாவது தலமாக வற்றாப்பளையும் வடஇலங்கையில் அமைகின்றன.

## திருக்கோயிலும் திருமேனியும்

தொடக்ககால ஈழத்துக் கண்ணகி கோயில்கள் எளிமையான அமைப்பிலேயே காணப்பட்டன. கருவறையில் கண்ணகியார் திருவுருவமும், காவல் தெய்வங்களான வைரவ வடிவங்களும் இடம்பெற்றிருந்தன. கோயில்களின் கருவறையின் மேல் விமானங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இராசகோபுரங்கள் அமைக்கப்படவில்லை. கோயிலின் முன் தாமரைக் குளங்களே சுனையாகக் காணப்படும். பெரும்பாலான கண்ணகி கோயில்கள் நாக வழிபாட்டுடன் தொடர்புடையனவாகவே அமைந்துள்ளன. தமிழகத்திலும் கேரளத்திலும் உள்ள கண்ணகி கோயில்களிலும் இவ்வமைப்பினைக் காணலாம். கேரளத்துக் கொடுங்களூர் கோயில், ஆற்றுக்கால் பகவதி கோயில் முதலியவற்றிலும், கொங்கு நாட்டில் திருச்செங்கோட்டிலும் உள்ள தலத்திலும் நாக வழிபாடு சிறப்பு நிலையில் உள்ளமையினைக் காணலாம். திருச்செங்கோட்டு மலையில் அறுபதடி நீளமுடைய நாகர் சிற்பம் அமைந்துள்ளது. இம்மலையும் நாகமலை, நாகாச்சலம் என குறிப்பிடப்படுதலினைக் காணலாம். அதனையொப்பவே ஈழத்துக் கண்ணகி கோயில்களும் நாக வழிபாட்டுடன் தொடர்பு பெற்று உள்ளன.

பொதுவாகக் கண்ணகி கோயில்கள் மக்கள் வாழும் பகுதியைத் தவிர்த்து சற்று தொலைவிலேயே அமைக்கப்பட்டன. தூய நிலையைப் பேணுதலையும் இறையச்சத்தையும் இதற்கான காரணங்களாகக் கொள்ளலாம்.

முக்கியமாக, ஏற்றத்தாழ்வு என்பது பொருள் சார்ந்தது மட்டுமல்ல. அது காலம் மற்றும் உறவு சார்ந்ததுமாகும். 'போருக்குப் பிந்தைய காலம்' என்பது சமூக நிலைகளில் வெவ்வேறு விதமாக அனுபவிக்கப்படுகிறது. சிலருக்கு, அது ஒரு நிறைவடைந்த மாற்றத்தைக் குறிக்கிறது. மற்றவர்களுக்கு, அது ஒரு முடிவின்றித் தொடரும் மீட்சிச் செயல்முறையாகவே உள்ளது. அதேபோல், அங்கீகாரமும் கண்ணியமும் சமமற்ற முறையில் பகிரப்படுகின்றன. இது போருக்குப் பிந்தைய ஒழுங்கிற்குள் யார் பார்க்கப்படுகிறார்கள், கேட்கப்படுகிறார்கள், மதிக்கப்படுகிறார்கள் என்பதை வடிவமைக்கிறது.

இந்தக் கட்டமைப்பு நிலைமைகள், கடந்த கட்டுரையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட அன்றாட நடைமுறைகளிலிருந்து பிரிக்க முடியாதவை. மௌனம், தார்மீகப் பேச்சுவார்த்தை, மற்றும் குடும்பப் பிழைப்பு ஆகியவை வெறும் கலாசாரப் பதில்கள் மட்டுமல்ல. அவை ஒரு படிநிலைப்படுத்தப்பட்ட நிறுவனச் சூழலுக்குள் உள்ள தகவமைப்பு உத்திகளாகும். தனிநபர்கள், இணக்கத்திற்கு வெகுமதி அளிக்கும், தெளிவான பார்வையை எதிர்பார்க்கும், வளங்களைச் சமமற்ற முறையில் விநியோகிக்கும் அமைப்புகளுக்கு ஏற்பத் தங்கள் நடத்தையைச் சரிசெய்கிறார்கள். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் சமத்துவமின்மையை உருவாக்கும்

கட்டமைப்புகளை மீண்டும் உருவாக்கும் அதே வேளையில், சமத்துவமின்மை நிலைகளின் கீழ் வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பார்வை ஒரு பரந்த கோட்பாட்டு ரீதியான தாக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறது. போருக்குப் பிந்தைய சமூகங்கள், மோதலில் இருந்து அமைதிக்கு மாறும் இடங்களாக மட்டும் புரிந்து கொள்ளப்படக்கூடாது. மாறாக, சமத்துவமின்மையை நிர்வகிப்பதன் மூலம் புதிய ஆட்சி வடிவங்கள் வெளிப்படும் இடங்களாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இலங்கையில், சீரமைப்பு என்பது ஒரு நிலைப்படுத்தும் பொறிமுறையாகச் செயற்படுகிறது. இது உடனடித் துன்பத்தைத் தணித்து, அதே நேரத்தில் கட்டமைப்பு மாற்றத்தைத் தள்ளிப்போடுகிறது. இது வாழ்க்கையை வாழக்கூடியதாக மாற்றும், ஆனால் சமத்துவமற்ற ஒரு நிலையை உருவாக்குகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு இந்த இயக்கவியலை மேலும் விளக்குகிறது. அவை பெரும்பாலும் மாற்றத்தின் முகவர்களாக நிலைநிறுத்தப்பட்டாலும், அவற்றின் தலையீடுகள் நன்கொடையாளர்களின் முன்னுரிமைகள், அரசியல் கட்டுப்பாடுகள் மற்றும் கட்டமைப்புச் சிக்கல்களுடனான ஈடுபாட்டைக் கட்டுப்படுத்தும் திட்டச் சுழற்சிகளால் வடிவமைக்கப்படுகின்றன. அளவிடக்கூடிய விளைவுகள் மற்றும் தொழில்நுட்பத் தீர்வுகளில் கவனம் செலுத்துவதன் மூலம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சீரமைப்பின் சிதைவுக்கும் அரசியல்மயமற்ற தன்மைக்கும் பங்களிக்கின்றன. இது காரணங்களைக் கையாள்வதற்குப் பதிலாக விளைவுகளை நிர்வகிக்கும் ஒரு தலையீட்டு மாதிரியை வலுப்படுத்துகிறது.

இதன் ஒட்டுமொத்த விளைவு, நிர்வகிக்கப்படும் சமத்துவமின்மையால் வகைப்படுத்தப்படும் ஒரு போருக்குப் பிந்தைய ஒழுங்காகும். நிலைத்தன்மை என்பது தீர்வு காண்பதன் மூலம் அடையப்படுவதில்லை, மாறாக மாற்றத்தை ஏற்படுத்தாமல் நெருக்கடியைத் தடுக்கும் வழிகளில் சீரமைப்பைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் அடையப்படுகிறது.

ஒருவர் குறிப்பிட்டது போல, “விஷயங்கள் சிறப்பாக உள்ளன, ஆனால் நியாயமாக இல்லை.” இந்த வேறுபாடு போருக்குப் பிந்தைய நிலையின் மையப் பதற்றமான ‘நீதியில்லாத முன்னேற்றம், சமத்துவமில்லாத மீட்சி’ என்பதைப் படம்பிடிக்கிறது. சீரமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டு அனுபவிக்கப்படும் சமூகவியல் செயல்முறைகளை முன்னிலைப்படுத்துவதன் மூலம், இந்தப் பதற்றத்தை வெளிப்படுத்த இந்தக் கட்டுரை முயன்றுள்ளது. நிறுவனங்கள், சமூகப் படிநிலைகள், மேம்பாட்டுத் தலையீடுகள் ஆகியவை தனித்தனியாகச் செயற்படுவதில்லை, மாறாக ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து, அடுக்குகள் நிறைந்த, சீரற்ற ஒரு மீட்புச் சூழலை உருவாக்குகின்றன என்பதை இது காட்டியுள்ளது.

சமமற்ற சமூக சீரமைப்பை ஓர் ஆட்சி முறையாக அங்கீகரிப்பது, போருக்குப் பிந்தைய சமூகங்கள் எவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு அணுகப்படுகின்றன என்பதில் முக்கியமான தாக்கங்களைக் கொண்டுள்ளது.

இது மீட்சியை அளவிடுவதிலிருந்து அது எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது என்பதை ஆராய்வதற்கும், விளைவுகளை மதிப்பிடுவதிலிருந்து செயல்முறைகளை வினவுவதற்கும், மீள்திறனைக் கொண்டாடுவதிலிருந்து மீள்திறனை அவசியமாக்கும் நிலைமைகளைக் கேள்விக்குட்படுத்துவதற்கும் கவனத்தை மாற்றுகிறது.

இறுதியாக, இங்கு முன்வைக்கப்படும் வாதம், சீரமைப்பு முக்கியமற்றது என்பதல்ல, மாறாக போருக்குப் பிந்தைய வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கான ஒரு கட்டமைப்பாக அது போதுமானதல்ல என்பதே ஆகும். சீரமைப்பு என்பது, உருமாற்றம் செய்யாமல் நிலைப்படுத்துவதன் மூலம், தீர்க்கப்படாத சமத்துவமின்மைகளை எதிர்காலத்திற்குக் கொண்டு செல்லும் அதே வேளையில், சமூகங்கள் முன்னோக்கிச் செல்லவும் உதவுகிறது.

அடுத்துவரும் கட்டுரைகள், இந்தப் பகுப்பாய்வை இடம், மொழி, பொதுச் சுகாதாரம், நினைவகம் போன்ற பிற களங்களுக்கும் விரிவுபடுத்துகின்றன. சமமற்ற சீரமைப்பின் தர்க்கங்கள் நிறுவனங்களில் மட்டுமல்ல, அவை போருக்குப் பிந்தைய வாழ்க்கையின் அடிப்படைக் கட்டமைப்பிலேயே எவ்வாறு பொதிந்துள்ளன என்பதையும் நிரூபிக்கின்றன. அவை அனைத்தும் சேர்ந்து, ‘போருக்குப் பிந்தைய’ சூழல் என்பது அமைதி முழுமையற்றது மட்டுமல்ல, அது சமத்துவமின்மையின் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும், அதற்குள் வாழ்பவர்களிடமிருந்து தொடர்ச்சியான தழுவலை அது கோருகிறது என்றும் வாதிடுகின்றன.

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

# சைவசித்தாந்தம்: ஆறுமுக நாவலரும் வ.உ. சிதம்பரனாரும்

நடேசன் இரவீந்திரன்



இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார். இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

ம தங்களால் மனித மனங்களும் சமூகக் கட்டமைப்பும் வடிவமைக்கப்பட்டிருந்த மத்திய காலத்தின் அடிப்படைப் பண்புகள் சில இன்றும் தாக்குறவுடன் உள்ளன. அனைத்து மதங்களும் தத்தமது பரப்புரைகளை இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தும் ஊடகமாகத் திகழ்ந்த தமிழ், மதச்சார்பின்மைப் பண்பெனும் தனக்குரிய தனித்துவத்தை இழந்து, சைவத் தமிழ் என்ற அடைமொழி ஏற்புடன் வலம் வருவதில் உள்ள முரண் கவனிப்புக்கு உரியது. பக்திப் பேரியக்கத்தில் தேவார - திருவாசகப் பாசுரங்கள் பரவலாக மேலெழுந்து வந்ததுடன் மட்டுமன்றி, உலக மதங்கள் எவற்றினதையும் விடக் கடவுளுக்கான விவரணத்தில் அதிகூடிய தத்துவ வீச்சுக்குரிய சைவசித்தாந்தத்தை வழங்கிய வகையிலும், தமிழுடன் சைவம் இணைபிரியா ஒட்டுதலைப் பெற இயலுமாக இருந்தது எனக் கருதலாம்.



வ உ சிதம்பரனார்

Image Source - tamildigitallibrary.in

சைவக் காவலர்களாகத் தம்மை முன்னிறுத்திய சோழப் பேரரசு உலகின் முதல் நிலை வல்லரசு எனக் கோலோச்சிய காலம் ஆயிரம் வருடங்களுக்கு முந்தியது; ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை, உலகில் அதிகூடிய காலம் வரை நீடித்த கடற்படையுடன் பல்லாயிரம் மைல் தூரங்களுக்கு அப்பாலும் படை நடாத்தி வெற்றிக் கொடி நிலை நாட்டிப் பரந்த நிலப்பரப்பின் மீது ஆளுகை செலுத்திய பேரரசாக சோழர்களின் ஆட்சி அமைந்திருந்தது. அந்தப் பேரரசின் பரந்த வியாபிதம் தாங்கிய, 'உலகெல்லாம் ஓதுதற்கு அரிய' பக்திக் கோட்பாடு சைவசித்தாந்தம் என்ற தத்துவ வகைமைக்கு உரியதாக வெளிப்பட்டது சோழப் பேரரசின் வீழ்ச்சி ஏற்பட்ட பின்னர்தான்.

அந்தப் பேரரசின் வீழ்ச்சியை அடுத்துத் தெலுங்கு ஆட்சியாளர்களுக்குரிய விஜயநகரப் பேரரசு ஏற்பட்ட சூழலில் தமிழின் ஆளும் நிலப்பிரபுத்துவச் சாதியான வெள்ளாளர்கள் பிராமணியத்துக்கு அப்பால் தமக்கே உரிய தத்துவத்தின் அவசியத்தை உணர்ந்து வெளிப்படுத்தியதே சைவசித்தாந்தம். சூரிய சந்திரர் உள்ள காலம் முழுவதும் சோழப் பேரரசு நிலைத்திருக்கும் என்றும், அதன் வாயிலாக வெள்ளாளர்களின் நிலப்பிரபுத்துவ மேலாண்மை நிலைத்து நீடிக்கும் என்பதனாலும் - அதற்கு உதவும் துணைச் சக்தியாகப் பிராமணரை அணைத்து நிலவுடைமைப் பங்குதாரர்களாக ஆக்கியிருந்தனர். புதிதாக வந்த ஆட்சியாளர்கள் தமக்கே உரிய தெலுங்கு பேசும் நிலப்பிரபுத்துவச் சாதியை வளர்க்க முனைந்த போது தமிழ்ப் பிராமணர்கள் அவர்களுக்குமான ஆன்மிகத் தலைவர்கள் என்று மாற முடிந்ததைக் கண்டனர். வேத-வேதாந்தத்தைக் கடந்த, ஆகமத்தை முற்றிலும் சார்ந்த சைவசித்தாந்தம் வெள்ளாளர்களுக்கு அதன்போது தான் வெளிப்படுத்தப்பட வேண்டியதாக அமைந்தது.

இத்தகைய ஒரு மாறுநிலை அதிர்வு இன்றைய உலக மேலாதிக்க வல்லரசான ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்பட இடந்தராமல் தனது ஆணைக்குக் கட்டுப்பட்டதாக உலக ஒழுங்கைக் கொண்டு நடாத்துவதற்கு அமைவான புதிய சித்தாந்தத்துக்கு உலகை ஆட்படுத்தும் வகையில், பழைய 'ஐ.நா. சபை வகுத்த சட்டங்களுக்குக் கட்டுப்படுத்தாத' செயலொழுங்குடன் வெறியாட்டம் ஆடும் நிர்ப்பந்தத்தில் ஐக்கிய அமெரிக்கா திணறிக் கொண்டிருக்கிறது.

மனிதர்களின் இடையேயான உற்பத்தி உறவில் நிலம் பிரதான சக்தியாக இருந்த அன்றைய நிலப்பிரபுத்துவ முடியாட்சி முறைமையில், படை நடாத்திக் கைப்பற்றிய நிலப்பரப்பு முழுமையையும் ஆளும் உரிமையைப் பெற இயலும் என்றிருந்த உலக நியதி இன்று இல்லை. மூலதனம் பிரதான உற்பத்தி உறவுக்குரிய சக்தியாக மேற்கிளம்பி வந்த சூழலில் 'உலக அங்கீகாரத்துடன் இயங்கும் தேசங்கள்' சுயாதீனமாகவும் இறைமையுடனும் செயற்படுகின்ற உலக ஒழுங்கு நிலவுகின்றது. அதனைக் கண்காணித்து முறைப்படுத்தும் சர்வதேச அமைப்பாக ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசங்கள் அனைத்தையும் சமநீதியுடன் நடாத்துவதாக அந்த அமைப்பு உருவாகி இருக்கவில்லை. தனது மேலாதிக்க நலனைக் காக்கும் ஆதாயத்துடன் அமைந்த ஐ.நா. சபையையும் கவனத்தில் எடுக்காதவர்களாய்த் தன்னகங்காரத்துடன் செயற்படும் தோல்விக் கொந்தளிப்பில் இன்றைய ஐக்கிய அமெரிக்கா!

மூலதன அபகரிப்புக் குணாம்சத்தின் பாற்பட்ட மேலாதிக்கப் பண்பு இதுவெனக் கருத இயலுமா? ஆயிரம் ஆண்டுகளின் முன்னர் பல்லாயிரம் கிலோமீட்டர் தொலைவுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளை ஆக்கிரமித்த போதிலும் அங்கும் தமது

மண்ணுக்குரிய நீர்ப்பாசன முறைகள் - விவசாயத் தொழில்நுட்பம் என்பவற்றை அறிமுகப்படுத்தித் விருத்தி பெறுவதற்கு வழிவகை செய்வதாகச் சோழப் பேரரசு செயற்பட்டிருந்தது போல, மூலதன அபகரிப்பைச் செய்யும் ஏகாதிபத்திய நாடுகள் ஏன் இயங்கவில்லை?

ஈரான் தனக்கான தொழில்நுட்ப விருத்தியைத் தொடர்வதனால் தனது பொருளாதார நலனுக்கு மட்டுமின்றிப் பாதுகாப்புக்கும் தீங்கு ஏற்பட்டுவிடும் என்று ஐக்கிய அமெரிக்கா கருதுவதாகக் கொள்ளலாமா? ஈரான் சுயமாக முன்னேறுவதாக மட்டுமல்லாமல் தன்னையும் மேவி வளரும் சீனாவுக்கு உறுதுணையாக இருப்பதனாலே இந்த யுத்தம் ஐக்கிய அமெரிக்காவுக்கு அவசியப்பட்டுள்ளது எனச் சொல்லப்படுவதில் உண்மை உள்ளதா?



திலகர்

Image Source - en.wikipedia.org

இதுவரையான மூலதன அபகரிப்பு என்பது தொழிலாளர்களின் உற்பத்திச் சக்தி உருவாக்கித் தந்த உபரி உழைப்பில் இருந்து மட்டும் வெளிப்பட்டிருக்கவில்லை. கார்ல் மார்க்ஸ் ‘மூலதனம்’ நூல் வாயிலாக ‘உபரி உழைப்புத்தான் மூலதனத் திரட்சியாக அமைகிறது’ என்பது அடிப்படையான உண்மை என்றார்; உலக வரலாற்றில் அவ்வாறு மட்டுமே மூலதன அபகரிப்பு நடந்ததாக அவர் சொல்லியிருக்கவில்லை. அதுவரை வணிகத்தைப் பாவத் தொழிலென நிராகரித்திருந்த கிறிஸ்தவர்கள் ஐரோப்பாவில் இருந்து மூலதன வேட்டைக்காக நாடுகாண் வீரர்களாகக் கிளம்பிக் குடியேற்றம் மேற்கொண்ட காலனித்துவ நாடுகளில் கொள்ளையடித்துத் திரட்டியிருந்த ஆதி மூலதனத் திரட்சி பற்றியும் கார்ல் மார்க்ஸ் விலாவாரியான ஆய்வினை மேற்கொண்டிருந்தார்.

சோழப் பேரரசு முதல் மொகலாயப் பேரரசுகள் வரை வெற்றி கொண்ட நாடுகளின் நிலங்களில் அன்றைய காலங்களின் விருத்தியோடு இணைந்து பயணிக்க வேண்டியிருந்தது என்றால், பிரதான உற்பத்திச் சாதனமான நிலம் பெயர்த்தெடுக்க இயலாது என்பதனால் ஆகும். காலனி நாடுகளில் மூலதன அபகரிப்பு மேற்கொண்டு ஏகாதிபத்தியம் தனது தேசங்களுக்குக் கடத்திச் செல்வது புதிய வகை உற்பத்தி உறவு. சென்ற நூற்றாண்டின் நடுக்கூறில் காலனி நாடுகள் விடுதலை பெற்று சுதந்திரமும் தன்னாதிக்க இறைமையும் பெற்றிருந்த போதிலும், நவகாலனித்துவ முறையில் தொடர்ந்தும் ‘ஒடுக்கப்பட்ட தேச’ வரம்புகள் இயங்க நேர்ந்துள்ளது. இதுவரை ஏகாதிபத்தியத் திணை ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீது பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து தனது அபகரிப்பை மேற்கொள்ளும் உலக ஒழுங்கு வழக்காறாக இருந்தது. பெற்றோல்-டொலர் பரிவர்த்தனையில் ஏகாதிபத்தியம் பெற்று வந்த அந்தச் சுரண்டலுக்குத் தடை ஏற்படுத்தி, பலவேறு நாணயங்கள் வாயிலாக நாடுகள் இடையே வர்த்தக ஊடாட்டம் மேற்கொள்ளும் நடைமுறையைச் சாத்தியமாக்கிய புதிய உலக ஒழுங்கு கடந்த வருடம் ஏற்பட்டிருந்தது.

அதனை உத்தரவாதப்படுத்தும் பிரதான மையமாகத் திகழ்ந்த ஈரானை ஆக்கிரமிக்க முனைந்த ஐக்கிய அமெரிக்காவின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது; வரலாற்றுப் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக இனியும் ஏகாதிபத்திய மேலாதிக்கம் இருக்கப் போவதில்லை. ஒடுக்கப்படுதலுக்கு இடமின்றித் தேசங்கள் இடையே சமத்துவமான பரிவர்த்தனை சாத்தியம் எனும் வரலாற்றுத் திருப்புமுறை ஈரானில் மேற்கிளம்பி வந்துள்ளது!

### மீளக் கண்டறிதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியக் காலனித்துவத்துக்குள் இலங்கை முழுமையாக ஆட்படுத்தப்பட்டு நவீன அரசியல் முறைமை தொடங்கிய போது தமிழ் ஆளுமைகளில் ஒருவரான ஆறுமுக நாவலர் செயற்பட்டிருந்த பாங்கினை மறுமதிப்பீடு செய்ய வேண்டியுள்ள இந்தத் தளத்தில், காலனித்துவ முறைமையில் இன்று ஏற்பட்டவாறுள்ள வரலாற்றுத் திருப்புமுனை காரணமாகப் பாரிய மாற்றம் நிகழ்ந்துள்ளதைப் பற்றிப் பேச வேண்டியுள்ளது. இன்றைய எமது பிரச்சினைகள் முதலாளித்துவம் ஏற்படுத்தியவை என்ற வகையில் அதனை ஒழித்துக்கட்டும் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பது அவசியம் எனக் கருத்துரைக்கும் மார்க்சியர்கள் உள்ளனர்.

நவகாலனித்துவப் பிடியிலிருந்து பூரணமாக விடுதலை பெறாத வரையில் உள்நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி உறவு முழுமையாக அற்றுப்போக இயலாது. பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் விடுதலைத் தேசியச் சோசலிசக் கட்டுமானத்தை முன்னெடுக்கும் மக்கள் சீனத்தின் மாஓ சேதுங் சிந்தனைப் பிரயோகமானது தேசிய முதலாளித்துவத்துடன் தொடர்ந்தும் ஐக்கியப்பட்டவாறு சந்தைச் சோசலிச முறைமையை மேற்கொண்டு வருகின்றமை கவனிப்புக்குரியது. 'சீனப் பிரத்தியேக நிலைமைக்கான சோசலிசம்' என்று சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி சொல்ல வேண்டியிருப்பதானது திணை அரசியல் குறித்த தகவல் பெறப்படாமையின் பேறினாலாகும்.

திணை அரசியலுக்குரிய தமிழ்ச் சூழலில் அது குறித்த விழிப்புணர்வு போதிய அளவில் மேற்கிளம்பாத போது, பாட்டாளி வர்க்கச் சோசலிச நிர்மாணத்தில் இருந்து வேறுபட்ட சீனாவுக்கான பிரத்தியேகத் தன்மையைச் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியினால் ஏன் கண்டுகாட்ட இயலவில்லை எனக் கேட்க இயலாது. வர்க்க அரசியல் மட்டுமே நிதர்சனம் என்று பழகிப் போன காரணத்தால் விடுதலைத் தேசிய இயங்கு முறைமையை வெளிப்படுத்தும் வரலாற்றுச் செல்நெறித் தொடக்கமான மருதத் திணை மேலாதிக்கம் குறித்த தேடல் சாத்தியப்படாமல் இருக்கின்றது. முழுமையாக வர்க்கப் பிளவுறாத 'ஆசிய உற்பத்தி முறைமைக்குரிய' எமது நாடுகளில் முழுச் சமூக சக்தியாக (திணையாக) இயங்கி வந்த தனிவகைப்பட்ட வரலாற்றுப் போக்கு நிதர்சனமாக இருந்தது என்பது மறைபொருளாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

காலனியமயப்பட்ட சிந்தனைச் சூழல் இன்றும் நீடிக்கும் நவகாலனித்துவப் பிடி காரணமாக விலக இயலாததாக உள்ளது. நவீன சிந்தனையே வெள்ளையரின் கொடை எனக் கருதி அரசியல் வரலாற்றை கிரேக்க-ரோம், பிரெஞ்சு-ருஷ்யப் புரட்சிகளுடன் மட்டுப்படுத்திப் பார்க்கப் பழகிய தவறு இன்னமும் நீடித்தபடியே உள்ளது.

'பெற்றோல் வணிகத்தை டொலரில் அல்லாமல் சீனாவின் யுவான் நாணயத்தில் மேற்கொள்ள வேண்டும்' என ஈரான் நிபந்தனை விதித்திருப்பதாகப் பேசப்படுகின்றது; 'அப்படியென்றால் ஐக்கிய அமெரிக்கா வகித்து வந்த மேலாதிக்கப் பாத்திரத்தை மக்கள் சீனம் இனி கையேற்கப் போகிறதா?' என்ற கேள்வி சிலரால் எழுப்பப்படுவதைக் காண்கிறோம். 'அதெப்படி சாத்தியமாக முடியும்? உலக மேலாதிக்கத்தின் பிரதான கருவியாக இருந்து வருகின்ற ஆங்கில மொழியின் இடத்தைச் சீனமொழியால் பெற இயலுமா? மிக இலகுவாகக் கற்பதற்கு ஏற்ற சர்வதேச மொழியாகிவிட்ட ஆங்கிலத்துடன் திகழும் காப்பரேட் மூலதனத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகத் துறையானது சீன மேலாதிக்கத்துக்கு இடமளிக்கப் போவதில்லை' எனத் தீர்க்கதரிசனம் கூறப்படுவதனையும் அவதானிக்கலாம்.

தனியொரு நாட்டின் மேலாதிக்கம் இனிச் சாத்தியமில்லை; பல்துருவ உலக ஒழுங்கு தான் இயங்க இயலும் என வெளிப்படுத்தும் மாற்றம் சென்ற வருடமே நிதர்சனமாகி இருந்தது. டொலரைக் கடந்து சீனாவின் யுவான் மட்டுமன்றி ருஷ்யாவின் ரூபிள், இந்தியாவின் ரூபாய் என்பன சர்வதேச நாடுகள் இடையேயான பரிவர்த்தனை நாணயங்களாகப் புழக்கத்தில் வந்துவிட்டன. அதை மீறிச் சீனா தனது தனிப்பட்ட மேலாதிக்கத்துக்கு முனையாதது மட்டுமன்றி, BRICS கூட்டமைப்புக்கான பொது நாணயம் ஒன்றைத் தொடங்கும் முயற்சி மேற்கொள்ளப்படுவதனை மக்கள் சீனம் ஆதரித்து வருகின்றது.

இதுவரை ஏகாதிபத்தியத் திணையின் மேலாதிக்கம் தீர்மானகரமானதாக இருந்து வந்தது. குறைந்தபட்ச ஜனநாயகத்துடன் இயங்கிய ஐ.நா. சபையில் ஏகாதிபத்திய நாடுகளின் விருப்பம் வீட்டோ அதிகாரத்தால் நிறைவேற்றப்பட்டு வந்தது. அந்தக் கூட்டு மேலாதிக்கத்துக்குத் தலைமை தாங்கி வந்த ஐக்கிய அமெரிக்கா அண்மைக்காலமாக நடைமுறையில் இயங்கத் தொடங்கியிருக்கும் புதிய உலக ஒழுங்கை ஏற்க முடியாமல் திணறுவதன் வெளிப்பாடே இன்றைய யுத்தத்தின் தோற்றுவாய்.

தனது சகபாடிகளான ஏனைய ஏகாதிபத்திய நாடுகளையும் தனக்குச் சேவகம் செய்யும் ஏவல் நாடுகளாக இயங்க வேண்டுமென்ற முனைப்பின் உந்துதலினால் தலைமைத் தாதாவாகக் களமாடும் ஐக்கிய அமெரிக்கா, ஈரானுடன் தொடுத்துள்ள யுத்தத்தில் பெற்று வரும் படிப்பினையானது 'ஒடுக்கப்பட்ட தேசம்' என்பது இனியும் நவகாலனித்துவப் பிடிமானத்துக்கு உரிய ஒன்றல்ல என்பதனை முரசறைவதாக உள்ளது.

இந்த நூற்றாண்டு தொடங்கியதிலிருந்து ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா என்பவற்றில் பெற்றுவந்த வெற்றிகளின் தொடர்ச்சியாக அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல் ஈரானிலும் வெற்றியை ஈட்டித் தந்தால் கூட, டொலரைத் தவிர்த்த புதிய நாணயப் பரிமாற்றம் உலகளவில் சாத்தியமற்றதாகியிராது; ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்ட அந்த வர்த்தக ஊடாட்டம் சிறு தள்ளாட்டங்களுடன் மேற்கொள்ளப்படுவதாக ஒரு

சலனம் மட்டும் ஏற்பட்டிருக்கும். மாறாக, ஈரானின் விட்டுக்கொடுக்காத பதிலடியானது ஏனைய நாடுகளும் நவகாலனித்துவப் பிடிக்கு மரண அடி கொடுப்பதற்கான உத்வேகத்தை ஊட்டுவதற்கு வகை செய்ததாகியுள்ளது. மட்டுமன்றி, சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட இயலாதன என்பதோடு ஒவ்வொரு நாட்டினதும் இறைமை பேணப்பட வேண்டும் என்ற உண்மை வல்லரசுகளுக்கு ஆணித்தரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆக, விடுதலைத் தேசிய உணர்வெழுச்சி நாடுகள் இடையே வீறுபெற்று எழுந்துவர இயலும் என்பதனால் தேசங்கள் இடையேயான சமத்துவ ஊடாட்டம் வலுப்பெறுவதற்கான வாய்ப்பே அதிகரிக்கும். இந்த யுத்தத்தில் பாரிய இழப்புகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து வருவதனாலே வல்லரசு எனும் மேலாதிக்கப் பண்பை ஒரேடியாக ஐக்கிய அமெரிக்கா இழந்துவிடப் போவதில்லை. இதுவரை நிலைநாட்டி வந்த முதன்மை காணாமல் போனாலும் அது குறிப்பிட்ட காலம் வரை உலகின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு துருவமாக இருக்கும்; ஏகாதிபத்தியங்களாக இயங்கி வந்த ஏனைய நாடுகளும் அத்தகையவை. அவற்றுடனேயே அவற்றைவிடவும் வல்லமைபெற்றனவாக BRICS அமைப்புக்குரிய பிரேசில் போன்ற நாடுகள் பல்துருவ உலக ஒழுங்கை நிர்வகிப்பதான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடன் தேசங்கள் ஒவ்வொன்றிலும் உழைக்கும் மக்களின் ஆட்சி அதிகாரம் சாத்தியப்படும் வேகத்தில் ஏகாதிபத்தியப் பிடிப்பு முற்றாகத் தகர்ந்து, நவகாலனித்துவ உறவு முறியடிக்கப்பட்டு தேசங்கள் அனைத்தும் முழுமைப்பட்ட சமத்துவ ஊடாட்டத்தைப் பெறுவது சாத்தியமாகும். பூரண முதலாளித்துவ விருத்தி பெற்று ஏகாதிபத்திய நாடுகளாக மாறியிருந்த வல்லரசுகளும் அதன் பின்னரே சோசலிச மார்க்கத்தை வரிக்க இயலும். முன்னதாக, நிலப்பிரபுத்துவ உச்சத்தில் இருந்த எமது நாடுகள் அடுத்த கட்டமான முதலாளித்துவம் நோக்கிச் சுயமாக வளர இயலாமல் இருந்ததைப் போன்றதுதான் இதுவும். எமக்கான சமூக மாற்றம் தடைப்பட்டிருந்தது மட்டுமல்ல, எமது நாடுகளின் சொந்த வரலாற்றைக் கூட ஐரோப்பிய முதலாளித்துவச் சிந்தனையாளர்களே தொல்பொருளாய்வுகள் வாயிலாக எடுத்துக் காட்ட வேண்டியதாக இருந்தது என்ற உண்மை அழுத்தி வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்!

## விடுதலையைக் கண்டுணராத மேலாதிக்க நாட்டம்

ஆய்வறிஞர்களில் பலரும் தமக்கான தேடலூக்கம் உந்தித் தள்ளுவதன் காரணமாக முன்னர் கவனம் செலுத்தப்படாத வரலாற்றுத் தடயங்களை வெளிக்கொணர்பவர்களாக இருந்தனர். அவர்களது ஆய்வுகளுக்கும் அவற்றை அறிக்கைப்படுத்தி வெளிப்படுத்துவதற்கும் பின்புலமாக இருந்து நிதிப் பங்களிப்புகளை வழங்கும் நிறுவனங்கள் அத்தகைய ஆய்வு முடிவுகளைத் தமக்கு அமைவாகப் பயன்படுத்துவது குறித்த எச்சரிக்கை உணர்வு பெரும்பாலான ஆய்வறிஞர்களுக்கு இருப்பதில்லை.

ஆதிச்சநல்லூர் தொல்பொருளாய்வு முதல் சோழப் பேரரசின் பிரமாண்டமான பங்களிப்புகள் வரை ஐரோப்பியர்களால் கண்டறிந்து வெளிப்படுத்தப்பட்ட போது, அதே காலனியப் பங்களிப்புடன் கால்ட்வெல் பாதிரியாரது திராவிட மொழிக் குடும்பம் குறித்த ஆய்வின் தொடர் விவாதங்களும் இணைந்த நிலையில், ஆரிய-திராவிட மோதலுக்கான இனவாத அரசியலுக்குத் தூபம் போடும் வேலையைக் காலனித்துவம் தொடங்கி வைத்தது. அதனுடன் இணைந்த சாதிவாத அரசியலுக்குரிய பிராமண எதிர்ப்பும் தொடக்கம் பெற்றது.

இந்தியச் சுதந்திரப் போராட்ட அமைப்பான காங்கிரஸ் கட்சி தொடங்கப்பட்டதில் காலனித்துவ ஊடுருவல் எந்த அளவுக்கு இடம்பெற்றிருந்ததோ, அதைக் காட்டிலும் அதிகமாகப் பிராமண மேலாதிக்கத்துக்கான அமைப்பாக அது செயற்படுவதற்குரிய அடித்தளமும் இடப்பட்டிருந்தது. சுதந்திரப் போராட்ட வீறு அதிதீவிர வீச்சுடன் எழுச்சி பெற்று முற்றுமுழுதான விடுதலையை எட்ட இடந்தராமல் நவகாலனித்துவப் பிடிக்குள் சுதந்திர இந்தியாவை இணைத்து வைத்ததில் காலனியம் இந்தியக் காங்கிரசை உருவாக்கியதன் பயன் அறுவடை செய்யப்பட்டிருந்தது. உலக மூலதன அபகரிப்பு அவ்வகையில் அமைந்தது என்றால், இந்தியச் சுரண்டலில் பிராமண-பனியா-உயர்சாதிகளின் பெருமுதலாளித்துவக் கும்பல் ஊதிப்பெருக்கும் வாய்ப்பை பிராமணத் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட காங்கிரசின் சுதந்திரம் உள்ளடக்கியிருந்தது.

மக்கள் விரோத சக்திகள் அவ்வாறு விடுதலை வேள்வியை அபகரித்தும் பாதிச் சுதந்திரத்துடன் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டினர் என்றால், பூரண விடுதலையை நாடிய சக்திகள் சரியான மார்க்கத்தில் மக்களுக்குத் தலைமையேற்று துரோகிகளிடமிருந்து சுதந்திரத்தைக் காப்பாற்றாமல் ஏன் கைவிட்டனர்? தீர்க்கமான ஒரு மார்க்கத்தைக் கண்டறியும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், தெளிவற்ற சமூக நியதிகளை ஊதிப்பெருக்க வைத்துக் குழப்ப நிலைகளைக் காலனித்துவம் ஏற்படுத்திய காரணத்தால் விடுதலைத் தேசியச் சிந்தனை முறைமை மேலெழ

இயலாமல் போனது. காலனித்துவ அரசு திட்டமிட்டு முன்னெடுத்த இந்து-முஸ்லிம் மோதல்களுக்கான களங்கள் காரணமாக இஸ்லாமியர்களிடம் கணிசமானோர் முஸ்லிம் லீக் எனும் தனிக்கட்சியை ஏற்படுத்தி, சுதந்திரத்துக்காக ஒன்றுபட்டுப் போராடிய இந்தியாவைப் பிளவுப்படுத்திப் பாகிஸ்தான் என்ற தனிநாடு உருவாக நேர்ந்தது. பாகிஸ்தான் கோரிக்கை உருவாக முன்னரே திராவிட நாடு தனிநாடாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழகத்தில் தனிவகை அமைப்பைக் கட்டியெழுப்பிய ஈ.வெ.ரா. பெரியார், அதனைப் பண்பாட்டு இயக்கமாக மட்டுமானதாக இயக்கினார்.

பிராமண ஆதிக்கத்துக்குள் தமிழ்நாடும் ஆட்படுகிறது எனச் சுதந்திர தினத்தைத் துக்க நாளாக பெரியார் அறிவித்த போது, அவரது பிரதான தளபதியாகச் செயற்பட்ட அண்ணாதுரை இந்திய சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டார். சுதந்திரத்தின் பின்னர் அண்ணாதுரை சமூக நீதி அரசியலை முன்னெடுத்தாரேயன்றி, சுதந்திரப் போராட்டத்தின் அங்கமாகச் சமூக நீதிக் கோரிக்கைகளை இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

வட இந்தியாவில் தலித் அரசியலை அம்பேத்கர் முப்பதாம் ஆண்டுகளில் இருந்து முன்னெடுக்கத் தொடங்கி இருந்த போதிலும், திராவிடர் இயக்கம், முஸ்லிம் லீக் போன்றன இந்திய சுதந்திரப் போராட்ட அலைக்கு மாறுபட்ட எதிர் தேசிய அரசியல் வடிவமாகவே அதனைக் கையாண்டன.

ஒடுக்கப்பட்ட மக்கள் அம்பேத்கரைப் பாரிய அளவில் பின்பற்றி விடாமல் தடுக்கும் வகையில் ஹரிஜன் இயக்கத்தை முன்னெடுத்த காந்தியின் செயல்முறைகள், பிராமணத் தேசிய அமைப்பாக இருந்த இந்திய காங்கிரஸ் கட்சியின் வடிவத்தை தாராளவாத அரைப்பிராமணத் தேசியமாக மடைமாற்றியதன் வாயிலாகச் சுதந்திரப் போராட்டத்தில் தலித் மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கும் வெகுஜன இயக்கமாக காங்கிரசைப் பரிணமிக்கச் செய்தன.

சென்ற நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் உயர் மத்தியதர வர்க்கப் பிரிவினரிடம் சுதந்திரத்துக்கான விழிப்புணர்வு தோற்றம் பெற்ற போது, இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரே சமூக சக்தியான பிராமணர்களே மூல விசையாக இருந்தனர். அதியுயர் சாதிய அதிகாரத்துக்கு உரியவர்கள் எனப்பட்ட சித்பவன் பிராமணரான திலகர் அதன் முதன்மைத் தலைவராக இருந்தார். இந்த முதல் தேசிய எழுச்சியை மக்கள் தளத்துக்குரியதாக வெகுஜனமயப்படுத்திய வ.உ. சிதம்பரனார் பிராமணரல்லாத வெள்ளாளர் என்பது கவனிப்புக்குரியது.

முப்பதாம் ஆண்டுகளின் காந்தி அலை பேரெழுச்சியாக இருந்த போது அதன் அரசியல் முன்னெடுப்புகளில் வ.உ.சி. காங்கிரசை விட்டு விலகி இருந்தார். காந்தியின் தேசியத்துவத்தை விடவும் திலகரின் அரசியல் உணர்வு வீச்சானது என்ற கருத்தின் அடிப்படையிலானதே இந்த விலகல். பிராமண மேலாதிக்க நிலைப்பட்டவராகத் திலகரைக் கணிக்க மறுத்த வ.உ.சியின் பார்வையில், திலகரைவிடவும் பிராமணியத்துக்கு அதிகம் விட்டுக் கொடுப்பவராகக் காந்தியே இருந்தார். பிராமண வெறுப்பு வ.உ.சியிடம் இருந்ததில்லை; அதேவேளை சுதந்திரப் பேரெழுச்சியின் பலாபலனைப் பிராமண மேலாதிக்கம் கையகப்படுத்துவதையும் அவரால் ஏற்க இயலாமல் இருந்தது. பெரியாரின் திராவிட இயக்கத்தை ஆதரிக்கும் மனப்பாங்கு வ.உ.சியிடம் ஏற்பட்டிருந்தது. தீவிர அரசியல் செயற்பாடுகளில் இருந்து இறுதிக் காலத்தில் ஒதுங்கியிருந்த அதேவேளை தமிழிலக்கிய ஆர்வத்துடன் பழந்தமிழ்ப் பனுவல்களை மக்கள் மயப்படுத்த முனைந்தார். குறிப்பாக, பிராமணமயப்பட்ட பரிமேலழகர் உரையை மறுத்துத் திருக்குறளுக்காக வ.உ.சி. எழுதியுள்ள புதிய உரை தமிழறிஞர்களின் மதிப்பைப் பெறுவதாக அமைந்தது.

இவற்றுடன் சைவசித்தாந்தத்தின் மீது அவருக்கு ஏற்பட்டிருந்த அதீத ஈடுபாடு இங்கு எமக்கான மிகப் பிரதான அம்சம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தீவிர அரசியல் கிளர்ச்சியாளராக வ.உ.சி. செயற்பட்ட போது அவரது மகத்தான தலைவரான திலகர் பகவத்கீதைக்கு விரிவான விளக்க உரை எழுதியிருந்தார். தோளோடு தோள் சேர்த்து இயங்கிய மகாகவி பாரதியும் கீதையைத் தமிழாக்கம் செய்ததுடன் விரிவான முன்னுரை வாயிலாகத் தனது ஆதரவை பகவத்கீதைக்கு வெளிப்படுத்தியிருந்தார்; சுதந்திரப் போராட்டக் கருத்தியலாக அத்வைதத்தை முன்வைப்பவராகவும் சுப்பிரமணிய பாரதி இருந்துள்ளார்.

இந்துக்கள் அனைவருக்குமான கருத்துரு, கருத்தியல் எனப்பட்ட அவ்விரு பனுவல்கள் சார்ந்த தத்துவத் தளங்களைக் கண்டுகொள்ளாமல் இயங்கி வந்தவரான ஒரு தீவிர செயற்பாட்டாளரான வ.உ.சி., தனது இறுதிக்காலத் தேடலுக்குரியதாகச் சைவ சித்தாந்தத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்? மிகத் தீவிரமாகப் பண்பாட்டுத் தேசிய எழுச்சி உணர்வைத் தொடக்கி வைத்த ஆறுமுக நாவலர் தனது இளமைத் துடிப்புமிக்க இயக்க வேகத்துக்குத் தேர்ந்தெடுத்த சைவசித்தாந்தம் இதனின்றும் வேறுபாடு எதனையாவது கொண்டுள்ளதா? தொடர்ந்து தேடுவோம்!

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

# 1983  1991: உச்சமடைந்த இனப்படுகொலைகளும் ஈழப்போரின் பிராந்தியப் பரிமாணமும்

**பகுதி 2**

**சி. அ. யோதிலிங்கம்**



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

### குமுதினிப் படகுப் படுகொலைகள்

குமுதினிப் படகுப் படுகொலைகள், 1985 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி நெடுந்தீவிற்கும் புங்குடுதீவிற்கும் இடையில் சேவையாற்றிய குமுதினிப் படகில் பயணம் செய்தவர்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் குறிக்கிறது. நெடுந்தீவின் மாவலித்துறையில் இருந்து குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு குமுதினிப் படகில் சென்ற பயணிகள் இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 33 பேர் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

'குமுதினி' 1960களில் இலங்கை அரசால் நெடுந்தீவுக்கு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை நெடுந்தீவு மக்களை வெளியுலகத் தொடர்பில் வைத்திருக்க உதவிய படகு இதுவாகும். இயந்திர அறை, முன்பகுதி, பின்பகுதி என மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

குமுதினிப் படகு 1985 மே 15 காலை 7:15 மணிக்கு நெடுந்தீவு மாவலித் துறைமுகத்தில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்டது. குறிகாட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது புறப்பட்ட அரைமணி நேரத்தின் பின் நடுக்கடலில் கண்ணாடி இழைப்படகில் வந்த இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது. ஆறு பேர் முக்கோணக் கூர்க்கத்தியும் கண்டங்கோடலிகளும் இரும்புக் கம்பிகளும் சகிதம் குமுதினியில் ஏறினர். பின்புறமிருந்த பயணிகளை இயந்திர அறையின் முன்பக்கம் செல்லுமாறு மிரட்டினர். அவர்கள் அனைவரும் சென்றுவிட்டனர்.

பின்புறம் இருபுற இருக்கைகளுக்கு நடுவே பலகைகளினால் ஆன, இயந்திரத்தில் இருந்து பின்புறம் செல்லும் ஆடுதண்டுப் பகுதியை அவர்கள் அகற்றினர். இருக்கை மட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட சுமார் 4 அடி ஆழமானதாக அது இருந்தது.

இதன்பின் பணியாளர்கள் உட்பட ஒவ்வொருவராக உள்ளே அழைக்கப்பட்டனர். அரைகுறைத் தமிழில் அவர்கள் கதைத்தனர். குமுதினியின் இருபக்க வாசல்களிலும் உள்ளும் வெளியும் கடற்படையினர் இருந்தனர். ஒவ்வொருவராக கடற்படையினர் மக்களை அழைத்து கத்தியால் குத்தியும் கண்டங்கோடலியால் வெட்டியும் இரும்புக் கம்பியால் தாக்கியும் கொன்று அந்த ஆடுதண்டுப் பகுதியில் போட்டனர். இப்படிக் கொல்லப்படுபவர்கள் எழுப்பும் அவல ஒலி முன்புறம் இருப்பவர்களுக்குக் கேட்கக்கூடாது என்பதற்காக அவர்கள் பெயரையும் ஊரையும் உரக்கச் சொல்லுமாறு பணிக்கப்பட்டனர். கடற்படையினரின் கடுமையான தாக்குதலின் போது அலறியவர்கள், மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டு, 'இறந்துவிட்டனர்' எனக் கருதப்பட்ட பின்னர் கடலில் வீசப்பட்டனர். வலியில் அவலக்குரல் எழுப்பாமல், இறந்தவர்களைப் போல நடித்து உயிர் பிழைத்தவர்களும் உண்டு. பயணிகளில் ஒருவர் கடலில் குதிக்கவே அவருடன் சேர்ந்து வேறு சிலரும் கடலில் குதிக்கத் தொடங்கினர். இதனைக் கண்ட ஆயுத நபர்கள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.




குமுதினிப் படகு

Image Source - newscut.lk

சுபாஜினி விசுவலிங்கம் என்ற 7 மாதக் குழந்தை முதல் 70 வயது தெய்வானை உட்பட இப்படுகொலை நிகழ்வில் இறந்தோர் எண்ணிக்கை 36 முதல் 48 வரை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் சர்வதேச மன்னிப்பு அவை இறந்தோர் எண்ணிக்கை 23 எனத் தெரிவிக்கிறது. 71 பேர் உயிருடன் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

### தளபதி தாஸ் கொலை

டெலோ இயக்கத்திற்குள் தாஸிற்கும் பொபி என்பவருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக இயக்கத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டிய தேவை அதன் தலைவர் சிறீசபாரட்ணத்திற்கு ஏற்பட்டது. எனினும் பொபி மீது அவரின் பரிவு காணப்பட்டதாலும், தாஸ் தனது கட்டுப்பாட்டில் இல்லை என்பதை சிறீசபாரட்ணம் உணர்ந்ததாலும் தாஸைக் கொலை செய்ய எண்ணினார். பொபியை அனுப்பி தாஸை பேச்சுவார்த்தைக்கு என அழைத்தார். பேச்சுவார்த்தைக்கு என யாழ்ப்பாண வைத்தியசாலை

தேர்ந்தெடுக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் 11 ஆம் திகதி யாழ் வைத்தியசாலைக்கு மோகன் (முல்லைதீவு), காளி (பருத்தித்துறை), கிசான் (திருகோணமலை), பீட்டர் (வதிரி) ஆகிய மெய்ப்பாதுகாவலர்களுடன் வந்த தாஸ், மெய்ப்பாதுகாவலர்களுடன் சேர்த்து பொபி தலைமையில் காத்திருந்த சிறீசபாரட்ணம் குழுவினால் கொல்லப்பட்டார்.

### பெங்களூர் பேச்சுகள் - 1986

1986 நவம்பர் நடுப்பகுதியில் தென்னாசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டுறவு (சார்க்) மாநாடு பெங்களூரில் நடைபெற்றது. இம்மாநாட்டின் போது இலங்கை, இந்திய அரசுத் தலைவர்களின் சந்திப்பு இடம்பெற இருந்தது. இது ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்பட்டதால், அரசுத் தலைவர்களின் சந்திப்போடு இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண எண்ணினார் ராஜீவ் காந்தி. இதன்படி 1986 நவம்பர் மாதம் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் பெங்களூரில் நடைபெறவிருந்த சார்க் உச்சி மாநாட்டில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க ஜெயவர்த்தன நிர்ப்பந்திக்கப்பட்டார். இதன்படி அவர் தயாரித்த திட்டமானது இனத்துவ, மத வேறுபாட்டின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரிப்பது பற்றியதாக அமைந்திருந்தது.

அதாவது இத்திட்டத்தின்படி தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற மூன்று இனத்தவர்களுக்குமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் எல்லைகள் மூன்று பிரதேசக் கூறுகளாக மாற்றி அமைக்கப்பட இருந்தன. இத்திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்கள் வாழும் பகுதிகள் கிழக்கிலிருந்து துண்டாடப்பட்டு ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படும். திருகோணமலை நகரமும் துறைமுகமும், திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்கள் வாழும் பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு சிங்கள மாநிலமாக மாற்றப்படும். இச்சிங்கள மாநிலம் சிங்கள அரசு நிர்வாகிகளின் கீழ் செயற்படும். மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளும் இணைந்ததாக முஸ்லிம் பிரதேசம் உருவாக்கப்படும். திருகோணமலையில் தமிழர்கள் வாழும் பகுதிகளும் (திருகோணமலை நகரம், சிங்களக் குடியிருப்புகள், துறைமுகம் தவிர்ந்த பகுதிகள்) மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளும் இணைந்ததாக தமிழர் மாகாணம் உருவாக்கப்படும் என ஜெயவர்த்தன சிங்களவர்களுக்குச் சாதகமான திட்டத்தை உருவாக்கினார்.

இவ்வாறான ஒரு தீர்வுத் திட்டம் சார்ந்து பேச்சுகளை நடத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பெங்களூருக்கு அழைக்கப்பட்ட போது, "தமிழர் தாயகம் என்பது ஒன்றுதான்; அதனைப் பிரிக்க முடியாது. ஜெயவர்த்தன அதனைப் பிரித்துக் கூறுபோட நான் அனுமதிக்கப் போவதில்லை" என்று தெரிவித்தார். இக்கருத்தைத் தொடர்ந்து பெங்களூர் பேச்சுகளும் தோல்வியில் முடிவடைந்தன.

### தமிழீழ விடுதலை இயக்கம் தடை செய்யப்படல்

தமிழீழ விடுதலை இயக்கம் (Tamil Eelam Liberation Organization; டெலோ, TELO) என்பது இலங்கைத் தமிழ் ஆயுத அமைப்பும் அரசியல் கட்சியும் ஆகும். இது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் நோக்கோடு சிறீசபாரட்ணம், நடராஜா தங்கதுரை, குட்டிமணி ஆகியோரால் 1979 இல் நிறுவப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர்களான குட்டிமணி, தங்கதுரை ஆகியோர் 1983 கறுப்பு யூலைக் கலவரங்களின் போது வெலிக்கடைச் சிறையில் சிங்களக் கைதிகளால் கொல்லப்பட்டார்கள். இவ்வமைப்பு 1986 வரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, இவ்வமைப்பின் தலைவர் சிறீசபாரட்ணம் உட்படப் பெருமளவு போராளிகள் புலிகளினால் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந்த டெலோ தலைவர்கள் அதே பெயரில் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்து, நாடாளுமன்ற மற்றும் உள்ளூர் அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

### கொழும்பு புறக்கோட்டை குண்டு வெடிப்பு - 1987

1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் வைக்கப்பட்ட குண்டு வெடிப்பில் 110க்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். 300க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த நடவடிக்கை ஈரோஸ் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. 1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரந்தலாவ கிராமத்தில் 28 சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். 27 புத்த பிக்குகள் கொல்லப்பட்டனர். இந்த நிகழ்ச்சியால் பாதிக்கப்பட்ட இளம் புத்த பிக்கு ஒருவர் இராணுவத்தில் சேர்ந்து போரிட்டு, 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடந்த ஆனையிறவு யுத்தத்தில்

உயிரிழந்தார். அவருக்கு 'பரமவீர விபுசனய' என்ற பட்டம் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டதுடன், 'கசலக' என்னும் இடத்தில் சிலை ஒன்றும் நிறுவப்பட்டது. நாமல்வத்த என்ற இடத்தில் சிங்கள மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பல சிங்களவர்கள் கொல்லப்பட்டனர்.

## ஒப்பரேஷன் பூமாலை

*1987 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்கிற பெயரில் அரசுப் படைகள் வடமாராட்சி மீது தாக்குதல்களைத் தொடங்கின. இத்தாக்குதலில் அரசுப் படைகள் வெற்றி பெற்றுக்கொண்டன. கிட்டத்தட்ட வடமாராட்சிப் பகுதிகள் அனைத்தும் அரசுப் படைகளின் கையில் வந்தன. முழு யாழ் குடாநாட்டையும் அரசுப் படைகள் பிடித்து விடுவர் என்னும் நிலையில் பயம்கொண்ட இந்திய அரசாங்கம் உடனடி நடவடிக்கையில் இறங்கியது. வடபகுதியில் பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குகின்றோம் என்னும் அடிப்படையில், இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து உணவுப் பொருட்கள், எரிபொருட்கள் ஏற்றிய 19 படகுகள், 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூன்றாம் திகதி இலங்கையின் வடபகுதியை நோக்கி வந்தன. ஆனால் இப்படகுகள் இலங்கையின் கடற்பிராந்திய எல்லையில் வைத்து இலங்கை அரசின் உத்தரவுக்கு இணங்க இலங்கைக் கடற்படையால் திருப்பி அனுப்பப்பட்டன. இதை எதிர்பாராத இந்திய அரசு சினம் கொண்டு அடுத்த நடவடிக்கையைத் திட்டமிட்டது.*

*இதைத் தொடர்ந்து, பெங்களூர் விமானப்படைத் தளத்திலிருந்து புறப்பட்ட ஐந்து இந்திய விமானங்கள், 'மிராஜ் 2000' என்ற நான்கு யுத்த விமானங்களின் பாதுகாப்புடன் இலங்கையின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, வடபகுதிக்குள் சுமார் 25 தொன் நிவாரணப் பொருட்களை 'பரசூட்' மூலம் போட்டன. 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆகாய நடவடிக்கை 'ஒப்பரேஷன் பூமாலை' எனப்பட்டது. ஒப்பரேஷன் லிபரேஷன் மூலம் உற்சாகமடைந்திருந்த இலங்கை அரசாங்கம் ஒப்பரேஷன் பூமாலை மூலம் மிகவும் அதிர்ச்சி அடைந்தது.*



**1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம்**

Image Source - byjus.com

## இலங்கை - இந்திய ஒப்பந்தம் - 1987

*இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கும் தோல்வியைத் தந்தது. தமிழ் மக்களுக்கும் தோல்வியைத் தந்தது. இந்தியப் படைகள் தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் கடுமையான எதிர்ப்பைப் பெற்று அவமானகரமாக வெளியேறியன. இது ஒரு வகையில் ராஜீவ் காந்தியின் மரணத்திற்கும் காரணமாகியது. ஏட்டிக்குப் போட்டியாக புலிகளை அழிக்க வேண்டும் என்ற வெறியில் யுத்தத்திற்குப் பக்கபலமாக நின்ற இந்தியா, தனக்குச் சார்பான வலுச் சமநிலையையும் சீனாவிற்குச் சார்பாகத் திருப்பிவிட்டிருக்கிறது. இன்று சீனாவின் செல்வாக்கினை எவ்வாறு முறியடிப்பது என்று தெரியாமல் விழிபிதுங்கி நிற்கின்றது. சீனாவினை அகற்றுதல் என்ற ஒற்றை இலக்கிற்காக அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்தும் கூட, தனது இலக்கில் ஒரு அங்குலம் கூட அதனால் முன்னேற முடியவில்லை. இந்தியாவின் அணுகுமுறையை நடைமுறைப்படுத்திய சிவசங்கர் மேனன், நாராயணன் போன்ற அதிகாரிகள் கூட தற்போதைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை விமர்சிக்கின்றனர்.*

*மறுபக்கத்தில் இந்தியாவின் அணுகுமுறை தமிழ் மக்களை பெருந்தேசியவாதத்தின் வாயில் கொண்டு போய்விட்டிருக்கின்றது. ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வடக்கு - கிழக்கு இணைப்பையோ, அதிகாரங்களையோ தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க இந்தியாவால் முடியவில்லை. கஷ்டப்பட்டுக் கொண்டு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் கூட இந்தியாவிற்குக் கைகொடுக்கவில்லை.*

*1977 ஆம் ஆண்டு 5/6 பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்த ஜே.ஆர். அரசாங்கம் அமெரிக்காவிற்கு இலங்கையின் கதவுகளை வரையறையின்றித்*

திறந்துவிட்டது. அமெரிக்கா தலைமையிலான அணிக்கும், சோவியத் யூனியன் தலைமையிலான அணிக்கும் இடையே உச்சக்கட்டப் பனிப்போர் நிலவிய காலகட்டம் அது. சோவியத் யூனியனின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பைக் கண்டு அஞ்சிய அமெரிக்கா அவசரம் அவசரமாகப் பாகிஸ்தானுடன் இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தைச் செய்தது. சீனாவும் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளை வழங்கியது. ஏற்கெனவே சீனப் படையெடுப்பால் பலத்த அடிவாங்கிய இந்தியா தனது புகழ்பெற்ற அணிசேராக் கொள்கையைக் கைவிட்டு சோவியத் யூனியனுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்திருந்தது.

அமெரிக்கா - பாகிஸ்தான் கூட்டு இந்தியாவிற்கு அச்சத்தைக் கொடுத்த நிலையில், தனது வாசற்படியான இலங்கையும் அமெரிக்காவிற்குக் கதவுகளைத் திறந்துவிட்டமை இந்தியாவிற்குப் பலத்த அச்சத்தை உருவாக்கியது. அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு இந்தியாவிற்கு எதிரான சக்திகளான அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாபிரிக்கா, சீனா போன்றவற்றிடமிருந்து ஆயுத உதவிகளையும் இராணுவப் பயிற்சிகளையும் பெற்றார்.

அமெரிக்கா, இலங்கைக்கான தனது உதவிகளை இராணுவ, தொழில்நுட்ப ரீதியாக இஸ்ரேலுக்கூடாகவே வழங்கியது. கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தில் இதற்காக இஸ்ரேல் நலன்புரிப் பிரிவு திறக்கப்பட்டது. இஸ்ரேலின் உதவியுடன் இலங்கையின் கடற்படை நவீனமயமாக்கப்பட்டுக் கட்டியெழுப்பப்பட்டது. இஸ்ரேலின் உள்நாட்டுப் புலனாய்வுப் பிரிவான 'சின்பெற்' தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை நசுக்குவதற்கான போரியல் நுட்பங்களை விசேட அதிரடிப் படைக்கு வழங்கியது. அமெரிக்கா சிலாபத்தில் 'அமெரிக்காவின் குரல்' வானொலிச் சேவையை விரிவாக்கம் செய்தது. திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களையும் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ள முயற்சித்தது. அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி வருகை தந்து ஆலோசனை நடத்தினர். இந்தப்போக்கு அமெரிக்காவுடன் இரகசிய இராணுவ ஒப்பந்தத்திற்கு இலங்கை செல்லுமா என்ற அச்சத்தையும் இந்தியாவிற்கு ஏற்படுத்தியது.

இன்னோர் புறத்தில் பிரித்தானியாவின் 'கினிமினி' சேவை அமைப்பின் படை நிபுணர்களும் அதிரடிப்படைகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்கினர். பாகிஸ்தானின் விசேட படைப்பிரிவும் படையினருக்கு விசேட பயிற்சிகளை வழங்கியது. 'கருஞ்சிறுத்தைகள்' என்ற அதிரடிப் படைப் பிரிவும் பாகிஸ்தான் ஆலோசனையில் உருவாக்கப்பட்டது.

இவ்வாறு இந்திய நலன்களுக்கு விரோதமான சக்திகள் இலங்கையில் காலூன்றுவது தனது தேசிய பாதுகாப்பிற்கும், புவியியல் - கேந்திர நலன்களுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என இந்தியா கருதியது. இந்தியத் தலையீட்டிற்குப் பிரதான காரணம் இவைதான். 1983 ஆம் ஆண்டு கறுப்பு யூலை அழிவுகளும், அதன் விளைவாக தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்புகளும் தலையிடுவதற்கான களச்சூழலை உருவாக்கின. அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் கொடுப்பது எனத் தீர்மானித்தார். இதன் நோக்கம் தமிழர்களுக்கு தமிழீழத்தைப் பெற்றுக் கொடுப்பதல்ல. மாறாக ஜே.ஆரைப் பணியவைத்து இலங்கையை இந்தியாவின் செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதே! இலங்கையைப் பணியவைப்பதற்காக தமிழ்ப் பிராமணரான கோபாலசாமி பார்த்தசாரதி மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். இந்திய உளவுப்பிரிவினூடாக தமிழ் இயக்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு ஆயுதமும் பயிற்சியும் வழங்கப்பட்டன. முதலில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், புளொட் இயக்கங்களுக்கும், பின்னர் புலிகளுக்கும் இவை வழங்கப்பட்டன. இந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உளவுப்பிரிவைச் சேர்ந்த ஆர்.என். ராவ், கிரிஸ்சக்சேனா, சங்கரன் நாயர் என்போரைக் கொண்ட குழுவையும் இந்திரா காந்தி உருவாக்கினார். இம்மூவரும் இந்திரா காந்தியின் மிகுந்த நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தனர்.

இந்திரா காந்தியின் முயற்சியினால் இலங்கைப் படைகளுக்கு எதிரான இயக்கங்களின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. வல்வெட்டித்துறை நெடுங்காடு தாக்குதல், ஒட்டிசுட்டான் காவல் நிலையத் தாக்குதல், பொலிகண்டி தாக்குதல்கள், வெள்ளாங்குளத் தாக்குதல்கள், வல்வெட்டித்துறை காவல் நிலையத் தாக்குதல்கள், கரவெட்டி தாக்குதல் என ஒரு மாதத்திலேயே பல தாக்குதல்கள் இடம்பெற்றன. ஜே.ஆர். அரசாங்கம் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறியது.

இந்தத் தீவிரச் சூழ்நிலையில்தான் 1984 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி இந்திரா காந்தி தனது சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் முன், பின் அனுபவமில்லாத ராஜீவ் காந்தி பதவிக்கு வந்தார். இந்திரா காந்தியின் மரண நிகழ்விற்கு வந்த ஜே.ஆர்.

ஜெயவர்த்தன இந்தியாவிற்கு அடங்கிப் போவதற்கான சைகையை நேரடியாகவே ராஜீவ் காந்தியிடம் காட்டினார். இந்தியா எதிர்பார்த்ததும் இதுதான். இதன் பின்னர் இந்தியா விடுதலை இயக்கங்களை அடக்கத் தொடங்கியது. விடுதலை இயக்கங்களுக்கு அதிக விருப்பம் இல்லாத நிலையிலேயே திம்பு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. இந்திய உளவுப்பிரிவைக் கொண்டு விடுதலை இயக்கங்களுக்கு கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. தமது பேரம் பேசும் நிலையை உயர்த்துவதற்காக இலங்கை இராணுவம் பலவீனமாகும் வரை பேச்சுவார்த்தைக்குச் செல்வதை விடுதலை இயக்கங்கள் விரும்பியிருக்கவில்லை.

இந்தியாவின் இந்த அழுத்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காகவும், விடுதலைப் போராட்டத்தை ஐக்கியப்பட்ட நிலையில் முன்கொண்டு செல்வதற்காகவும் விடுதலை இயக்கங்களினால் 'ஈழத்தேசிய விடுதலை முன்னணி' என்ற அமைப்பு *1984* சித்திரையில் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் என்பன இணைந்தன. பின்னர் புலிகளும் அதில் இணைந்து கொண்டனர். இம்முன்னணி, முதலில் இலங்கை அரசு அரசியல் தீர்வை முன்வைத்தால்தான் பேச்சுவார்த்தைக்குச் செல்வது எனத் தீர்மானித்தது. ஆனால் இந்திய உளவுப்பிரிவினர் "நிபந்தனைகள் விதித்தால், நீங்கள் இந்தியாவிலிருந்து துரத்தப்படுவீர்கள்" என அச்சுறுத்தியமையினாலேயே விடுதலை இயக்கங்கள் எந்தவித நிபந்தனையுமில்லாமல் பேசச் செல்வதற்கு இணங்கின. இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் திம்பு பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததை இந்தியா விரும்பவில்லை. இந்திய மத்தியஸ்தராக திம்புவில் கலந்து கொண்ட றொமேஸ் பண்டாரிக்கும் ரெலோவின் பிரதிநிதி சத்தியேந்திராவிற்குமிடையில் பலத்த வாக்குவாதமும் இடம்பெற்றது. இந்திய அரசாங்கத்திற்கு கோபம் தாங்கவில்லை. பாலசிங்கம், சத்தியேந்திரா, சந்திரகாசன் என்போருக்கு நாடுகடத்தும் உத்தரவு விடுக்கப்பட்டது. சத்தியேந்திரா அதற்கு முன்னரே பயணமாகியிருந்தார். பாலசிங்கமும் சந்திரகாசனும் நாடுகடத்தப்பட்டனர். தமிழ்நாடு இதனை எதிர்த்துக் கொந்தளித்தது. அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இறுதியில் இந்திய அரசு நாடுகடத்தலை வாபஸ் பெற்றது. எனினும் விடுதலை இயக்கங்கள் மீதான இந்திய உளவுப்பிரிவின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தன. விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அச்சுறுத்தல்களுக்குப் பணிந்தன.

இந்நிலையில் புலிகள் தனித்துவிடப்பட்டனர். ஏனைய இயக்கங்களினால் தமக்கு அச்சுறுத்தல்கள் வரும் எனக் கருதி தாயகத்தில் புலிகள் இயக்கம் ஆயுதத் தாக்குதலை நடத்தி ரெலோ இயக்கத்தைத் தடைசெய்தது. தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இனையும் தடை செய்தது. புளொட் இயக்கம் தானாக ஒதுங்கிக் கொண்டது. ஈரோஸ் இயக்கத்தின் பெரும்பகுதி புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்படச் சம்மதித்தது. ஏனையவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். விடுதலைப் போராட்டத்தை நடத்தும் பொறுப்பைப் புலிகள் இயக்கம் தனித்துக் கையிலெடுத்தது.

இந்தச் சூழ்நிலை இந்திய அரசிற்கு மிகப் பெரும் தலைவலியாகியது. எல்லா விடயங்களையும் புலிகளுடன் மட்டும் கையாள வேண்டியிருந்தது. புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பது இலகுவானதாக இருக்கவில்லை. அவர்களைப் பணியவைக்காமல், அடங்குவதற்குத் தயாராக இருந்த சிறீலங்கா அரசினைக் கையாள முடியவில்லை. இந்நிலையில் *1986* நவம்பரில் பெங்களூரில் சார்க் உச்சிமாநாட்டின் போது புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவிற்குமிடையில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த இந்திய அரசு முயற்சித்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தன இதன்போது தீர்வுத்திட்டம் ஒன்றினை முன்வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். கிழக்கு மாகாணத்தை மூன்று துண்டுகளாகப் பிரிக்கும் திட்டத்தை ஜே.ஆர். முன்வைத்தார். தாயகத்தைக் கூறுபோடும் திட்டத்தை பிரபாகரன் ஏற்க மறுத்தார். இந்தியாவின் முயற்சி தோல்வியடைந்தது. பெங்களூருக்குப் பிரபாகரனை அழைத்துச் சென்ற போதும் இந்திய முயற்சி கைகூடவில்லை.

புலிகள் மீதான இந்தியாவின் கோபம் உச்சத்திற்குச் சென்றது. புலிகளைப் பணியவைப்பதற்காக அவர்களின் தொலைத்தொடர்புக் கருவிகள் அனைத்தையும் பறித்தது. இதனை எதிர்த்து பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். தமிழகம் கொந்தளித்தது. இறுதியில் தொலைத்தொடர்புக் கருவிகளை பிரபாகரனின் காலடியில் வைத்த பின்னரே பிரபாகரன் உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

இதன்பின்னர் இந்தியாவில் தங்கி நிற்பது போராட்டத்திற்கு இடைஞ்சலைக் கொடுக்கும் எனக் கருதி பிரபாகரன் தாயகம் திரும்பினார். இது புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் இந்தியாவின் செயல்களுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. மறுபக்கத்தில் இந்தச் சூழலைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தை அழிக்கும் வகையில் சிறீலங்கா அரசு

ஒப்பரேஷன் லிபரேஷன் என்ற பெயரில் வடமராட்சித் தாக்குதலை நடத்தியது. தன்னுடைய பிடி நழுவிப்போகும் என்பதற்காக இந்தியா இத்தாக்குதலை விரும்பவில்லை.

சிறீலங்கா அரசினைப் பணியவைப்பதற்காக 'உணவு' இராஜதந்திரத்தை இந்தியா கையிலெடுத்தது. உணவுப் பொருட்களைக் கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்ப முயற்சிக்க, சிறீலங்கா கடற்படை கடலில் அதனைத் தடுத்தது. இந்தியா, விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களை யாழ்ப்பாணத்தில் போட்டது. இதன் மூலம் தெளிவான சைகை சிறீலங்கா அரசிற்குக் காட்டப்பட்டது. 'இந்தியப் படையெடுப்பைச் சந்திக்க வேண்டி வரும்' என்பதே அச்சைகை. ஜே.ஆர். உடனடியாகவே பணிந்தார்.

இப்பணிவைப் பயன்படுத்தி விடுதலை இயக்கங்களை விடுத்து தானே சிறீலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்ய இந்திய அரசு தயாரானது. எப்படியாவது ஒப்பந்தம் செய்து இந்திய நலன்களுக்கு எதிரான சக்திகளை இலங்கையிலிருந்து கலைப்பதே அதன் நோக்கம். இலங்கை - இந்திய ஒப்பந்த வரைவு தயாரிக்கப்பட்டது. இதற்குப் புலிகளைச் சம்மதிக்க வைப்பது தான் இந்தியாவிற்கு இருந்த மிகப் பெரிய சவால். ஒப்பந்தம் பற்றி எதுவும் கூறாமலே ராஜீவ் காந்தி தீர்வுத்திட்டம் பற்றிப் பிரபாகரனுடன் பேச விரும்புகின்றார் எனக் கூறப்பட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து புதுடில்லிக்கு பிரபாகரன் 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அசோக் விடுதியில் பிரபாகரனும் அவரது குழுவினரும் சிறைவைக்கப்பட்டனர். அவரது வெளித்தொடர்பு உட்பட தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்சிற் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கான நகலை பிரபாகரன் முன் வைத்தார். ஒப்பந்த நகல் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வை சிபாரிசு செய்தது. வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படவில்லை. மாகாண சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் பற்றி தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுதக் களைவு ஏற்பாடுகள் ஏற்றதாக இருக்கவில்லை. இதனால் "தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்க முடியாத இந்த ஒப்பந்தத்தை ஏற்க முடியாது" எனப் பிரபாகரன் கூறினார்.

"ஏற்காவிட்டால் உங்களை இங்கு தடுப்புக்காவலில் வைப்போம்" என டிக்சிற் மிரட்டினார். "விரும்பினால் தடுப்புக்காவலில் வையுங்கள்; நாங்கள் ஏற்க மாட்டோம்" எனக் கூறினார் பிரபாகரன். கோபம் கொப்பளிக்க டிக்சிற் தனது சுங்கானைப் பிரபாகரனுக்கு காட்டியவாறு "இந்தச் சுங்கானை நான் பற்றவைத்துப் புகைத்து முடிப்பதற்குள் இந்தியப் படைகள் உங்கள் படைகளைத் துவம்சம் செய்துவிடும்" என்றார். பிரபாகரன் ஏளனச் சிரிப்புடன் "முடிந்ததைச் செய்து பாருங்கள்" என்றார். கொதிப்படைந்த டிக்சிற் "மிஸ்டர் பிரபாகரன், இத்துடன் நான்காவது தடவையாக இந்தியாவை ஏமாற்றியுள்ளீர்கள்" என்றார். அதற்குப் பிரபாகரன் "அப்படியானால் நான்கு தடவைகள் இந்தியாவிடமிருந்து எமது மக்களைக் காப்பாற்றியிருக்கிறேன்" என்றார். டிக்சிற் ஆத்திரத்துடன் எழுந்து வெளியே சென்றுவிட்டார்.

இந்தியப் படைகள் அவமானத்துடன் இலங்கையை விட்டு வெளியேறிய போது கவிஞர் காசி ஆனந்தன் "டிக்சிற் சுங்கானில் இன்னமும் புகைத்து முடிக்கவில்லை" என நக்கலாகக் கூறியிருந்தார்.

பிரபாகரனை மிரட்டிப் பணியவைக்க முடியாது என அறிந்த இந்திய வெளிவிவகார அதிகாரிகளான எம்.கே. நாராயணன், சகாதேவ் பூரி போன்றவர்கள் மென்மையான முறையைக் கையாள முயற்சித்தனர். அதற்கும் பிரபாகரன் இடம் கொடுக்கவில்லை. அடுத்த முயற்சியாக எம்.ஜி.ஆர். மூலம் பிரபாகரனை இணங்கச் செய்வதற்காக அவரை அழைத்து வந்தனர். பிரபாகரன் மிக விரிவாக ஒப்பந்தக் குறைபாடுகளை எம்.ஜி.ஆருக்கு விளக்கினார். எம்.ஜி.ஆர். அதனை ஏற்றுக்கொண்டு "உங்கள் நிலைப்பாட்டில் நீங்கள் உறுதியாக இருங்கள்; நான் உங்களோடு இருப்பேன்" எனக் கூறிவிட்டுச் சென்றார்.

இறுதியில் ஒப்பந்தத் தினத்திற்கு முதல்நாள் ஆடி 28 ஆம் திகதி நள்ளிரவு ராஜீவ் காந்தியைச் சந்திக்க பிரபாகரனை அழைத்துச் சென்றனர். ராஜீவிடம் ஒப்பந்தக் குறைபாடுகளை விவரமாக முன்வைக்கும் படி பாலசிங்கத்தை வேண்டினார் பிரபாகரன். இது பற்றி பாலசிங்கம் பின்வருமாறு கூறுகின்றார்:

"முதலில் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புப் பற்றி மிகச் சுருக்கமான கண்டன ஆய்வை முன்வைத்தேன். மிகவும் இறுக்கமான, நெகிழ்த்த முடியாத விதிகளைக் கொண்ட அரசியல் யாப்பு பெரும்பான்மையினரின் நலன்களைப் பேணும் வகையில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் யாப்பின் கீழ், மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் மத்தியில் அர்த்தபூர்வமான முறையில் அதிகாரப் பகிர்வைச் செய்வது இயலாத காரியம் என விளக்கினேன்."

"பரந்த நிறைவேற்று அதிகாரங்களையுடைய ஜனாதிபதியை அரச அதிபராகக் கொண்ட ஓர் இறுக்கமான ஒற்றையாட்சி அரசை சிறீலங்காவின்

அரசியல் யாப்பு உருவாக்கம் செய்துள்ளது. இந்த அரசியலமைப்பில் அரச நிர்வாக அதிகாரங்கள் அனைத்துமே மத்தியில் குவிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியான ஒற்றையாட்சி யாப்பை இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிபந்தனையின்றி முழுமையாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாக, நியாயபூர்வமாக அதிகாரப் பகிர்வு செய்யும் வகையில் அரசியல் கட்டமைப்பில் அடிப்படை மாற்றம் செய்வது சாத்தியமற்றது எனச் சுட்டிக்காட்டினேன்."



கோபாலசாமி பார்த்தசாரதி
Image Source - en.wikipedia.org

"இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட்ட மாகாண சபையின் அதிகாரங்களும், செயற்பாடுகளும், நிர்வாகத் துறைகளும் தெளிவான முறையில் வரையறுக்கப்படவில்லை. 'டிசம்பர் 19' தீர்வு யோசனைகளின் அடிப்படையில் இந்த மாகாண சபையை மேலும் திருத்தியமைத்து மேம்பாடு செய்யலாமென ஒப்பந்தத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த 'டிசம்பர் 19' தீர்வு யோசனைகளில் பல குறைபாடுகள் உள்ளதெனச் சுட்டிக்காட்டி எமது இயக்கம் ஏற்கனவே அதனை நிராகரித்துள்ளது என்பதையும் பாரதப் பிரதமருக்கு எடுத்துரைத்தேன்."

"தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தமட்டில் தமிழரின் நில உரிமை மிகவும் முக்கியமானது. இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தொடர்ச்சியான நிலப்பரப்பில் பெரும்பான்மையான தமிழ் மக்களும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலம் அவர்களது சொந்த நிலம்; அவர்களது பாரம்பரியத் தாயக நிலம். இந்தத் தாயக நிலத்தைப் பிரிக்கும் எந்தத் திட்டத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதையும் ராஜீவ் காந்தியிடம் எடுத்துரைத்தேன்."

"வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்துவமான நிர்வாகப் பிரதேசமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டிருப்பது ஓர் ஆக்கபூர்வமான சாதனை. ஆயினும், இந்த இணைப்புத் தற்காலிகமானது. இதன் நிரந்தர இணைப்பு பொதுசனக் கருத்துக் கணிப்புக்கு (வாக்கெடுப்புக்கு) விடப்பட்டிருப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில், அந்த வாக்கெடுப்பில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இணைப்பை எதிர்த்து வாக்களித்தால், வடக்கு - கிழக்கு நிரந்தரமாகப் பிளவுபடுவதுடன் தமிழர் தாயகம் காலப்போக்கில் சிதைந்துவிடும் என விளக்கினேன்."

"பொறுமையுடன் மௌனமாக எனது கருத்துகளைக் கேட்டுக்கொண்டிருந்த பிரதமர் அவ்வப்போது குறிப்புகளை எடுத்தார்."

"மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரப் பரவலாக்கம் மிகவும் வரையறுக்கப்பட்டது; அது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் விளக்கினேன். மேலும், வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிடும் அதிகாரம் இலங்கையின் அரச அதிபர் ஜெயவர்த்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் ஒரு சிங்கள இனவாதி; தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவார் என நாம் நம்பவில்லை என்று கூறினார் பிரபாகரன்."

"இறுதியாக, இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 72 மணி நேரத்திற்குள் எமது விடுதலை இயக்கம் சகல ஆயுதங்களையும் ஒப்படைக்க வேண்டுமென விதிப்பது அநீதியானது. எத்தனையோ ஆண்டுகளாக இரத்தம் சிந்திப் போராடி, உயிர்களைத் தியாகம் செய்து பெற்ற ஆயுதங்களை நான்கு நாட்களுக்குள் ஒப்படைக்குமாறு ஒப்பந்தம் வற்புறுத்துகிறது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முன்பாகவும், தமிழ் மக்களின் பாதுகாப்புக்குத் தகுந்த உத்தரவாதங்கள் பெறுவதற்கு முன்னதாகவும், எமது மக்களின் பாதுகாப்புக் கவசமாக விளங்கும் ஆயுதங்களை கையளிக்குமாறு வற்புறுத்துவது எவ்வகையிலும் நியாயமாகாது என்றார் பிரபாகரன்."

"அதற்கு ராஜீவ் காந்தி, மாகாண சபைத் திட்டம் தற்காலிகமானது; அதன் குறைபாடுகளைப் பின்னர் நிவர்த்தி செய்ய முயற்சிப்பேன். வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்படாது; அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன் என்று கூறினார்."

"ஆனால், இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன்களைப் பேணவில்லை; மாறாக, தமிழ் மக்களின் நலன்களைப் பாதிக்கின்றது. ஆகவே, இந்த உடன்படிக்கையை ஏற்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறினார் பிரபாகரன். அவரின்

உறுதியைப் புரிந்துகொண்ட ராஜீவ் காந்தி, ஒப்பந்தத்தை ஏற்க வேண்டாம்; ஆனால் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருங்கள் எனக் கேட்டார்."

"மாகாண சபைத் திட்டம் உடனடியாக அமலுக்கு வருவது சாத்தியமற்றது. அந்த இடைக்காலத்தில் இடைக்கால அரசை உருவாக்கலாம். அதில் உங்கள் இயக்கம் பிரதான பாத்திரத்தை வகிக்கலாம். இந்த விடயத்தில் உங்களுடன் இரகசிய உடன்பாடு செய்யவும் தயாராக இருக்கிறேன் என்றும் கூறினார் ராஜீவ் காந்தி." இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் புலிகளுக்கு பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. சகல தமிழ் இயக்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என ராஜீவ் வேண்டினார். பிரபாகரன் அதனை ஏற்கவில்லை. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈரோஸ் அமைப்பிற்கும் குறைந்த அளவில் பிரதிநிதித்துவம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் என்றும், தமிழ்ப் பகுதிகளில் சிங்கள அரசாங்கம் புதிய காவல் நிலையங்களைத் திறக்கக்கூடாது என்றும் பிரபாகரன் கேட்டுக்கொண்டார். ராஜீவ் அதற்கும் இணக்கம் தெரிவித்தார்.

ஆயுதக் கையளிப்புத் தொடர்பாக, "அனைத்து ஆயுதங்களையும் நீங்கள் கையளிக்கத் தேவையில்லை. உங்களது படையணியையும் கலைக்கத் தேவையில்லை. நல்லெண்ணச் சைகையாக சிறுதொகை ஆயுதங்களைக் கையளித்தால் போதும்" என்று ராஜீவ் காந்தி குறிப்பிட்டார். அருகில் இருந்த பண்ருட்டி இராமச்சந்திரன், "இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பழுதடைந்த ஆயுதங்களைக் கையளித்தால் போதும்" என்றார். அதற்குப் பிரபாகரன், "இந்தியாவிடமிருந்து பெற்ற ஆயுதங்கள் எல்லாம் பழுதடைந்தவையே தான்" எனக் கிண்டலாகப் பதிலளித்தார்.

அதிகாலை இரண்டு மணிக்கு ராஜீவ் காந்தியுடனான சந்திப்பு முடிந்தது. சந்திப்பு முடியும் தறுவாயில், "பிரதமர் கூறிய வாக்குறுதிகளை எழுத்து வடிவில் பதிவு செய்து, இரு தலைவர்களும் கைச்சாத்திட்டால் என்ன?" என பாலசிங்கம் பண்ருட்டி இராமச்சந்திரனிடம் கேட்டார். அதற்கு ராஜீவ் காந்தி, "நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. வாக்குறுதிகளை நான் கட்டாயம் நிறைவேற்றுவேன். இது எழுதப்படாத ஒப்பந்தமாக இருக்கட்டும்" என்றார். பிரபாகரனை உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்கு ஒழுங்கு செய்வதாகவும் ராஜீவ் காந்தி உறுதியளித்தார்.

சந்திப்பு முடிவடையும் போது அதிகாலை 02 மணி ஆகியிருந்தது. ராஜீவ் காந்தி உற்சாகத்துடனேயே இருந்தார். அடுத்த நாள் அதிகாலை 09 மணிக்கு புதுடில்லியிலிருந்து அவர் கொழும்பு செல்ல வேண்டியிருந்தது.

பிற்பகல் 03 மணிக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட ஏற்பாடாகியிருந்தது. விடுதிக்குத் திரும்பிய பின், "இரகசிய ஒப்பந்தமும் வாக்குறுதிகளும் நிறைவேறப்போவதில்லை; இதெல்லாம் அரசியல் ஏமாற்று வித்தை" எனப் பிரபாகரன் கூறினார். அடுத்த நாள், 1987 ஆம் ஆண்டு ஆடி 29 ஆம் திகதி, கொழும்பில் வைத்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை அரசு சார்பில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், இந்திய அரசு சார்பில் ராஜீவ் காந்தியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பிரதமர் ரணசிங்க பிரேமதாச ஒப்பந்தத்தை எதிர்த்தார். கொழும்பில் போராட்டங்களும் இடம்பெற்றன. ஒப்பந்தம் நிறைவடைந்து படையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கடற்படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியின் பின்பகுதியால் ராஜீவ் காந்தியைத் தாக்கினார். உடனடியாகச் செயற்பட்ட பாதுகாவலர்கள் அவரைப் பாதுகாப்பாக புதுடில்லிக்கு அழைத்துச் சென்றனர்.

இலங்கை இன முரண்பாட்டில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் தமிழர்களும் சிங்களவர்களுமே; அவ்விரு தரப்பினரின் தலைவர்களே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்க வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்தியா அதனை மீறி தானே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இதன் மூலம் தமிழர்களின் அரசியல் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டது எனப் பலர் கருதினர். எனினும், அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் விடயத்திலும் இந்தியா முறையாகச் செயற்படவில்லை என்ற விமர்சனமும் எழுந்தது.

ஒப்பந்தத்தின் முக்கிய பிரிவுகளுக்கு அப்பால், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய நலன்கள் தொடர்பான விடயங்கள், இணைப்புக் கடிதங்கள் மூலம் சேர்க்கப்பட்டன. இந்தியாவிற்கு எதிரான சக்திகளுக்கு இலங்கைத் தீவில் இடமளிக்கப்படமாட்டாது என உத்தரவாதமும் வழங்கப்பட்டது. இருந்தபோதிலும், இவ்விலக்கிலும் இந்தியா எதிர்பார்த்தளவு வெற்றி பெறவில்லை என மதிப்பிடப்பட்டது. மொத்தத்தில், இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்திய இராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய சவாலாகவும், பலர் கணிப்பில் ஒரு முக்கிய தோல்வியாகவும் அமைந்தது.

இலங்கைத் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடு என்றும் சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடு என்றும் வழங்கப்பட்டு வரும் வழிபாடுகளுடன் தொடர்புடைய சடங்குசார் நிகழ்த்து கலைகளில் ஒன்றாகவே 'கொம்புமுறி' விளையாட்டு இடம்பெற்று வருகின்றது. இக்கொம்புமுறி விளையாட்டு சமயம், கலை ஆகிய இரு துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இது சிங்களவர்களால் 'அங்கெலிய' என்று அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வு ஆடி மாதத்தில் அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் நிகழ்த்தப்படுவது வழக்கம். தமிழர்களின் கொம்புமுறிக்கும் சிங்களவர்களின் அங்கெலியவிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பினும் அவை தமக்கிடையே தனித்துவமான பண்புகளையும் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் கண்ணகி வழிபாட்டிற்கும் அதனுடன் தொடர்புடைய நிகழ்த்து கலையான கொம்புமுறி விளையாட்டுக்கும் இடையிலான தொடர்பினையும், அதன் சமுதாய மானிடவியல் பின்புலத்தினையும், கொம்புமுறி விளையாட்டின் சடங்குசார் நிகழ்த்துகலை முறைமையினையும், தமிழ் – சிங்கள கொம்புமுறி விளையாட்டுகளுக்கு இடையிலான ஒற்றுமை – வேற்றுமைகளையும் ஆராய்வதாக 'கொம்புமுறி விளையாட்டு: இலங்கையில் கண்ணகி – பத்தினி வழிபாட்டின் எச்சம்' எனும் இத்தொடர் இடம்பெறுகின்றது.

# இலங்கையில் கண்ணகி வழிபாடு புகுந்த முறை

**கிருபாகரன் கவிதாஞ்சன்**



கிருபாகரன் கவிதாஞ்சன் மட்டக்களப்பு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தையும் அதே பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர் ஆவார்.
தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வாளராக தொடர்ந்தும் தனது கல்விப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். நாட்டுப்புறவியல், நாடகமும் அரங்கியிலும் ஆகிய துறைகளிலும் பல ஆக்கங்களைத் தற்காலத்தில் எழுதி வருகின்றார். என்பதோடு இவர் சிறந்த மேடை நடிகரும் ஆவார்.

சிலப்பதிகாரம் என்பது தமிழர் பாரம்பரியத்தை அடையாளப்படுத்துகின்ற ஓர் இலக்கியமாகும். சிலம்பில் கண்ணகி ஒரு வழிபாட்டுத் தெய்வமுமாகிய நிலையில் இலக்கிய வாழ்விற்கான தளமும் வாய்ப்பாகின்றது. தமிழ்ச் சூழலில் சிலப்பதிகாரம் என்ற சொல்லாடல் மூன்று நிலைகளில் நிலைபெற்று நிற்கின்றது. முதலாவது அதனுடைய காவியத்தன்மை, இரண்டாவது அதனுடைய பொதுமக்கள் மயப்பாடு, மூன்றாவது அது சடங்காசாரத்துடன் இணைந்த நிலை. இந்த மூன்று நிலைகளையும் தாண்டி இன்னொரு தளமும் அதற்குண்டு. அது தமிழர்கள், மலையாளிகள், சிங்களவர்கள் ஆகிய இனங்களிடையேயும் பரவலாகச் செல்வாக்குப் பெற்றுள்ளது.[1] ஆகையினாலேதான் வேறு எந்த இலக்கியப் பிரதிக்குமில்லாத பன்முகத்தன்மை சிலப்பதிகாரக் கதைமரபிற்கு உண்டு.

தாய்த்தெய்வ வழிபாட்டுமுறையானது பண்டைக்காலம் தொட்டு எல்லாச் சமூகங்களிலும் இருந்து வந்திருக்கிறது. இதனாலேதான் பெண்தெய்வங்களும் அத்தெய்வங்களின் வழிபாட்டு முறைகளும் மிகக்கூடுதலான இடத்தை பண்டைக்கால மக்களிடையே பெற்றுக்கொண்டுள்ளன. பெண்ணைத் தெய்வமாகக் கொண்டு வணங்கும் முறை திராவிடரிடையே ஆழமாக வேரூன்றுவதற்கு தாய்த்தெய்வ வழிபாட்டு முறையே காரணமாயிருந்திருக்க வேண்டும். திராவிடப் பண்பாடும் ஆரியப் பண்பாடும் கலந்து உருவான இந்து சமயத்திலே தாய்த்தெய்வ வழிபாடான சக்தி வழிபாடு என்பது, சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. சக்தியின் அம்சமாகவே பெண் தெய்வங்கள் அனைத்தும் தோற்றம் பெறுகின்றன. கொற்றவை, மாரி, ஐயை போன்ற பெண் தெய்வங்களனைத்தும் சக்தியின் அவதாரமாகவே கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறான நிலையிலேதான் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாம் கண்ணகிக்கும் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும்.

இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றிற்குக் காவிய வடிவம் கொடுப்பதற்கு முன்பே பண்டைக்கால மக்களிடையே இக் கண்ணகிக் கதை  மரபுகள் வழங்கி வந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் பல காணப்படுகின்றன. கண்ணகி கதைமரபின் மூலக்கூறுகள், சங்க இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன. நற்றிணைப் பாடலொன்றும்[2] புறநானூற்றுப் பாடல்களும்[3] பதிற்றுப்பத்தின் பதிகமும்[4] இக்கருப்பொருளை விளக்கி நிற்கின்றன. வடமொழியில் ஒருமை மகளிர் எனப்பட்ட கற்புடைப்பெண்டிர் பலர் உளர். தமிழ் மொழியில் அத்தகைய ஆற்றல் படைத்த ஒருவளே கண்ணகி ஆவாள்.[5]

தமிழகத்தில் சிலப்பதிகாரக் காலத்திலிருந்து கொற்றவை கண்ணகியாக வணங்கப்பட்டிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையிலே கொற்றவை, காளி என்னும் தெய்வங்களோடு கண்ணகியின் தோற்றம் ஒப்பீடு செய்யப்பட்டிருப்பது இதற்குச் சான்றாக அமைகின்றது. எனவே சிலப்பதிகாரக் காலத்தில் இருந்து கொற்றவை, காளி ஆகிய தெய்வங்களின் அம்சங்கள் கண்ணகியோடு சேர்க்கப்பட்டும் கண்ணகி வழிபாடு தோற்றம் பெற்றிருக்கலாம்.[6]



**கண்ணகை அம்மன்**

Image Source : facebook.com/cheddipalayamkannaki

தமிழ் மக்களிடையே மிகப்பழங்காலந் தொட்டுப் பத்தினித்தெய்வ வழிபாடானது நிலவி வருகின்றது. கண்ணகி வழிபாடு பண்டைய தமிழகத்தையும் ஈழத்தையும் இணைக்கும் வழிபாடு மட்டுமன்றிச் சிங்கள - தமிழ்க் கலாசாரங்களை ஒன்று சேர்த்து நிற்கும் வழிபாடும் இஃதென்றால் மிகையாகாது.[7] சோழ மண்டலத்துக் கண்ணகி பாண்டிய மண்டலத்தில் வீரக் கற்பரசியாகி, சேர மண்டலத்திலே பத்தினித் தெய்வப் படிமம் சார்ந்து, ஈழ மண்டலத்துச் சிங்களவரிடைப் பத்தினி தெய்யோ எனப் பெயர்பெற்று, மட்டக்களப்புத் தமிழகத்திலே கண்ணகை அம்மன் ஆகி விளங்குகின்றாள்.[8]

கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி ஆராய்வதற்கான இலக்கிய ஆதாரங்களுள் ஐம்பெருங் காப்பியங்களுலொன்றான சிலப்பதிகாரமும் ஒன்றாக விளங்குகின்றது. சிலப்பதிகார இலக்கியத்தின் வழி இரு நிலைகளில் கண்ணகி வழிபாடு இலங்கைக்குப் பரவிய செய்தி குறிப்பிடப்படுகின்றது.[9] சேரன் செங்குட்டுவன் சேரநாட்டில் கண்ணகிக்கு விழாவெடுத்த போது கடல்சூழ் இலங்கைக் கயபாகு மன்னன் கலந்து கொண்டதாகவும் அவனால் கண்ணகி வழிபாடு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் சிலப்பதிகாரத்தின் உரைபெறு கட்டுரையிலும், வரந்தரு காதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தின் உரைபெறு கட்டுரை,

*"அது கேட்டுக் கடல் சூழ் இலங்கைக் கயவாகுவென்பான் நங்கைக்கு நாட்பலி*

*பீடிகைக் கோட்டமுந் துறந்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென*

*ஆடித்திங் கலகவயினாங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப*

*மழை வீற்றிருந்து வளம்பலபெருகிப் பிழையா விளையு நாடாயிற்று.[10]"*

எனக் குறிப்பிடுகின்றது. இது போலவே சிலப்பதிகாரத்தின் வரந்தருகாதை,

*"வலமுறை மும்முறை வந்தனள் வணங்கி*

*உலக மன்னவன் நின்றோன் முன்னர்*

*அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்*

*பெருஞ் சிறை கோட்டம் பிரிந்த மன்னரும்*

*குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்*

*கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்*

*எந்நாட்டாங்கண் இமய வரம்பின்*

*நன்னாட் செய்த நாளணி வேள்வியில்.........[11]"*

சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் கண்ணகி சிலையைப் பிரதிஷ்டை செய்தபோது, இலங்கை மன்னன் கயபாகுவும் பிரசன்னமாகியிருந்தான் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இது போன்றே பாண்டியன் வெற்றிவேற் செழியனும் சோழன் பெருங்கிள்ளியும் கொங்கிளக்கோசரும் மாளுவவேந்தரும் பங்கேற்றுக்கொண்டு தத்தம் நாடுகளிற்கும் கண்ணகியை எழுந்தருளுமாறு வேண்டி நின்றனர் என்ற செய்தியும் கிடைக்கப்படுகிறது. கயபாகு மன்னன் சேர நாட்டிலிருந்து கண்ணகி வழிபாட்டினைக் கொண்டுவந்த நிகழ்வினைச் சிங்கள வரலாற்று நூல்களும் இலக்கிய நூல்களும் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, ராஜாவலிய, பூஜாவலிய முதலான வரலாற்று நூல்களும் கஜபாகதாவ, கோகிலசந்தேச, பரக்கும் பாசிரித்த முதலிய இலக்கிய நூல்களும் குறிப்பிடுகின்றன.[12]

ராஜாவலிய, கோகிலசந்தேச, சிங்கள இராஜரத்தினாகர, பரக்கும் பாசிரித்த போன்ற நூல்கள் சிலப்பதிகாரத்தினின்று சிறிது வேறுபட்ட கதையினைக் கூறுகின்றன. கயபாகு மன்னன் கண்ணகியின் காற்சிலம்புடன் பிற அணிகலன்களையும் நான்கு கோயில்களின் தெய்வங்களையும் ஆயுதச் சின்னங்களையும் வலகம்பாகு காலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட புனிதப் பாத்திரத்தினையும் பெற்றுக்கொண்டு இலங்கைக்குக் கொண்டு வந்து கண்ணகி வழிபாட்டினைத் தோற்றுவித்தான் எனக் கோகிலசந்தேச கூறுகின்றது. ராஜாவலிய, கயபாகு கண்ணகி சிலையினைக் கொண்டுவந்த போது 24,000 கைதிகளையும் கொண்டுவந்தானென்றும் அவர்களை அலுத்குரு, சாரசியபத்து, யட்டிநுவரை, தும்பறை, ஹேவாஹட்டை, பன்சியபத்து, எகொடதிக, மெகொடதிக என்னும் இடங்களிலே குடியமர்த்தினான் என்றும் செய்திகளைத் தருகின்றது. இவ்விடங்களில் இன்றும் கண்ணகி வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிங்கள ராஜரத்தினாகர (16 ஆம் நூற்றாண்டு) கஜபாகு சோழநாட்டை வென்று 12,000 சோழக்கைதிகளைச் சிறைப்பிடித்துக் கொண்டுவந்தமை, புத்ததாது சின்னத்தைக் கொண்டுவந்தமை ஆகிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது. கயவாகு சோழநாட்டிற்குச் சென்று 24,000 பேரைக் கொண்டு வந்த செய்தியைப் பரக்கும் பாசிரித்த (15 ஆம் நூற்றாண்டு) என்ற இன்னோர் சிங்கள நூலும் வர்ணிக்கிறது. சிங்கள கஜபாகதா (கயவாகு கதை) என்ற நூலில் 'மடு உபத்த' என்ற பத்தினியின் கிரியைகள் பாடப்படுகின்றன. அந்நூலில் பத்தினியின் வழிபாட்டை 'சேரமான் ராஜீ' (சேரமான் அரசன்) என்பவனே அறிமுகம் செய்தான் எனக் கூறுகின்றது. இந்தச் சேரமான் ராஜீ வேறு யாரும் அல்லன். அவன் சேரன் செங்குட்டுவனாகத்தான் இருக்க வேண்டுமென்பது தெளிவு.[13]

மேலும் திக்கவெவ என்னும் இடத்தில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுத்த கண்ணகி, கோவலன் சிலைகள் கயவாகு வேந்தனால் கொண்டுவரப்பட்டவையென ஹென்றி பாக்கர் அபிப்பிராயப்படுகின்றார்.[14]

மேற்குறிப்பிட்ட ஆதாரங்களின்படி இலங்கையில் கண்ணகி வழிபாடானது சேர அரசுடனான தொடர்பினாலேயே பரவியதென அறிய முடியும். ஆனால் கண்ணகி வழிபாடு சேர அரசுடனான தொடர்பின்றிப் பாண்டிய அரசுடனான தொடர்பினாலேயே ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் அறிஞர்கள் கூறுவர்.[15]

கண்ணகி வழிபாடானது கயபாகு மன்னன் காலத்தில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட முன்னரே, இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே பண்டைக்காலந்தொட்டு நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கின்றன. முன்னர் தமிழகமும் இலங்கையும் இணைந்த நிலப்பரப்பாக இருந்தன என்றும், பின்னர் கடல்கோளினால் இவை இரண்டு தனித்தனி நாடுகளாகப் பிரிந்தன என்றும் கருதப்படுகின்றன. இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாரிற்குமிடையே ஆழமற்ற கடற்சந்தி ஏறத்தாழ 32 கி.மீ தூரத்திலேயே அமைந்திருக்கின்றது. சிலப்பதிகாரத்தின் பின்வந்த காப்பியமான மணிமேகலையில் கடல்கோள் இடம்பெற்ற குறிப்பு உள்ளது. சங்கப்பாடல்களுள் ஈழத்துப் பூதன்தேவனார் என்ற இலங்கையைச் சேர்ந்த புலவரின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மகாவம்சத்திற்கூடச் சங்ககாலத்துடன் தொடர்புடைய பல கதைகள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடியும். உதாரணமாக எல்லாளனைப் பற்றி மகாவம்சம் தரும் செய்தி தமிழக மனுநீதிகண்ட சோழனின் கதையை ஒத்துக் காணப்படுகிறதைக் காணலாம். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்தது பற்றிக் கூறும் செய்தி தமிழகத்தில் வேரூன்றியிருந்த பெருங்கற்காலக் கலாசாரத்தின் அம்சமாகிய நடுகல் வழிபாட்டம்சத்தையே குறிக்கின்றது. ஈழத்திலும் பெருங்கற்காலக் கலாசாரத்தின் ஓர் அம்சமாக நடுகல் வழிபாட்டு முறை விளங்கியிருப்பதை தொல்லியற் சான்றுகள் உறுதி செய்கின்றன.

தமிழகத்தில் தோன்றிய கண்ணகி வழிபாடு இலங்கை - இந்திய அரசியல், கலாசார உறவு முறையினாலும், வணிக நடவடிக்கைகளினாலும் இலங்கையில் பரவியிருக்கலாம். இவ்வாறிருக்க கண்ணகி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டுவந்தவன் கயபாகு மன்னனே என்று சிலப்பதிகாரம், ராஜாவலிய, பூஜாவலிய, கோகிலசந்தேச, பரக்கும் பாசிரித்த போன்ற நூல்கள் கூறிநிற்க, மகாவம்சத்திலும் தீபவம்சத்திலும் கஜபாகு பற்றிய குறிப்பு இருந்தபோதும் தமிழகத்திலிருந்து கண்ணகி வழிபாட்டைக் கொண்டுவந்த செய்தி அவற்றில் சொல்லப்படவில்லை.[16] மகாவம்சம், தீபவம்சம் பேன்ற நூல்களில் இடம்பெறாத பல முக்கியச் சம்பவங்கள், குறிப்புகள் உண்மைக்குப் புறம்பானவை அல்ல என்பதைப் பேராசிரியர் உ. வில்லியம் கைகர் போன்ற வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். மேற்கூறிய பின்னணியில் நோக்குகின்ற போது ஈழத்தில் கண்ணகி வழிபாடு கயபாகு காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ புகுத்தப்பட்டிருக்கலாம் என்பது தெளிவாகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. வெல்லாவூர்க் கோபால், (2018), கண்ணகி வழிபாடு பார்வையும் பதிவும், பேராசிரியர் மகேஸ்வரனின் அணிந்துரை, பக்.11.
2. நற்றிணை: 216 ஆம் பாடல்.
3. புறநானூறு: 144,145 ஆம் பாடல்கள்.
4. பதிற்றுப்பத்து: ஐந்தாம்பத்தின் பதிகம்.
5. மு., இராகவஐயங்கார் (1959), கட்டுரை மணிகள், விஜயா பிறின்டஸ், மதுரை, பக்.48
6. எம்., சற்குணம் (1976), ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், திருக்கேதீச்சர குடமுழுக்கு விழா மலர், திருக்கேதீச்சரம், பக். 113.
7. க., சிற்றம்பலம் (1996), ஈழத்து இந்துசமய வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம், பக்.255.
8. வி.சீ, கந்தையா (1964), மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், பக்.153.
9. வ., மகேஸ்வரன் (2016), பெரியதும் சிறியதும், குமரன் அச்சகம், கொழும்பு, பக்.57.
10. சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம் உரைபெறு காதை.
11. சிலப்பதிகாரம், வரந்தருகாதை, 155-162.
12. இரா.வை, கனகரத்தினம் (2016), ஈழத்து நாட்டார் வழிபாடு, தமிழ்த்துறை வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம், பக்.3.
13. த., கனகரத்தினம் (1989) சிலப்பதிகாரமும் ஈழமும், ஏழாவது உலகத் தமிழாராட்சி மாநாடு கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள், மொரீசியஸ், பக்.223.
14. க., மகேஸ்வரலிங்கம் (1996), மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், தில்லை வெளியீடு, மகிழடித்தீவு, பக்.27.
15. *Anuradha Seneviratna* (2013), *Manifestation of Goddess Pattini in Sri Lanka Society*, சிலப்பதிகாரப் பண்பாட்டுக் கோலங்கள். இந்து சமய கலாசார அமைச்சு, கொழும்பு, பக்.92.
16. ச., நல்லலிங்கம் (2007), இளங்கோவின் பத்தினிதெய்வப் படைப்பு, அண்ணா பதிப்பகம், சென்னை, பக்.28.

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, 'மலையக வீதிப்பாடல்கள்' உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக 'மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்' எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.

# 'ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் செயற்பாட்டாளர்' ஏ.எம். இராமையாவும், 'தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயற்பாட்டாளர்' எம்.ஏ. இராகவனும்

அருணாசலம் லெட்சுமணன்



'ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்' அதிபரான அருணாசலம் லெட்சுமணன், 'நிகர்' சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

## ஏ.எம். இராமையா அவர்களின் வீதிப்பாடல்கள்

பல்வேறு தளங்களில் மலையக வீதிப்பாடல்கள் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. கோவிந்தசாமி தேவரின் தோழராக இருந்து பாடல்களை வழங்கியவர்களில் முக்கியத்துவம் பெறுபவராக ஏ.எம். இராமையா தேவரை அடையாளம் காண முடிகிறது. எட்டியாந்தோட்டையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவராகவே கோவிந்தசாமி அடையாளங் காணப்பட்டிருந்தார். ஆனால் ஏ.எம். இராமையா தேவரின் வாழிடம் தொடர்பில் உறுதியான முடிவை எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. அவரும் எட்டியாந்தோட்டையில் வாழ்ந்திருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. அதேவேளை, நாவலப்பிட்டி தளத்திலிருந்து இராமையா தேவரின் செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கலாம் என்பதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன. கோவிந்தசாமி தேவருடன் இணைந்த நிலையில் அவர் அதிகமான பாடல்களை எழுதியுள்ளார். கோவிந்தசாமி தேவரைப் போலவே, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மேடைகளே அவருக்கான பாடலிசைக்கும் களங்களாக அமைந்துள்ளன.

கோவிந்தசாமி தேவருக்கே உரிய பாணியில் நீண்ட வரிகளைக் கொண்ட பாடல்களை இயற்றுவதில் இராமையா தேவரும் ஆர்வம் காட்டியுள்ளார். அவர் பாடிய பாடல்களை அடையாளப்படுத்தும் வகையில், அவரது பாடல்களில் அவரைக் குறிப்பிட்டும் வரிகள் இடம்பெறுகின்றன. “இன்னும் எவ்வளவோ இடைஞ்சல் இருக்குது.. ஏ.எம். இராமையா மனதில் இருப்பதைச் சொல்லவும் மனமில்லையே..” என்று தனது வேதனையுணர்வையும் பதிவு செய்துள்ளார். அதேபோல் “ஜெயமோங்கும் பாண்டிநாடு சீலன் ராமையா தமிழ்”, “பன்னுதமிழ் வாணனெனும் ராமையா தமிழ்” போன்ற வரிகளின் மூலம் தன்னைக் குறிப்பிட்டு அடையாளப்படுத்துவதையும் காண முடிகிறது. 1955 ஆம் ஆண்டு வீ.எஸ். கோவிந்தசாமி தேவருடன் இணைந்து வெளியிடப்பட்ட ‘பிரஜா உரிமைக் குரல்’ என்ற பாடல் தொகுப்பு நூலில் இராமையா தேவரின் பங்களிப்பும் கவனத்தைப் பெறுகிறது. அந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள “காலையிலே எழுந்திருச்சி” எனும் பாடலின் மெட்டில் அமைந்த பாடல், மூன்று வரிசைக் கட்டமைப்பில் நாற்பது அடிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்களின் வரவை சித்தரிக்கும் முனைப்பில் மேற்குறித்த பாடலினுள் அமைந்த வரிகள் பின்வருமாறு அமைகிறது.

*“பாட்டனோடு முப்பாட்டன்*
*கூட்டமாக நாங்கள் வந்து*
*காட்டுமலைக் காடுகளை வெட்டினோம் - பெரிய*
*காட்டை வெட்டித் தேயிலை உண்டாக்கினோம்*
*பாரத உலகமென்னும் பாண்டியர்கள் நாட்டினிலே*
*தீராத அச்சுதாவின் பஞ்சமே - மக்கள்*
*தேடி வந்தோம் லங்கை நகர் தஞ்சமே”*

என புலப்பெயர்வுக்கான நிர்ப்பந்தத்தையும் எடுத்தியம்புவதைக் காண முடிகிறது. தொடர்ந்து ஆட்கட்டும் கங்காணிகளின் போக்கினையும் பதிவு செய்துள்ளதை அவதானிக்கலாம்.

*“சங்கரா சம்போவென்று சங்கூதி தப்படித்து*
*பொங்கலிட்டு பலிகொடுக்க எங்களை*
*கங்காணி கூட்டி வந்தார் லங்கையில்”*

புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்களின் பயணப்பாதை பெரும்பாலும் காட்டு வழியாகவே அமைந்திருந்தது. காடுகளில் கொடூர மிருகங்களின் நடமாட்டம் அதிகமாகவே இருக்கும். தாங்கள் பயணம் செய்கின்ற வேளையில் தப்பிசைத்தும், சங்கூதியும் அவ்வகை மிருகங்களை தங்கள் பயணப் பாதையில் இருந்து துரத்தும் நுட்பத்தைக் கையாண்டுள்ளார்கள். அவற்றை அடையாளப்படுத்தும் வகையில் மேற்குறித்த வரிகள் கவனம் பெறுகின்றன.

தீவிர வறுமை நிலைமையை எடுத்துரைக்கும் வகையில்,

*“ஆத்தாளும் உங்கப்பனுமே சோத்துக்குடி இல்லாமே*
*தூத்துக்குடிப் பாதை வழி கடவுளே - நாங்கள்*
*துன்பப்பட்டு வந்த முடா படகிலே...*
*புறப்பட்டு வரும் போது புயல்காற்று வீசினதால்*
*புரண்டோடுமே தலைகீழாய் போட்டிலே - எங்களை*
*போட்டடைத்தான் தட்டப்பாரை வாட்டிலே*
*சம்பாதிக்க கெட்டிக்கார கங்காணி*
*தட்டப்பாரை கேம்புக்குள்ளே ஆண்டவா - நாங்கள்*
*பட்ட பாட்டைக் கேட்டுக்கடா தாண்டவா”*

எனத் தொடரும் வரிகள் தொழிலாளர்கள் பட்ட துன்பத்தை எடுத்துரைப்பதாக அமைகின்றன.

“கம்பளி பத்து ரூபா - கருப்பு கம்பளி பன்னிரெண்டு ரூபா” எனக் கணக்கு எழுதி கங்காணிகள் தொழிலாளர்களிடமிருந்து கொள்ளையடிக்கும்

நடைமுறை இருந்ததாகக் கூறப்படுகிறது. உண்மையில் கம்பளி இயல்பாகவே கருப்பாக இருக்கும். இருந்தபோதிலும் மக்களை ஏமாற்றும் நோக்கில், அதன் வண்ணத்தைக் காரணம் காட்டி அதிகமாகக் கணக்கெழுதும் முறையும் காணப்பட்டது. இவ்வாறு கம்பளி தொடர்பான விடயத்தில் மட்டும் அல்ல, பொருட்கள் பகிர்ந்தளிப்பு, நிதி வசூல் போன்ற பல துறைகளிலும் இம்மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். அவ்வாறான ஒரு சம்பவத்தை இராமையா தேவரும் தனது பாடலில் பின்வருமாறு குறிப்பிடுவது அவதானத்திற்குரியதாகும். வேட்டிகள் என்றாலே பொதுவாக வெள்ளையாகத்தான் இருக்கும். வேட்டியின் விலையையும், வெள்ளை வேட்டியின் விலையையும் குறிப்பிட்டு ஏமாற்றும் செயற்பாட்டை கண்டிக்க விளையும் அவரது போக்கு கவனத்திற்குரியதாகும்.

*"வேஷ்டியெல்லாம் ரண்டு ரூபாய்*
*வெள்ளைவேட்டி மூன்று ரூபாய்*
*தாட்டிகமாய் கொழுந்தெடுத்தா பொம்பள உனக்கு*
*சாக்கு சாக்காய் பணங்குவியும்..."*

மலையகப் பெண்களின் அவல நிலையை 110 வரிகளில் பாடலாக எடுத்துரைக்கும் இராமையா தேவரின் முனைப்புக் கவனத்தைப் பெறுகிறது. அதிகாலை நித்திரையிலிருந்து எழும் தருணத்திலிருந்து தொடங்கி அவர்கள் ஆற்ற வேண்டிய அன்றாட வேலைகள் எத்தகைய பாரத்தையும் சுமையையும் கொண்டவை என்பதைப் பாடல் வரிகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. அதேவேளை, வீட்டுச் சூழலில் கணவன் மற்றும் குடும்ப அங்கத்தினருடன் தொடர்புடைய துன்பங்களையும் பாடல் வரிகள் பதிவு செய்ய முயல்கின்றன. இதனால், குடும்பத்திலும் தொழிலிடத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் இரட்டைச் சுமை வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது. தொழில்களத்தில் பெண்ணாக இருப்பதன் காரணமாக அவர்கள் அனுபவிக்க வேண்டிய அவஸ்தைகளும் ஏராளமாக இருப்பதை இந்தப் பாடல் சுட்டிக்காட்டுகிறது.

*"சில்லரைப்புலி சின்னக்கங்காணி விரட்டிடுவாரு*
*ஐயோ சீக்கிரமாய் பத்தாம் நம்பர் ஓடித்தீரணும்*
*சீலை மேலே படங்கு ஒன்றை சேர்த்துக்கட்டணும் - பெரிய*
*சணல் கயிற்றை அதுக்கு மேலே*
*இறுக்கிக்கட்டணும்....."*

எனத் தொடரும் வரிகள் தொழில்களத்தில் படும்பாட்டை எடுத்துரைப்பதாக அமைகின்றன. அத்துடன்,

*"ஒட்டுப் பிரஜா உரிமை இல்லை ஓடிப்போங்கடா நீங்கள்*
*உழைத்ததற்கு கூலி தந்தோம் நாட்டை விடுங்கடா..."*
*என்ற எதிர்த்தரப்பின் கோசத்தை எழுதும் இராமையா தேவர்,*
*"ஓட்டுரிமை இல்லையென்று சொல்ல வேணாங்க - நாங்கள்*
*ஓடிவிட்டால் லங்கையெல்லாம் காடாய்ப் போகுங்க*
*தென்னிலங்கை மண் மிதித்தோம் பொன்னாகிப் போச்சி - இன்று*
*தேறுதலே இல்லையெனறால் வீணான பேச்சு*
*பாட்டாளி மக்கள் படும்பாட்டைப் பாருங்க கொஞ்சம்*
*பகிர்ந்து பார்த்து உணர்ந்துகொண்டு உரிமை தாருங்க"*

என நாசூக்காக தனது வாதத்தை எடுத்துரைப்பதையும் காணலாம்.

இராமையா தேவரின் பாடல்கள் மிக அருமையாகக் கிடைக்கின்ற நிலையில், 'விபரீத போக்கு' எனும் தலைப்பிலான அவரது பாடல் வரிகள் கவனத்தை ஈர்க்கின்றன.

படுகொலைச் சிந்துப் பாடல்களை வழங்கிய ஜபார் ஜில்லியின் பாடல்களை நாம் அவதானித்திருக்கிறோம். குறிப்பிட்ட சம்பவங்களை மையமாகக் கொண்டு, அவற்றின் களச்சூழல் மற்றும் பின்னணியை நுணுக்கமாகப் புரிந்து கொண்டு பாடல்களை இயற்றுவதில் கைதேர்ந்தவராக ஜில் விளங்கினார். அவ்வாறான ஓர் அணுகுமுறையில், தோட்டங்களில் துரைமார்களின் அட்டகாசங்களை எடுத்துரைக்கும் பாடல்களை இராமையா தேவரும் இயற்றியுள்ளார். டம்மோரியா, பசறை, ஹோப்டன், ஹைபாரஸ்ட் போன்ற தோட்டங்களில் பொறுப்பில் இருந்த துரைமார்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை எடுத்துரைத்து, அவற்றைக் கண்டிக்கும் போக்கில் இராமையா தேவரின் வரிகள் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. தோட்டம் குறித்த அறிமுகம், தொழிலாளர்களுக்கு எதிரான துரைமார்களின் செயற்பாடுகள், தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அவதானத்தோடு இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அத்தோட்டத்தில், அரிசிப் பங்கீட்டில் ஏற்பட்ட முறையற்ற நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராட்டம் நடைபெற்றது. தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குப் பதிலாக துரைமார்களால் துப்பாக்கிப் பிரயோகம்

மேற்கொள்ளப்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக மற்ற தொழிலாளர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பொதுவாக மலையக வீதிப்பாடல்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் சௌமியமூர்த்தி தொண்டமானையும் விமர்சிக்கும் போக்கைக் கொண்டுள்ளன. ஆனால் இச்சம்பவத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் தொண்டமானின் செயற்பாடுகளை ஆதரிக்கும் வகையிலான குரலும் இப்பாடலில் இடம்பெறுவது கவனிக்கத்தக்கதாகும். இதனை வலியுறுத்தும் வகையில் பின்வரும் வரிகள் குறிப்பிடத்தக்கவை.

*"கூலி வேலை செய்யு மேழைத் தொழிலாளி*
*கொண்ட பெருங்கூட்டம் - தொண்டமான்*
*விண்டமொழி நாட்டம் .................."*
*"தோட்டத் துரைமார்களின் போக்கையுங் கண்டித்து*
*மோட்டாரில் விரைந்தார் - தொழிலாளர்*
*வாட்டமும் உணர்ந்தார் - சரியான*
*சாட்டையுங் கொடுத்தார் - தலைவர்*
*தொண்டமான் அஸீஸ் ராஜலிங்கமுடன்*
*பேட்டியுங் கொடுத்தார்...."*
*"எண்டிசையோர் புகழ் தொண்டமான் பொன்மொழி*
*இடி முழங்குது பார் - மூவர்ணக்*
*கொடி துலங்குது பார் - தொழிலாளர்*
*குறையகலுது பார்"*

இராமையா தேவரின் பாடல் உருவாக்கத்தில் கோவிந்தசாமி தேவரின் வகிபங்கு எவ்வாறு இருந்தது என்பது தொடர்பான மேலதிக ஆய்வு அவசியமாகிறது. மலையக வீதிப்பாடல்கள் குறித்துப் பேசப்படும் சூழலில், இராமையா தேவரைப் பற்றிய குறிப்புகள் பலராலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்துறையில் தவிர்க்க முடியாத ஆளுமையாகவே இராமையாவின் பங்களிப்பு வலியுறுத்தப்பட்டுக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை, கோவிந்தசாமி தேவரின் பாடல் பாடும் பாணியிலிருந்து வேறுபடும் சில தன்மைகளை இராமையா தேவரின் பாடல்களில் அவதானிக்க முடிகிறது. இயக்கச் செயற்பாட்டாளராகவும் சமூக அக்கறையாளர் எனும் நிலையிலும் அவர் ஆற்றிய பங்கேற்பு, மலையகச் சமூகத்தின் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்டதாக அமைந்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

### மஸ்கெலியா மண்ணின் மைந்தன் எம்.ஏ. இராகவனின் வீதிப்பாடல்கள்

மலையக அசைவியக்கத்தில் மஸ்கெலியா மண்ணின் வகிபங்கும் கணிசமான தடங்களைப் பதித்துள்ளது. இந்த மண்ணில் இருந்து பலரும் மலையகச் சமூக உருவாக்கத்திற்கு தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவ்வகையில் மலையக வீதிப்பாடல் துறையில் பங்களிப்பை வழங்கியவராக எம்.ஏ. இராகவன் விளங்குகிறார். எம்.ஏ. இராகவன் முழுநேர தொழிற்சங்கவாதியாக அறியப்படுகிறார். தேசிய தொழிலாளர் சங்கத்தின் தொடக்கத்திற்கு பங்களிப்பை வழங்கிய முன்னோடியாகவும் அவர் அறியப்படுகிறார். இத் தொழிற்சங்கத்தில் வி.கே. வெள்ளையனுடன் இவர் இணைந்து பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கது. பாடல் புனையும் ஆற்றல் கொண்ட ஆளுமையான எம்.ஏ. இராகவனின் பாடல்களும் இத்துறையில் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றுள்ளன எனலாம். ஏற்கனவே வெளியாகிய பாடல்களின் மெட்டுக்களிலேயே இவரும் பாடல்களை இயற்றியுள்ளார். அறுபதுகளில் தொடங்கிய இவரது செயற்பாடுகள் எழுபதுகளின் இறுதி வரை தொடர்ந்துள்ளன. எழுபதுகளிலேயே அவர் இயற்கை எய்தியதாகவும் அறிய முடிகிறது. தொழிலாளர்கள் மீதான கரிசனையுடன் இரண்டு தொகுதிகளாகப் பாடல்களை வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய இரண்டாம் பாகம் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அவரை முழுமையாக வெளிப்படுத்துவதில் சிக்கல் நிலை தோன்றுகிறது. இருந்த போதிலும், இத்தொகுதியின் பாடல்கள் வெளிப்படுத்தும் உட்கருத்துகள் ஊடாக அவரது உள்ளக்கிடக்கையை தெளிவாக உணர முடிகிறது. 'தொழிலாளர் இதய கீதம்' இரண்டாம் பாகம் தொகுதியில் முதலாவதாக அமைந்த பாடல் "ஆசையா கோபமா" என்ற பாடலின் மெட்டில் அமைந்துள்ளது.

*"தொழிலாளியே ஏனிந்த மயக்கம்*
*துயர் போக்கிட ஏனின்னும் தயக்கம்*
*தோழனே பாரிங்கே..... தோழனே பாரிங்கே...."*
*என்ற அறைகூவல் வரிகளோடு,*
*"உன் திறமையை நீ உணராமல்*
*தெளிவாகவே ஏதும் புரியாமல்*
*ஏய்க்கின்றார்...ஏய்க்கின்றார்..."*

என ஏமாறும் தன்மையைச் சாடுகிறார். விடிவு நோக்கி நகர வேண்டும் என்ற அவரது உள்ளார்ந்த நிலைப்பாட்டை உணர்த்துவதாக இப்பாடல் அமைகிறது.

தொழிலாளர் வர்க்கத்தின் விடிவை நோக்கிய நகர்வில் மே தினத்தைச் சார்ந்த முன்னெடுப்புகள் மிகுந்த கவனத்திற்குரியவையாக அமைகின்றன. உலகத் தொழிலாளர்களை ஒரே அணியில் ஒன்றிணைத்த வரலாற்றுத் திருப்பத்தை உணர்த்தும் இந்நிகழ்வு சிறப்புமிக்கதாகும். அவ்வகையில், இலங்கையில் பெரும் தொழிலாளர் படையாக விளங்கும் தோட்டத் தொழிலாளர்களை ஒன்றுபட்டுச் சிந்திக்கத் தூண்டும் மே தின அனுஷ்டிப்பு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது. மே தினத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அன்னாரின் பாடல் புனைவு பின்வருமாறு அமைகிறது.

*“துயர் கொண்ட தோழர்கள் துணிவென்ற பாதையில்*
*களம் கண்ட நாள் இந்த மேய் தினமே*
*செல்வச் சீமான்கள் நிறைந்த அந்த சிக்காக்கோ*
*தெருக்களில் நின்று*
*உரிமையைக் கோரியே போர்தொடுத்து*
*உழைப்பவர்கள் வாழ்விற்கு வழிகாட்டி*
*மறைந்த அத்தோழர்கள் தியாகத்தை போற்றியே*
*சிரம் தாழ்த்துவோம் இந்த மேய் நாளிலே”*

இப்பாடல் “மனமென்னும் மேடை மேலே” எனும் பாடலின் மெட்டைத் தழுவியதாக உள்ளது.

மலையக மக்கள் ஏமாற்றத்திற்கு மாத்திரமே தாம் உரித்தானவர்கள் என வரையறுத்துக் கொள்கிறார்கள். அந்நிலையில் இருந்து மீண்டெழ வேண்டிய அவசியத்தை உணர்த்தும் பொறுப்பில் பாடலாசிரியரால் இவ்வரிகள் புனையப்பட்டுள்ளன.

*“ஏய்க்கும் கூட்டமொன்று எக்காளம் போடுது*
*ஏமாற்றும் கூட்டமொன்று எப்போது மிருக்குது*
*வள்ளுவன் தந்த குரல் வையகம் தழைத்தோங்க*
*வழிவகை செய்ததடா தமிழா..*
*வண்டமிழ் மொழிகாத்து முல்லைக்குத்தேரீந்த*
*வள்ளல் பாரி நம்மவரே*
*மறக்க முடியாத சிலப்பதிகாரம் தந்த*
*இளங்கோவும் நம்மவரே*
*காணக் கிடைக்காத கருத்துக் குவியல்களை*
*வாரியிறைத்திட்ட கவிகளின் வரலாறு*
*தேடக் கிடைக்காத தேனினுமினிக்கின்ற*
*தீந்தமிழ் காவியங்கள் பலவுண்டு*
*வீரத்தில் பெயர் கொண்ட வேந்தர்கள் மூவரும்*
*சங்கம் வளர்த்த தமிழ் புலவர்கள் யாவரும்*
*வானமே இடிந்தாலும் மனம் சற்றுமசையாத*
*மறவரின் சரித்திரங்கள் பலவுண்டு”*

தமிழ் மொழியின் வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, எழுச்சியை ஏற்படுத்தும் இப்பாடலின் முனைப்பு மனங்கொள்ளத்தக்கதாக அமைகிறது.

மொழி மீதான பற்றுறுதி மிக்கவராகவும் எம்.ஏ. இராகவனை அடையாளம் காணலாம். தான் சார்ந்த மொழி மீதான பற்றுறுதியும், இனம் மீதான பிடிப்புணர்வும் அவசியம் என்பதை போதிக்கும் மனப்பாங்குடன் “வாழ்வது போனாலும் வறுமையே வந்தாலும்” என்ற மெட்டில் அமைந்த பின்வரும் பாடலும் கவனத்தை ஈர்க்கின்றதாக அமைகிறது.

*“தாழ்வுமே வந்தாலும் தலையது போனாலும்*
*தாய் மொழி மறவாதே தமிழா”*

அறுபதுகளில் வெளிவந்த பாடல்களில் “சரவணப் பொய்கையில் நீராடி” எனும் பாடல் மக்கள் மத்தியில் மிகுந்த புகழ் பெற்றதாக விளங்கியது. அப்பாடலின் மெட்டிலேயே தனது வரிகளையும் தொடர்புபடுத்திய இராகவன், இடதுசாரி உணர்வுடன் தொழிலாளர்களை ஒன்றிணைக்க முயல்கிறார்.

*“சமத்துவப் பாதையில் போராடி*
*புதுவாழ்வினைக் காண்போம் சோதரனே*
*துணைக்கரம் தந்தே துயர் போக்க சொந்த*
*சோதரன் சொல்லதனை உடன் கேட்போம்”*

அத்துடன், “துன்ப நிலை நாம் அடைவதற்குள் - சொந்த சோதரன் இடந்தனை நாடிச் செல்வோம்” என்ற அறைகூவலும் கவனத்தைப் பெறுகிறது.

தான் சார்ந்த அமைப்பின் வழியாகத் தனது மனவுணர்வுகளைப் பதிவு செய்யவும் இராகவன் முனைகின்றார். தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிறப்பையும் நோக்கத்தையும் பதிவுசெய்யும் பின்வரும் வரிகளும் குறிப்பிடத்தக்கதாகின்றன.

*“தேயிலை இரப்பரும் தென்னையும்*
*செழிப்புடன் வளர்ந்திட உழைத்திடும்*
*உழைப்பவர் வாழ்வுமே உயர்ந்திட உயர்த்துவோம்”*

அவ்வாறே இவ்வமைப்பின் கொடியைச் சிறப்பிக்கும் வரிகளும் கவனத்தைப் பெறுகின்றன.

*“வெண்மை காட்டிடும் தூய்மையை
பச்சை காட்டிடும் செழுமையை
சிவப்பு சூரியன் காட்டிடும் தியாகம்
உழைப்பு இரண்டையும்
வர்ண மூன்றைக் கொண்டதாய்
வளங்கள் பொங்க நேர்த்தியாய்
வானளாவ பறந்திடும் வறுமை தீர நாளுமே”*

அத்துடன், தொழிலாளர் தேசிய சங்கம் மீதான பற்றுறுதி நிலையினை எடுத்தியம்பும் வகையில், “தொழிலாளர் தேசிய சங்கமடா துயர்படும் ஏழைகளின் நண்பனடா - சுரண்டலை எதிர்த்திட தோன்றியது, துன்பங்கள் பறந்திட வளர்கிறது” என பாடலாசிரியர் அறைகூவுகின்றார். மேலும்,

*“இயக்கத்தின் பேரொலி கேட்குது பார் -
இளையோர்கள் அணியங்கு தோன்றுது பார்
ஜனநாயகம் வாழப் போரிடுவோம் - சதிகளை
வேருடன் ஒழித்திடுவோம்
தொழிலாளர் ஒற்றுமை வேண்டும் தம்பு - உயர்வாக
வாழ வழி வேண்டும் நம்பு”*


என்ற உறுதிமொழி வாசகங்களும் நம்பிக்கையின் கீற்றுகளாக அமைகின்றன.

*“தொழிலாளர் வாழ்க்கையில் துயர் கொடுத்தோர்
இருந்ததில்லை
துன்பப்படும் ஏழைகளை ஏய்த்தவர்கள்
வாழ்ந்ததில்லை
வருவதெல்லாம் வரட்டும் மன உறுதியோடு நமக்கு
பொறுமையுடன் இருந்தே புதுவழி காண்போமே”*

என்ற வரிகளும் திடத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. தொடர்ந்து வரும் பாடலில் பின்வரும் வரிகளும் கவனத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றன.

*“பீலிக்கரையினில் நடந்திடும் சண்டையை
பிரமாதப்படுத்தாமல்
தொழில் வகையில் வரும் பிரச்சினையை
எதிர்கொண்டு
சங்கத்தின் துணையால் வெற்றி கொள்வோம்”*

தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகச் சிந்தனைகள் மலையகத்திலும் ஊடுருவிய காலமாக அது அமைந்தது. சினிமா வாயிலாக இக்கருத்துகள் மிக இலாவகமாக சமூகத்தினிடையே சென்றன. அறிஞர் அண்ணாவும் திராவிடக் கழகச் செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளும் மலையகச் செயற்பாட்டாளர்களை உந்தின. பல வீதிப்பாடலாசிரியர்கள் அறிஞர் அண்ணாவின் சிறப்பைப் பாடியுள்ளார்கள்.



உ
குமரகுருபரன் துணை
உழைப்பாளி மக்களின்
பிரஜா உரிமைக் குரல்
ஆக்கியோன்
V.S. கோவிந்தசாமி தேவர் · A.M. ராமையா தேவர்
கிடைக்குமிடம்:
பாண்டியன் புக் ஸ்டால்,
கொழும்பு 3.
5.4.1955
சதம் 25

**பிரஜா உரிமைக் குரல்**

எம்.ஜி.ஆர் வழியாகவும் திராவிடக் கருத்துகள் மலையகத்திற்குள் மிக வேகமாக ஊடுருவியமை குறிப்பிடத்தக்கது. இந்த இயக்கச் சிந்தனைகளை கற்றுக்கொடுத்த ‘வாத்தியார்’ ஆக எம்.ஜி.ஆர் பெரும் செல்வாக்கைப் பெற்றார். பொதுவாக எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்களே திராவிடக் கருத்துநிலைகளின் ஊன்றுகோலாகத் திகழ்ந்தன எனலாம். அவ்வீர்ப்பின் வெளிப்பாடாக, வாத்தியார் மீதான பற்றுதலுடன் அவருக்காகவும் எம்.ஏ. இராகவன் பாடல் இயற்றியுள்ளார்.

*“அறிஞர் எங்கள் அண்ணாவின் அன்பு மிகும் தம்பிகளில்
ஆற்றல் மிகுந்த நல்ல எம்.ஜியாரே
கலைவாணர் வாரிசு கலைக்கொரு மேதையே
கடமை மறவாத எம்.ஜியாரே”*

உலகப் பொதுமறையாகச் சித்தரிக்கப்படும் திருக்குறள் மீது கொண்டிருந்த ஈர்ப்பின் காரணமாக, அந்நூல் தொடர்பாக சமூகத்தின் கவனத்தை ஏற்படுத்தும் வகையிலும் எம்.ஏ. இராகவன் பாடல்களைப் புனைந்துள்ளார். அவர் தமிழ் மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் கொண்டிருந்த உள்ளார்ந்த ஈடுபாட்டினால் அவற்றின் சிறப்புகளையும் வீதிப்பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்விடயமே அவரை ஏனைய வீதிப்பாடலாசிரியர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதற்கு ஏதுவாக அமைகிறது எனலாம். தான் சார்ந்த சமூகத்தினரை அறிவுபூர்வமான சிந்தனை கொண்டவர்களாக மாற்ற வேண்டும் எனச் சிந்திப்பவர்களாலேயே அவ்வாறான அணுகுமுறையைப் பின்பற்ற முடியும். திருக்குறளின்


தொழிலாளர்
இதய கீதம்
(2ம் பாகம்)

இயற்றியது:
எம்.ஏ. இராகவன்,
மஸ்கெலியா.

வெளியிடுவோர்:
லட்சுமி பதிப்பகம்,
145, அம்புகாபம் வீதி, நாவலப்பிட்டி.

அச்சுப் பதிப்பு: ராஜா அச்சகம், நாவலப்பிட்டி

**தொழிலாளர் இதய கீதம்**

மேன்மையையும் வள்ளுவனின் சிறப்பையும் எடுத்துரைக்கும் முனைப்பில் பின்வரும் பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

*"என்றும் அழியா இலக்கியப் படைப்பு*
*ஏற்று நாம் ஓதிடுவோம்*
*அறம் பொருள் இன்பம் ஆன முப்பாலும்*
*அனைவரும் விரும்பிடவே தான்*
*அறிவுக்கு விருந்தாய் அமைந்த நற்குரலே*
*ஒளி தந்துமே ஒலி தந்துமே*
*நல்வழி காட்டிடும் உன்னத மறையாம் நற்*
*திருக்குறளே*
*போற்றுவோம் போற்றுவோம் என்றும் நாமே*
*புகழ் ஓங்கும் குறள் தன்னை எந்நாளுமே"*

சமூகம், இயக்கம், அரசியல், அறிவு ஆகிய விடயங்களில் இராகவன் கொண்டிருந்த தெளிவை அவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. தாம் சார்ந்த மொழி மீதான பற்றுறுதியின் அவசியத்தை உணர்ந்த ஆளுமையாகவே இராகவனை நோக்கலாம். தாய்மொழி சார்ந்த இலக்கியங்கள் மீதான கரிசனையும் அக்கறையும் அவரின் வீதிப்பாடல்களில் தெளிவாக உணரப்படுகின்றன. சமூக மேம்பாட்டுக்கான படிமுறைகளை நன்கு அறிந்த படைப்பாளி மற்றும் செயற்பாட்டாளர் என்ற வகையிலும் பாடலாசிரியரின் பங்களிப்பு கவனத்திற்குரியதாகிறது. உழைக்கும் வர்க்கத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாடும் உணர்வும் அவரின் ஆளுமையில் பிரதிபலிக்கின்றன. மலையகச் சமூகத்தின் மீது கொண்டிருந்த உள்ளார்ந்த பற்றையும் அவரது பாடல்களில் தெளிவாக உணர முடிகிறது. சமூக அதிர்வலைகளை உருவாக்கும் ஆற்றலை அவரது பாடல்கள் நிச்சயமாகக் கொண்டிருந்தன. அவர் சார்ந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் அமைப்பார்ந்த வளர்ச்சிக்கும் இராகவனின் பாடல்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் இயற்றிய இன்னுமொரு பாடல் தொகுப்பும் கிடைக்குமானால், அவரை முழுமையாகப் புரிந்துகொள்ளவும் அவர் பேசிய பாடுபொருட்களை விரிவாக அறியவும் அது வாய்ப்பாக அமையும். இந்நூலை வெளியிட்டுள்ள லட்சுமி பதிப்பகம், நாவலப்பிட்டியில் இடம்பெற்ற பதிப்பு முயற்சிகளுக்கான ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகவும் கருதப்படுகின்றது.

### உசாத்துணை நூல்கள்


யோகராசா, செ. (2023). ஈழத்து முச்சந்தி இலக்கியம். மகுடம் பப்ளிகேசன்.

கோவிந்தசாமி, வி., ராமையா, ஏ. எம். (1955). உழைப்பாளி மக்களின் பிரஜா உரிமைக் குரல். பாண்டியன் புக் ஸ்டால்.

இராகவன், எம். ஏ. (19...). தொழிலாளர் இதய கீதம். லட்சுமி பதிப்பகம்.

முத்துலிங்கம், பெ. (2012). பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள். கயல் கவின் புக்ஸ்.

சாரல் நாடன். (1997). மலையகம் வளர்த்த தமிழ். துரவி வெளியீட்டகம்.

மாத்தளை ரோகிணி. (1993). உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள். குறிஞ்சி வெளியீடு.

சிவலிங்கம், மு. (2007). மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள். குறிஞ்சித் தமிழ் இலக்கிய மன்றம்.

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, 'மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்' எனும் இத்தொடர் அமைகின்றது

# மலையக வாய்மொழிப் பாடல்களில் வெளிப்படும் துரைமார்களின் அதிகாரம்

வேலாயுதம் இராமர்



வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு மைய சக்தியாக விளங்குவது பெருந்தோட்டத் துறையாகும். பிரித்தானியக் காலனித்துவம் உருவாக்கிய இந்தப் பொருளாதாரக் கட்டுமானத்தை 200 ஆண்டுகள் கடந்த பின்னரும் இலங்கை அரசு முழுமையாகத் தவிர்த்து மேலெழ முடியாத அளவுக்கு அதன் தாக்கம் நிலைபெற்றிருக்கிறது. பிரித்தானியக் காலனித்துவம் உலகம் முழுவதும் பல்வேறு வடிவங்களில் பொருளாதாரக் கட்டுமானங்களை வடிவமைத்தது. கைத்தொழில் புரட்சியின் பின்னர் தங்கள் நாட்டிற்கு தேவையான மூலவளங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தயாரிக்கப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் பிரித்தானியர் வளமிக்க நாடுகளை தங்களது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து தமது ஆட்சியை நிலைநிறுத்தினர். அதன் பின்னர் அந்த நாடுகளில் தொடர்ச்சியான வருமானத்தை ஈட்டித்தரும் பொருளாதார வழிமுறைகளையும் அவர்கள் திட்டமிட்டு அமைத்தனர்.

இலங்கையில் கைத்தொழில் சார்ந்த ஒரு பொருளாதாரக் கட்டுமானத்தை உருவாக்காமல், விவசாயத்தை மையமாகக் கொண்ட ஏற்றுமதிப் பொருளாதார அமைப்பை உருவாக்கியதன் விளைவாக இன்று வரை இலங்கை அந்நியச் செலாவணிப் பிரச்சினையில் சிக்கித் தவிக்கிறது.

இலங்கையில் பாரம்பரியமாக உற்பத்தி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள், கறுவா, முத்து, மாணிக்கம் போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்து வருமானம் ஈட்டிய போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் போல அல்லாமல், 1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பிரித்தானியர் நாட்டில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் வீட்டுப் பயிராக இருந்த கோப்பிப் பயிரை 1823 ஆம் ஆண்டு முதல் வர்த்தக நோக்கில் பயிரிடத் தொடங்கினர். அதன்படி கண்டி மாவட்டத்தின் கம்பளை 'சிங்கபிட்டி' என்ற இடத்தில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் கோப்பி பயிரிடப்பட்டது. பின்னர் அது அதிக வருமானத்தை ஈட்டித்தந்ததால் அதன் பயிரிடல் விரைவாக விரிவுபடுத்தப்பட்டது.

அதேவேளை, இக்காலகட்டத்தில் இலங்கைக்கு வந்த கோல்புரூக்-கமரன் ஆணைக்குழு நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் மேற்கொண்ட நிர்வாகச் சீர்திருத்தங்களின் விளைவாக பெருமளவிலான பிரித்தானிய அதிகாரிகள் வேலை வாய்ப்பை இழந்தனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நாட்டில் நிரந்தரமான பொருளாதார அடித்தளத்தை உருவாக்குவதற்கும் பெருந்தோட்டத் துறையை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 1840 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1840 ஆம் ஆண்டில் மட்டும் 13,275 ஏக்கர் நிலம் குறைந்த விலையில் பிரித்தானிய உயர் அதிகாரிகளுக்கு விற்கப்பட்டது. இதுபோல பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பிரித்தானியர்களுக்கு வழங்கப்பட்டன.

சுமார் பத்து ஆண்டுகளுக்குள் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் கோப்பி பயிரிடப்பட்டது. இந்தக் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்கு சிங்கள மக்கள் முன்வராததால், தமிழ்நாட்டிலிருந்து தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 'வீரபுரன் அப்பு' தலைமையில் ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது; அதனை ஆங்கிலேயர் கடுமையாக அடக்கியதும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் தோட்டங்களில் வேலை செய்வதற்காக அழைத்துவரப்பட்ட தென்னிந்தியத் தமிழ் மக்கள் தான் இன்று மலையக மக்கள் என்ற பெயரில் தங்கள் இருப்பிற்கும் உழைப்பிற்கும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பிரித்தானிய அரசு இந்தியாவில் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளும் கடுமையான வரி விதிப்புகளும் மக்களின் வாழ்வைப் பெரிதும் பாதித்தன. அதனுடன் அக்காலத்தில் ஏற்பட்ட கடுமையான பஞ்சமும் தமிழ்நாட்டில் பசி, வறுமை, வேலையின்மை போன்ற துயரநிலைகளை உருவாக்கியது. இந்தச் சூழலில் சாதி அடக்குமுறையால் கிராமப்புறங்களில் ஒடுக்கப்பட்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள் புதிய வாழ்வையும் மன விடுதலையையும் எதிர்நோக்கி இலங்கை, பர்மா, பிஜி, மலேசியா போன்ற நாடுகளுக்குப் புலம்பெயரத் தொடங்கினர்.

இந்த இடப்பெயர்வு வலுப்பெற்றதன் பின்னர் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் முகவர் அலுவலகங்கள் அல்லது 'ஏஜென்சி ஆபீஸ்கள்' தோன்றின. அவற்றின் பொய்யான பிரசாரங்களும், சொந்த மண்ணில் நிலவிய வறுமையும் அடக்குமுறைகளும் காரணமாக ஏழை எளிய மக்கள் ஆசை வார்த்தைகளால் மயக்கப்பட்டு கூலித் தொழிலாளர்களாக பிரித்தானிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டனர். தமிழ்நாட்டில் சேகரிக்கப்பட்ட இம்மக்கள் கடற்கரை முகாம்களுக்கு கால்நடையாகவே அழைத்துச் செல்லப்பட்டனர். சுமார் 100 பேர் செல்லக்கூடிய கப்பல்களில் 200

பேருக்கும் மேல் ஏற்றப்பட்டு மன்னாருக்குக் கொண்டுவரப்பட்டனர். அந்தப் பயணங்களின் போது பல விபத்துகளும் மரணங்களும் நிகழ்ந்தன. ‘ஆதிலட்சுமி’ கப்பல் விபத்து இம்மக்களின் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு பெரும் துயரச் சம்பவமாகும்.

மன்னாரிலிருந்து சுமார் 130 மைல் தொலைவில் உள்ள மாத்தளைக்கு இம்மக்கள் கால்நடையாகவே அழைத்துச் செல்லப்பட்டனர். மாத்தளையிலிருந்து பிரித்தானிய முதலாளிகள் தங்கள் தோட்டங்களுக்குத் தேவையான தொழிலாளர்களை கங்காணிகளின் மேற்பார்வையில் அழைத்துச் சென்றனர். ஆனால் தோட்டங்களை அடையும் முன்பே பலர் நோய், பசி, மழை, வெயில் போன்ற துன்பங்களால் உயிரிழந்தனர். சிலர் நடக்க முடியாமல் காடுகளில் விடப்பட்டு அனாதைகளாக உயிரிழந்தனர்.

தமிழ்நாட்டில் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்களே இம்மக்களை திரட்டும் பணியில் ஈடுபட்டனர்; அவர்கள் ‘கங்காணிகள்’ என அழைக்கப்பட்டனர். தொழிலாளர்களை துரைமார்களிடம் ஒப்படைத்த பின்னரும் அவர்கள் கங்காணிகளின் மேற்பார்வையிலேயே வைக்கப்பட்டனர். இம்மக்களை முழுமையாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க ‘துண்டு முறை’ மற்றும் ‘பற்றுச் சீட்டு’ போன்ற அடக்குமுறை நடைமுறைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்விரு முறைகளும் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு தப்பிச் செல்லாமல் தடுக்க உருவாக்கப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்புகளாக நீண்டகாலம் நடைமுறையில் இருந்தன.

இந்தப் பின்னணியில் கோப்பி உற்பத்தி செழிப்புடன் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் கோப்பிப் பயிருக்கு ஏற்பட்ட நோய் அதன் உற்பத்தியை முற்றிலும் பாதித்தது. இதற்கான மாற்றாக தேயிலை பயிரிடல் அறிமுகப்படுத்தப்பட்டது. தேயிலை உற்பத்தி தொடங்கிய பின்னர் பெருமளவிலான தொழிலாளர்கள் நிரந்தரமாக இங்கு தங்கி தங்கள் வாழ்வியல் அடையாளத்தை உருவாக்கத் தொடங்கினர். அந்தக் காலகட்டத்தில் தோன்றிய வாய்மொழிப் பாடல்கள் இம்மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளை எந்தவித மறைப்பும் இல்லாமல் வெளிப்படுத்தும் முக்கியமான வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. அவற்றின் வழியாக துரைமார்களின் செயற்பாடுகள் எவ்வாறு இம்மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தின



துரைமார்கள் Image Source - www.basilurtea.com

என்பதையும், அந்தச் செல்வாக்கு இன்று வரை எந்த அளவுக்குத் தொடர்கிறது என்பதையும் கண்டுகொள்ளலாம்.

‘துரை’ என்ற சொல், சென்னை மாகாண நிர்வாகத்தை மேற்கொண்ட பிரித்தானிய அதிகாரிகளை, அவர்களுக்குக் கீழே பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அழைப்பதற்காகப் பயன்படுத்திய சொல்லாகும் என்பதை நா. கோவிந்தராஜன் எழுதிய ‘வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும்: மொழியில் உதித்த பேரரசு’ என்ற நூலில் எடுத்துக்காட்டுகிறார். அதேபோல் இலங்கையிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திய பிரித்தானியர்கள், இந்நாட்டில் வாழ்ந்த மக்கள் தங்களை ‘எஜமான்’ அல்லது ‘துரை’ என அழைக்கும்படி செய்தனர்.

கோப்பிக் காலத்தில் மலையக வாய்மொழிப் பாடல்கள் துரைமாரைப் பற்றி பின்வருமாறு தனது கருத்தைப் பதிவு செய்திருக்கிறது

*“கோப்பி பழுத்திருச்சு*
*கொண்டு போக நாளாச்சு*
*சீமை துரைங்களெல்லாம்*
*சிரிக்கிறாங்க ஜன்னலிலே”*

இந்தப் பாடல் கோப்பிப் பயிர்ச்செய்கை வெற்றி பெற்று துரைமார்கள் பெரும் இலாபத்தைப் பெற்றுக்கொண்டு வெற்றிக்களிப்பில் இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. அதேபோல் ‘சீமைத்துரை’ என்ற சொல்லாடல் தன் நாட்டிற்கு அந்நியமான வெளிநாட்டவரைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

அதேவேளை, கோப்பி பயிரிடுவதற்குத் தயாரான ஆரம்பகாலங்களில் கோப்பித் தோட்டத் துரைமார்கள் எவ்விதமான அடிப்படை வசதிகளும் அற்ற

சூழலிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்தனர். அந்தக் கடினமான சூழ்நிலைகளில் கூட அவர்கள் எவ்வாறு தோட்ட நிர்வாகத்தை நடத்தி வெற்றியடைந்தார்கள் என்பதை 'கசந்த கோப்பி' என்ற நாவல் எடுத்துக்காட்டுகிறது. ஆரம்ப காலங்களில் இத்துரைமார்கள் தொழிலாளர்களுக்கு உரிய கூலியை வழங்காமல், அவர்களை அடித்து உதைத்துத் துன்புறுத்தியதையும் வரலாறு பதிவு செய்துள்ளது. அதற்கான ஓர் உதாரணமாக கீழ்க்கண்ட பாடலைக் காணலாம்.

*"கோணக் கோண மலையேறி*
*கோப்பிப்பழம் பறிக்கையில*
*ஒரு பழம் தவறிச்சின்னு*
*ஒதச்சானய்யா சின்னதுரை"*

இன்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் தோட்டத் துரைமார்களை எதிர்த்து பேசினாலோ, அல்லது தொழிலாளர்கள் தங்களுக்கான உரிமைகளைக் கேட்டுப் போராடினாலோ, அவர்களுக்கு வேலை வழங்காமல் நிறுத்திவைக்கும் நடைமுறை காணப்படுகிறது. பின்னர் நீதிமன்றம் மற்றும் பொலிஸ் அதிகாரங்களின் ஆதரவுடன் அவர்களை வேலைநீக்கம் செய்யும் அதிகாரமும் தோட்ட நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறை இன்றும் பல தோட்டங்களில் தொடர்ச்சியாக நிலவி வருகிறது. பல இடங்களில் தொழிலாளர்கள் வேலை இழக்கும் சம்பவங்களும் நாள்தோறும் பதிவாகிக் கொண்டே இருக்கின்றன.

துரைமார்களிடம் உள்ள இந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தெளிவான சட்ட நடவடிக்கைகள் இன்னும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை என்பதும் கண்கூடாகத் தெரிகிறது. இதன் விளைவாகவே மலையகத்தில் தொழிற்சங்கங்கள் பெருமளவில் உருவாகின. பல இடங்களில் வேலை தொடர்பான முரண்பாடுகள் ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படும் சூழ்நிலைகளில், அவர்களின் சார்பாக தொழிற்சங்கங்கள் துரைமார்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் தொழில் நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் வழக்குத் தீர்க்கப்படும் வரை தொழிலாளர்கள் வேலை இன்றி இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இத்தகைய நிலைமைகள் துரைமார்களின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் செயற்படுகின்றன. மனித உரிமைச் சட்டங்களும் தொழிற் சட்டங்களும் நடைமுறையில் இருந்தபோதிலும், இத்தகைய அநீதிகளை முழுமையாகத் தடுக்க முடியாமல் இருப்பது கவலைக்கிடமானதாகும். தொழிலாளர் வாக்குகளைப் பெற்று அமைச்சர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் பதவியேற்றவர்கள் கூட இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாமல் இருப்பது புரியாத ஒரு நிலையாகவே உள்ளது.

மேலும், குமாரி ஜெயவர்த்தன அவர்கள் பெருந்தோட்டச் சமூகத்தை ஒரு 'மூடிய சமூகமாக' அடையாளப்படுத்துகிறார். அவரின் கருத்துப்படி, தோட்டத் துரைமார்கள் ஒரு சிறிய நிலப்பிரபுத்துவ அரசனைப் போலவே செயற்படுகின்றனர்.




**கோப்பி உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள்**
Image Source - roar.media

தொழிலாளர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் தோட்ட நிர்வாகத்திடமே இன்றும் உள்ளது. அதேவேளை, பெண்கள் இரட்டைச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். அதாவது, தோட்டத்தில் உழைப்புச் சுரண்டல், வீட்டுக்குள் ஆணாதிக்கச் சுரண்டல், பாலியல் சுரண்டல் ஆகிய பல்வேறு சுமைகளைச் சுமக்கும் நிலைமையில் மலையகப் பெண்கள் இருக்கின்றனர்.

முல்லோயாப் போராட்டம் துரைமார்களின் ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு முக்கியமான எதிர்ப்புப்

போராட்டமாக அமைந்தது. இந்தப் போராட்டத்தின் போது உயிரிழந்த முல்லோயா கோவிந்தன் அதிகார வர்க்கத்தால் இரத்தம் சிந்த வைக்கப்பட்ட முதல் தியாகியாகப் பதிவாகிறார்.

குமாரி ஜெயவர்த்தன கோவிந்தனின் மரணத்தைத் தொடர்ந்து அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழு மேற்கொண்ட ஆய்வுகளைப் பற்றி குறிப்பிடுகிறார். அதுவரை 'தோட்டமே துரையின் தனிப்பட்ட ராஜ்ஜியம்' என்ற எண்ணத்துடன் செயற்பட்ட துரைமார்கள், அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் தங்கள் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலை உருவானது என்பதையும் அவர் விளக்குகிறார்.

துரைமார்களுக்கு எதிராக நடைபெற்ற இந்தப் போராட்டம் பல முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியது. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:

1. தொழிற்சங்க அங்கீகாரம்

2. அரசியல் விழிப்புணர்வு

3. நிர்வாகக் கட்டுப்பாடு

இந்த மாற்றங்களின் மூலம் துரைமார்களின் தன்னிச்சையான அதிகாரங்களுக்குச் சட்டரீதியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இவ்வாறான சட்டக் கட்டுப்பாடுகள் அவசியமானதாக மாறியிருந்தமை, துரைமார்கள் கடந்த காலங்களில் ஆட்சிமுறைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தியிருந்தனர் என்பதை உணர்த்துகிறது.

*"நம்ம தொர நல்லதொர*
*நாடறிஞ்ச கோட்டுத்தொர*
*கோட்டுத்தொர பொல்லாதவன்*
*ரோட்டை விட்டுக் கீழ இறங்கு"*
*"கொழுந்து பறிக்கையிலே*
*கொழுந்து தொர வந்தாரே*
*கையப் புடிச்சானே - அவன்*
*கண்ணைச் சிமிட்டினானே"*

போன்ற பாடல்கள் துரைமார்கள் உழைக்கும் பெண்கள் மீது கொண்டிருந்த பார்வையை எடுத்துக்காட்டுகிறது. பெரும்பாலான இளம் பெண்கள் இத்தகைய நிலைகளுக்கு ஆளானதாக வரலாற்றுப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பெண்களைத் திருமணம் செய்துகொள்வதாக மிரட்டித் துன்புறுத்திய நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

துரைமார்களின் பாலியல் அடக்குமுறைகள் குறித்து பல்வேறு நாவல்களிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அதேவேளை, துரையின் முன்னிலையில் தொழிலாளர்கள் குடை பிடிக்கக்கூடாது, செருப்பு அணியக் கூடாது, மேலும் தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்துக் கையில் வைத்திருக்க வேண்டும் போன்ற கட்டுப்பாடுகளும் நடைமுறையில் இருந்தன. இத்தகைய அடிமைத்தனமான நடைமுறைகள் தமிழ்நாட்டில் பண்ணையார்களுக்கு வழங்கப்பட்ட மரியாதை மற்றும் அடிமைத்தனத்துடன் ஒப்பிடத்தக்கவையாகும். இதனை ஒப்புவிக்கும் ஒரு பாடலைக் கீழே காணலாம்.

*"குடை பிடிக்கக் கூடாது - அந்தக்*
*கொடுமைக்காரத் துரை முன்னே*
*தலையில் துணி இருக்கக்கூடாது*
*அந்தத் தருதலைக் கங்காணி முன்னே"*

துரைமார்கள் வீதியில் வந்தால் தொழிலாளர்கள் நடுங்கியபடியே அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டிய நிலை இருந்தது. அவர்களின் தோற்றமே அதிகாரத்தின் அடையாளமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் கையில் வைத்திருந்த பிரம்பு, எவ்விதமான கேள்வி கேட்பாடும் இன்றித் தொழிலாளர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அவர்களிடம் இருப்பதைக் குறிக்கும் ஒரு சின்னமாகப் பார்க்கப்பட்டது. இன்றும் மலையகத் தோட்டப் பகுதிகளில் பணிபுரியும் கங்காணிமார்கள், கணக்கப்பிள்ளைமார்கள் மற்றும் துரைமார்கள் தங்கள் கைகளில் ஒரு பிரம்பை வைத்திருப்பது, அந்த அதிகாரத்தின் அடையாளமாகவே கருதப்படுகிறது.

*"வெள்ளை குதிரை மேலே - நம்ம*
*வெள்ளைத்துரை வாராரே*
*கையிலே பிரம்பு இருக்க - அவர்*
*கண்ணிலே நெருப்பு இருக்க*
*தொப்பியை மாட்டிக்கிட்டு அவர்*
*தூரத்தில் வாராரே*
*தப்பு ஏதும் செஞ்சிட்டா அவர்*
*சவுக்கால அடிப்பாரே"*

பெண்கள் கடுமையாக உழைத்து பறித்துக்கொண்டு வரும் கொழுந்துகள் 'சரியாக இல்லை' என்று காரணம் காட்டி ஈவிரக்கம் இன்றித் தூக்கி எறிவதும் வழக்கமாக இருந்தது. அவற்றுக்கு நிறை அளிக்காமலும்

சம்பளத்தை வழங்காமலும் தண்டிப்பதும் பொதுவான நடைமுறையாக இருந்தது. 1975 - 1977 காலப்பகுதிகளில்கூட தலையில் 'கொங்காணி' அணிந்து வராமல் சம்பளம் பெற வருவோருக்கு சம்பளம் வழங்காமல் விரட்டி அனுப்பிய சம்பவங்கள் மலையகப் பகுதிகளில் பதிவாகியுள்ளன.

*"மலை மேலே ஏறி - நான்*
*மடி நிறையக் கொழுந்து எடுத்தேன்*
*துரை வந்து பார்த்தாரே - என்*
*கூடையைக் கீழே தள்ளினாரே"*

மலையகப் பகுதிகளில் வறுமை, நோய், வீட்டு வசதியின்மை போன்ற கடுமையான சூழ்நிலைகளில் தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருந்த போதும், துரைமார்கள் மிகவும் ஆடம்பரமான பங்களாக்களில் சொகுசான வாழ்க்கையை நடத்தி வந்தனர். இந்தச் சமூக வேறுபாட்டை பின்வரும் பாடல்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

*"கொய்யாப்பழம் பழுக்கும்*
*கொடமல்லி பூ பூக்கும்*
*சீத்தாப்பழம் பழுக்கும் நம்ம*
*சின்னதுரை வாசலிலே"*
*"ஆறடிதான் பங்களாவாம்*
*அறுபது அடி பூந்தோட்டம்*
*பூஞ்செடிக்கு தண்ணி போடும்*
*புண்ணியரே என் பொறப்பு"*
*"பங்களா மேலிருந்து அவர்*
*பார்த்துச் சிரிக்கிறாரே*
*பச்சைக் கொழுந்து எடுத்து*
*நாம பசியில் வாடுகிறோம்"*

இவர்களின் பங்களாக்களை இன்று சென்று பார்க்கும்போது, அவை இங்கிலாந்தில் உள்ள செல்வந்தர்களின் வீடுகளுக்கு எவ்விதத்திலும் குறையாத வசதிகளுடன் மிகவும் ஆடம்பரமாக அமைக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. ஒப்பீட்டளவில் கங்காணிகள், கணக்கப்பிள்ளைகள் குறித்துப் பல பாடல்கள் காணப்பட்டாலும், துரைமார்களைப் பற்றிய பாடல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. இருப்பினும், அவ்வாறான பாடல்களில் வெளிப்படும் கருத்துகள் அவர்களின் அதிகாரத் துரைத்தனம், நிலப்பிரபுத்துவ மனப்பாங்கு மற்றும் அடக்குமுறை நடைமுறைகளைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன. மேலும் சட்டம், நீதி, நிர்வாகம் ஆகிய அனைத்தையும் அவர்கள் தங்களது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த நிலையையும் இப்பாடல்கள் பிரதிபலிக்கின்றன.

துரைமார்கள் நிகழ்த்திய பெண்களுக்கு எதிரான பாலியல் அடக்குமுறைகள், அதற்குப் பெரிய கங்காணிமார்கள் மற்றும் கணக்கப்பிள்ளைமார்கள் எவ்வாறு துணையாக இருந்தனர் என்பன பற்றியும் பல நாவல்களிலும் ஆய்வுகளிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. உதாரணமாக குமாரி ஜெயவர்த்தன மற்றும் ரேச்சல் கொரியன் ஆகியோரின் ஆய்வுகள் முக்கியமானவையாகும். இவ்வாய்வுகள் விரிவாகப் படிக்கப்பட்டு இன்றைய தலைமுறையினர் அவற்றை அறிந்து கொள்ளும் வகையில் பரவலாக்கப்பட வேண்டும். அதேபோல் பேட்ரிக் பீப்பிள்ஸ் மலையகப் பெண்கள் உடல் ரீதியாக எதிர்கொண்ட தண்டனைகள் குறித்து விரிவாக விளக்கியுள்ளார். வினா அகர்வால் பெண்கள் பெருந்தோட்டத் துறைக் கட்டமைப்பில் எவ்வாறான பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

மலையக வாய்மொழிப் பாடல்களில் சித்திரிக்கப்படும் துரைமார்கள், இன்றும் பெருந்தோட்டத் துறையை வழிநடத்தும் அதிகாரமிக்கவர்களாகத் திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு, அவர்களிடம் இரக்கத்துடன் பழகி, தேவையான உதவிகளைச் செய்ய முன்வந்த ஒருசில துரைமார்களும் வரலாற்றில் தடம் பதித்துள்ளனர். ஆனால் அவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவானதாகும்.

## சான்றாதாரங்கள்


வேலுப்பிள்ளை, சி.வி. மலைநாட்டு மக்கள் பாடல்கள். கொழும்பு: மகாவலி பிரசுரம்.

சிவலிங்கம், மு. 2007. மலையகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள். ரெக்னோ பிரிண்டர்ஸ்.

சாரல் நாடன். 1993. மலையக வாய்மொழி இலக்கியம். சென்னை: சவுத் ஆசியன் புக்ஸ்.

கந்தையா, மு.சி. 2002. சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள். திருப்பூர்: பொன்னுலகம் புத்தக நிலையம்.

காதர், பி.ஏ. இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம். லண்டன்: சமூக இயல் பதிப்பகம்.

குமாரி ஜெயவர்த்தன. 1987. இலங்கையில் இனவர்க்க முரண்பாடு. குமரன் புத்தக இல்லம்.

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். ”வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

# வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை

**சுப்ரமணியம் சிவகுமார்**



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார்.
பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

## 6.1 அறிமுகம்

பாரம்பரிய நீர்வள மேலாண்மை அணுகுமுறை பெரும்பாலும் நீர் வழங்கல் (*Irrigation/ Supply*) மேம்பாட்டில் கவனம் செலுத்தி வந்துள்ளது. இந்த அணுகுமுறையில், மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் ஒருவருக்கு தேவையான நீர் அளவு போன்ற தேவைக் கோட்பாடுகள் நிலையானதாகக் கருதப்பட்டு, அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நீர் வழங்கல் வளங்கள் உருவாக்கப்பட்டன.

ஆனால், இன்றைய நிலவரத்தில் நீர் வளங்களின் குறைபாடு, காலநிலை மாற்றம், மற்றும் அதிகரிக்கும் பயன்பாடு ஆகிய காரணங்களால் இந்தப் பாரம்பரிய அணுகுமுறை மட்டும் போதுமானதாக இல்லை. இதற்குப் பதிலாக நீர்வளத் தேவைகள் மேலாண்மை (*Demand Management*) முக்கியத்துவம் பெற்றுள்ளது.

நீர்வளத் தேவைகள் மேலாண்மை என்பது நீர்ப் பயன்பாட்டை பல்வேறு முறைகளில் கட்டுப்படுத்தி, நீர்ப் பயன்பாட்டின் பொருளாதாரத் திறனை அதிகரிப்பதைக் குறிக்கிறது. இதன் மூலம் நீர் வீணாக்கம் குறைக்கப்பட்டு, கிடைக்கும் நீர் வளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நீரின் மதிப்பு இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுபடும். ஒரு நீர்ப்பிடிப்புப் பகுதி (*Basin*) அல்லது ஒரு பருவகாலத்தில் நீரின் முக்கியத்துவம் அதிகமாக இருக்கலாம். எனவே, நீர்ப் பாதுகாப்பு மற்றும் சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது, அந்தக் குறிப்பிட்ட பகுதியிலும் குறிப்பிட்ட காலத்திலும் நீரின் மதிப்பைக் கருத்தில் கொண்டு திட்டமிட வேண்டும்.

## 6.2 கொள்கை வடிவமைப்பின் அவசியம்

நீர் வளங்கள் ஒரு நாட்டில் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை:

1. வீட்டுத் தேவைகள்
2. சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு
3. பாசன வேளாண்மை
4. உள்நாட்டு மீன்வளம்
5. நீர்மின் உற்பத்தி
6. தொழில் மற்றும் வாணிப வளர்ச்சி
7. சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்

இதனால், ஒரு நாட்டில் நீர் வளங்களைப் பாதுகாப்பதும் சேமிப்பதும் ஒரு தனித்துறை மட்டுமே மேற்கொள்ளும் முயற்சிகளால் சாத்தியமில்லை. நீர் இழப்புகளையும் வீணாக்கத்தையும் குறைப்பது அனைத்து நீர் பயன்படுத்தும் துறைகளிலும் ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டில் முக்கியமான நீர் பயன்படுத்தும் துறைகளில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக வறட்சிக் காலங்களில் நீர்த் தேவையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நீர் இழப்புகளை குறைக்கும் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அனைத்து நிறுவனங்களும் ஒருங்கிணைந்த பொதுக் கொள்கை அடிப்படையில் செயற்படாததும், ஒருங்கிணைந்த முயற்சிகள் இல்லாததும், தேவைகள் மேலாண்மை முயற்சிகள் முழுமையான வெற்றியைப் பெறாததற்கான முக்கிய காரணமாகும்.

ஆகையால், ஒவ்வொரு நீர் பயன்படுத்தும் துறையும் தனித்தனி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. அதேசமயம், தேசிய மட்டத்தில் அல்லது பிராந்தியங்கள் மட்டத்தில் வகுக்கப்படும் கொள்கைகள் அந்தத் துறைகளின் கொள்கைகள், மூலோபாயத் திட்டங்களுக்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஒருங்கிணைப்பையும் வழங்க வேண்டும். இதன் மூலம் அனைத்துத் துறைகளின் நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று பூரணமாக அமையும்.

## 6.3 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீர் ஒதுக்கீடு மற்றும் தேவைகள் மேலாண்மைக் கொள்கைகள்

தேசிய நீர்வளக் கொள்கையில், நீர் உரிமைகள் மற்றும் ஒதுக்கீடு தொடர்பான கொள்கைகளும், நீர்வளத் தேவைகள் மேலாண்மை தொடர்பான கொள்கைகளும் இடம்பெற்றுள்ளன.

நீர் ஒதுக்கீட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாக மாற்றத்தக்க (*Transferable*) நீர் உரிமைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் நீரை அதிக மதிப்புக் கொண்ட பயன்பாடுகளுக்கு காலப்போக்கில் மாற்றிப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் உருவாகின்றன. இதனால் நீர்ப் பயன்பாட்டின் பொருளாதாரத் திறன் அதிகரிக்கிறது.

மறுபுறம், தேவைகள் மேலாண்மைக் கொள்கை தற்போதைய நீர்ப் பயனாளர்களின் நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில்

உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காகப் பின்வரும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன:

1. ஊக்குவிப்புத் திட்டங்கள் (Incentives)

2. ஒழுங்குமுறை விதிகள் (Regulations)

3. விழிப்புணர்வு உருவாக்கம்

4. தொழில்நுட்ப மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

மேலும், நீர் உரிமைகளை மாற்றத்தக்கதாக அமைத்தல், தேவைகள் மேலாண்மையை ஊக்குவிக்கும் முக்கிய அம்சமாகும். இதன் மூலம் நீருக்கு சந்தை மதிப்பு உருவாகி, நீர் ஒரு மதிப்புமிக்க பொருளாதார வளம் என்பதை நீர்ப் பயனாளர்கள் உணர ஆரம்பிக்கின்றனர். சந்தையில் உள்ள பிற பொருட்களைப் போலவே நீரும் மதிப்புள்ள வளம் என்ற புரிதல் உருவாகும் போது, நீர்ச் சேமிப்பு மற்றும் திறமையான பயன்பாடு இயல்பாக மேம்படும்.

இதனால், நீர் ஒதுக்கீடு மற்றும் தேவைகள் மேலாண்மைக் கொள்கைகள் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுத்தப்படும் போது மட்டுமே நீர் வளங்களின் நிலையான மற்றும் திறமையான பயன்பாட்டை உறுதி செய்ய முடியும்.

### 6.4 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீர்வளத் தேவைகள், ஒதுக்கீடுகள் மேலாண்மைக் கொள்கை

#### 6.4.1 நோக்கங்கள்

இந்தக் கொள்கையின் பிரதான நோக்கம், நீர்வளங்களைத் திறமையான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதுடன், சமூகத்திற்கு கிடைக்கும் நீர்வளத்தின் மொத்த மதிப்பை அதிகப்படுத்துவதாகும்.

இந்தக் கொள்கை மேலும் பின்வரும் இலக்குகளை நோக்கமாகக் கொண்டுள்ளது:

1. தற்போதைய பயன்பாட்டைச் சீரமைத்து, மற்ற முன்னுரிமைத் தேவைகளுக்காக கூடுதல் நீரைக் கிடைக்கச் செய்வது;

2. நீர்ச் சேவைகளை வழங்குவதற்கான மொத்த செலவினத்தைக் குறைப்பது;

3. ஆற்றுப்பாசன அல்லது நீர்ப்பிடிப்பு பகுதி மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நீர்வள மேலாண்மைச் செலவுகளின் ஒரு பகுதியை மீட்டெடுப்பது.

இதன் மூலம் நீர்ப் பயன்பாட்டின் செயல்திறன் உயர்த்தப்பட்டு, நீர்வளங்கள் நிலையான முறையில் சமூக நலனுக்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய முடியும்.

### 6.4.2 பொருளாதார ஊக்குவிப்புகள் மற்றும் நீரின் மதிப்பு

1. நீர் ஒரு குறைவான (Scarce), முழுமையாக மீள் நிரப்ப முடியாத வளமாகும்; அதற்கு பொருளாதார மதிப்பு உள்ளது. மாற்றத்தக்க நீர் உரிமைகள் (Transferable Water Entitlements) மற்றும் நீர்வள மேலாண்மைச் செலவுகளைப் பகிர்வு செய்வது போன்ற நடைமுறைகள் நீர்ப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் பொருளாதார ஊக்குவிப்புகளாகப் பயன்படுத்தப்படும்.

2. நீர்வள மேலாண்மைச் சேவைகள் வழங்குவதில் செலவுகள் உள்ளன. இச்செலவுகள் நீர் பயன்படுத்துபவர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும். செலுத்தும் திறன் கொண்ட பயனாளர்கள் குறிப்பிட்ட அளவு செலவை ஏற்க வேண்டும். இது ஒரு குறுக்குச் சலுகை (Crosssubsidy) முறையின் அடிப்படையில் அமையும்.

3. சில பயனாளர்களுக்கு நீர்வள மேலாண்மைச் செலவுகளைச் செலுத்தும் திறன் குறைவாக இருக்கலாம். இவ்வாறான பயனாளர்களுக்கான சேவைச் செலவுகள் அரசாங்கத்தால் வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் மானியமாக வழங்கப்படும்.

4. நீர் பயன்படுத்தும் துறைகளுக்கிடையிலான குறுக்குச் சலுகைகள் தேவையான அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டு, தேவையற்ற மாறுபாடுகள் குறைக்கப்படும்.

### 6.4.3 மாற்றத்தக்க நீர் உரிமைகள்

இந்தக் கொள்கையின் கீழ் முறையான மற்றும் மாற்றத்தக்க நீர் உரிமைகள் நிறுவப்படுவது, நீர்ப் பாதுகாப்பையும் சிறந்த நீர் ஒதுக்கீட்டையும் ஊக்குவிக்கும்.

நீர் உரிமைகளை வாங்கவும் விற்கவும் இயலும் வாய்ப்புக் கிடைக்கும் போது:

1. நீர் வளத்தின் உண்மையான மதிப்பு பயனாளர்களால் உணரப்படும்;

2. தங்களுக்குக் கிடைத்த நீர் ஒதுக்கீட்டை அதிக உற்பத்தித் திறன் கொண்ட பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தும் ஊக்குவிப்பு உருவாகும்;

3. நீர் வீணாக்கம் குறைந்து, பொருளாதார ரீதியாக பயனுள்ள பயன்பாடு அதிகரிக்கும்.

இதன் மூலம் நீர் ஒரு மதிப்புமிக்க வளம் என்ற சமூகப் புரிதல் வலுப்பெறும்.

### 6.4.4 நீர்வள மேலாண்மைச் செலவுப் பகிர்வு

நீர்வள மேலாண்மைச் செலவுகளைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறை, தேவைகள் மேலாண்மைக் கருவிகளுடன் இணைந்து செயற்படுத்தப்படும் போது நீர்ப் பாதுகாப்பு மேம்படுத்தப்படும்.

மத்திய மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நீர்வள மேலாண்மை நடவடிக்கைகளின் செலவின் ஒரு முக்கியமான பகுதி, நீர் உரிமை பெற்ற பயனாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

இந்த நடவடிக்கைகள் ஆற்றுப்பாசனத் திட்டங்கள் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதித் திட்டங்களில் குறிப்பிடப்பட்டு, அவற்றைச் செயற்படுத்தும் பொறுப்புடைய நிறுவனங்களும் தெளிவாக அடையாளப்படுத்தப்படும்.

நீர்வள மேலாண்மைச் செலவுப் பகிர்வு பின்வரும் அடிப்படைகளில் அமையும்:

1. குறிப்பிட்ட நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஏற்படும் நீர்வள மேலாண்மைச் செலவுகள்;
2. உரிமை பெற்ற பயனாளர் பயன்படுத்தும் நீரின் அளவு;
3. நீர்ப் பயன்பாடு நுகர்வு சார்ந்ததா (Consumptive) அல்லது நுகர்வு அல்லாததா (Nonconsumptive) என்பதன் தன்மை;
4. பயனாளரின் செலுத்தும் திறன்;
5. தேவையான பிற காரணிகள்.

செலவுப் பகிர்வு தொடர்பான விரிவான நடைமுறைகள், மேலதிக ஆய்வுகள் மற்றும் முன்னோடித் திட்டங்கள் (Pilot Projects) மூலம் தீர்மானிக்கப்படும்.

மேலும்:

1. பல்வேறு துறைகளில் நீரின் பொருளாதார மதிப்பு, நீர் வழங்கல் செலவு மற்றும் நீர்ப் பாதுகாப்புச் செலவு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும். இத்தகவல்கள் ஆற்றுப்பாசனத் திட்டமிடல் மற்றும் நீர்வளத் திட்டங்களின் அனுமதி வழங்கலில் பயன்படுத்தப்படும்.
2. உயர்ந்த மதிப்புடைய நீர் மாற்று வாய்ப்புகள் தற்போது உள்ளதோ அல்லது எதிர்காலத்தில் உருவாகும் வாய்ப்புள்ளதோ என்ற நிலைமைகளில், குறைந்த மதிப்புடைய பயிர்களுக்குப் பாசன நீர்ச் சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் அத்தகைய பயன்பாட்டிற்காக நீர் ஒதுக்கீடு செய்வது கடுமையாகத் தவிர்க்கப்படும்.

இதன் மூலம் நீர் வளங்கள் அதிக மதிப்புள்ள மற்றும் சமூக நலனுக்கு முக்கியமான பயன்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்ய முடியும்.

### 6.4.5 பாசனத் துறையில் செலவுப் பகிர்வு மற்றும் நீர்ப் பாதுகாப்பு

பாசனத்துறை நாட்டில் அதிகளவு நீரைப் பயன்படுத்தும் மிகப்பெரிய துறையாகும். மேலும், நாட்டின் மிகப்பெரிய நீர்வள அடிப்படைக் கட்டமைப்புகளும் இந்தத் துறையையே சார்ந்துள்ளன. குறிப்பாக நெல் பயிர்ச்செய்கை இத்துறையில் ஆதிக்கம் செலுத்துகிறது. நெல் பயிர்ச்செய்கை ஓர் அலகு நீருக்கு ஒப்பிடுகையில் குறைந்த பொருளாதார வருவாய் அளிப்பதாலும், விவசாயிகளின் பொருளாதாரத் திறன் குறைவாக இருப்பதாலும், நீர்வள மேலாண்மைச் செலவுகளை முழுமையாகச் செலுத்தும் திறன் அவர்களிடம் மிகக் குறைவு.

இருப்பினும், தேசிய மற்றும் மாகாண அளவில் பாசனத் துறைக்கு வழங்கப்படும் நீர் ஒதுக்கீட்டின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, பாசனத் துறையில் பயனுள்ள நீர்ப் பாதுகாப்பை ஊக்குவிக்க பின்வரும் மூலோபாயங்கள் பின்பற்றப்படும்:

#### 1. நீர்வள மேலாண்மைச் செலவுப் பகிர்வு

நீர் உரிமை பெற்ற அனைத்துப் பயனாளர்களுக்கும், பாசனப் பயனாளர்கள் உட்பட, நீர்வள மேலாண்மைச் செலவுப் பகிர்வு கணக்கிடப்படும். பாசனத் துறைக்கான இந்தச் செலவுகளில் ஒரு பகுதியை அரசு வெளிப்படையான மற்றும் நியாயமான மானிய முறையின் மூலம் ஏற்றுக்கொள்ளும்.

#### 2. மாற்றத்தக்க பாசன நீர் உரிமைகள்

நீர் உரிமைகள் மற்றும் ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில், பாசனத் துறைக்கான நீர் உரிமைகள் மாற்றத்தக்கதாக இருக்கும். இதனால் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் விவசாயிகள் அதிக மதிப்புள்ள பயிர்களை வளர்க்கும் பொருளாதார ஊக்குவிப்பு உருவாகும். இதன் மூலம் ஒதுக்கப்பட்ட

நீரைக் குறைவாகவும் திறமையாகவும் பயன்படுத்தும் நடைமுறை உருவாகும்.

**3. பாசனத் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு (O & M)**

தற்போது நடைமுறையில் இருப்பதைப் போலவே, பாசனத் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை விவசாயிகள் தொழிலாளர் பங்களிப்பு மற்றும் பொருட்களால் (Inkind Contributions) பகிர்ந்து கொள்ளுவர்.

1. ஒவ்வொரு வயல்வெளிக் கால்வாயின் (Field Canal) இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கும் அந்தக் கால்வாயைப் பயன்படுத்தும் விவசாயிகளே முதன்மையான பொறுப்பாளர்கள்.
2. துணைக் கால்வாய்கள் (D Canals) தொடர்பான பராமரிப்புச் செலவுகள் ஒவ்வொரு வயல்வெளிக் கால்வாய்க்கும் வழங்கப்படும் நீரின் அளவு மற்றும் வழங்கல் நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு பகிரப்படும். இந்த நடைமுறைகள் நீர் வீணாக்கத்தைக் குறைத்து, நீர்ப் பாதுகாப்பை ஊக்குவிக்கும்.

**4. நீர்ப் பாதுகாப்பு ஊக்கக் கட்டணம்**

ஆற்றுப்பாசனக் குழுக்கள் (River Basin Committees) மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் இணைந்து தயாரிக்கும் ஆற்றுப்பாசனத் திட்டங்களில், பாசன நீர் உரிமையாளர்கள் சிறிய அளவிலான 'நீர்ப் பாதுகாப்பு ஊக்கக் கட்டணம்' செலுத்த வேண்டும் என நிர்ணயிக்கலாம்.

குறிப்பிட்ட பயிர்களுக்குத் தேவையான அளவை விட அதிகமாக நீரைப் பயன்படுத்தும் விவசாயிகளிடம் இந்தக் கட்டணம் விதிக்கப்படும். இது நீர் வீணாக்கத்தைத் தடுக்கவும், பொறுப்பான பயன்பாட்டை ஊக்குவிக்கவும் உதவும்.

**5. தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவி**

நீர்ப் பாதுகாப்பை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும்.

1. குறைந்த நீர்ப் பயன்பாட்டில் அதிக வருவாய் தரும் மாற்றுப் பயிர்கள் பற்றிய தகவல்கள்.
2. நீர் திறன் அதிகமான விவசாய முறைகள்.
3. நவீன பாசன தொழில்நுட்பங்கள்.
4. மேம்பட்ட பாசன நீர் மேலாண்மை சேவைகள்

விவசாய நில அளவில் நீர் வழங்கலை அளவிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் மேம்படுத்தப்படும். மேம்பட்ட சேவைகள் மூலம் பயனடையும் விவசாயிகள் செலவுகளை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

1. அனைத்துக் கால்வாய் அமைப்புகளிலும் நீர் அளவீட்டுக் கருவிகள் பொருத்தப்படும்.
2. பயன்படுத்தப்படும் உண்மையான நீர் அளவை அடிப்படையாகக் கொண்டு கட்டணங்கள் விதிக்கப்படும்.
3. விவசாயிகள் தங்களின் தேவைக்கேற்ப நீரைப் பெறும் வசதியும் ஏற்படுத்தப்படும்.

தேவைகள் மேலாண்மை மற்றும் செலவுப் பகிர்வு தொடர்பான விரிவான கொள்கைகள் பரிந்துரைக்கப்படும் அதிகார அமைப்பினால் தயாரித்துச் செயற்படுத்தப்படும். இந்தக் கொள்கைகள் காலம்தோறும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நீர்வள மேலாண்மைச் செலவுகள் அனைத்துப் பயனாளர்களுக்கும் சமமாகப் பகிரப்படுவது உறுதி செய்யப்படும்.

### 6.4.6 ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகள் - நீர் உரிமைகள்

மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்ப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த நீர் உரிமைகள் பயன்படுத்தப்படும். இந்த உரிமைகளில் நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சேர்க்கப்படலாம்.

உதாரணமாக:

1. தொழிற்சாலைகள் அல்லது வணிக நிறுவனங்கள் நீர்ச் சேமிப்புத் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்ய வேண்டிய கட்டாயம்.
2. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அந்தத் தொழில்நுட்பங்களைச் செயற்படுத்துதல்.
3. பாசனத் திட்டங்களில் நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
4. குடிநீர் வழங்கல் அமைப்புகளில் இழப்புகளைக் குறைக்கும் நடவடிக்கைகள்.

இந்த விதிமுறைகள் நீர் உரிமையாளர்களுடன் ஆலோசிக்கப்பட்டு, நியாயமான, பயனுள்ள மற்றும்

இருதரப்புக்கும் ஏற்றதாக அமைக்கப்படும்.

### 6.4.7 நீர்ப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மற்றும் மேற்பரப்பு நீர்/ நிலத்தடி நீர் திட்டங்கள்

நீர்வள மற்றும் வேளாண்மை மேம்பாட்டிற்காக அமைக்கப்படும் அதிகார நிறுவனம், நீர்ப் பயனாளர்களுடன் நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஒப்பந்தங்களில் ஈடுபடலாம்.

இந்த ஒப்பந்தங்களில்:

1. செயல்திட்டங்கள் மற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகள்.
2. முதலீட்டுத் திட்டங்கள்.
3. பொதுமக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள்.
4. நீர்க் கட்டண அமைப்புகள்.
5. நீர்ப் பாதுகாப்பு இலக்குகள்.

போன்றவை குறிப்பிடப்படும்.

நீர் மேலாண்மைப் பகுதிகளாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத இடங்களிலும் இத்தகைய ஒப்பந்தங்கள் உருவாக்கப்படலாம்.

மேலும், மேற்பரப்பு நீர்த் திட்டங்களில் அரசாங்க அமைப்புகளும் நீர்ப் பயனாளர்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, தேவைகள் மேலாண்மை இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்யப்படும்.

### 6.4.8 நீர்ச் சேமிப்புத் தொழில்நுட்ப மேம்பாடு

நீர் உரிமைகளின் கீழ் வழங்கப்படும் அனைத்து நீர் விநியோகங்களுக்கும் நீர் அளவீட்டுக் கருவிகள் கட்டாயமாக்கப்படும்.

நீர் உரிமை பெற்ற பயனாளர்கள்:

1. நீர் அளவீட்டுக் கருவிகள் மற்றும் கண்காணிப்புச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்;
2. தங்களது நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்த இத்தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்.

இத்தகைய கருவிகள் அரசின் கண்காணிப்பு மற்றும் நீர்வள மேலாண்மைச் செயற்பாடுகளுக்கும் அத்தியாவசியமானவை.

நீர் சேமிப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும்.

1. நீர் சேமிப்பு உபகரணங்களுக்கு மானியங்கள்.
2. வரிவிலக்கு மற்றும் இறக்குமதிச் சுங்கச் சலுகைகள்.
3. தொழில்நுட்ப ஆலோசனைகள்.
4. ஆராய்ச்சி மற்றும் புதுமைத் திட்டங்கள்.

பொது மற்றும் தனியார் நீர்ப் பயனாளர்கள் இருவரும்:

1. நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களை,
2. கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டை,

தகுந்த இடங்களில் கடைப்பிடிக்க ஊக்குவிக்கப்படுவர்.

அரசாங்கம் தொழில்நுட்ப ஆலோசனை, ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை வழிமுறைகள் மூலம் இந்தத் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை மேம்படுத்தும்.

### 6.4.9 கல்வி மற்றும் விழிப்புணர்வு மேம்பாடு

நீரின் பற்றாக்குறை, நீரின் பொருளாதார மற்றும் சமூக மதிப்பு, பாதிக்கப்படக்கூடிய நிலத்தடி நீர்மட்டங்களில் (*Vulnerable Aquifers*) அதிக நீர் எடுத்தல் ஏற்படுத்தும் பாதிப்புகள் மற்றும் நீர்ப் பாதுகாப்பிற்கான வாய்ப்புகள் குறித்து பொதுமக்களிடையே கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நீர்வளத்தின் மதிப்பு மற்றும் நீர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்து பொதுமக்களின் அறிவை உயர்த்துவதற்காக கல்வி நிறுவனங்கள், நீர்ச் சேவை நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய அரசாங்க அமைப்புகளுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படும்.

முக்கிய நீர்ப் பயனாளர்களான:

1. பாசன விவசாயிகள்,
2. தொழிற்சாலைகள்,
3. நகர நீர்ப் பயனாளர்கள்,
4. வாணிப மற்றும் சேவைத் துறைகள்,

ஆகியோருக்கு நீர்ப் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும்.

நீர்வள மேலாளர்கள் தங்களது செயற்பாடுகள் மூலம் நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்சி பெறுவர். அவர்கள் நீர்ப் பயனாளர்களுடன்

இணைந்து செயற்படுவதற்கான திறன்களும் மேம்படுத்தப்படும்.

உதாரணமாக, பாசன அமைப்புகளில் நீர்ப் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க:

1. அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,
2. விவசாயிகளுக்கான பயிற்சிகள்,
3. நெருக்கமான ஒத்துழைப்பு,

ஆகியன மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும், நீர்ச் சேமிப்புப் பாசன முறைகள் தொடர்பான தொழில்நுட்ப உதவி, கோரிக்கையின் பேரில் நீர்ப் பயனாளர்களுக்கு வழங்கப்படும்.

### 6.4.10 மூலதன முதலீடு, இயக்கம் மற்றும் பராமரிப்பு

அனைத்து நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களிலும் நீர்ப் பாதுகாப்பு கட்டாய அம்சமாக இணைக்கப்படும். நீர்ப் பாதுகாப்பு இலக்குகள்:

1. நீர் உரிமைகள்,
2. ஒப்பந்தங்கள்,
3. மேற்பரப்பு நீர்த் திட்டங்கள்,

மூலம் தெளிவாக நிர்ணயிக்கப்படும்.

நகர்ப்புற குடிநீர் வழங்கல் அமைப்புகளில் கணக்கிடப்படாத நீர் இழப்புகளைக் (Unaccounted Water) குறைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்த:

1. நீர் அளவீட்டுக் கருவிகள் (Water Metering),
2. நிலத்தடி நீர் எடுத்தல் கண்காணிப்பு,
3. துல்லியமான நீர்க் கணக்கியல்,
4. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்,
5. சரியான நிதிக் கணக்கியல்,
6. சொத்து மேலாண்மை,
7. பழுதடைந்த நீர்ப்பாசன அமைப்புகளின் புதுப்பித்தல்,

போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவை அனைத்தும் நீர்ப் பயன்பாட்டைச் சீரமைத்து, நீர் வீணாக்கத்தைக் குறைத்து, செயல்திறன் மிக்க நீர் மேலாண்மையை உறுதி செய்ய உதவும்.

### 6.4.11 தகவல் மற்றும் தேவைகள் மேலாண்மை செயல்திறன்

நீர்வளத் தேவைகள் தொடர்பான தகவல்கள் முறையாகச் சேகரிக்கப்பட்டு, பின்வரும் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும்:

1. கொள்கை வடிவமைப்பு
2. மேற்பரப்பு நீர்த் திட்டங்கள்
3. நீர்ப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்
4. நீர்வள மேலாண்மை ஆவணங்கள்

மேற்பரப்பு நீர்த் திட்டங்களில் தேவைகள் மேலாண்மை இலக்குகள் தெளிவாக நிர்ணயிக்கப்படலாம். இவ்விலக்குகளை அடைந்த நிலை குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்படும்.

நீர் உரிமைகள் மற்றும் ஒப்பந்தங்களின் கீழ் அடையப்பட்ட தேவைகள் மேலாண்மை முன்னேற்றங்களும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். இது பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும்.

### 6.4.12 துறைவாரியான தேவைகள் மேலாண்மை

பாசனம், தொழில், நகர நீர் வழங்கல் போன்ற துறைகளில் நீர்ப் பயன்பாட்டிற்குப் பொறுப்பான நிறுவனங்கள் தேவைகள் மேலாண்மை இலக்குகளை அடைவதற்கான தனித்தனி:

1. கொள்கைகள்,
2. மூலோபாயங்கள்,
3. திட்டங்கள்,
4. செயல்திட்டங்கள்,

உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும்.

வேளாண்மை மற்றும் நில மேலாண்மைக் கொள்கைகள், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்வளத் தேவைகள் மேலாண்மைக் கொள்கைகளுடன் பொருந்துமாறு தேவையான மாற்றங்கள் செய்யப்படும்.

வேளாண்மைத் துறையில் நீர்ப் பயன்பாட்டை

திறமையாக மேம்படுத்த:

1. தொடர்புடைய துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுதல்,
2. பயிர் திட்டமிடல் மாற்றங்கள்,
3. நீர்த்திறன் அதிகமான பயிர்களை ஊக்குவித்தல்,
4. நவீன பாசன முறைகள்,

போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் செயற்பாட்டை, உருவாக்கப்படும் அதிகார நிறுவனம் கண்காணித்து, தேவையான திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகளை மேற்கொள்ளும். இதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் நீர்வளங்கள் திறமையாகவும் நிலையான முறையிலும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய முடியும்.

### 6.5. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நீர்வள மற்றும் வேளாண்மை மேம்பாடு மற்றும் மேலாண்மைக்கான நிறுவன ஏற்பாடுகள் - பிராந்திய நிலம் மற்றும் நீர்வள ஆணையம் (RLWA)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நீர்வளக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக, பிராந்தியத்திலுள்ள அனைத்து நீர்வளங்களையும் ஒருங்கிணைந்து நிர்வகிக்கும் மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பு ஒன்றை நிறுவுவது அவசியமாகிறது.

இந்த நோக்கத்திற்காக ‘பிராந்திய நிலம் மற்றும் நீர்வள ஆணையம் (Regional Land and Water Authority - RLWA) என்ற அமைப்பு நிறுவப்பட வேண்டும்.

இந்த ஆணையம் மாகாணத்தில் உள்ள:

1. அனைத்து ஆற்றுப்பாசனத் தளங்கள்,
2. நீர்ப்பிடிப்புப் பகுதிகள்,
3. மேற்பரப்பு நீர் வளங்கள்,
4. நிலத்தடி நீர்மட்டங்கள் (Aquifers),

ஆகியவற்றின் மேம்பாடு, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் ஆகிய அனைத்திற்கும் முழுமையான பொறுப்பு மற்றும் அதிகாரம் கொண்ட பிரதான நிறுவனமாகச் செயற்படும்.

இந்த மையப்படுத்தப்பட்ட அமைப்பு மூலம் நீர்வளங்களின் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான பயன்பாடு உறுதி செய்யப்படும்.

#### 6.5.1 நோக்கங்கள்

பிராந்திய நிலம் மற்றும் நீர்வள ஆணையத்தின் (RLWA) முக்கிய கடமைகள் பின்வருமாறு:

1. பிராந்திய எல்லைகளுக்குள் உள்ள அனைத்து நில மற்றும் நீர்வளங்களையும் (மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர்) மதிப்பீடு செய்து, அவை தொடர்பான தகவல்களைச் சேகரித்து தரவுத்தளமாக உருவாக்குதல்;
2. பாசனம், குடியிருப்பு, தொழில்துறை மேம்பாடு மற்றும் பிற பயன்பாடுகளுக்காக நிலம் மற்றும் நீர்வளங்களை திட்டமிட்ட முறையில் மேம்படுத்த வழிகாட்டுதல்;
3. குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிலப் பயன்பாட்டு அனுமதிகள் மற்றும் நீர் உரிமைப் பத்திரங்களை வழங்கும் அதிகாரமாகச் செயற்படுதல்;
4. நிலையான மற்றும் விஞ்ஞான ரீதியான நீர்வளக் கொள்கைகளின் அடிப்படையில் நீர் உரிமைகள் மற்றும் ஒதுக்கீடுகளை வழங்குதல்;
5. வழங்கப்பட்ட அனுமதிகள் மற்றும் உரிமைகளின் நிபந்தனைகள் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணித்தல்; அவை மீறப்பட்டால் அனுமதிகளை ரத்துச் செய்யும் அதிகாரம் பெற்றிருத்தல்; தேவையான போது சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து, நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யும் அதிகாரம் கொண்டிருத்தல்;
6. நில உரிமையாளர்கள், பயனாளர்கள் மற்றும் அனைத்து நீர்ப் பயனாளர்களுக்கும் ஒதுக்கப்பட்ட நீரைத் திறமையாகப் பயன்படுத்த வேண்டிய நிபந்தனைகளை வகுத்து அமல்படுத்துதல்.

#### 6.5.2 செயற்பாடுகள்

பிராந்திய நிலம் மற்றும் நீர்வள ஆணையத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு அமையும்:

1. பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு மேற்பரப்பு நீர்ப்பாசனப் பகுதிக்கும் நிலம் மற்றும் நீர்வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான முதன்மைத் திட்டங்கள் (Master Plans) தயாரித்தல் அல்லது தயாரிக்கச் செய்தல்;
2. இந்த முதன்மைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் துறைகளில் திட்ட வடிவமைப்பு மற்றும் விரிவான பொறியியல்

வடிவமைப்புகளை உருவாக்குதல்: a) பாசனத் திட்டங்கள், b) குடிநீர் வழங்கல், c) வெள்ளக் கட்டுப்பாடு, d) நில மீட்பு மற்றும் வனவளம், e) வேளாண்மை மேம்பாடும் இத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்தலும்;

3. முன்னுரிமை அடிப்படையில் திட்டங்களைச் செயற்படுத்தி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்;

4. செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ளுதல்;

5. RLWAவின் பணிகளுக்குள் வரும் நிபுணத்துவ ஆலோசனைச் சேவைத்துறைகள்: a) அரசாங்கத் துறைகள், b) சட்டபூர்வ வாரியங்கள் மற்றும் கழகங்கள், c) பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், d) தனிநபர்கள்.

### 6.5.3 அமைப்புக் கட்டமைப்பு

முன்மொழியப்படும் பிராந்திய நிலம் மற்றும் நீர்வள ஆணையத்தின் தலைமையகம் பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

தலைமையகத்தில் குறைந்தது நான்கு பிரதான பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும். அவை:

1. மேற்பரப்பு நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை.

2. நிலத்தடி நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை.

3. குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் மேலாண்மை.

4. வேளாண்மை.

மேலும் பிராந்தியத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்குவதற்காக துறைத்தளத்தில் குறைந்தது பத்து பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட வேண்டும்.

இதற்குப் பிறகும் பின்வரும் சிறப்புத் தொழில்நுட்பப் பிரிவுகள் நிறுவப்படுவது அவசியமாகும்:

1. ஹைட்ராலிக்ஸ் மற்றும் ஹைட்ராலொஜி (Hydraulics and Hydrology).

2. மண் இயற்பியல் மற்றும் பொறியியல் பொருட்கள் (Soil Mechanics and Engineering Materials)

3. நிலத்தடி நீர் மற்றும் பொறியியல் புவியியல் (Groundwater and Engineering Geology)

4. வேளாண்மை மற்றும் நிலப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் (Agriculture and Land Use Policy Planning)

5. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (Capacity Building)

6. நீர் மேலாண்மை (Water Management)

இந்த அமைப்பு முறையின் மூலம், பிராந்தியத்தில் நிலம் மற்றும் நீர்வளங்களின் ஒருங்கிணைந்த திட்டமிடல், மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு திறமையாக முன்னெடுக்கப்படலாம்.

## 6.6 பரிந்துரைகள்

வேளாண்மைத் துறையின் நிலையான (Sustainable) வளர்ச்சியையும் ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மைக் (Integrated Water Resources Management - IWRM) கொள்கையையும் பயன்முறையில் செயற்படுத்துவதற்காகப் பின்வரும் முக்கியமான அபிவிருத்தி மூலோபாய அம்சங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன:

**1. மேற்பரப்பு நீர் வளங்களைப் பாதுகாத்தல்**

நீர்வள மேலாண்மை தொடர்பான கடுமையான கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி மேற்பரப்பு நீரைப் பாதுகாக்க வேண்டும்.

A) புதிய நீர்த்தேக்கங்களை அமைத்தல்.

B) நிலவும் பாசனத் திட்டங்களின் சேமிப்புத் திறனை உயர்த்துதல்.

**2. குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டங்கள்**

பெரிய அளவிலான குடிநீர் வழங்கல் திட்டங்கள் பின்வரும் வழிகாட்டுதல்களுடன் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்:

A) மொத்தக் குடிநீர்த் தேவையின் சுமார் 60%த்தினை மேற்பரப்புப் பாசனத் திட்டங்களில் இருந்து பெறுதல்,

- இதில் 50% ஏற்கனவே உள்ள பாசனத் திட்டங்களில் இருந்தும்
- 10% புதிய பாசனத் திட்டங்கள் அல்லது நீர் மாற்றுத் திட்டங்கள் மூலமும்

B) சுமார் 10% நீர்த் தேவையைக் கடல் நீர் உவர்நீர்

நீக்கம் (Reverse Osmosis) மூலம், குறிப்பாக வறட்சி காலங்களில் பெறுதல்,

C) சுமார் 15% நீர்த் தேவையை மாசுபடாத தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தடி நீர்ப் பகுதிகளில் இருந்து பெறுதல்,

D) சுமார் 15% நீர்த் தேவையை ஏரி மற்றும் கால்வாய்த் திட்டங்கள் மூலம் பெறுதல்.

**3. சட்டம் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகள்**

2017 மார்ச் 16 ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசிதழ் (Gazette No. 2010/23) மூலம் பாசன மற்றும் நீர்வள மேலாண்மை அமைச்சரால் வழங்கப்பட்ட உத்தரவுகள் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும்.

1. புதிய குழாய்க் கிணறுகள் தோண்டுதல் உரிமம் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
2. எடுக்கப்படும் நீர் அளவு கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
3. மின்சாரம், பெட்ரோல், டீசல் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி நிலத்தடி நீரைப் ‘பம்பிங்’ செய்வது கண்காணிக்கப்பட வேண்டும்.

**4. பிராந்தியச் சட்டம் கொண்டு வருதல்**

நீர்வள நிலைத்தன்மைக்காக பிராந்தியச் சட்டம் ஒன்றை இயற்றி பின்வரும் நடவடிக்கைகள் அமல்படுத்தப்பட வேண்டும்:

A) அனைத்துப் பாசனத் திட்டங்களிலும் சிறுபோகக் கால நெற் பயிரிடலை அதிகபட்சம் 40% வரை மட்டுப்படுத்தி, மொத்தப் பயிரிடல் தீவிரத்தை (Cropping Intensity) 1.4 ஆகப் பராமரித்தல்.

B) சிறுபோகக் காலத்தில் நெல் பயிரிடும் நிலப்பரப்பைக் குறைத்து, குறைந்த நீர் பயன்படுத்தும் மாற்றுப் பயிர்களை (பருப்பு வகைகள் போன்றவை) ஊக்குவித்தல்.

C) அனைத்துப் பாசனத் திட்டங்களிலும் மொத்தச் சேமிப்புத் திறனில் குறைந்தபட்சம் 10-15% அளவு நீரைப் பராமரித்து, கீழ்பாயும் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்வாக வைத்திருத்தல்.

D) நீர்த்தேக்கங்களின் மொத்தச் சேமிப்புத் திறனில் அதிகபட்சம் 60%த்தினை மட்டும் வேளாண்மைக்கு ஒதுக்கி, மீதமுள்ள 40%த்தினை குடிநீர், தொழில் மற்றும் பிற தேவைகளுக்காக ஒதுக்குதல்.

**5. இயற்கை மற்றும் வளங்களின் நிலையான பயன்பாடு**

பிராந்தியத்தின் இயற்கை மற்றும் உடற்கூறு வளங்களை நிலையான அடிப்படையில் அதிகபட்சமாகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**6. வர்த்தக வேளாண்மைக்கு மாற்றம்**

சுய வேளாண்மையிலிருந்து (Subsistence Agriculture) விலகி:

- உயர்ந்த மதிப்புள்ள பயிர்கள்,
- வர்த்தக வேளாண்மை,
- வேளாண்மை அடிப்படையிலான தொழிற்துறை,

ஆகியவற்றை உருவாக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

**7. சமநிலைப் பிராந்திய வளர்ச்சி**

பிராந்தியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சமநிலைப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் வகையில் திட்டமிடல் மற்றும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**8. மனித வளத்தின் பயனுள்ள பயன்பாடு**

பிராந்தியத்தில் உள்ள மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி:

- நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்,
- மேலாண்மை மாற்றங்கள்,
- வேளாண்மை உற்பத்தித் திறன் உயர்வு,

ஆகியவற்றை உண்டாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலம் வேளாண்மைத் துறையில் நிலையான, தொழில்நுட்ப முன்னேற்றம் கொண்ட மற்றும் பொருளாதார ரீதியாக வலுவான மாற்றத்தை வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்படுத்த முடியும்.

## பசுமை எனும் பேரபாயம் – நூல் அறிமுக நிகழ்வு இரத்தோட்டை பிரதேச சபை மண்டபம்.

**08 March**

நிமிர் விடுதலை இயக்கத்தினால் ‘காணி உரிமைகளும் மலையகப் பெண்களும்’ எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வில் எழுநாவின் வெளியீடாகிய, முனைவர் தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ அவர்களின் ‘பசுமை எனும் பேரபாயம்’ நூல் அறிமுக நிகழ்வு இரத்தோட்டை பிரதேச சபை மண்டபத்தில் 08.03.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் R. மதுசிகா அவர்களினால் ‘பசுமை எனும் பேரபாயம்’ நூலை முன்வைத்து ‘மலையகத்தில் சூழல் கரிசனையற்ற திட்டங்கள் பற்றிய மறுவிசாரணை’ என்ற தலைப்பில் உரை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச மக்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





## பசுமை எனும் பேரபாயம் – நூல் அறிமுக நிகழ்வும் கலந்துரையாடலும் ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை, புத்தளம்.

**07 March**

எழுநாவின் வெளியீடாகிய, முனைவர் தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ அவர்களின் ‘பசுமை எனும் பேரபாயம்’ நூல் அறிமுகமும் கலந்துரையாடலும், ‘PILLARS’ அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் வீதி, புத்தளத்தில் அமைந்துள்ள ஸாஹிறா ஆரம்பப் பாடசாலையில், 07.03.2026 (சனிக்கிழமை) அன்று மாலை 4.30 மணி தொடக்கம் 6.45 மணி வரை இடம்பெற்றது. Z.A. ஸன்ஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் Z.A.M. ரஸ்மி, நூலாசிரியர் அறிமுகத்தினை வழங்கியிருந்தார். நூல் விமர்சன உரைகளை கொழும்பு பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளரும், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான அமைச்சின் இழப்பீட்டுக்கான அலுவலக ஆணையாளருமாகிய நஸீஹா ஹிஸ்மி அவர்களும், புத்தளம் மாவட்டச் செயலக புள்ளிவிபரக் கிளையின் மாவட்டப் பிரதிப்பணிப்பாளரகிய S. தனபாலசிங்கம் அவர்களும் வழங்கியிருந்தனர்.




PILLARS அமைப்பின் செயலாளர் ரினாஸ் முஹம்மத் அவர்கள் நன்றியுரையினை வழங்கியிருந்தார். நிகழ்ச்சித் தொகுப்பினை, இலங்கை தேசிய நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நீர்வள வளர்ப்பு நிபுணர் A. அர்ஷத் அலி அவர்கள் வழங்கியிருந்தார். நூல் அறிமுகத்தினைத் தொடர்ந்து PILLARS அமைப்பின் இப்தார் நிகழ்வுகளும் இடம்பெற்றன. மதகுருமார்கள், சூழலியலாளர்கள், மாணவர்கள், சமூக சேவகர்கள் , பொதுமக்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.



எழுநா வெளியீடு
யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்
மலையகம்:
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
தொகுப்பாசிரியர்கள்
இரா. ரமேஷ்
பெ. சரவணக்குமார்
இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்
காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
சமஷ்டி அரசியல் முறைமைகள்: ஓர் அறிமுகம்
தொகுப்பும் தமிழாக்கமும் :
கந்தையா சண்முகலிங்கம்
யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்



எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்



எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா



எழுநா
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்



எழுநா
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்



இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்


யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா


தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்



யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்


இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ


பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE***

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

**0207 341 7300**
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



# Nimal Vinayagamoothy, CPA, CGA


Chartered Professional Accountant


nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்




தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் ‘ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்’ எனும் பொருண்மையில் ‘ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org



# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX**
**ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
## ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

SS CAKES

# Say "I Do"
## to Sweet Perfection!

Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.

**+94 76 347 0055**

We do delivery around the world



# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை  அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



## XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

### OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

### BUSINESS PROCESS OUTSOURCING

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

### CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com**

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



**Sritharan Thurairajah** CLU, CHS

Life100

INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,

Scarborough, ON M1B 3C6